உதயன்



www.onlineuthayan.com

60 பக்கங்கள் சுடர் 27 கதிர் 365 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 10 ஞாயிற்றுக்கிழமை (25/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 30.00

# பிராந்திய வல்லரசாக மாறும் நோக்கம் இந்தியாவுக்கில்லை

## தூதுவர் அசோக் கே. காந்தா சொல்கிறார்

கொழும்பு, நவம்பர்25

இந்தியா எப்போதும் தனது பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலேயே நடவடிக்கை மேற்கொள்ளும். அதிகாரம் பெறும் நோக்கிலோ அல்லது பிராந்திய வல்லரசாகும் கொள்கையிலேயோ நாம் ஒரு போதும், செயற்பட வில்லை என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சப்புகஸ்கந்தையில் அமைந்துள்ள பாதுகாப்புச் சேவைகள் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார் இந்தியத் தூதர். 'இந்தியாவின் வெளிநாட்டுப் பாதுகாப்புக் கொள்கை' என்ற தொனிப் பொருளில் அவர் ஆற்றிய உரையில் இந்தியாவுக்கு பிராந்திய வல்லரசாகும் எண்ணம் இல்லை என்பதைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் ஆரம்பம்தொட்டே இருந்து வருகின்றன. கலாசார ரீதியிலும், பாதுகாப்புத் துறைசார் உறவுகளும் இரு நாடுகளிடையேயும் தொடர்ந்து பேணப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் அமைதிக் காக்கும் படைக்காக அல்லது ஒரு நாட்டு அரசின் கோரிக்கையின் பேரில் அன்றி, வேறு எந்த நடவடிக்கைகளுக்காகவும் இந்தியா தமது

பார்க்க பக்கம் 4

## ஜனாதிபதியின் உருவப்பட பதாகை கிழிக்கப்பட்டது

மட்டக்களப்பு, நவ 25

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் கட்டப்பட்டிருந்த பதாகைகள் இனந் தெரியாதோரினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நாவற்குடா, கல்லடி பகுதிகளில் பிரதான வீதியில் ஜனாதிபதியின் உருவப் படம் தாங்கிய பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. நேற்று சனிக்கிழமை அவை சேதமாக்கப்பட்டன.

ஜனாதிபதியின் பிறந்த தினத்தையொட்டி மட்டக்களப்பு கல்லடியில் இன்று இடம்பெறவுள்ள நிகழ்வொன்றுக்காக இந்தப் பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியிலுள்ள நாவற்குடா மற்றும் கல்லடி ஆகிய பகுதிகளில்

பார்க்க பக்கம் 4

## 6 தமிழ்ப் பெண்கள் இராணுவத்திலிருந்து விலகல்

கொழும்பு, நவ. 25

இராணுவத்தில் சேர்க்கப்பட்ட 109 தமிழ் பெண்களில் 6 பேர் விலகி விட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார். சுயவிருப்பின் பேரில் அவர்கள் விலகினர் என்று அவர் கூறினார்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் நடைபெற்ற கோலகல நிகழ்வில் இவர்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

தமிழ்ப் பெண்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடினர் என்று வெளியான செய்திகளையும் இராணுவப்

பார்க்க பக்கம் 4

## விரைவில் கவிழும் மஹிந்தவின் அரசு

### ரவி கருணாநாயக்க கூறுகிறார்

கொழும்பு,நவ.25

''முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க தானே ஆட்சியில் நீடித்து நிலைப்பேன் என்ற மமதையுடன் பேசினார். ஆனால் எதிர்பாராத நேரத்தில் அவருடைய ஆட்சி கவிழ்ந்தது. அதே போன்றுதான் இந்த அரசும் அதி விரைவில் கவிழும்'' என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க கூறினார்.

நாடாளுமன்றம் நேற்று சனிக்கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதம் நடைபெற்றது.

ரவி கருணாநாயக்க விவாதத்தை ஆரம்பித்து பேசும் போது மேலும் கூறியதாவது :-

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்டம் சினிமா படம் பார்ப்பது போன்ற மாயையை ஏற்படுத்தி உள்ளது. மூன்று மணி நேரத்தில் படம் முடிந்த பின் அங்கு எதுவுமே இருக்காது. அப்படித்தான் இந்த வரவு - செலவுத் திட்டமும்.

12 இலட்சம் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை

பார்க்க பக்கம் 4

## தமிழர்கள் விரும்பாத 'திவிநெகும'வின் திணிப்புக்கு துணையாகப் போகின்றீர்களா?

### சிறுபான்மை அமைச்சர்களிடம் சுமந்திரன் எம்.பி. கேள்வி

கொழும்பு,நவ.25

''வடமாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் விரும்பாத 'திவிநெகும' சட்டத்தை அந்த மக்கள் மீது பலவந்தமாக திணிக்க சிறுபான்மை இன அமைச்சர்கள் துணை போகப் போகின்றீர்களா?'' இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கேட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:-

திவிநெகும' சட்ட வரைவை சட்டமாக்க நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை அரசு பெறவேண்டும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்தச் சட்டவரைவுக்கு வடக்கு மாகாண மக்கள் ஒப்புதல் அளிக்கவில்லை.

தமிழ் மக்கள் விரும்பாத 'திவிநெகும' சட்டத்தைப் பலவந்தமாகத் திணிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

பார்க்க பக்கம் 4

## நவ. 27 தீபம் ஏற்றத்தடையில்லை; மாவீரர்தினத்தில் என கூறவில்லை

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 25

நாளை மறுதினம் 27ஆம் திகதி தமிழ் மக்கள் தீபங்களை ஏற்றுவதற்குத் தடையேதும் இல்லை என்றே தான் குறிப்பிட்டார் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றைய உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியின் தலைப்பு (செய்தி அல்ல) மாவீரர் தினத்தில் தீபங்களை ஏற்றலாம் எனத் தான் சொன்னது மாதிரியான அர்த்தத்தைக் கொடுத்துள்ளதாக அவர் வருத்தப்பட்டார். பார்க்க பக்கம் 4

## வெள்ளத்தில் மூழ்கி மூவர் சாவு

கொழும்பு, நவ 25

தென்னிலங்கையில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற அடைமழை காரணமாக 4 பேர் உயிரிழந்துள்ளனர், 116 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், 170 குடும்பங்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தென்பகுதியில் தொடர்ச்சியாக அடை மழை பெய்து வருகின்றது. பல ஆறுகள் பெருக்கெடுத்து பாய்கின்றன. நெலுவ - தெல்லவ பிரதேசத்தில் கடும் வெள்ளம் பாய்கிறது. அதில் மூழ்கியே

பார்க்க பக்கம் 4

## குடாநாட்டை உலுக்குகிறது டெங்கு நேற்றும் 17 பேர் ஆஸ்பத்திரியில்

### ஒரே நாளில் சேர்க்கப்பட்ட அதிக எண்ணிக்கையினர் இவர்கள்

யாழ்ப்பாணம், நவ.25

இந்த வருடத்தில் இது வரையான காலப் பகுதியில் அதிக எண்ணிக்கையாக, நேற்று சனிக்கிழமை 17 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டெங்குக் காய்ச்சலுக்கு இலக்கானோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், டெங்கில் இருந்து தப்புவதற்காக சுற்றாடல்களைத் தூய்மையாக வைத்திருக்குமாறு சுகாதாரப் பகுதியினர் பொது மக்களைத் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 7 பேரும், வியாழக்கிழமை 7 பேரும், புதன் கிழமை 6 பேரும், செவ்வாய்க்கிழமை 4 பேருமாக கடந்தவாரம் 41 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதம் இதுவரை டெங்கினால் பீடிக்கப்பட்டோர் எண்ணிக்கை 84 ஆகும்.

நேற்று மாத்திரம் திருநெல்வேலியிலிருந்து 10 பேரும், நெடுந்தீவு, தெல்லிப்பழை, ஏழாலை, உரும்பிராய் தெற்கு, சாவற்காடு ஆகிய இடங்களில் இருந்து

பார்க்க பக்கம் 4

## 100 மாணவிகளுக்கு வயிற்றோட்டம்

கொழும்பு, நவ 25

ருகுணு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 100 மாணவிகள் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் தங்கியிருந்த மாணவிகளே பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக விடுதியில் நேற்றுமுன்தினம் இரவு வழங்கப்பட்ட உணவை உட்கொண்டதையடுத்தே

பார்க்க பக்கம் 4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் விடுதலை செய்யுமாறு கோரிக்கை

சென்னை, நவ. 25

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு மேன்முறையீட்டின் பின்னர் ஆயுள்தண்டனையாக குறைகப்பட்டு, 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவிக்கும் இருவர் தம்மை விடுதலை செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள எஸ். ஜெயக்குமார், பி.றொபேட் பயஸ் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்கள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இவர்கள் இருவரும் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு உதவியதாகத் தெரிவிக்கப்பட்டே கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட எமக்கு, அந்த வழக்கை விசாரித்த தடா சிறப்பு நீதிமன்றம் 1998 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அதனை எதிர்த்து நாம் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தோம். எமது மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், எமக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை 1999 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டது.

2005 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துடன் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனையை நாம் அனுபவித்து விட்டோம். அதையடுத்து எம்மை விடுதலை செய்யக் கோரி, வேலூர் மத்தியச் சிறை கண்காணிப்பாளருக்கு கோரிக்கை மனு அளித்தோம்.

அதன் பின்னர், சிறைத் தண்டனைக் கைதிகளை முன்னதாகவே விடுதலை செய்வது குறித்து பரிந்துரை செய்யும் ஆலோசனைக் குழுவின் கூட்டம் 2006 ஆம் ஆண்டு நடைபெற்றது.

அப்போது, , முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்ற எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனை எதிர்த்து நாங்கள் உயர் நீதிமன்றத்தில் மீண்டும் மனு தாக்கல் செய்தோம். எங்கள் கோரிக்கை குறித்து ஆலோசனைக் குழு மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று 2008 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆலோசனைக் குழுவின் கூட்டத்திலும் விடுதலை செய்யக் கோரும் எங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் எங்கள் தண்டனைக் காலம் 20 ஆண்டுகள் முடிந்து விட்டன. எனினும் இப்போதும் நாம் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆயுள் தண்டனை கைதிகளான நாம், ஏற்கனவே 20 ஆண்டுகளுக்கும் மேல் சிறையில் கழித்து விட்ட நிலையில், சட்ட விதிகளின் படி விடுதலை பெற எமக்கு உரிமை உள்ளது.

எனவே, எம்மை உடனடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும்படி சிறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.

விடுதலை பெறுவதற்கு சட்டப்படி எங்களுக்கு உள்ள உரிமை குறித்து நீதிமன்றம் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று அந்த மனுக்களில் இவர்கள் கோரியுள்ளனர்.

இந்த மனுக்களின் மீதான விசாரணையை நவம்பர் 30 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்துள்ளனர். (த-5)

## ஆபாசப் படம் வைத்திருந்த நபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ. 25

கணினியில் ஆபாசப்படம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரும் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரே.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்தனர் என்று எரிக் பெரேரா மேலும் கூறினார். (த-4)

## கடற்படையினர் – தம்பதிகள் திருநெல்வேலியில் முறுகல்

யாழ்ப்பாணம், நவ. 25.

திருநெல்வேலிச் சந்தியில் கடற்படையினர் இருவருக்கும் ஓட்டோவில் சென்ற குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு கோப்பாய் பொலிஸ் நிலையம் வரை சென்றது. அதுபற்றி விசாரணை செய்யப்படுவதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

திருநெல்வேலி சந்தி, பலாலி வீதியில் ஓட்டோவில் சாரதியும் அவரது மனைவியும் சென்றுள்ளனர். அந்த நேரம் அதேவழியே மோட்டார் சைக்கிளில் கடற்படையினர் இருவர் சென்றுள்ளனர். இதன்போது இருதரப்புக்கும் இடையே முரண்பாடு தோன்றியுள்ளது.

ஓட்டோவை முந்திச் செல்ல முற்பட்டபோது கடற்படையினரின் மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன்தட்டுப் பட்டதாகவும் அதனைக் கடற்படையினர் அடாத்தாக நடந்துகொண்டனர் எனவும் ஓட்டோவில் வந்தவர்களைத் துரத்தி வந்த கடற்படையினரே தாக்கினர் எனவும் கூறப்பட்டபோதும் முறுகலுக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை.

சம்பவத்தை அடுத்து ஓட்டோவில் பயணித்தவர்கள் அங்கு கூடியவர்களின் உதவியுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வைத்திய திலகவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

இருதரப்பினருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதுதொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓட்டோவுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. அதுபற்றி விசாரணை மேற்கொண்டுள்ளோம். எவருக்கும் காயமேற்படவில்லை என்று தெரிவித்தார். (த-4)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

தென்மராட்சி, நவ. 25.

வரணி வடக்குப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கணபதிப்பிள்ளை உதயசூரியன் (வயது-40) என்னும் குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸார் நேற்று சனிக்கிழமை இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிவானிடம் அறிக்கை சமர்ப்பித்தனர். நீதிவானின் பணிப்பின்பேரில் கொடிகாமம் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்குமரன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிமூலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (த-9)

## விபத்தில் 5 பேர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 25.

யாழ். நகரிலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்ற மினி பஸ் மருதனார்மடம் பகுதியில் 'படி' ரக வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று பெண்கள் உட்பட சுமார் ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 7:30 மணியளவில் காங்கேசன்துறை வீதி மருதனார்மடம் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

வாகனச் சாரதியான எஸ்.திவாகர் (வயது-19) யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறார்.

மினிபஸ் சாரதி மற்றும் பஸ்ஸில் பயணித்த மூன்று பெண்களும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

விபத்துத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-16-86)

# சபையில் இடையூறு செய்த அஸ்வர் சபாநாயகரால் எச்சரிக்கப்பட்டார்

நாடாளுமன்றத்தில் தேவையற்ற முறையில் ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பிய உறுப்பினர் அஸ்வர் சபையில் இருந்து வெளியேற்றப்படுவார் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் கடுமையான உத்தரவு பிறப்பித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தின் போது இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் சார்பில் விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ரவி கருணாநாயக்க அரசினால் முறையற்ற வகையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பாகவும், குடிதண்ணீருக்கான வரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பது தொடர்பிலும் சபையில் குறிப்பிடார்.

**காத்தான்குடிக்காரரிடம் நான் பேசுகின்றேன். புத்தளம் கழுதைகளுடன் அல்ல**

முப்பது வீதமாக இருந்த குடிதண்ணீர் வரி இன்று 120 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது சாதாரண மக்களுக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்றார் ரவி.

அப்போது பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா, ரவி கருணாநாயக்கவிடம் சில விளக்கங்களைக் கேட்டார். இருவருக்கும் இடையில் சம்பாஷணை இடம்பெற்றபோது வழமைபோல் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் ஒழுங்குப் பிரச்சினை ஒழுங்குப்பிரச்சினை என எழுந்து நின்றார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே நான் காத்தான் குடிக்காரர்களுடன் தான் பேசப்போகின்றேன். புத்தளம் கழுதைகளுடன் அல்ல எனப் பதிலடி கொடுத்தார் ரவி கருணாநாயக்க.

அப்போதும் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் ஓய்ந்தபாடில்லை. இந்தச் சமயத்திலேயே சபாநாயகர் அஸ்வருக்கு, அவசியமற்ற இடங்களில் ஒழுங்குப் பிரச்சினை என்று கூச்சலிட்டால் சபையில் இருந்து வெளியேற்றப்படுவீர்கள் எனக் கடுமையாக எச்சரிக்கை செய்தார்.

**ஆளும்தரப்புக்கு உசுப்பேத்திவிட்ட சுமந்திரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பேச்சு ஆளும்தரப்பு உறுப்பினர்களுக்கு பெரும் சூட்டைக் கிளப்பிவிட்டது என்றே கூறவேண்டும். ஆரம்பத்திலேயே நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அரசமைப்பிற்கு முரணானது என்று கூறினார். நாட்டின் பெரும் பகுதி ஒரு தனி நபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

**ஐ.தே.க. செய்த பெரும் முட்டாள்தனம்**

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளில் திருத்தங்களைச் செய்து முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையைக் கொண்டு வந்தனர். இப்போதும் அதே பாணியில் பின்பற்றப்படுகின்றது என்றார்.

**ஆட்சேபனை எழுப்பிய அஸ்வர் எம்.பி.**

இந்த வேளையில் அஸ்வர் குறுக்கீடு செய்தார். சபாநாயகர் அவர்களே, சுமந்திரன் சம்பந்தம் இல்லாத விடயங்களைப் பேசுகின்றார். அவை அனைத்தையும் நாடாளுமன்றத்தின் ஏட்டில் இருந்து நீக்க வேண்டும் என்றார்.

**அஸ்வர் சட்டம் படிக்காத சட்டத்தரணி**

கௌரவ சபாநாயகர் அவர்களே நான் இந்த நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றியும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் தானே பேசுகின்றேன். இந்த அஸ்வர் ஏன் சத்தம் போடுகின்றார் என்பது எனக்குத் தெரியவில்லை.

கௌரவ அஸ்வர் இந்தச் சபையில் சட்டம் படிக்காத ஒரு சட்டத்தரணி போன்று எல்லா விடயங்களிலும் மூக்கை நுழைக்கின்றார் எனப் பதிலடி கொடுத்தார் சுமந்திரன்.

**வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிய திலங்க சுமதிபால**

இந்த வேளையில் ஆளும் கட்சி பின்வரிசை உறுப்பினரான திலங்க சுமதிபால, சுமந்திரன் பேசும்போது அடிக்கடி இடையூறு செய்தார்.

ஐயா! நான் எதையும் புதிதாகக் கூறவில்லை. நான் அமைச்சு தொடர்பாகப் பேசுகிறேன். சூதாட்டம் பற்றியோ கடத்தல்கள் பற்றியோ, காட்டுத்தர்பார் தொடர்பாகவோ பேசவில்லை. ஏன் இந்த உறுப்பினர் துள்ளிக் குதிக்கின்றார் என்பது புரியவில்லை என்றார் சுமந்திரன்.

அப்போதும் திலங்க சுமதிபால சும்மா இருக்கவில்லை. சபாநாயகர் அவர்களே சுமந்திரன் எம்.பி. என்னை அவகௌரவப் படுத்துகின்றார் என மீண்டும் கூறினார். ஐயா! இந்த மனிதர் தொப்பியை தானே தூக்கித் தலையில் போட்டுக்கொண்டார். நான் என்ன செய்வது என திருப்பி அடித்து விட்டார் சுமந்திரன்.



நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பேசிய நேரத்தைவிட ஆளும்கட்சி உறுப்பினர்களின் இடையூறுகளுக்கு பதிலடி கொடுத்ததே கூடுதலாக இருந்தது.

**புலிகளுக்கு முதுகு சொறிந்து விடுபவர்கள்**

சுமந்திரன் பேசும்போது ஆளும்கட்சி உறுப்பினர்கள் இடையூறு செய்தபோது எதிர்க்கட்சி உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, எச்.கே.பண்டார, ஜயந்த கருணாதிலக்க ஆகியோர் ஆளும்தரப்பினருக்கு பதிலடி கொடுத்துக்கொண்டே இருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன என்ன செய்வது புலிகளுக்கு முதுகு சொறிந்து விடுபவர்களும் இந்தச் சபையில் இருக்கின்றனர். அவர்களுக்காக அனுதாபப்படுகின்றேன் என சாடினார்.

**ஜனாதிபதியின் பிறந்தநாள் வாழ்த்துக்கு 75 கோடி ரூபா**

ஐ.தே.க. உறுப்பினரான தயாசிறி ஜயசேகர சபையில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

நாட்டு மக்கள் வீடுகள் இன்றியும், வருமானம் இன்றியும், பட்டினியாலும் வாடும்போது ஜனாதிபதிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து விளம்பரங்களைச் செய்துள்ளனர். இதற்காக 75 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது எனக் கூறியதோடு பத்திரிகை விளம்பரங்களையும் சபையில் காட்டினார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தொடர்பான விவாதம் நேற்று 7அரை மணி நேரம் இடம்பெற்றது. எனினும் சபை தூங்கி வடிந்தது. 90 வீதமான கதிரைகள் காலியாகவே காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக்கே முன்னுரிமை

## செக். குழுவினரிடம் யாழ்.தளபதி

யாழ்ப்பாணம், நவ.25

*யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமையை முன்னுரிமை அடிப்படையில் கவனத்தில் கொண்டு, கொழும்பிலிருந்து வழங்கப்படும் உத்தரவுகளுக்கு அமைவாக மட்டுமே யாழ்ப்பாணத்தின் படைக்குறைப்பு மேற்கொள்ளப்படும் என்று யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.*

யாழ்.மாவட்டத்துக்கு கடந்த புதன்கிழமை வருகை தந்த, செக் குடியரசின் நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழுவினர் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதியை பலாலி பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 'கஷ்டப்பட்டுப் பெற்ற அமைதியை யாழ். குடா நாட்டில் தொடர்ந்து பேணுவதற்கும், சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொலிஸாருக்கு உதவும் வகையிலும் இராணுவத்தினர் செயற்படுகின்றனர். போருக்குப் பின்னரான காலத்தில் இது இராணுவத்தினரின் முக்கிய செயற்பாடாக இருக்கின்றது- என்று யாழ். படைத் தளபதி இந்தக் குழுவினரிடம் விளக்கியுள்ளார்.

இதன் போது செக் குடியரசின் நாடாளுமன்ற உறுப்பினர், இராணுவப் பிரசன்னம் தொடர்பில் இராணுவத் தளபதியிடம் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தளபதி, 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வரு கின்றது.

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமையை கவனத்தில் கொண்டு, கொழும்பிலிருந்து இராணுவத் தலைமையகத்தால் வழங்கப்படும் உத்தரவுகளுக்கு அமைவாகவே எதிர்காலத்தில் படைக் குறைப்பை மேற்கொள்ள முடியும்.

அரசால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு இராணுவம் உதவிகளைச் செய்து வருகின்றது. அத்துடன் இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பல வழிகளிலும் பாடுபடுகிறது. - என்று கூறினார். (த-5)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் புதிதாக உருவாக்கப்பட்ட நெல்லியடி வட்ட லயன்ஸ் கழக அங்குரார்ப்பண நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா லயன் சீமாட்டி தங்கராஜா ஆகியோர் மங்கல விளக்கேற்றுகின்றனர். (ம-9)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில் மரம் நடுகை நடைபெற்றது. இதில் வடமாகாண முகாமையாளர் எஸ்.எ.அஸ்கர், யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசிங்கம், பிராந்திய செயலாற்று முகாமையாளர் கே.கேதீசன் மற்றும் சாலை உத்தியோகத்தர்கள் மரக் கன்றுகளை நட்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (ம-14)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக பயணிகளை ஏற்ற, இறக்கத் தடை

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதியில் தனியார் மற்றும் அரச பஸ்களில் பயணிகளை ஏற்றுவதோ இறக்குவதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனை மீறும் சாரதிகள், நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளார் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக இடம்பெறும் விபத்துக்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கையை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

தனியார் பஸ்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள் என்பன வைத்தியசாலை முன்பாக பயணிகளை ஏற்றவோ இறக்கவோ முடியாது. இது தொடர்பாக வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

இனங்காணப்பட்ட பஸ்களின் சாரதிகள், நடத்துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது.

எனவே, மக்களின் நலன் கருதி அரச மற்றும் தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் கவனத்தில் எடுத்து பயணிகளை ஏற்றுவதையோ இறக்குவதையோ யாழ். பஸ் நிலையத்துடன் நிறுத்த வேண்டும்.

இதன் மூலம் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதுடன், போக்குவரத்து நெரிசலையும் குறைக்கலாம் என்றும் தெரிவித்தார். (ம-14)

## சங்கானை மதுவரிப் பிரிவில் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டில்

### திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், நவ.25

சங்கானை மதுவரித் திணைக்களக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்கசிப்புஉற்பத்தி மற்றும் விற்பனை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என அதிகாரி தர்மலிங்கம் நந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கசிப்பு உற்பத்தி அநேக இடங்களில் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. எனினும் அரச சாராயத்தைச் சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து விற்பனை செய்தல், சட்ட விரோதமாககள் விற்பனை, 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை ஆகியனவே தற்போது இனங்காணப்பட்டு வருகின்றன.

மது விற்பனைத் திணைக்களத்தின் சட்ட சேவைகளுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட மதுபாவனை நிலையங்கள் அல்லது வீடுகளில் அரச சாராயத்தை விற்பனை செய்வது குற்றமாகும்.

அத்துடன் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு புகைப் பொருள் விற்பனை செய்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

எனவே இவற்றைத் தடுக்கும் செயற்திட்டங்களுக்கு அமைவாக மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அத்துடன் இனங்காணப்பட்ட நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டு தண்டப் பணமும் அறவிடப்பட்டு வருகின்றது.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் ஒத்துழைப்பால் கசிப்பு உற்பத்தி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ம-14)

## மோசடிக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய இருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.25

ஒரே வங்கியில் நான்கு தடவைகள் போலி நகைகளை அடைவு வைத்து பண மோசடி செய்யப்பட்டமோசடிக் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இது குறித்துக் கூறினார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெல்லியடியைச் சேர்ந்த நபர் ஒருவரை இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினோம். அதன் மூலமாக ஒரே வங்கியில் நான்கு தடவைகள் போலி நகைகளை அடைவு வைத்து பணமோசடி செய்துள்ளமை தெரிய வந்தது.

**மோசடிக்காரரிடம் இருந்து பணம், வங்கிச்சிட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.**

அவரிடமிருந்து பணம், சிட்டைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2008 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 63 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று அதனை இன்றுவரை திருப்பிக் கொடுக்காத காரணத்தால் பணமோசடி செய்த குற்றச்சாட்டில் பணம் வாங்கியவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று கூறினார். (ம-4)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உள்ளக தொலைபேசி இணைப்பு

தென்மராட்சி, நவ.25

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுக்குமான உள்ளக தொலைபேசி இணைப்புகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் விடுதிகள் உட்பட இருபதுக்கு மேற்பட்ட பிரிவுகள் இயங்குகின்ற போதிலும் இதுவரை உள்ளகதொலைபேசிஇணைப்பு இல்லாததால் ஊழியர்கள் மூலமும் தனிப்பட்ட தொலைபேசிகள் மூலமும் தகவல்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் முயற்சியால் உள்ளக தொலைபேசி இணைப்புக்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இந்த வைத்தியசாலைக்கு மூன்று தொலைபேசி கையாளப்பவர்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## யாழ்.இந்துவில் இன்று பரிசளிப்பு விழா

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் கலந்து கொள்வார். (ம-4)

## நிகழ்வுகள் இன்று

**நினைவஞ்சலி நிகழ்வு**

ஆ.சி.நடராசாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு குரும்பசிட்டி பொன் பரமானந்தன் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பரிசளிப்பு விழா**

திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்வர். (ம-8)

**சேவைநலன் பாராட்டு**

சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் மார்க் ஞானப்பிரகாசத்தின் சேவை நலன் பாராட்டு விழா காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் சிறீஸ்கோபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

**மருத்துவ முகாம்**

கைதடி லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாமும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் காலை 9 மணிக்கு குருசாமி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)

**கண்காட்சி**

வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு நடத்தும் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும் காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வே.இராசகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்வார். (ம-8)

**மாற்றுவலுவுடையோர் தினவிழா**

தீவகக் கல்வி வலயம் நடத்தும் சர்வதேச மாற்று வலுவுடையோர் தின விழா காலை 9 மணிக்கு ஊர்காவற்துறை ஆண்கள் றோ.க.தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**குழந்தைகள் தின விழா**

காரைநகர் பிரதேச முன்பள்ளிகளின் குழந்தைகள் தினவிழாவும் ஆசிரியர் கௌரவிப்பு விழாவும் காலை 9.30 மணிக்கு காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ளன. முன்பள்ளி இணைப்பாளர் செல்வி.அ.புஸ்பராணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் கலந்து கொள்வார். (ம-14)

**பொதுக்கூட்டம்**

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பதவியேற்பு**

யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகத்தின் 72 ஆவது தலைவரின் பதவியேற்பு விருது வழங்கலும் மாலை 4மணிக்கு யாழ். கிறின்ஸ்கிராஸ் ஹோட்டலில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுக்கு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராஜா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். சுன்னாகம் வாழ்வகத் தலைவர் ஏ.ரவிந்திரன், சுன்னாகம் ஈ.யூ.ரி.தளபாட நிறுவன நிர்வாக இயக்குநர் வி.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் இந்த முறை ஹோட்டரி விருது பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கோலுக்கு மரியாதை செலுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, நவ. 25

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் செங்கோலுக்கு உரிய மரியாதை செலுத்துவதில்லை என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இனிமேல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் செங்கோலுக்கு மரியாதை செலுத்த வேண்டும். இவ்வாறு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

செங்கோலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மரியாதை செய்வதில்லை. இது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்காக அவர் இந்த அறிவிப்பை சபையில் விடுத்தார்.

செங்கோல் நாடாளுமன்றத்துக்குள் எடுத்துவரும் போதும் நாடாளுமன்ற சபை நடவடிக்கைகள் முடிவடைந்து செங்கோல் எடுத்துசெல்லப்படும் போதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஆசனங்களுக்கு முன்பாக எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டும்.

செங்கோலுக்கு கௌரவமளித்தல், மேல்நிலையாக மதித்தல் போன்ற பண்புகள் நாடாளுமன்றத்தில் நீண்ட காலமாக பேணப்படுகின்ற மரபாகும். ஆகையால் உறுப்பினர்கள் செங்கோலுக்கு கௌரவமளிக்கவேண்டும்.

செங்கோல் தொடர்பிலான மரபை பார்வையாளர் கலரிக்கு வருகைதருகின்ற பாடசாலை மாணவர்களும் பார்வையாளர்களும் அவதானித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதால் அதற்கான மரியாதையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலுத்த வேண்டும் என சபாநாயகர் கேட்டுக்கொண்டார். (ஐ -5)

## தடை செய்யப்பட்ட கொரெக்ஷ் பாவனை தொடர்கிறது

கொழும்பு, நவ. 25

நாட்டில் விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ள கொரெக்ஷ் டி மருந்தை சிலர் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்து வருவதாக தேசிய மருந்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தனியார் மருந்தகங்கள் சில இந்த கொரெக்ஷ் டி மருந்தை விற்பனை செய்வதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கொரெக்ஷ் டி மருந்தை அருந்திய 7 பேர் அண்மையில் உயிரிழந்தனர்.

இதனை அடுத்து கொரெக்ஷ் டி விற்பனையை சுகாதார அமைச்சு இலங்கையில் முற்றாகத் தடை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ( ஐ-5)

## இராணுவ அதிகாரியின் மனைவியைக் காணோம்

இராணுவ அதிகாரியொருவரின் மனைவியை கடந்த இரண்டு தினங்களாகக் காணவில்லையென்று காலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தறை வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றும் எரந்தி கருணாரத்ன (வயது - 27) என்பவரே காணமல் போயுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை வேலையை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த அவர் ஹபராதுவையில் வைத்து தொலைபேசி தொடர்பை ஏற்படுத்தியதாகவும் அதற்குப் பின்னர் அவர் வீட்டுக்கு திரும்பவில்லை என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (த -5)

## ஜனாதிபதியின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவை கட்டப்பட்டிருந்தன.சம்பவம் தொடர்பில் கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-5)

## தாலிக் கொடியுடன் பறந்தான் திருடன்

திறந்த வீட்டினுள் புகுந்த திருடன் 2 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியைத் திருடிக்கொண்டு தலைமறைவாகிவிட்டான். வீட்டிலிருந்தவர்கள் வீட்டின் கதவைப் பூட்டாமல் கவனவீனமாக இருந்தமையாலேயே திருட்டு இடம்பெற வழிவகுத்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்று யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் வீட்டின் கதவுகளைப் பூட்டி வைக்காது திறந்த நிலையில் விட்டுள்ளனர். அவ்வாறு திறந்து விட்ட நிலையில் வேறு இடத்தில் தமது வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்து விட்டனர்.

அந்த நேரம் சம்பவ இடத்துக்குச் சென்ற திருடன், கதவு திறந்த நிலையில் உள்ளதையும், அங்கு எவரும் இல்லாதிருப்பதையும் அவதானித்துவிட்டு உள்ளே புகுந்து கையில் கிடைத்த தாலிக்கொடியை அலாக்காய்த் தூக்கிச் சென்றுவிட்டான். சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணையின் மூலமாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று எரிக் பெரேரா மேலும் தெரிவித்தார். (த-4)

# புளத் சிங்கள பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டம் தோல்வி

கொழும்பு, நவ. 25

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் 3 வாக்குகளினால் தோல்வியைத் தழுவியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆளுகைக்குட்பட்ட புளத்சிங்கள பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டமே இவ்வாறு தோல்வியடைந்துள்ளது.

வரவு-செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக சபையின் தவிசாளர் மட்டுமே வாக்களித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த ஏனைய உறுப்பினர்கள் வரவு-செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

வாக்கெடுப்பின் போது அவையில் இருந்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் மூவரும் எதிர்த்து வாக்களித்தமையினால் வரவு-செலவுத்திட்டம் மூன்று மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்துள்ளது. (த-5)

## 6 தமிழ்ப்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பேச்சாளர் மறுத்துள்ளார்.

அலுவலகப் பணிகளுக்காகவும், கணினி பயிற்சிகளுக்காகவுமே அமர்த்தப்படுவர் என்று தெரிவித்தே இராணுவத்தில் தாம் இணைக்கப்பட்டனர் என்று திரும்பி வந்துள்ள பெண்கள் தெரிவித்தனர். தாம் இராணுவ பணிகளுக்கு பயன்படுத்தப்படலாம் என்று தெரிய வந்ததுடன் இராணுவத்தில் இருந்து விலக அந்தப் பெண்கள் கோரினர் எனவும் ஆயினும் ஒரு நாள் வரை தடுத்து வைக்கப்பட்ட அவர்கள் பின்னர் வீடுகளுக்குஅனுப்பப்பட்டனர்எனவும்நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இராணுவத்தில் இணைந்த தமிழ்ப் பெண்கள் தங்களது சுயவிருப்பின் அடிப்படையில் விலகியுள்ளனர் என்றும் அவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இராணுவத்தில் இணைந்த தமிழ்ப் பெண்கள் துன்புறுத்தப்பட்டதாக வெளிவந்த செய்திகளையும் அவர் மறுத்துள்ளார். ( உ-5)

## நவ.27 தீபம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மாவீரர் தினத்தில் தீபம் ஏற்றலாம் என்ற அர்த்தம் வரும் வகையில் தான் ஒருபோதும் சொல்லவில்லை என்றும் அவர் 'உதயன்' பத்திரிகையிடம் கூறினார்.

எப்படி இருப்பினும் நவம்பர் மாதம் 27ஆம் நாள் உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள ஈழத் தமிழ் மக்கள் மாவீரர் தினத்தை இப்போதும் கடைப்பிடிக்கின்றனர். இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மூன்று வருடங்களுக்கு முன்னர் வரை மாவீரர் தின நிகழ்வுகள் வெகு விமர்சையாக நடத்தப்பட்டு வந்தன.

கடந்த மூன்று வருடங்களாக மாவீரர் தினத்தைக் கடைப்பிடிக்க இராணுவத்தினர் தடை விதித்து வருகின்றபோதும் ஆங்காங்கே மக்கள் இத் தினத்தை கடைபிடித்து வருகின்றனர்.

கடந்த வருடம் மாவீரர் தினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதியில் பெரியளவில் மாவீரர் சுடர் ஏற்றப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர். ஆனால் இதனை இராணுவத்தினர் மறுத்தனர். தாம் விடுதியின் உள்ளேயும் சுடர்களை ஏற்றி மாவீரர் தினத்தைக் கடைப்பிடித்தனர் என்று மாணவர்கள் அறிவித்தனர்.

தமிழ் மக்களுக்காகப் போராடி இறந்த போராளிகளின் நினைவாகக் கொண்டாடப்படும் மாவீரர் தினத்தின் இறுதி மூன்று நாள் முக்கிய நிகழ்வுகள் இன்றைய தினம் ஆரம்பமாவது வழமை.

## வெள்ளத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மூன்று பேர் உயிரிழந்தனர்.

தேயிலை கொழுந்து பறித்துவிட்டு, ஒரு கரையிலிருந்து மறு பக்கத்துக்கு ஆற்றைக் கடக்க முயற்சித்தவர்களே வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களில் இருவரது சடலங்கள் மாத்திரமே பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை நண்பகல் மீட்கப்பட்டன.

நுவரெலியா, அம்பேகமுவ பிரதேசத்தில் இயற்கை இடரினால் நேற்றுமாலை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதனை விட பொலனறுவை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் பெய்த மழையினால் 170 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பொலனறுவையில் மகாவெள, கிரிந்தி ஆறு ஆகியன பெருக்கெடுத்தமையை அடுத்து வெள்ளம் பாய்கின்றது. இதனால் 80 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பல பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவில் 90 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் வெல்லவ பிரதேசத்தில் இரண்டு அணைக்கட்டுக்கள் உடைந்ததால் 116 வீடுகள் வரையில் சேதடைந்தன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (த-5)

## குடாநாட்டை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தலா ஒவ்வொருவரும், நீர்வேலி இராணுவ முகாமிலிருந்து 2 பேருமாக 17 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதிலிருந்து பாதுகாப்புப்பெற ஒவ்வொருவரும் தமது சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருந்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தி உள்ளனர். (த-4)

## 100 மாணவிக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மாணவிகள் இவ்வாறான அசாதாரண நிலைக்கு முகம் கொடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவிகளில் ஏழுபேர் மாத்தறை வைத்தியசாலையில் தொடர்ந்தும் தங்கியிருந்து சிகிச்சைப்பெற்று வருகின்றனர். ஏனைய மாணவிகள் சிகிச்சை பெற்று விடுதிக்கு திரும்பியுள்ளனர். ( த -5)

## பிராந்திய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இராணுவத்தை நாட்டுக்கு வெளியே பயன்படுத்தவில்லை.

தனது பாதுகாப்பை உறுதி செய்துகொள்ளும் பொருட்டே எப்போதும் இந்தியாசெயற்பட்டுள்ளது. ஒரு போதும், அதிகாரம் பெறும் நோக்கிலோ அல்லது பிராந்திய வல்லரசாகும் கொள்கையிலேயோ செயற்படவில்லை - என்றார். (த-5)

## தமிழர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தலைவர் ரவூப் ஹக்கீமும், அரசுக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஏன் துணைபோகிறீர்கள்?

நாட்டில் வறுமையை ஒழிக்கவும், வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் சமூக மேம்பாட்டை கருத்தில்கொண்டும் முன்னாள் ஜனாதிபதி 'ஜனசவிய' திட்டத்தை ஆரம்பித்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின் அதனை 'சமுர்த்தி' எனப் பெயர் மாற்றம் செய்தனர். இப்பொழுது சிறிது விரிவுபடுத்தி 'திவிநெகும' என்று மாற்றியமைத்து அது ஜனாதிபதியின் சகோதரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் அரசமைப்புக்கு ஒவ்வாத வகையில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்து பொறுப்புக்கூற முடியாத ஒரு நபரிடம் வரவு-செலவுத் திட்டத்தின் செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்கு வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு, நெடுஞ்சாலைகள், கப்பல் துறைமுகங்கள் அமைச்சு என மூன்று அமைச்சுகள் இந்தச் சபையில் இல்லாதவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது அரசமைப்பின் 148ஆவது உறுப்புரிமைக்கு மாறானதாகும்.

சட்டவாக்கமும் நிறைவேற்று அதிகாரமும் சுயாதீனத் தன்மையுடன் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளாமல் இயங்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும்போது செய்த ஒரு முட்டாள் தனமான செயல்தான் முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரகோனுக்கு எதிராகக் கொண்டு வந்த குற்றப் பிரேரணை. அரசமைப்பில் அதற்கு இடமில்லாத போதும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளில் திருத்தம் ஒன்றைச் செய்தது.

அன்று எதிர்க்கட்சியில் இருந்த காலஞ்சென்ற உறுப்பினர்களான சரத் முத்தெட்டுவேகம, அனுராபண்டார நாயக்க போன்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் இதனை வன்மையாகக் கண்டித்தனர் என்பதை இந்தச் சபையில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

இப்பொழுது பிரதம நீதியரசருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றப் பிரேரணைகள் தொடர்பாக விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது விசாரணைகளைத் தற்காலிகமாகப் பிற்போடும்படி உயர்நீதிமன்றம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது உயர்நீதிமன்றம் உத்தரவிடவோ, கட்டளை பிறப்பிக்கவோ இல்லை. தாழ்மையான ஒரு வேண்டுகோளைத்தான் விடுத்துள்ளது-என்றார்.

## விரைவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வழங்குவதாக போக்கு காட்டி உள்ள ஜனாதிபதி 70 லட்சம் தனியார் துறை ஊழியர்களைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. தனியார் துறையினரே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டிக் காக்கின்றனர் என்பதை மறந்துவிட்டனர்.

பொது மக்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் இல்லை. மாறாக சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பத்து ரூபாவை கொடுத்துவிட்டு 90 ரூபாவைத் தட்டிப்பறித்துள்ளது. முன்பு முப்பது ரூபாக இருந்த தண்ணீர் கட்டணம் 120 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 78 வீத அதிகரிப்பாகும்.

வெளிநாட்டு முதலீடுகள் என்ற பெயரில் பல ஒப்பந்தங்கள் முறையற்ற வகையில் செய்துகொள்ளப்பட்டுள்ளன. மதிப்பீடுகள் குறைக்கப்பட்டு நேர்மையற்ற வகையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் நாம் ஆட்சிக்கு வந்தால் ரத்து செய்யப்படும்.

'திவிநெகும' சட்டவரைவு நடைமுறைக்கு வந்தால் எதிர்க்கட்சி அழித்துவிடும் என்று அரச தரப்பில் கூறுகின்றனர்.

தாமே ஆட்சியில் நிரந்தரமாக இருக்கப்போகின்றோம் என்று கருதுகின்றனர். இப்படித்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் இறுமாப்புடன் பேசினார். அவருக்குத் தெரியாமலே அவரது ஆட்சி கவிழ்ந்தது. அதி விரைவில் இந்த அரசுக்கும் அந்த நிலை ஏற்படும்.

நாடெங்கிலும் 666க்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆடைத் தொழிற்சாலைகளில் ஊழியர்களுக்குக் கூடுதலான வேலை, குறைந்த சம்பளம் என்பதே வீழ்ச்சிக்கான காரணம்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் கமரனும் மியான்மாருக்கு முதலீட்டாளர்களுடன் செல்கின்றனர். அப்படி இங்கும் முதலீட்டாளர்கள் வர வேண்டும். அரசுகள் மாறலாம். ஆனால் பொருளாதாரக் கொள்கையில் மாற்றம் இருக்கக் கூடாது -என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காசி யாத்திரை**

சென்னை, புதுடெல்லி, ஹரித்துவார், ரிஷிகேஷ், மதுரா, தாஜ்மகால், அலகபாத், வாரணாசி, காசி, கயா, புத்தகயா, இராமேஸ்வரம், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், ஸ்ரீரங்கம், சமயபுரம், திருத்தணி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருப்பரம்குன்றம், திருப்பதி மற்றும் பல கோயில்கள். விமான, ரயில், பஸ் கட்டணம், உணவு, தேநீர், தங்குமிடவசதி உள்ளடக்கப்பட்டுள்ளது.

புறப்படும் திகதி: 06.02.2013
மொத்த நாள்கள்: பத்தொன்பது (19)
மொத்தத்தொகை: ரூ 87400/=
தொடர்புகளுக்கு
S.Shanmuham, 52,Galawatte,
Katugastota, Kandy. T.P: 0717061379

(25778)(3.14)

**விற்பனைக்கு**

England விருந்து கொண்டுவரப்பட்ட லேத் மெஷின், மிலின் மெஷின், செய் மெஷின், Colchestor/ Harison / Bridgport பாவித்த நல்ல நிலையில் உள்ளது. உடனடி விற்பனைக்கு உண்டு.
0714246060
பிலியந்தலை

# மரண அறிவித்தல்

## கமலேந்திரம் தேவரூபன்



கொக்குவில் மேற்கு நீதிராஜா வீதியைப், பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கமலேந்திரம் தேவரூபன் (23.11.2012) வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கமலேந்திரம் - சுதாசிறி தம்பதியரின் அருமை மகனும், கோஉஸ்வரன் (அகிலன்), பிரதீபன் (தீபன்), டயாழினி (டயானா), சினோஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ராசேந்திரம் மற்றும் நாகேஸ்வரி, மகேஸ்வரி, சிறிசுதா, புஸ்பராணி, ஜெயானந்தம், கோகிலம், ரஞ்சன், இராசன் ஆகியோரின் பெறாமகனும், சரிதாவின் மைத்துனரும், அபிஷா, கோசிகன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.11.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுவீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்.

(சி/1558)(8-14)

# மரண அறிவித்தல்

## ஆழ்வார் கிட்டினர்



எழுதுமட்டுவாளைப்பிறப்பிடமாகவும், பளையை வதிவிடமாகவும் கொண்ட ஆழ்வார் கிட்டினர் (19.11.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமர், தெய்வானை, செல்லம்மா, வல்லிபுரம் மற்றும் செல்லத்துரை, பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவராஜா, சிவபாலன் மற்றும் சிவமலர் (இலங்கை), சிவராணி (இலங்கை), சிவநேசம் (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவநாதன் (ஜேர்மனி), சிவஞானம் (ஆஸ்திரேலியா), சிவசோதி (லண்டன்), சிவதாசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகமலர் (இலங்கை), இராஜமலர் (லண்டன்), பொன்னுத்துரை (இலங்கை), சிவானந்தம் (பிரான்ஸ்), தங்கவேல் (பிரான்ஸ்), விஜிதா (இந்தியா), பத்மாவதி (ஜேர்மனி), கோபிநந்தா (ஆஸ்திரேலியா), சிவஜெயம் (லண்டன்), ராஜினி (கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிறிதரன், ஜெயவதனி, பிரதீப் மற்றும் கிருஷாந்தி, துளசிதரன், கலைவாணி, சபேஸ்நாத், அருள்நாதன், ஜெயகரன், ஜெயகௌரி, திருவேரகன் (சுதன்), கவிப்பிரியா, தமிழினி, வக்சானந்தன், குகநாத், துளசிநாத்-சிவதர்ஷினி, சிவதர்ஷன், சயந்தா, ரிஷிபா, சாளினி, சானுசா-ரெசாந், ஜெயசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் அபிசாந், அபிசாலினி, சதுர்சனா, லதுர்சா, மிதூஸ், இலக்கியா, இலக்கியன், லசிதா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2012) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பளை தம்பகாமம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


வண்ணாங்கேணி, பளை.
077-0757191.

(25786) (10,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## கணவதிப்பிள்ளை கந்தசாமி



மாதகல், யாதம்பையை பிறப்பிடமாகவும் கனடா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான கணவதிப்பிள்ளை கந்தசாமி 23.11.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் (கனடா), பரமேஸ்வரி (கனடா), இலட்சுமிப்பிள்ளை, சண்முகசுந்தரம் (அமெரிக்கா), காந்திமதி (கனடா), விமலாதேவி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, பொன்னம்பலம் (செட்டிகுளம்), மற்றும் கணபதிப்பிள்ளை, முத்துலிங்கம் (கனடா), திலகவதி (அமெரிக்கா), பொன்னம்பலம் (வவுனியா), கடம்பமலர், சச்சிதானந்தம், சேய்ராதா, கங்காதேவி, சிறிமுருகன், பிரணவசோதி, சோதி ஆகியோரின் மைத்துனரும் சிறிபத்மராணி, கோபாலசிங்கம், சிவபாலகிருஷ்ணன் (கனடா), கருணாகரன், காஞ்சனாதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான கிருபாகரன், சிறிதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தமகேஸ்வரன், புவனேஸ்வரி, தயாசலா (கனடா), மங்களேஸ்வரி (கனடா), பாலகிருஷ்ணன் ஆகியோரின் மாமனாரும் தனஞ்சயா, கோதீசன், சுபர்ணா, தேனுஜா, மதுராஜ், அகில்ராஜ், ஜனுசா, லேனுசா, புகழரசி, விழியரசி, திருவரங்கன், திவியரசி, லக்ஸ்மனன், செல்வி, ஆதவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தமிழ்க்கீரன், கபிசாயினி, திசானி, ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2012) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மாதகல் 0774013696
0771864579
0214900946

(சி/1965) (10,6,7)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைக்குள் மறைத்து தங்க நகை கடத்தல்

சென்னை, நவ. 25

ஆடைக்குள் மறைத்து வைத்து இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 9 லட்சம் ரூபா மதிப்புள்ள தங்கத்தைச் சென்னை விமானநிலையத்தில் ஆயப் பகுதியினர் பறிமுதல் செய்துள்ளனர்.

கொழும்பில் இருந்து சென்னைக்குக் கடந்த வியாழன் இரவு ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் விமானம் சென்றது. அதில் சென்ற பயணிகளை, விமான நிலைய ஆயப் பகுதியினர் சோதனை செய்தனர்.

அப்போது, மட்டக்களப்பைச் சேர்ந்த முகம்மது முஜாமில் (வயது -37) என்ற பயணி கடந்த சில மாதங்களில் எட்டு முறை சுற்றுலா விசாவில் சென்னை வந்து சென்றிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, அவரைத் தனி அறையில் அதிகாரிகள் சோதனை நடத்தினர். அவரது ஆடைக்குள் மறைத்தும், 300 கிராம் தங்க நகைகளைப் பாதரசம் பூசியும் வைத்திருப்பது தெரியவந்தது.

தங்கத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள், முகம்மது முஜாமில்லிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். கைப்பற்றப்பட்ட தங்க நகைகளின் பெறுமதி ஒன்பது லட்சம் இந்திய ரூபாய் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுற்றிடும் பூமி தன்னில்
சுயநலத்தோடு
வாழ்ந்திடும் மானிடருள்
பொதுநலத்தோடு புறவிழி
இழந்தோரின்
அகவிழியாய் விளங்கும்
வாழ்வகத் தலைமகன்

**திரு.ஆ.ரவீந்திரன்**

(B.A.PGDE.M.Ed.SLTES-III) அவர்களை யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம் சேவைபாராட்டி கௌரவிப்பதையிட்டு மனமகிழ்வதோடு, தங்கச் சூரியனாய் ஒளிவிசி இன்னும் பல விருதுகள் பெற்று மேலும் உங்கள் சேவைகள் தொடர வாழ்த்துகிறோம்.

Best Wishes

**வாழ்வகம்**
**சபாபதிப்பிள்ளை வீதி,**
**சுன்னாகம்.**

(25796)(9.14)

**வாழ்த்துவோர்**
**வாழ்வக ஆசிரியர் குழாம்.**

## மரண அறிவித்தல்கள்

### மனுவல் சின்னத்துரை



16/4, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மனுவல் சின்னத்துரை நேற்று (24.11.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் -ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அமலஷற்பவத்தின் கணவரும், ஞானம்மா, காலஞ்சென்றவர்களான சூரி, ராசேந்திரம், மற்றும் மோசேஸ், பிலோமினா, லூர்த்தம்மா ஆகியோரின் சகோதரனும், அருமைராசா, சுரேஸ் ஆகியோரின் தந்தையும், லதுஷா, கிசோபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (26.11.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் புனித திரேசான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**16/4, கச்சேரி, நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (25815)(9.14)

**தகவல்: சுரேஸ்**
**(உரிமையாளர் சுரேஸ் ஸ்ரூடியோ)**

### தம்பிப்பிள்ளை துரைசிங்கம் (புலியர்)



மாரீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை - துரைசிங்கம் நேற்று (24.11.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நெல்லிப்பிள்ளை தம்பதியரின் அருமைப்புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - மாணிக்கவல்லி தம்பதியரின் மருமகனும், றாதாம்பாளின் (ஔவையக்கா)வின் அன்புக்கணவரும், றாகவன் (கனடா), கோமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கப்பிள்ளை மற்றும் புனிதவதி காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் அம்பிகாபதி, காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் சோதீஸ்வரி, தருமநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.சிவேந்திரன், சுயேந்திரன், குணதீபா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக மட்டிவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மாரீசன்கூடல், இளவாலை.** (சி/1558)(8-14)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**


Study in UK

Free English Language Test for January 2013 Applicants

Anglia Ruskin University
Cambridge & Chelmsford

SPOT ADMISSION

Meet
Mr. Raj Allam from
Anglia Ruskin University

Date 03rd of December 2012(Monday)
Time: 10.30 a.m – 2.00 p.m
Venue: Lohos Group
Contact Number: 0777917929/0773 498 660
Email: lohosgroup@sltnet.lk

Date 03rd of December 2012(Monday)
Time: 3.30 p.m -5.00 p.m
Venue: ICBT Study Abroad
Contact number – 0773 442628
Email: studyaboad@icbtcampus.edu.lk

Date : 04th of December 2012( Tuesday)
Time: 2.00 p.m -5.00 p.m
Venue :
Contact number: 021 7306000, 077 3013060
Email: lakna@cduk.lk

CHOOSE FROM
A WIDE RANGE OF COURSES

| | |
|---|---|
| ACCA | Management |
| MBA | Hospital Administration (MBA) |
| Media and Communication | International Finance |
| Physiotherapy | Marketing and Innovation |
| Information Technology | International Entrepreneurship |
| Network Security and Management | Business Administration (MBA) |
| Nursing (with ONP) | Engineering |
| Biotechnology | Accounting and Finance |
| Biomedical Sciences | Fashion Design |
| Built Environment | |


## எங்கள் தீபத்தின் ஆண்டுத்திவச அழைப்பும் முதலாம் ஆண்டு நினைவும்

### அமரர் திருமதி தளையசிங்கம் செல்லம்மா



எம் அன்புத் தெய்வமே! அம்மா!
பாசத்தின் வடிவமாகப் பாரினில்
எமையெல்லாம் பண்பு சொல்லி
பரிவு காட்டிப் படிக்க வைத்து
பாதியிலே உன் செல்வங்கள் பரிதவிக்க
தாயில்லாப் பிள்ளையோ காலனவன்
தாய் மடிக்கேங்கி உனைக் கவர்ந்தானோ?
மௌனத் துயர் அமர்ந்து நம் இதயம்
விம்மித் துடிப்பதேன்ன?
அலைபாயும் மனமும் நிலைசோரும்
உடலும் உனைப்பார்க்கத் தவிக்கின்றதே
உங்கள் முகம் ஆங்கீங்கும் எல்லாம்
கண்டு அகமெல்லாம் கலங்குகின்றதே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா? அம்மா
அன்போடு எமை அரவணைத்து
பண்போடு எமை வழிநடத்திய
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஒன்று ஆனதே

இன்னும் எத்தனை எத்தனை ஆண்டு
உருண்டோடினாலும் உங்கள்
நினைவுகள் என்றுமே எமைவிட்டுப்பிரியாது
மீண்டுமொரு புனர் ஜென்மம் எடுத்திங்கு
எமதுயிரை விடுவிக்க வேண்டுமம்மா?

**உங்கள் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது அன்புத் தெய்வத்தின் இறுதித் துயரில் எம்முடன் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இன்று (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**அண்ணா சனசமூக**
**நிலையத்தடி, உடுவில் கிழக்கு,**
**இணுவில்.**

**குடும்பத்தினர்.**

(சி/1974)(9.14)

## கணினி திருத்தம் Computer Repair

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம். அழையுங்கள்:
0779086737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1985 பூசம் உதயத்து செவ்வாய் 57 பாவம், பட்டதாரி ஆசிரியருக்கு அரச அல்லது வங்கியில் கடமையாற்றுபவரை எதிர்பார்கிறார்கள். தகுந்த சீதனம் வழங்கப்படும்.
லண்டன்: 00447448636407

## வீடு வாடகைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் st.Ann's Lane இல் விசாலமான வரவேற்பறை 4 படுக்கையறைகள், 2 குளியலறைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் கூடிய 3 ½ பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு-0774527671, 0217903444

## ஜேமன் சப்பேட் ஆண், பெண் நாய்கள் விற்பனைக்கு உண்டு.

0777797889
து.யஜீதரன்
அம்பத்தை வீதி மல்லாகம் தெற்கு.
(25809)(3.14)

## வீடு வாடகைக்கு

பல்கலைக்கழக சூழலில் பெண்களுக்கான அறை அல்லது சிறிய குடும்பம் தங்குவதற்கு சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0770776565,
0774047912
(25807)(3.14)

## கார் விற்பனைக்கு

301 - XXXX தொடரிலக்கமுடைய Nishan வகை Silver colour கார் விற்பனைக்குண்டு.
விலை 15 1/2 LKS
தொடர்பு: 0779515394
(25808)(3.14)

## விற்பனைக்கு

90 sri தொடர் இலக்கமுடைய HONDA CD 200 மோட்டார் சைக்கிள் Original உதிரிப்பாகங்களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0777404926
(25853)(3.14)

## கண்ணீர் அஞ்சலி



நாரன்தனை சரவணை கர்ணன் தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருப்பணிச் சபை உறுப்பினரும், மலர் வெளியீட்டுகுழு பத்திராதிபரும் ஆகிய


### நாகலிங்கம் தனபாலன்

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(25800)(9.14) **ஆலய பரிபாலனசபையினர்.**

## மரண அறிவித்தல்

### சிதம்பரன் சின்னக்கண்டு (தியாகன்)



''மலர்மாளிகை'' வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரன் சின்னக்கண்டு (தியாகன்) 23.11.2012 வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரன் -பசுபதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குட்டியன் -சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தெய்வேந்திரராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், தங்கராசா, மற்றும் இராஜகாந்தம் ஆகியோரின் சகோதரரும், பஞ்சலிங்கம் அவர்களின் மைத்துனரும், மலர்விழி (ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கயல்விழி (சுவிஸ்), சர்மிலி, தர்சன் (பேராதனை ப.க. வெளிவாரி இறுதியாண்டு மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கங்காதரன் (சுவிஸ்), அசோகலிங்கம் (ஆசிரியர், கிளி/கிளாலி றோ.க.த.க.பா), எழிலரசி (லண்டன்), காண்டீபன் (கணக்காளர்-யாழ். அபான்ஸ்), காலஞ்சென்ற எழில்வேந்தன் மற்றும் இளவரசன், இராஜகல்யாணி, பஞ்சகல்யாணி ஆகியோரின் மாமனும், கஜிதா (சுவிஸ்), சுவேதா (சுவிஸ்), கவிப்பிரியா (சுவிஸ்), அகல்விழி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.11.2012 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**''மலர்மாளிகை'' கருணாநிதி**
**ச.ச.நி, வல்வெட்டி.** (25866)(9.14)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஒட்டப்பம் வீட்டைச் சுடும் நிலைக்கு இடம் கொடாதீர்...

திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது - என்பது ஒரு சினிமாப் படப் பாடல் வரி. அந்த அர்த்தமுள்ள பாடல், தீய செயல்களில் ஒன்றான திருட்டுத் தொழிலுக்கு மட்டுமன்றி, மற்றவர் சொத்தை, பெறுமதி வாய்ந்த பொருளை, பணத்தை, வாழ்வியல் சார்ந்த ஏனைய பெறுமதி மிகுந்த அறிவுசார் பொக்கிஷங்களைத் திருடுவது மனிதன் தோற்றம் கண்ட காலம் முதலே ஒரு சாபக்கேடாகிவிட்டது.

இது ஒரு நாட்டுக்கு, பிரதேசத்துக்கு, ஊருக்கு என்ற வரையறையின்றி பூலோகம் முழுவதற்குமான இழிசெயலாகிவிட்டது.

நவீன உலகின் சகல வகையான தேவைகளுக்கும் பணம் முழுமுதற் தேவை, அடி அத்திபாரம்; அது கையில் இல்லை என்றால் மனித வாழ்க்கையின் இயக்கம் நின்றுவிடும் எனக் கூறுமளவுக்கு பணம் 'நடுநாயகமாக' விளங்குகிறது. நாட்டுக்குள்ளேயே, அந்தந்தப் பிரதேசங்களுக்குள்ளேயே நடைபெற்று வந்த பண்டமாற்றுக்குப் பதிலாக உலகளாவிய மட்டத்தில் பணப்பரிமாற்றம் பரிணமித்தது; பரவியது.

அதனாலேயே பல்வகை பாசாங்குகள், உத்திகள் ஊடாக திருட்டு முதல் மோசடி செய்தல் வரையான பணமோசடிகள் அனைத்துலக மட்டத்திலும், நம்பவைத்து அடுத்தவனை நாசமறுக்கும் செயல்கள் மலிந்து வருகின்றன.

பூசை நடைபெறும் இடத்தில் பெண்கள் நகைகளை அணிந்திருக்கக் கூடாது. நகைகளைக் கழற்றி செம்பில் இட்டு மூடி சுவாமி அறையில் வையுங்கள். உங்களுக்கு உள்ள தோஷம் விட்டகல சகலரும் வீட்டைச் சுற்றிவாருங்கள் என்று பிராயச்சித்தம் செய்ய வந்த சாமியார், செம்பில் கல்லைப் போட்டு விட்டு, நகைகள் முழுவதையும் 'அபேஸ்' செய்த சம்பவம், பணத்துக்காக எவரும் எந்த வகை மோசடியையும் செய்வர் என்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் சுன்னாகம் பிரதேசத்தில் நடைபெற்றிருந்தது மிகச் சிறிய உதாரணம்.

அதனைப் போன்று, மக்கள் பாடுபட்டு உழைத்த பணத்தை பிந்திய தொழில்நுட்ப, தொலைத்தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி களவாடும் பலவகையான மோசடிகள் வடபகுதியில் நடைபெற்று வருகின்றன.

ஆகப்பிந்தி, மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் மூலம் பண மோசடிகள் நடத்தப்படுவது அம்பலத்துக்கு வந்துள்ளது; பலர் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.. இது குறித்து அவதானமாக இருக்குமாறு, மத்திய வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் குடாநாட்டு மக்களை முன்னெச்சரிக்கை செய்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணமோசடிகள் பல்வேறு வடிவங்களில் நடைபெற்று வருகின்றன. மின்னஞ்சல் (ஈ-மெயில்), குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்.) மூலம் பண மோசடிகள் நடைபெறுவது புதிதாக முளைத்துள்ளது.

அந்த மோசடி எவ்வாறு, எத்தனை கெட்டித்தனத்தோடு நடைபெறுகிறது என்பதனை மத்திய வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் விலாவாரியாக விவரித்துள்ளார். (அந்த விவரத்தை நேற்றைய உதயனின் மூன்றாம் பக்கத்தில் படித்தறியலாம்)

ஈ - மெயில், எஸ்.எம்.எஸ். மூலம் ஏமாற்றப்பட்டு பணத்தைப் பறிகொடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் பலர், மத்திய வங்கியின் யாழ். கிளைக்கு முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே புதிய பணமோசடி குறித்த தகவல் வெளிப்பட்டுள்ளது.

ஈ - மெயில், எஸ்.எம்.எஸ். மூலம் மட்டுமே பணமோசடி நடைபெறவில்லை. போலி நகைகளை அடைவு வைத்தல், காசோலை மோசடி, தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களில் முதலீடு செய்யுமாறு பிரசாரம் செய்தல் என்பனவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருகிவருகின்றன.

இவைகுறித்து மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததாலேயே, மோசடிப் பேர்வழிகள் தமது 'கெட்டித்தனத்தை'ப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

மேற்குறித்த மோசடிகளில் ஈடுபடும் தரப்புகளின் பிரதிநிதிகள், வீடுகளிலுள்ள பெண்களிடம், கவர்ச்சிகரமான நயங்கள், நலன்கள் குறித்து வைச்சுக்கட்டிப் பக்குவமாகப் பேசி, அவர்களைத் தமது பண மோசடித் திட்டங்களில் உள்வாங்கிவிடுகிறார்கள்.

மொத்தத்தில், இத்தகைய பண மோசடிகள் அதிகரிப்பதற்கு இப் பிரதேச மக்களிடம் போதிய விழிப்புணர்வு இல்லாமையே காரணம். அதனாலேயே, மோசடிக் காரர்களின் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள்.

வடக்கின் நீண்டகாலப் போரின்போது ஆட்சியில் இருந்த அரசுகள் தமிழ் மக்களின் நலன்களில் (பெயருக்காக மட்டும்) கால்வாசி, அரைவாசி மட்டுமே கவனம் செலுத்தியதால் எங்கள் வளங்கள், வாழ்க்கைத் தரங்கள் எல்லாமே கீழ் நோக்கிச் சென்றுவிட்டன; தேய்ந்துபோய் விட்டன.

புலம் பெயர் சொந்தங்களின் பண உதவி இல்லாவிடில் இப்போதைய குடும்ப நிலைமைகளும் தக்கவைத்திருக்கப்பட மாட்டா என்பது மிகவும் தெளிவானது; யதார்த்தமும் அதுவே.

குடாநாட்டு மக்களிடம் எந்த நெருக்கடியான கட்டங்களிலும் சராசரியாகவேனும் பணப்புழக்கம் இருக்கும் என்பதனைத் தெரிந்து வைத்துக்கொண்டு, தமது மோசடிகளைச் சாதிக்கத் திட்டமிடுகிறார்கள். அவற்றின் பிரகாரம் செயற்படுகிறார்கள்.

இதனை நன்றாகத் தெரிந்தும், புரிந்தும் செயற்படுவதற்கு, குடாநாட்டு மக்கள் எப்போதும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவதற்குத் தம்மை ஆற்றுகைப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குரிய பக்குவத்தை அடைவதற்கான இயல்பும் மனநிலையும் அவர்கள் மத்தியில் வளர வேண்டும்.

பண நஷ்டம் என்ற வடிவில் ஆபத்து வருவதற்கு முன்னர் அதனை எதிர்கொள்வதற்கு குடாநாட்டு மக்கள் தம்மைத் தாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

பணமோசடியைத் தடுப்பதில் உதவக்கூடிய தரப்புகளை இனங்கண்டு தற்காத்துக் கொள்வது அவரவர் பொறுப்புமாகும். இல்லையேல் ஒட்டப்பம் வீட்டைச் சுடும் என்ற நிலையே மிஞ்சும்.

# அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தில் பெரும் தொகைப் பணம் வீண் விரயம்

## கணக்காய்வாளர் அறிக்கையில் அம்பலம்

கொழும்பு,நவ.25

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனம் 86 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு 262 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது.

அரச கணக்காய்வாளரால் வெளியிடப்பட்டுள்ள 2010 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

அத்தியாவசியமான அந்த மருந்துத் தொகை, அவசரக் கொள்வனவு என்ற வகையில் பெறப்பட்டுள்ளது.

அவற்றைச் சாதாரண முறைமையில் கொள்வனவு செய்திருப்பின், அதன் மூலம் 176 மில்லியன் ரூபாவை மீதப்படுத்தியிருக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்தக் கொள்வனவுடன் சம்பந்தப்படும் காரணிகள் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்டவையே என்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரியப்படுத்தியுள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைய அவசர அத்தியாவசிய உயிர்காப்பு மருந்துகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனத்துக்கு 450 மில்லியன் ரூபாவை அரசு வழங்கியுள்ளது.

அது சம்பந்தப்படும் கொள்வனவுகளின் போது அத்தியாவசியமான 16 மருந்துகள் தொடர்பாக கோரிக்கை விண்ணப்பம் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அத்தியாவசியமானவை எனக் குறிப்பிடப்படாத 6 மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு 30 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது என்றும், அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேவைப்பட்ட 18 வகையான பொருள்களை விநியோகிப்பதற்கு நீண்ட காலம் கடந்திருந்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-22)

ஒன்பது வருட கடமை நிறைவேற்று அதிபருக்கு

# நிரந்தர நியமன நேர்முகத் தேர்வு: அழைப்பு வந்து சேராதது ஏன்?

யாழ்ப்பாணம்,நவ.25

கடந்த ஒன்பதரை வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றிய தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஒன்றின் அதிபர் நிரந்தர நியமனம் வழங்க இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவில்லை.

இது தொடர்பாகக் குறித்த அதிபர் கவலை தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் குறித்த அதிபர் ஒன்பதரை வருடங்கள் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

நிரந்தர நியமனம் தொடர்பாக ஐந்து ஆண்டுகள் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றுவோரின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சால் கோரப்பட்டிருந்த நிலையில், கடமை நிறைவேற்று அதிபர் சேவையில் ஐந்து வருட சேவையைப் பூர்த்தி செய்யாத அதிபர்களின் விவரங்கள் கூடக் கல்வி அமைச்சுக்கு வலயக் கல்வி அலுவலகத்தால் அனுப்பப்பட்டன.

இந்த நிலையில் தனது பெயரைத் திட்டமிட்டு அனுப்பவில்லை எனவும் இது தொடர்பாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய இருக்கும் அதே சமயம் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட அதிபர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகத் தென்மராட்சி வலய உயர்மட்ட அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:-

நியமனக் கடிதம் கிடைக்காமை குறித்து கோட்டக் கல்வி அலுவலகம் ஊடாக மேன்முறையீடு செய்ய முடியும் .-என்று கூறி முடித்தார். (ம)

# சட்டவிரோத நடவடிக்கைகள் 17 பேருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், நவ.25

சட்ட விரோதமாக சாராயம், கள் விற்பனை மற்றும் 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 17 பேருக்கு 31 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்.மதுவரித் திணைக்கள கட்டுப்பாட்டு அதிகாரி என்.கிருபாகரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள யாழ்.நகர், கலட்டி, நாச்சிமார் கோயிலடி, குருநகர், அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்பனை செய்த இருவரும், சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்த மூவரும், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 12 வர்த்தகர்களும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் இனங்காணப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்பனை செய்த 2 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபாவும், சட்டவிரோதமாக வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்த 3 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 3ஆயிரம் ரூபாவும், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 12 பேருக்கு தலா 1500 ரூபா வீதம் 18 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ம-14)

# நீதியரசர் மீதான பிரேரணை கத்தோலிக்க ஆயர்கள் கண்டனம்

கொழும்பு,நவ.25

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு அவரை நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் அகற்றும் முயற்சிகள் குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள கத்தோலிக்க ஆயர்கள் பேரவை மன்றத்தால் வெளியிடப்பட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரதம நீதியரசர் மீதான குற்றங்கள் குறித்த விளக்கங்கள் தெளிவாக இல்லை. நிர்வாகம், சட்டத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றும் தனித்தனியாக இயங்க வேண்டியவை.

இவ்வாறு தனித்துவம் மிக்க துறைகளில் ஒன்றான நீதித்துறையின் சுதந்திரம் அரசின் அண்மைய நடவடிக்கைகளால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளமை கண்டிக்கப்பட வேண்டியது.

இலங்கை ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷ தலைமையின் கீழ் இயங்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நிதிப் பரிமாற்றங்களைக் கொண்டுவரும் சட்டத்தை நிறைவேற்றக் காலம் தாழ்த்தியமை, மாகாண சபைகளின் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்ள முயன்றதை எதிர்த்தமை என்பன பிரதம நீதியரசர் செய்த குற்றங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதேபோன்று மேலும் பல குற்றங்களை முன்னிறுத்திப் பிரதம நீதியரசரைப் பதவி நீக்க எடுத்திருக்கும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.-என்றுள்ளது.

(ம-135)

# காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு நிறைந்து வழிகின்றன ஆஸ்பத்திரி விடுதிகள்

தென்மராட்சி,நவ.25

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மைக் காலமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டுச் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தினமும் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவோரில் பெரும் எண்ணிக்கையானோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு விடுதிகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் விடுதிகள் நிறைந்து காணப்படுகின்றன. தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களிலிருந்து காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களே சிகிச்சை பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

இது தொடர்பாக வைத்திய அதிகாரி ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

முன்னைய காலங்களில் மழை காலத்தில் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும், பலர் பனடோல் போன்ற குளிசைகளைப் பாவித்து வைத்தியசாலைக்கு வருவதில்லை.

ஆனால், தற்போது நாட்டில் பரவி வரும் டெங்குக் காய்ச்சலின் பாதிப்புகளை உணர்ந்த மக்கள் சாதாரண காய்ச்சல் ஏற்பட்டாலும் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர். இதுவே வைத்தியசாலைகளுக்குக் காய்ச்சல் நோயாளர்கள் வருவது அதிகரித்துள்ளமைக்குக் காரணமாகும்.-என்றார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால் விடும் கசிப்பு வியாபாரம்

## கிளிநொச்சியில் பலர் மடக்கிப் பிடிப்பு

**கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் வீடொன்றின் சமையலறையில் நெஸ்ர மோல்ட் ரின் ஒன்றுக்குள் இருந்து கசிப்பு மீட்கப்பட்டது.**

யாழ்ப்பாணம், நவ.25

ஏ-35 வீதியின் தருமபுரம், குமாரசுவாமிபுரம், மயில்வாகனபுரம், உழவனூர், கண்டாவளை, முரசுமோட்டை, கோரக்கன்கட்டு, பரந்தன் என பல்வேறு இடங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் வீடொன்றின் சமையலறையில் நெஸ்ர மோல்ட் ரின் ஒன்றுக்குள் இருந்து கசிப்பு மீட்கப்பட்டது.

இதேபோன்று சொப்பிங் பாக் ஒன்றினுள் கட்டி மாட்டுக்கு வைக்கும் தீனிப் பாத்திரத்துக்கு அடியில் வைத்து மேல் தீனி போட்டு மூடப்பட்ட நிலையில் கசிப்பு பிடிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஊரியான் பகுதியில் குழந்தையின் தலையணைக்குள் இருந்து கசிப்பு மீட்கப்பட்டது. இதைவிட வீதிகளில் கொண்டு செல்லும் உடைமைகளில் மறைத்து வைத்திருக்கும் போதும் எண்ணற்றவர்கள் கைது செய்யப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது ஊரியான் பகுதியில் கண்டாவளை ஆற்றுப் படுக்கை, ஊரியான் ஆகிய இடங்கள் கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதை விட முரசுமோட்டை பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரமும் அதனோடு இணைந்த கசிப்பு வியாபாரமும் நடைபெறுவதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அதிகாரிகள், பொலிஸார் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு பலரைக் கைது செய்து வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமையும் வட்டக்கச்சி கல்மடு நகர், இராமநாதபுரம் பகுதிகளில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் அதிரடி நடவடிக்கை காரணமாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# கற்றலுக்கு இடையூறான செயற்பாடுகளில் ராணுவம்

## பெற்றோர் விசனம்

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி, பாரதிபுரம் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம் இடையூறாக இருப்பதாகப் பாடசாலை சமூகத்தினர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பெற்றோர்கள் சார்பில் ஒருவர் கூறியதாவது:-

கடந்தவாரம் பாடசாலையில் சாதாரண தரப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

அதன்போது அருகில் இருக்கும் இராணுவ முகாமில் இருந்து கண்ணாடி ஒளியை இராணுவத்தினர் மாணவர்களின் முகத்துக்கு பிடித்தனர் என்று வீட்டுக்கு வந்த பின்னர் பிள்ளைகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கருத்தரங்கு நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் இராணுவத்தினரிடம்; ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறீர்கள், பிள்ளைகள் படிப்பதற்குச் சிரமப்படுகிறார்கள் என்று கேட்டபோது, பொறுப்பற்ற விதமாக இராணுவத்தினர் பதிலளித்தனர் என்றும் பிள்ளைகள் தெரிவித்தனர்.

இதேவேளை, பாடசாலையைச் சுற்றி இராணுவ முகாம்கள் அமைந்திருப்பதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும், இது தொடர்பில் எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்க முடியாதிருப்பதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ)


# மாற்றுவலுவுடையோரை பராமரிக்கத் திட்டம்

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் மாற்றுவலுவுள்ளோரை சமூக மட்டத்தில் வைத்துப் பராமரிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தொண்டர் படைக்குக் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் செயலமர்வு ஒன்று கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், பிரதேச சமூக சேவைகள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ப.சிவகரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டு கருத்துரையை வழங்கினர். (ஐ-9)



செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் சீ.பீ.ஆர். செயல்திட்ட செயலமர்வு கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதில் சீ.பீ.ஆர். பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

# வீடமைப்பு அதிகார சபையின் வீடுகளில் போதிய வசதியில்லை

## கடன் பெற்ற மக்கள் நெருக்கடியில்

யாழ்ப்பாணம், நவ.25

கிளிநொச்சி பொன்நகர் கிராமத்தில் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீடுகளில் வாழும் குடும்பங்கள், தாம் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொன்நகர் கிராமத்தில் கடந்த ஆண்டு வீடமைப்பு அதிகார சபையினால் கடனடிப்படையில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தில் தற்போது சுமார் 60 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இங்குள்ள குடும்பங்களிடம் மாதாந்தம் குறிப்பிட்ட தவணையில் கடன் அறவிடப்படுகின்றது.

ஆனால் வாக்குறுதி வழங்கப்பட்ட வசதிகள் எவையும் பூர்த்தி செய்யப்படவில்லையென இந்தக் குடியிருப்பு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வீட்டுத் திட்டத்தில் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி என சகல வசதிகளும் செய்து தரப்படும் என்று கூறப்பட்டு இன்று இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் எந்த வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. வீட்டுத்திட்ட கடன்களைப் பெற்று வீடு கட்டிய பலர் வசதிகள் இன்மையால் வேறு இடங்களில் வாடகை வீடுகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர். போக்குவரத்தும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீட்டுத் திட்டத்தை முழுமையாக வழங்க வேண்டும். இதன் மூலமே நாம் சீராக வாழ முடியும். வங்கிக் கடன்களையும் செலுத்த முடியும் எனத் தெரிவிக்கின்றனர். (ஐ-6)

# மடு வலய பாடசாலைகளில் வசதிகளின்றி மாணவர்கள்

## பாட விதானங்கள் முடிவுறாத நிலையில்

மன்னார் மடு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பலர் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அரை நேரக் கற்பித்தல் செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர். இதனால் மாணவர்களுக்கான உரிய பாடவிதானங்கள் குறித்தொதுக்கப்பட்ட நாள்களில் கற்பித்து முடிக்கப்படுவதில்லை.

கல்வி நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வமும், திறனும் கொண்ட மாணவர்கள் இருந்தாலும் அதற்கான சரியான வழிகாட்டகள் இந்தப் பாடசாலைகளில் இல்லை எனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் தனியார் கல்வி நிலையங்களும் இல்லாமயால் பாடசாலைகளை நம்பியே அவர்கள் தமது கல்வியைத் தொடர்கின்றனர். இவ்வாறான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மடு வலயக் கல்வி அதிகாரிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்க வேண்டும் எனப் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-12)

# கிளிநொச்சியில் சமாதான நீதிவான்கள் இருவர் நியமனம்

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பணி புரியும் இரண்டு உத்தியோகத்தர்கள் சமாதான நீதிவான்களாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும் அமரசிங்கம் கேதீஸ்வரன் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும்,

மாவட்டச் சமூக சேவைகள் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வேதநாயகம் தபேந்திரன் யாழ். நீதி நிர்வாக வலய சமாதான நீதிவானாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-9)

## கிளிநொச்சிப் பிரதேசத்தில்

# குற்றச்செயல்களில் ஈடுபட்ட 40 பேர் மடக்கிப் பிடிப்பு

கிளிநொச்சி, நவ. 25

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 40 பேர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 10 பேர், சுமார் 3 லட்சத்து 89 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைத்திருட்டு சந்தேகநபர் ஒருவர், போக்குவரத்து விதிமுறைகளை மீறிய; நீதிமன்றுக்குச் சமுகமளிக்காத; 15 பேர், மற்றும் கசிப்பு; பாலியல் துஷ்பிரயோகம்; மரக்கடத்தல் போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் அதிகாலை மூன்று மணி தொடக்கம் 6 மணி வரையான நேரத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட அனைத்துப் பொலிஸ் பிரிவுகளிலும் தேடுதல் நடத்தப்பட்டது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.பி. நீல் தளுவத்த, கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் பொறுப்பதிகாரி எ.மகேந்திர, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீர, கிளிநொச்சி பொலிஸ் பொறுப்பதிகாரி குமாரவீரசிங்க உள்ளிட்ட விசேட குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர் என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-6)

## சமூக சேவைகள் அலுவலகம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, நவ.25

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்துக்கான புதிய அலுவலகம் கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்துக்கு அருகில் அமைக்கப்பட்டு வருகிறது.

கரைச்சி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட 20 பேர்ச் காணியில் 3 மில்லியன் ரூபா செலவில் அலுவலகத்துக்கான கட்டடம் மாகாண விசேட அபிவிருத்தி நிதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

மாகாண விசேட அபிவிருத்தி நிதியில் கடந்த 2010 ஆம் ஆண்டு வவுனியா சமூக சேவைகள் அலுவலகம் 5.5 மில்லியன் ரூபா செலவில் வைரவப் புளியங்குளத்தில் அமைக்கப்பட்டது என்றும் அடுத்த வருடம் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் அமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# சதிவலையில் வீழ்ந்து விடாதீர்!

## எச்சரிக்கிறார் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், நவ.25

எமது சமூகத்தையும் கலாசாரத்தையும் சிதைக்கும் வகையில் பல்வேறு சதி முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு கட்டமாகவே தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றனர் - எனகிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் மாரியப்பன் சுகந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதேச சபை கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்; நல்ல ஒரு ஒழுக்கமுள்ள கட்டுக்கோப்புள்ள சமூகமாக வாழ்ந்து வரும் எமது சமூகத்தைச் சீர்குலைக்கும் வகையில் பல்வேறு சதி முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதாவது தற்போது மிகவும் பின்தங்கிய பொருளாதார ரீதியில் நலிவுற்ற குடும்பங்களின் வறுமையைச் சாதகமாகப் பயன்படுத்தி அந்த குடும்பங்களில் உள்ள பெண் பிள்ளைகளை இராணுவத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதைவிட மிகவும் வறுமையான குடும்பங்களிடம் உதவி புரிவதாகக் கூறி அவர்களின் வீடுகளுக்குச் சென்று பல்வேறு குற்றச் செயல்களிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். இதைவிட பாடசாலைகளில் இராணுவத்தினரின் பயிற்சிகள், பாடவேளைகளில் கலந்துரையாடல் எனவும் மாணவர்களைத் திசை திருப்பும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் எமது சமூகத்தையும் கலாசாரத்தையும் பாதுகாக்கும் வகையில் இணைந்து செயற்பட வேண்டிய தேவை இருக்கிறது.

எனவே தமிழ் மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் *ச.சர்வா* (உரிமையாளர், கௌரி தையல் நிலையம், சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தந்தையார்

### *பொன்னையா சண்முகசுந்தரம்*

அவர்கள் கடந்த 23.11.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் மறைவுக்கு மன்றத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்

(சி/2829)(3.6.7)

## Sanken Construction Pvt.LTD
**"Sky is the Limit"**




உங்களுக்குத் தேவையான தரமான கொங்கிறீட் களுக்கு நீங்கள் நாட வேண்டியது

**சங்கன் SANKEN**

மேலதிக விபரங்களுக்கு:

**Sanken Construction Pvt.LTD,**
No.295, Madampitiya Road,
Colombo - 14

31, வைமன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கொங்கிறீட் பதிவு செய்யத் தொடர்பு:
T.P : 021 222 4840
நிரஞ்சன்: 077534 9916,
தவனிருபன் 077 77 32863

(25775)(2.8)

## தேவை

வெள்ளவத்தையில் உள்ள சலூனுக்கு திறமையும், பொறுப்புமுள்ள உதவியாளர்கள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். தங்குமிடம் உண்டு.

தொடர்பு: 0779029350

(சி/2430)(3.14)

## Spoken English, Spoken Sinhala

ஓய்வு பெற்ற ஒருவரினால் வீடுகளுக்கு வந்து தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிங்களம் இரண்டு மாதங்களிலும் ஆங்கிலம் ஆறு மாதங்களிலும் உயர் கல்வி மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் இலக்கணத்துடன் பேச கற்றுக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 0774041904

(25738)(3.14)

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

* விற்பனைப் பிரதிநிதி
* களஞ்சியக் காப்பாளர்
* பணம் வசூலிப்பவர்
* மேஷன்டைஸர்

அத்துடன் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண அலுவலகங்களில் வேலை செய்ய சாரதி, அலுவலக உதவியாளர்கள் மற்றும் வேலை உதவியாளர்களுக்குரிய வெற்றிடங்களும் உண்டு.

Edinborough
In Every Cuisine ...

மேலதிக விபரங்களுக்கு:
ஜெகன் - 0771001876
Email: jegan@edinborough.lk


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
# 2013ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தை, கருவாட்டுக் கடைகள் மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகனத் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 6300000.00 | |
| 2 | சுன்னாகம் சந்தை மீன் வெட்டுமிடம் | 1000.00 | 10000.00 | 99000.00 | |
| 3 | சுன்னாகம் மீன் சந்தை | 1000.00 | 10000.00 | 900000.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 1 | 1000.00 | 10000.00 | 1577000.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை இல 2 | 1000.00 | 10000.00 | 232000.00 | 250.00 |
| 6 | சுன்னாகம் கருவாட்டுக்கடை இல 3 | 750.00 | 7500.00 | 38000.00 | 250.00 |
| 7 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 85500.00 | 250.00 |
| 8 | பொது மலசல கூடம் (சுன்னாகம் பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமை) | 750.00 | 7500.00 | 32300.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 13105000.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000 | 71000.00 | 250.00 |
| 3 | மல்வம் சந்தை | 500.00 | 5000.00 | 39600.00 | |
| 4 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 236000.00 | |
| 5 | மருதனார்மடம் சந்தை பொது மலசல கூடம் | 750.00 | 7500.00 | 45000.00 | |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் - 26.11.2012 - 05.12.2012 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி - 06.12.2012 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 06.12.2012 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 13.11.2012 ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகையிலும், எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

தி.பிரகாஷ் தவிசாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.


- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

24

**NOV.'2012 TO APRIL'2013**

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

## Ari Tickets & Visa



எமது சேவைகள் உங்களுக்காக

மிகவும் மலிவான விலையில் சிறந்த சேவையுடன் உலகின் எப்பாகத்திற்கும் விமானப் பயணச் சீட்டுகளை பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கொழும்பு - சென்னை - 12500/=
கொழும்பு - மதுரை - 14000/=
கொழும்பு - திருச்சி - 14900/=
கொழும்பு - லண்டன் - 45500/=
கொழும்பு - மிலான் - 48000/=
கொழும்பு - பிராங்போட் - 56200/=
கொழும்பு - பாரிஸ் - 60000/=

* Conditions Apply
* India, Thailand, Honkong, Malaysia & Singapore பேன்ற நாடுகளுக்கு விசா வசதிகளும் செய்து தரப்படுவதோடு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா, திருமண மற்றும் தேன் நிலவுக்கான ஒழுங்கமைப்புகளும் செய்து தரப்படும்.

சபரி மலை செல்லும் பக்தர்களுக்கு விமான நிலையம் செல்ல வாகன வசதிகள் இலவசம்.

**The Word Navigators (Pvt) Ltd**
**No.33A, W.A Silva Mawatha**
**Colombo - 6**
**Tel - 0112055499 / 0117905089**
**Mobile - 0772598250**

(சி/2424)(3.14)

## மரண அறிவித்தல்

### *நாகலிங்கம் தனபாலன்*

*(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/முத்துத்தம்பி மாவித்தியாலயம்)*



சரவணையூர் காலஞ்சென்றவர்களான முதலியார் நாகலிங்கம் -கமலாம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரன் நாகலிங்கம் தனபாலன் நேற்றுமுன்தினம் (23.11.2012) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் வேலனை மேற்கு, காலஞ் சென்றவர்களான பரமசிங்கம் -பிள்ளை தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் (RESC- யாழ்ப்பாணம்) அருமைக் கணவரும், செந்தூரன், பிரதாயினி (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி), சிவாஜினி (வேம்படி மகளிர் கல்லூரி 2010 உயிரியல்பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வரதராசன், திலகவதி, லோகாம்பிகை, பத்மனாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவாணந்தி திருநாவுக்கரசு, நடராஜா, சியாமளாதேவி, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தேவராஜா மற்றும் உலகநாதன் (இளைப்பாறிய அதிபர்- தமிழ் ம.ம.வி. வவுனியா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/2, பிள்ளையார் வீதி, (தபால்பெட்டி சந்திக்கு அருகில்) திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(25763)(9.14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு நீரகம் தேவை

B+ குருதிப் பிரிவையுடைய ஒருவருக்கு மாற்று சிறு நீரகமொன்று அவசரமாகத் தேவைப்படுகின்றது B+, B- அல்லது O+, O- குருதிப் பிரிவையுடைய 30 - 45 வயதுக்கிடைப்பட்டவர்கள் தானம் செய்ய விரும்பினால் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**0773508241, 0772376203**

(சி/1945)(2-6.7)

## உடனடி வேலை வாய்ப்பு

இலங்கை முன்னணிக் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் வேலையைப் பெற்றுக்கொள்ள ஆர்வமுள்ள இருபாலாரிடமிருந்து வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* குழு தலைவர் அல்லது குழு முகாமையாளர்
* காப்புறுதி ஆலோசகர்

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு, தகைமை அடிப்படையிலும் அனுபவ அடிப்படையிலும் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**மேலதிகமாக**

* வெளிநாட்டுச் சுற்றுப் பயண வசதிகள்
* வெளிநாட்டு/ உள்நாட்டுப் பயிற்சிகள்
* தேவையான கடன் வசதிகள் இன்னும் பல....

தொடர்பு: முல்லைத்தீவு - 0773174649, சாவகச்சேரி - 0771301075, மல்லாவி - 0771728761

(-8052)(2-6.7)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி




அமரர்

**சிறீரங்கம் அப்புத்துரை**

11.10.2012 அன்று இறைபதம் எய்திய எமது பாடசாலையின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியரும் ஆகிய அமரர் சி.அப்புத்துரை அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/இளவாலை மெய்கண்டான் ம.வி.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
01.07.1952

மறைவு
07.12.2011

திதி: துவாதசி

**அமரர் கந்தையா பரம்சோதி**
**(பொன்ராசா)**

அப்பாவின் நினைவுகளில் அன்றாட வாழ்வினையும்
எப்போதும் வாழ்ந்திடுவோம் தப்பாது எம் நினைவு
ஓராண்டு முடிந்தாலும் ஓயாது உன் நினைவு
பல்லாண்டு கழிந்தாலும் எல்லோரிலும் உன் நினைவு

மாறாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

14/2. புறு வீதி.
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

(சி/1946)(5-6-7)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01 ★ 04 ★ 1954

மறைவு
18 ★ 11 ★ 2010

**சற்குணவதி வரதராசன்**

இரண்டு ஆண்டுகள் ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம் அன்பும், பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள் நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல் ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள்
நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்

21, தாளையடி லேன்,
திருநெல்வேலி.

(25351)(6.7.8)

## வேலை வாய்ப்பு

அழகியல்துறை, உடல்அழகுச்சிகிச்சைகள், உடல் ஆரோக்கியம் சம்மந்தமான செயற்பாடுகளில் வெற்றி கண்ட நிறுவனமொன்றிற்கு **துடிப்புமிக்க** ஆண்,பெண் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை மாதந்தம் **30,000** வருமானம் பெறலாம் (நிதித்துறையோ,பொருள் விற்பனையோ அல்ல) சுயவிபரக்கோவை அனுப்ப வேண்டிய **முகவரி** வயதெல்லை (18 TO 30)

இல. 262, "நாயன்மார்கட்டு ஆயுர்வேத" வைத்தியசாலை செம்மணி வீதி யாழ்ப்பாணம்

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

அல்வாய் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன்ஆலயத்துக்கு அருகில் உள்ள 7½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 021 226 0246,077 645 5264 (சி.1922)

## வாடகைக்கு

K.K.S.வீதி, கொக்குவில் சந்திக்கு அருகில் (BOC வங்கிக்கு அருகில்) கடையுடன் சேர்ந்த வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:0770059394

(25687)(2.6)

## வாடகைக்கு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலை OPD க்கு எதிரே 87' நீளம் 14' அகலம் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடிக்கட்டடம் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0752430287

(25737)(2.6)

## அறைகள் வாடகைக்கு

யாழ் பிறவுண் வீதியில் A/C, Non A/C வசதி கொண்ட அறைகள் நாள், கிழமைக்கு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:0770596430
0777110762
0212219690

(25700)(2.6)

## சேவை

**சுகந்தன்** ஆசனப்பதிவு நிலையத்தில் யாழ்ப்பாணம் - கொழும்பு, கொழும்பு - யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கான பஸ்களுக்கான ஆசனப்பதிவு மேற்கொள்ளப் படும். மேலும் கொழும்புக்கான பொதிகளும் அனுப்புவதற்கான சேவையும் வழங்கப்படும்.

(25725)(2.6)

தொடர்பு: P.சுகந்தன் 0778155369, 0213207042

## காணி விற்பனைக்குண்டு

**கச்சேரி வீதி, நல்லூரில் கிணறு சுற்றுமதிலுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: 0757100884**

(24882)(3.14)

## பணியாளர்கள் தேவை

சம்பளம் 20000/- தொடக்கம் 28000/- 38000/- வரை எங்கள் நிறுவனத்திற்கு பிஸ்கட், சொக்கலேட், சவர்க்காரம், பால்மா, ரயர், கிளவுஸ் சீமெந்து, சீற் ஆகிய தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி பொதியிடல், லேபல் அடங்கிய சுப்பர்லைசிங் 17 தொடக்கம் 55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. உணவு தங்குமிடம் உண்டு. நண்பர்கள் குழுக்களாகவும் கணவன் மனைவியும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

தொடர்பு: 0713460295 அநுராதபுரம்

(24324)(2.6)

## காணி விற்பனைக்கு

மிருசுவில் A9 பாதையை முகப்பாகவும், படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் பாம் றோட்டை ஒரு பக்கமாகவும் கொண்ட 25 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0776079340

(25653)(2.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
1950 ★ 04 ★ 13

மறைவு:
2012 ★ 11 ★ 01

**அந்தோனிப்பிள்ளை செல்வநாயகம்**

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊரார் புகழும் உத்தமனாம் பாசமும் பரிவும் உள்ள
வார்த்தைகளைப் பேசி எங்களை வாழ்வாங்கு
வாழவைத்து மீளாத்துயில் கொண்டு 31 நாள்
ஆகிவிட்டதுவே அப்பா தெய்வமே!

குடும்பத்தினர்.
5 ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு.

(242[illegible])(2.6.7)

## ஆசாரியாபிஷேக அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நந்தன வருடம் தக்ஷிணாயனம் சரத்ருது கார்த்திகை மாதம் 11ம் நாள் (26.11.2012) திங்கட்கிழமை அச்சுவினி நட்சத்திரமும் திரயோதசித் திதியும் சித்த யோகமும் கூடிய காலை 9.46மணிமுதல் 10.30மணிவரையுள்ள மகர லக்கின சுபமுகூர்த்த வேளையில் சபரிகிரி ஸ்ரீஐயப்பன் கிருபையினால்

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்களினதும்
ஏனைய சிவாச்சாரியார்களினதும் ஆசீர்வாதத்தோடு
இலங்கை கட்டுவன் கிராம வாசர்
குருமணி சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக்குருக்கள் (கணேசக்குருக்கள்)
ஸ்ரீமதீ சி. பொன்னம்மா தம்பதியரின் பௌத்திரர்களும்
எமது புத்திரர்களுமான

**சிரஞ்சீவி அ. ஐயப்பதாசன் ஐயா**
**சிரஞ்சீவி அ. முருகதாஸ் ஐயா**

ஆகியோருக்கு கட்டுவன் கரண்டக்குளம் சபரிகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தானத்தில் சமய, விஷேட, நிர்வாண தீக்ஷாசகித சிவாசாரிய அபிஷேகம் நிகழ்வதற்கு திருவருள் கைகூடியுள்ளது. அந்த முகூர்த்தத்தில் எல்லா சிவாச்சாரியார்களும் அன்புக்குரியவர்களும் குடும்பசமேதராக வந்து இரு இளஞ்சிவாச்சாரியார்களையும் ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆசார்யாபிஷேக பிரதமகுரு (தீட்சாகுரு)
சாதக ஞான பானு, பத்ததி வித்தக சிரோன்மணி
**சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக்குருக்கள்**
பிரதமகுரு. அநுராதபுரம் கதிரேசன் கோவில்.

சர்வபோதக சாதகாசீரியர்
ஆகமக் கிரியா ஜோதி, துவஜாரோகண துரந்தரர், கிரியா கிரம விஷாரத
**சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக்குருக்கள் J.P**
பிரதமகுரு. நாயன்மார்கட்டு அரசடிப்பிள்ளையார் ஆலயம்.
முதல்வர், சைவக்குருமணிகள் குருகுலம்.

வித்தியாகுரு
**சிவஸ்ரீ தா. மகாதேவ ஸ்ரீவத்சாங்கக்குருக்கள்**
தர்ம சாஸ்தா குருகுலம், காயத்திரி பீடம், ஸ்ரீநகரம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ சி. அருணாசலக்குருக்கள், ஸ்ரீமதி அ. கனகமணி ,சிவஸ்ரீ அ. சிவதாஸ்,
சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக்குருக்கள் குடும்பம், சிவஸ்ரீ க. கனகசுந்தரம் ஐயா குடும்பம்.

(25752)(2.6)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24 ★ 09 ★ 1953

உதிர்வு
27 ★ 11 ★ 2001

திருமதி **அருள்ராசலிங்கம் ரேவதிதேவி**

திதி : துவாதசி

துக்கம் தாளவில்லை துயரம் நீங்கவில்லை
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
ஓடி விட்டது பதினொருவருடம்
ஆழிபோல் உங்கள் நினைவுகள் அனல் போல் அடிக்கிறது

பிரிவால் துயருறும் :
சி.அருள்ராசலிங்கம்(கணவர்)

குப்பிளான் தெற்கு,
ஏழாலை சந்திக்கு அருகில்.

(25735)(6.7.8)

## மரண அறிவித்தல்



**திருமதி சின்னத்துரை சாந்தபூவதி**

பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை சாந்தபூவதி அம்மா 22.11.2012 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சரஸ்வதி, செல்வராசா, இராஜேஸ்வரி,இராசலச்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், இராமநாதன், சின்னாச்சிப்பிள்ளை,செல்லம்மா, சின்னப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும்,கணேசலிங்கம் (ஜேர்மனி) காலஞ்சென்ற உதயகுமார், விஜயகுமாரி, சாந்தகுமாரி, உதயகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், யோகச்செல்வி (ஜேர்மனி), தயாபரன் (சதா ஹாட்வெயார்), நந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கவிஸ்னா, கயுரதா, கவின், கம்ஷிகா,சாணுகன்,ரேணுகா,கிருஷன், கஜனா, உஷானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் தற்காலிக வசிப்பிடமான உரும்பிராயில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(c/1960)

தகவல்.
பிள்ளைகள்,மருமக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண சந்தைக் களத்தில் ஹொண்டா சைக்கிள்கள்

## 6 புதிய விற்பனையாளர்கள் நியமனம்

ஹொண்டா மற்றும் ஹீரோ ஹொண்டா உற்பத்திகளின் ஏகவிநியோகஸ்தர்களான ஸ்டாபோர்ட் மோட்டார் கொம்பனி (தனியார்) லிமிடெற் யாழ்ப்பாண குடாநாட்டில் ஆறு புதிய விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளது. குடாநாட்டில் தனது இருப்பை பலப்படுத்தவும் வடக்கிலுள்ள பாவனையாளர்களுக்கு எப்பொழுதும் புகழ்மிக்க ஹொண்டா சைக்கிள்கள் மிக எளிதாகக் கிடைப்பதற்காகவுமே இந்த ஏற்பாடாகும்.

புதிய விற்பனையாளர்களின் விவரம் வருமாறு:- 1.எஸ்.எஸ்.மோட்டோர்ஸ், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2.ஐங்கரன் மோட்டோர்ஸ், மானிப்பாய் 3.சிவகுரு ஹார்ட்வெயர் கிளிநொச்சி,சிவகுரு ஹார்ட்வெயர்பரந்தன் 5.ஹொண்டா வேர்ள்ட், நெல்லியடி 6. ஹொண்டா மார்ட், சாவகச்சேரி.

ஹொண்டா மற்றும் ஹீரோ ஹொண்டா பாவனையாளர்களின் விற்பனைக்கு பிந்திய தேவைகளைக் கவனிப்பதற்காக குடா நாட்டின் பல இடங்களிலும் ஆறு உதிரிப்பாக விற்பனையாளர்களும் ஆறு சேவை வழங்குநர்களும் மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்டாபோர்ட் மோட்டோர் நிறுவனத்தின் மேலாண்மைப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான டாக்டர் கலிங்ககுலப்பெரும வடக்கில் தமது நிறுவனத்தின் பணிகள் தொடர்பாக பின்வரும் விவரங்களைத் தெரிவித்தார்.

போர் நடைபெற்ற காலத்திலும் எமக்கு யாழ்ப்பாண குடாநாடு மிக முக்கிய சந்தைக்களமாக இருந்து வந்துள்ளது. இப்பகுதியில் அதிகம் விரும்பிப் பாவிக்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் ஹொண்டா வகையானவையாகும். ஹொண்டா ஹீரோவும் கூட அங்கு அதிகமாக விரும்பப்படும் வகையே. ஹொண்டா புதிய மொடல்கள் அறிமுகப்படுத்துவதையடுத்து எமது சந்தை நிலவரம் விஸ்தரிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஹீரோ ஹொண்டா, தொடர்பாக குழப்பகரமான கருத்து, களநிலையில் காணப்படுவது தொடர்பாக அவர் விளக்கமளிக்கையில் கூறியதாவது:-

1980 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஹீரோ ஹொண்டாவானது ஆரம்பிக்கப்பட்டது. ஜப்பான் ஹொண்டா மோட்டோர் கம்பனி மற்றும் இந்திய ஹீரோ குழும மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவனத்துக்குமிடையில் இந்திய சந்தைக்காக இந்த பங்கு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் ஹொண்டா ஏக விநியோகஸ்தர்களாக நாங்களே இருந்தமையாலும் ஹீரோ ஹொண்டாவானது ஹொண்டாவின் இணைந்த இரகமாக இருந்தமையாலும் அவைகளை இறக்குமதி செய்வது ஸ்டாபோர்ட் நிறுவனத்தால் சாத்தியமாயிற்று. 1987 இல் இருந்து ஹீரோ ஹொண்டாவை நாம் இறக்குமதி செய்து வருகிறோம். அதே சமயம் இங்கே நம்பகரமான மோட்டார் சைக்கிளில் அது ஒன்று என்பதை நிலைநிறுத்தவும் முடிந்தது. உயர்மட்டத்தில் ஏற்பட்ட சில முரண்பாடுகளின் காரணமாக ஹீரோவிலிருந்து ஹொண்டா 2010 ஆம் ஆண்டு பிரிந்தது. ஆனால் ஹீரோ ஹொண்டாவின் தயாரிப்பு தொடர்ந்து நடந்தது.

இப்பொழுது ஹீரோ ஹொண்டாவின் வாரிசுதாரர்களான ஹீரோ மோட்டோர்கோர்ப் நிறுவனமானது ஹீரோ ஹொண்டாவைத் தொடர்ந்து தயாரிப்பதில்லையென்றும் அதன் சொந்த இரகமான ஹீரோவை அறிமுகப்படுத்துவதென்றும் முடிவுசெய்துள்ளது. இலங்கையின் ஹொண்டாவின் ஏகவிநியோகஸ்தர்களாக ஸ்டாபோர்ட் இருப்பதனாலும் இந்த புதிய இரகமானது ஹொண்டாவுடன் எதுவித தொடர்பும் கொண்டில்லாமையாலும் அவைகளை இங்கே விநியோகம் செய்வதில்லையென்று நாம் முடிவு செய்துள்ளோம். புதிய வகை ஹொண்டாக்களுடன் ஹீரோ ஹொண்டாக்களை விநியோகித்து வருகின்றோம்.

இந்தவகை மோட்டார் சைக்கிள்களுக்கான சேவைகள், பராமரிப்புகள் மற்றும் உதிரிப்பாகங்கள் கொழும்பிலுள்ள எமது சொந்த தொழிற்சாலைகளிலும் நாடுமுழுவதிலும் விற்பனை நிலையங்கள் மூலமும் வழங்கப்படும் ஹீரோ ஹொண்டா சைக்கிள்களுக்கான சகல பராமரிப்புத் தேவைகளும் உத்தரவாதம் ஈறாக எம்மால் வழங்கப்படும்.


மோட்டோர் சைக்கிள் சந்தைக்களத்தில் ஹொண்டா தான் முதல் இரகமானது என்பதை நீங்கள் அறிவீர்கள் ''விங் மார்க்'' (Wing mark) ஹொண்டா சைக்கிள் வகையானது கடந்த நிதியாண்டில் (2011-12) 16.3 மில்லியனுக்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதன் நெருங்கிய போட்டியாளரைவிட ஒப்பிட்டுப் பார்க்கையில் இது 6 மில்லியன் யுனிட்டுக்கு அதிகமாகும். விங்மார்க் ஹொண்டா என்று பரவலாக அறியப்படும் இந்த வகை மோட்டோர் சைக்கிள்கள் 34 நாடுகளில் தயாரிக்கப்படுகின்றன. அநேகமான இந்த நாடுகளில் ஹொண்டாவுக்கு ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திக்கான வசதிகள் உண்டு. மோட்டோர் சைக்கிள் ஒன்றின் மீது விங்மார்க் சின்னம் ஒன்றைக் காண்பீர்களானால் அது ஹொண்டாவாகும். அது எந்த நாட்டில் இருந்து வந்தாலும் அதன் பெருமைக்குரிய தரமும் தொழில்நுட்பமும் உறுதிப்படுத்தப்பட்டதாகும். புதிய இரகக் ஹொண்டா மோட்டார் சைக்கிள்களானது கவர்ச்சிகரமான விலை நிர்ணயத்தைக் கொண்டிருப்பதனால், அவை இலங்கைப் பாவனையாளர்கள் வாங்கி நீண்ட காலத்துக்கு இந்த தரமான மோட்டார் சைக்கிள்களைப் பாவித்து மகிழ முடியும்.இவ்வாறு டாக்டர் கலிங்ககுலப்பெரும கூறினார்.

## சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியின் பணிகள் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம்,நவ.25

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையின் புதிய கட்டடத்தில் கடந்த 22 ஆம் திகதி முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

சாவகச்சேரி நகரின் மத்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீ.எம்.கே கட்டடத் தொகுதியில் கொமர்ஷல் வங்கியின் கிளை உத்தியோக பூர்வமாக திறந்து



வைக்கப்பட்டது.

கிளை முகாமையாளர் தெ.பிரஜீப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வங்கியின் தலைவர் தினேஸ் வீரக்கொடி, நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவி டயஸ் ரஜீவன் ஆகியோர் கூட்டாக கிளையினைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீ பிரகாஸ் மற்றும் ஏனைய வங்கிகளின் முகாமையாளர்கள், பாடசாலைகளின் அதிபர்கள் திணைக்களத் தலைவர்கள், வர்த்தகர்கள் வங்கி நடவடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். (த-9)

## கொமர்ஷல் வங்கியின் கிளை கொடிகாமத்தில்

தென்மராட்சி, நவ.25

கொமர்ஷல் வங்கியின் 225 கிளை கடந்த 22ஆம் திகதி கொடிகாமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்டுள்ள வங்கிக் கிளைக் கட்டடத்தை வங்கியின் தலைவர் தினேஸ் வீரக்கொடி, நிறைவேற்றுப் பணிப்பாளர் ரபி டயஸ் ஆகியோர் கூட்டாகத் திறந்து வைத்தனர்.

கிளை முகாமையாளர் திருமதி துஷ்யந்தி குருபரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுபநேரமான மு.ப.10.25 மணிக்கு புதிய கிளை திறந்து வைக்கப்பட்டது.

வங்கியின் தலைவர் டினேஸ் வீரக்கொடி வங்கிக் கிளையின் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

கிளையில் கணக் கினை ஆரம்பித்த வாடிக்கையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் உயர் அதிகாரிகள், இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகள், சாவகச்சேரி பிரதேச சபை தலைவர், வர்த்தகர்கள் மற்றும் பெருமளவு வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். (த-9)

## சிசு உதான குலுக்கலின் பரிசளிப்பு நிகழ்வு நாளை

தென்மராட்சி,நவ.25

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி மக்கள் வங்கியினால் நடத்தப்பட்ட 'சிசு உதான' குலுக்கல் சீட்டிழுப்பில் தெரிவு செய்யப்பட்ட சாவகச்சேரி கிளையின் வாடிக்கையாளருக்கான மவுண்டன் சைக்கிள் நாளை திங்கள்கிழமை கையளிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி சண்முகானந்த வித்தியாலய மாணவியான கிருபைரூபன் சுதர்மிகாவுக்கு வித்தியாலயத்தில் வைத்து கையளிக்கப்பட வுள்ளதாக கிளை முகாமையாளர் ச.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

சாவகச்சேரி வங்கி கிளையில் சிசு உதான கணக்கு வைத்துள்ள இரண்டு சிறார்களுக்கு மவுண்டன் சைக்கிள் களும், 'இசுறு உதான' கணக்கு வைத்துள்ள சிறார்களுக்கு மூன்று சில்லு சைக்கிள்களும் பரிசாக கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-9)

## 9 ஆவது ஆண்டில் யாழருவி சுவிஸ் மினரல்

2002 ஆம் ஆண்டு சமாதான காலத்தில் தயாகம் திரும்பிய போது பல்வேறுபட்ட அமைப்புக்களுடனும், அரச அதிகாரிகளுடனும், பொது மக்கள் மற்றும் கல்விமான்களுடன் சமாதானத்துக்கு முன்னரான காலப்பகுதியில் அவர்களின் வாழ்வு பற்றிய கலந்துரையாடல்களின் போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் கவலைகள் என்பன எம்மை மிகவும் பாதிப்புக்குள் ளாக்கியது.

போர்க்காலங்களில் யாழ்.மருத்துவமனை உட்பட மக்களின் அடிப்படை தேவைகளுக்கு மிகவும் அவசியமான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை பெறுவதற்கு கூட கொழும்பில் இருந்து வரும் கப்பலுக்காக காத்திருக்க வேண்டியிருந்தமை ஒரு வகையில் வேதனையாகவும், இன்னொரு வகையில் அவமானமாகவும் இருந்தது.

எனவே அன்று முதல் யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒரு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஆரம்பிப்பதற்கான எமது பணி தொடங்கியது.

**எப்படி ஆரம்பிக்கப்பட்டது.**

மேல் குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இலங்கையிலும், சுவிஸ் நாட்டிலும் உள்ள நீரியல் நிபுணர்களுடன் பல கோணங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு இறுதியில் யாழ்.குடாநாட்டின் நிலக்கீழ் நீர்நிலைகளின் தன்மைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் ஓர் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பது என முடிவு செய்து சுவிஸ் நாட்டில் உள்ள பிரபல குடிதண்ணீர் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் அதற்கான பயிற்சிகளையும் அனுபவங்களையும் மேற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**எப்படியான உதவிகள் கிடைத்தன..**

★சுவிஸ் நாட்டு அதிகாரிகளின் அதிக பங்களிப்பு எமது இப்புதிய முயற்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

★இலங்கையில் தர நிர்ணய சபையான SLS நிறுவனத்தில் பணிபுரியும் அணில் என்பவரின் நேர்மையான அனுமதிகளும், அறிவுரைகளும்

★இலங்கையில் நீர் தொடர்பான இயந்திரசாதனப் பொறியியலாளரான கொழும்பில் வசிக்கும் முகுந்தனின் ஆலோசனைகள்.

★யாழ்.மாநகரசபை மற்றும் நிர்வாக சேவையினரின் ஆலோசனைகள்.

★கனடாவில் வாழும் நண்பர் அசோக் என்பவரின் நிதிப்பங்களிப்புக்கள்.

★குடும்பத்தவர்களின் உறுதியான ஆதரவு.

**எதிர்கொண்ட சவால்கள்**

★இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஒரு வித்தியாசமான உற்பத்தியை நாம் ஆரம்பித்த போது எமக்கு ஏற்பட்ட தடைகள் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை. எனினும் நாம் எமது முயற்சியை கைவிடவில்லை. நல் உள்ளம் கொண்டவர்களின் ஆதரவுடன் அனைத்துச் சவால்களையும் எதிர் கொண்டோம். எதிர் கொண்டு வருகிறோம்...

★உள்ளூர் உற்பத்தி தொடர்பாக மக்கள் கொண்டுள்ள தவறான கணிப்பீடுகள்.

★உண்மைக்குப் புறம்பான வதந்திகள்.

**சாதனைகளாக கருதுவது**

★உலக மக்களின் வாழ்வை மேம்படுத்துவதில் அக்கறை கொண்டவர்களும், உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டவர்களுமான வெளிநாட்டு நிறுவனங்கள் முதல் மருத்துவமனைகள் உட்பட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வரை கடந்த 8 ஆண்டுகளாக தொடர்ச்சியாக எமது உற்பத்தியை சர்வதேச தரத்தில் வழங்கி வருவது.

★சர்வதேச தரத்தில் வட பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது குடிதண்ணீர் உற்பத்தி.

★போர்காலங்களில் யாழ். மருத்துவமனை சத்திர சிகிச்சைப் பிரிவின் முக்கிய பணிகளை மேற்கொள்ளும் வகையில் எமது இயந்திர சாதனங்கள் பயன்பட் டமை.

★போர்க்காலத்தில் யாழ்.குடாநாட்டுக்கு மின்சாரத்தை வழங்கும் இயந்திரசாதனங்கள் தொடர்ச்சியாக இயங்குவதற்கு உறுதுணையாக இருந்தமை.

★நிஸாபுயல், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போது அரச மற்றும் அரச சார்பற்ற உதவி நிறுவனங்களுடன் இணைந்து மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தமை.

★ஆரம்ப நாள் முதல் இன்று வரை தடையின்றி மக்களுக்கு சேவை செய்தமை.

**எதிர்காலத் திட்டம்**

போரினால் பாதிப்புக்குள்ளான மக்களின் வாழ்விற்கு பயன்தரக் கூடிய வகையில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்

## திருக்கார்த்திகைத் திருநாள் குமாராலயதீபம்

கார்த்திகை மாதம் 12 ஆம் நாள் (27.11.2012) செவ்வாய்க்கிழமை.

மெய்யன்பர்களே! மாவைக்கந்தன் ஆலயத்தில் திருக்கார்த்திகைத் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது. இத்தருணம் பக்தப் பெருமக்கள் யாவரும் குடும்பசகிதம் உற்றார், உறவினருடன் சுற்றம் சுழல் புடைசூழ ஆலயத்திற்கு வருகை தந்து உபயங்களை ஏற்று நடத்தி திருவிழாக்களில் கலந்து அர்ச்சனை ஆராதனை செய்து மாவிளக்கு, நெய்தீபம் ஏற்றி நேர்த்திக்கடன்களைப் பூர்த்தி செய்து மாவைக்கந்தனின் திருவருட் கடாட்சத்துடன் சகல நற்பேறுகள் பெற்று நோயற்ற நீண்ட வாழ்வு வாழப் பிரார்த்தித்து ஆசீர்வதித்து அனைவரையும் அன்புடன் வருக வருக ஆனந்தம் பெறுக என வாழ்த்தி வரவேற்கிறேன்.

### நிகழ்வுகள் :


காலை
5.30 மணி திருவனந்தல்
8.00 மணி ஸ்நபனாபிஷேகம்
9.00 மணி காலைசந்திபூசை
9.30 மணி ஷண்முகார்ச்சனை
11.00 மணி வசந்த மண்டபபூசை, சுவாமி வீதிவலம்
12.00 மணி உச்சிக்காலப்பூசை, மகேஸ்வரபூசை (அன்னதானம்)

மாலை
2.00 மணி ஸ்நபனாபிஷேகம்
3.00 மணி சாயரட்டைப் பூசை
3.30 மணி ஷண்முகார்ச்சனை
5.00 மணி இரண்டாம் காலப்பூசை
5.30 மணி வசந்த மண்டபப்பூசை, சுவாமி வெளிவீதி வலம் வருதல், சொக்கப்பானை
8.30 மணி அர்த்தசாமபூசை
திருவருட்பிரசாதம் வழங்குதல்

திருவிழா உபயகாரர்கள் :
காலை உபயம் : வீரசிங்கம் பரமேஸ்வரன், மாவிட்டபுரம்
மாலை உபயம் : K. சிவபாதம், S. வசந்தகுமார், கொழும்பு

மாவைக்கந்தன் தொண்டன்
மஹாராஜஸ்ரீ து. ஷ. இரத்தினசபாபதிக்குருக்கள், ஆதீனகர்த்தா
தொடர்பு : T.p.No. L.Ph. 0094 213210349, H.Ph. 0094 778302573

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## Dr. கலாநிதி தரணி தங்கவடிவேல்

B.Sc (Hons) M.A.Sc. Phd, P. Eng.P.E
(Senior Structural Engineer, Hatch)

வடமராட்சி கரவெட்டி, கவுந்திலைச் சேர்ந்த ஹாட்லிக்கல்லூரியின் பழைய மாணவனும் பெரதேனியா பல்கலைகழகத்தின் முன்னாள் மாணவனுமாகிய கலாநிதி தரணி தங்கவடிவேல் அவர்கள் கட்டமைப்பு பொறியிலாளர் (Structural Engineering) பட்டப்படிப்பில் கனடா Mc Master பல்கலைக்கழகத்தில் 16.11.2012 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் Phd. பட்டத்தைப் பெற்றமையிட்டு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
மாமா, மாமி, மைத்துனர்மார்,
செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை, நெல்லியடி.
(22512)(6.7.8)

# Best Wishes........




**M. Mahendraraj**
Branch Manager
Jaffna.

**K. Sriram**
Branch Manager
Chunnakam.

## We are very proud because of our Managers Have participated

at Kawai Memorial OLIS Asla Life Insurance Symposium
**In Tokoyo Japan**
"Demographic Trends and Life Insurance Business in Asia"

## Congrats to Our Managers

Allianz Family
Jaffna & Chunnakam.
(24733)(6.7.8)

Government of India

# இந்திய துணைத்தூதரகம், யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

### 2013 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன

**1. அலுவலக துப்புரவு பணி :**

இல.14 மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகக் கட்டடத்தை துப்புரவு செய்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள்.

இதற்கான ஒருவருட ஒப்பந்தத்துக்கான கூறவிலைகள் பின்வருமாறு தயாரிக்கபட வேண்டும்.

* துப்புரவுப்பணிக்கான மூலப்பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் எமது அலுவலகத்தால் வழங்கப்பட்டால் அதற்கான கூறுவிலை
* அனைத்து மூலப்பொருள்களும் ஒப்பந்தகாரால் வழங்கப்பட்டால் அதற்கான கூறுவிலை

**2. வாடகை வாகனங்கள் :**

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட பகுதிகளுக்குள் பிரயாணம் செய்வதற்கும், யாழ்ப்பாணம் - கொழும்புக்கிடையிலான போக்குவரத்துக்கான கிலோமீற்றர் அடிப்படையிலான மற்றும் நிலையான கட்டணங்களுக்கான கூறுவிலைகள் வரவேற்கப்படுகின்றன. பணி நிமித்தம் வெளியிடங்களில் இரவு தங்க வேண்டியிருப்பின் அதற்கான கட்டணமும் குறிப்பிடப் படவேண்டும்.

**3. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பொருள் விநியோகம் :**

இந்தியா மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து எமது அலுவலகத்திற்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விநியோகம் செய்வதற்கான கூறுவிலைகள்.

தேவையான அனைத்து சுங்க அனுமதிப்பத்திரங்களும் எமது அலுவலகத்தால் வழங்கப் படும்.

**4. திருத்தவேலைகள் :**

கணினி, கணினி உதிரிப்பாகங்கள் ஏனைய இலத்திரனியல் சாதனங்கள் திருத்தமும் பராமரிப்பும், நீர்க்குழாயமைப்பும் பராமரித்தலும் மற்றும் மரவேலைக்ளுக்கான கூறு விலைகள்.

**5. எழுது பொருள்கள், தினசரி பத்திரிகைகள் வழங்குதல்:**

தூதரகத்துக்கான எழுது பொருள்கள், தினசரிப்பத்திரிகைகள் முதலானவற்றை வழங்குவதற்கான கூறுவிலைகள். வழங்குநர்கள் தமது பெயர் விவரங்களையும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் வழங்கக்கூடிய பொருள்களின் விவரங்களையும் பதிவு செய்யவும்.

கூறுவிலை கள் அனைத்தும் தபாலுறைக்குள் வைத்து மூடப்பட்டு "பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான கூறுவிலை" இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாணம் எனக் குறிப்பிட்டுகீழ்க்காணப்படும் முகவரிக்கு 05 டிசெம்பர் 2012இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

Head of Chancery,
Consulate General of India
14, Maruthady Lane, Nallur, Jaffna, Srilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 91

# சீனிக்குப் பதிலாக பாவிக்கப்படும் இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவையா?

நீரிழிவு நோய் உள்ளவர்களும், அதிகரித்த உடல்நிறை உள்ளவர்களும் சீனியின் தாக்கத்தைத் தவிர்ப்பதற்காகவும், உடல்நிறை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காகவும் சீனிக்குப் பதிலாக செயற்கை இனிப்பூட்டிகளைப் பெருமளவில் பாவிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பாவனைக்கு உகந்தன என அனுமதி பெற்று தற்பொழுது பாவனையில் உள்ள இனிப்பூட்டிகளாவன

1 அசசல்பம் பொட்டாசியம். (Acesephame Potassium)
2.அஸ்பாற்றம் (Aspartame)
3.நியோற்றம் (Neotame)
4.சக்கரீன் (Saccharin)
5.சுக்கிறலோஸ் (Sucralose)

### தலைமை நிர்வாகி/ வாடிக்கையாளர் சேவை அதிகாரி/ காசாளர்கள் (ஆண் மற்றும் பெண்)

நீங்கள் திறமையான சுறுசுறுப்பான இளைஞரா? வாடிக்கையாளர் சேவைகளை முன்னின்று விருப்புடன் செயலாற்ற நாட்டம் கொண்டவரா? அப்படியாயின் இதோ! டயலொக்/அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்தில் பணிபுரியும் வாய்ப்பு

கடமைகள்

- டயலொக் டெலிகொம் வழங்கும் வாடிக்கையாளர் சேவைகளை விட கூடுதலாக சேவையாற்றக்கூடியதாயிருத்தல்.
- VAS மற்றும் கட்டணப்பட்டியல்கள் தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு மேலதிக தகவல்களை வழங்ககூடியதாயிருத்தல்.
- வாடிக்கையாளர்கள் தொடர்பான தகவல்களை சரியான முறையில் பேணுதல்
- டயலொக் GSM/ DTV/ CDMA/ ப்ரோட்பேண்ட் மற்றும் கைத்தொலைப்பேசிகளை விற்பனைசெய்யக்கூடியதாயிருத்தல்
- மேலதிக கடமைகளை பொறுப்பேற்று, நிறைவேற்றக்கூடிய ஆற்றல்

தகுதிகள்

- 18-30 வரையான வயதெல்லையை கொண்டிருத்தல்.
- க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தி
- சிறந்த தொடர்பாடல் தகுதியை கொண்டிருத்தல்
- பாடசாலை விடுகைப்பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- அந்தந்த துறையில் உள்ள அனுபவம் மேலதிகத் தகைமையாகக்கொள்ளப்படும்.
- ஆங்கில அறிவு அவசியம்.

வாடிக்கையாளர் சேவை மற்றும் காசாளர் வெற்றிடமுள்ள பிரதேசங்கள்
யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, நாவலப்பிட்டிய, நுவரெலியா, யட்டியந்தொட்டை, நெல்லியடி, பொத்துவில், வவுனியா

ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு உங்களுடைய சுயவிபரக்கோவையை அஞ்சலிடவும்


மேலதிக விபரங்களுக்கு 0777 397735

Human Resource Manager
No.498, Galle Road, Colombo-03
Phone: 0112565251-60
careers@abansgroup.com

Abans

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் கலைதாசன்



82/9, யாழ். வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் கலைதாசன் 20.11.2012 செவ்வாய்க் கிழமை இயற்கையெய்தினார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.22, சரஸ்வதி வித்தியாசாலை வீதி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியில் உள்ள அவரது சகோதரரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வல்லை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 22, சரவஸ்வதி
வித்தியாசாலை வீதி,
அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (26793)(3.14)

தகவல்:
கனகரத்தினம்,
கனகலிங்கம் (சகோதரன்)
(அகில இலங்கை சமாதான நீதிவான்)

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25 ★ 03 ★ 1981

இறப்பு
07 ★ 12 ★ 2011

### அருளானந்தம் தணிகைவாசன்

திதி - துவாதசி

வருடங்கள் பல தவங்கிடந்து
பெற்றெடுத்த எம்
அருமை மகனே! என் அன்புக் கணவனே!
எம்மினிய அப்பாவே!
நீங்கள் எங்கையா சென்றீர்கள்
பூப்போன்ற உம் முகத்தை
காணாது ஏங்குகின்றோம்
நீங்கள் பிரிந்த நாளிலிருந்து
புலம்புகின்றோம்
வாச மலராய்த்திகழ்ந்த - எம்
வாடா மலரே வாசா!
ஈராறு மாதங்கள் கடந்தாலும்
நீங்கள் என்றும் வாடா மலராய்
எம்மனதில் வாழ்வீர் ஐயா!

அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனை 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அவரது மாமியார் வீட்டில் நடைபெற்று அதனைத்தொடர்ந்து விருந்துபசாரம் அவரது மாமியார் வீட்டிலும், அச்சுவேலியில் உள்ள அவரது வீட்டிலும் நடைபெறும். எனவே இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி. (26803)(3.6.7)

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள், மைத்துனர்கள், மாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வீரர் புதிய சாதனை


ஆர். நிமலேந்திரா

யாழ்ப்பாணம்,நவ.25
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 24 ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டி கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திக் கலந்து கொண்ட ஆர். நிமலேந்திரா புதிய சானையைப் படைத்துள்ளார்.

20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் 2011 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த டி.எச்.சுனவீரசேகர- 13.97 மீற்றர் தூரம் எறிந்து-நிலைநாட்டிய சாதனையை முறியடித்து ஆர். நிமலேந்திரா 16.13 மீற்றர் தூரத்தினை எறிந்து புதிய சாதனையைப் படைத் துள்ளார்.

இதேவேளை இவர் ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் 34.48 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தினை பெற்றுள்ளார். அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற தேசிய மட்ட தடகளப் போட் டியிலும் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். 15 ஆவது ஆசிய கனிஷ்ட மெய் வன்மை போட்டிக்கு இலங்கை அணியில் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆர். நிமலேந்திரா 16.13 மீற்றர் தூரத்தினை எறிந்து புதிய சாதனை புரிந்துள்ளார்.


ஆர்.தர்சிகா

இதேவேளை வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட ஆர்.தர்சிகா பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் 30.86 மீற்றர் தூரத்தை எறிந்து வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். (23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.25
கோட்டைக்காடு மல்லாகம் ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் முத்துலிங்கம் ஜெகநாத வெற்றிக்கிண்ணத்துக்கான 23 ஆவது தொடரின் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு -

**காலை 8.30 மணி**

ஸ்ரார் விளையாட்டுக்கழகம் எதிர் நாயன்மார் கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி

**காலை 9.30 மணி**

கலைமதி விளையாட்டுக்கழக அணி தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழக அணி

**மு.பகல் 11. மணி**

பன்னாலை கணேசா விளையாட்டுக்கழக அணி நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மேற்படி போட்டியில் வெற்றி பெறும் அணி 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியுடன் மோதவுள்ளது.

★ ★ ★

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது.

நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் ப ங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு

**மாலை .3 மணி**

கல்வி அமைச்சு அணியை எதிர்த்து ஆளுநர் செயலக கொத்தணி அணி

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் பேர்ட்டித் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில்பங்குபற்றவுள்ள அணிகள் விவரம் வருமாறு-

**மாலை 3.45 மணி**

நாவந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

(த-23)

# பிரதம செயலர் அணி வெற்றி

யாழ்ப்பாணம், நவ.25
ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பிரதம செயலர் கொத்தணி அணி 8 இலக்குகளால் வெற்றிபெற்றது.

சுகாதார அமைச்சு அணிக்கும் பிரதம செயலாளர் கொத்தணி அணிக்கும் இடையியானஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சதுரங்கன் 18 ஓட்டங்களையும் , பகீரதன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில்பிரதம செயலர் கொத்தணி அணி சார்பில் கோபிநாத் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், சுபாஸ்கரன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குளையும் வீழ்த்தினார்.

56 ஓட்டங்களைகப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பிரதம செயலர் கொத்தணி அணியினர் 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் குகரூபன் ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் சுபாஸ்கரன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுகாதார அமைச்சு அணி சார்பில் கோகுலன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினர். (த-23)

தேசிய அணித் தெரிவுக்கான உதைபந்து

# அரையிறுதிக்கு திருமலை

யாழ்ப்பாணம்,நவ.25
மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது திருகோணமலை மாவட்ட அணி.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சு இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான 21 வயதுப் பிரிவினருக்காக தேசிய மட்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டி கொழும்பில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கால் இறுதியாட்டம் ஒன்றில் திருகோணமலை மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக்கொண்டது.

இதில் திருகோணமலை மாவட்ட அணி 1:0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

திருகோணமலை மாவட்ட அணி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கொழும்பு டொறிங்ரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் காலி மாவட்ட அணியை எதிர்த்து மோதவுள்ளது.



இதேவேளை களனி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கண்டி மாவட்ட அணியை எதிர்த்து குருநாகல் மாவட்ட அணி மோதவுள்ளது.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெறும் அணிகள் இன்று மாலை 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மோதவுள்ளன. (த-23)

# போராடித் தோற்றது யாழ். மாவட்ட அணி

யாழ்ப்பாணம், நவ.25
யாழ். மாவட்ட அணியை வீழ்த்தி கண்டி மாவட்ட அணி அரை இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத் துறை அமைச்சும் இணைந்து நடத்தும் தேசிய உதைந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான தேசியமட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடர் கொழும்பில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற முதலாவது கால் இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கண்டி மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் கண்டி மாவட்ட அணி 2:0 என்ற கோல் கணக்கில் யாழ். மாவட்ட அணியை வெற்றிகொண்டு அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

(த-23)

# வென்றது கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம், நவ.25
ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கல்வி அமைச்சு அணி வெற்றிபெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சுகாதார அமைச்சு அணியை எதிர்த்துக் கல்வி அமைச்சு அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சுகாதார அமைச்சு அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பகீரதன் 14 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் கல்வி அமைச்சு அணி சார்பில் நிறஞ்சன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 5 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தமிழ்இன்பன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் வீழ்த்தினர். 52 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்வி அமைச்சு அணி 8.1 பந்துப் பரிமாற்றங்களில் 3இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் அற்புதன் 17 ஓட்டங்களையும், நிறஞ்சன் 16 ஓட்டங்களையும் தமது அணி சுர்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுகாதார அமைச்சு அணி சார்பில் கோகுலன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினை வீழ்த்தினார்.

கல்வி அமைச்சு அணி 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. (த-23)

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 11 பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கல்வி அமைச்சு அணி 7 இலக்குகளால் வெற்றிபெற்றது

# உதைபந்தாட்டம் நாளை

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஞாற்றிக்கிழமை திருகோணமலை மக்கெசயர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

**காலை 8.30 மணி**

ஒலிபிக்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பற்றிமா விளையாட்டுக்கழகம்

**மாலை 3.மணி**

கிறின்லைட் விளையாட்டுக்கழகம் எதிர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம்

(த-23)



தேசிய மட்டக் கபடிப் போட்டியில் பெண்கள் பிரிவில் 4 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியினர் அதிபர், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர் மற்றும் திணைக்கள அதிகாரிகளுடன் (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பீற்றர்சன்

# இங்கிலாந்து அபாரம்

இந்திய அணியை சுழல் பந்து வீச்சில் மிரட்டிய இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸை சிறப்பாகத் தொடக்கியது. நேற்றைய நாள் முடிவில் இங்கிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் இடையே நான்கு போட்டி கொண்ட டெஸ்ட் தொடர் இடம் பெற்று வருகின்றது. அஹமதாபாத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்திய அணி 9 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் மும்பையில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதல் இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி, இங்கிலாந்தின் சுழல் பந்து வீச்சில் சிக்கி சின்னாபின்னமானது. ஒரு கட்டத்தில் 169 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் இணைந்த அஸ்வின், புஜாரா ஜோடி இந்திய அணியை காப்பாற்றியது. நேற்று முன்தினம்ஆட்ட நேர முடிவில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகளுக்கு 266 ஓட்டங்கள் எடுத்திருந்தது. புஜாரா (114), அஷ்வின் (60) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. இங்கிலாந்து அணி தனது சுழல் மிரட்டலை நேற்றும் வெளிக்காட்டியது. அஸ்வின் 68 ஓட்டங்களுடன் பனேஷர் சுழலில் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ஹர்பஜன் 21 ஓட்டங்களுடன் சுவானிடம் சரணடைந்தார். அதன் பின்னர் களமிறங்கிய சகீர்கான் அதிரடியாக சிக்ஸர், பவுண்டரி விளாசிய வேகத்தில் 11 ஓட்டங்களுடன் சுவானிடமே சரணடைந்தார்.

தனிமனிதனாகப் போராடிய புஜாராவும் 135 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணியின் முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் பனேஷர் 5, சுவான் 4, அண்டர்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. குக் - கொம்ரன் ஜோடி முதலாவது இலக்குக்காக 66 ஓட்டங்களைப் பகிர்ந்து அடித்தளத்தை வலுவாக அமைத்தது. கொம்ரன் 29 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழலில் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ரொரட் ஓட்டமெதனையும் பெறாது ஓஜாவின் சுழலில் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி தடுமாறியது.

இருந்தும் அதன் பின்னர் இணைந்த குக் - பீற்றர்ஸன் ஜோடி இந்தியாவின் பந்துவீச்சை பதம் பார்த்து ஓட்டங்களைக் குவித்தது. இந்திய அணியின் சுழல் மாஜாயாலம் இந்த ஜோடியிடம் பலிக்கவில்லை. இருவரும் அரைச் சதம் அடித்து அசத்த நேற்றைய நாள் நிறைவில் இங்கிலாந்து அணி 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. களத்தில் குக் 87, பீற்றர்ஸன் 62 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். (5)

# முன்னிலை பெற்றது ஆஸி.

ஆஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் முன்னிலை பெற்றிருப்பினும், நேற்று மாலை ஆரம்பித்த இரண்டாவது இன்னிங்ஸில் தொடர்ந்து தடுமாறி வருகின்றது. நேற்றைய ஆட்டநேர நிறைவில் ஆஸ்திரேலிய அணி 5 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 2 ஆவது டெஸ்ட் ஆட்டம் ஓவல் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன் படி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 230, வோணர் 119, மைக் ஹஸி 103 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 5 இலக்குகளை இழந்து 550 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலளித்து ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவில் 2 இலக்குகளை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்திலேயே தென்னாபிரிக்க அணி ஆட்டம் காணத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் 7 இலக்குகளை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய தென்னாபிரிக்க அணி 8 ஆவது இலக்குக்காக டு பிளெஸிஸ், ஜக்ஸ் கலிஸ் இருவரும் 93 ஓட்டங்களைப் பகிர்ந்து தென்னாபிரிக்க அணியின் 'பலோஒன்' ஆபத்தைத் தவிர்க்க உதவினர்.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக கிரேம் ஸ்மித் 122 ஓட்டங்களையும், டு பிளெஸிஸ் 78 ஓட்டங்களையும், ஜக்ஸ் கலிஸ் 58 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக பென் ஹில்பன்ஹாஸ் 3 இலக்குகளையும், நதன் லயன், பீற்றர் சிடில் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், மைக்கல் கிளார்க், டேவிட் வோணர் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

162 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன்படி 5 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் ஆஸ்திரேலிய அணி 273 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது. துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 41 ஓட்டங்களையும், எட் கோவன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ரோஹி கிளெய்ன்வெல்ட்ற் 3 இலக்குகளையும், ஸ்ரெய்ன், மோர்னி மோர்க்கல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். களத்தில் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 9, மைக் ஹஸி 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர்.

(5)

# வெற்றியை நோக்கி மேற்கிந்தியத் தீவுகள்

மேற்கிந்தியத்தீவுகளின் பலமான இலக்குக்கு பதிலளிக்கும் பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்டநேர நிறைவில் 6 இலக்குகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 2 ஆவது டெஸ்ட் ஆட்டம் கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. குல்னாவில் இடம்பெறும் இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல இலக்குகளையும் இழந்து 387 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அறிமுக வீரர் அபுல் ஹசன் 113, மஹமதுல்லா 76, நஷீர் ஹூஸைன் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் பிடல் எட்வேட்ஸ் 6, சமி 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. இருப்பினும் சாமுவேல்ஸ், டரன் பிராவோ ஆகியோரின் சிறப்பான ஆட்டத்துடன் பலமான நிலையை அடைந்தது. சாமுவேல்ஸ் 260, டரன் பிராவோ 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க , நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 4 இலக்குகளை இழந்து 564 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் சந்தர்போல் 109, ராம்டின் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய நான்காவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ராம்டின் சுமாரன ஆட்டத்தை வெளிப்படுத்தி 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அதன் பின்னர் யாரும் சிறப்பான இணைப்பை வழங்காத நிலையில் சந்தர்போல் 150 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக மேற்கிந்தியத்தீவுகள் அணி அறிவித்தது.

9 இலக்குகளை இழந்து 648 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் அணி பெற்றிருந்தது. பந்து வீச்சில் சகிப் அல் ஹசன் 4, சொகாஷ் ஹாசி 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

261 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி மீண்டும் தடுமாறி இலக்குகளை தொடர்ச்சியாக இழந்தது. ஒரு கட்டத்தில் 5 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த பங்களாதேஷ் அணியை சகிப் அல் ஹசன், நஷீர் ஹூஸைன் ஜோடி மீட்டது. சிறப்பாக ஆடியது இந்த ஜோடி.

நேற்றைய நாளின் இறுதி இலக்காக 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சகிப் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் நேற்றைய நாள் ஆட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. பங்களாதேஷ் அணி 6 இலக்குகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் நஷீர் ஹூஸைன் 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய சுப்பிரமணிய மாலதி முன்பள்ளிச் சிறார்களின் நவராத்திரி விழா அண்மையில் நடைபெற்றது. (ம)




வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்துக்கு நிதிப்பங்களிப்பை வழங்கி வந்த போரூட் நிறுவனத்திட்டப் பணிப்பாளர் எம்.எப். மரிக்கார், திருமதி யோ.சந்திரா என்னும் அங்கத்துவ பயனாளிக்கு நுண்நிதி வாழ்வாதாரக் கடன் வழங்குகிறார். (ம-8)



யாழ். கார்மேல் அன்னை ஆலய இளைஞர் ஒன்றியப் பிரதிநிதிகள் அண்மையில் கைதடி அரச முதியோர் இல்லத்துக்குச் சென்று முதியோரைச் சந்தித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்தனர். (ம-17)



ஏழாலை சைவ மகா வித்தியாலயத்தில் அண்மையில் ஓய்வு பெற்ற அதிபர் செ.நடராசா தலைமையில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜெயந்தி தின விழா இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் உரையாற்றுகிறார். விருந்தினர் மேடையில் அமர்ந்துள்ளனர். (ம)



பருத்தித்துறை புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற வெள்ளிவிழாவில் பிரதம விருந்தினரான யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ம-8)



யாழ்.அன்பொளி கல்வியகத்தில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை வெற்றியாளர்களுக்கான கௌரவிப்பு விழாவின்போது தமிழ்மொழிப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் அதிகூடிய புள்ளியான 193 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்ற பாலேந்திரன் அபிராம் மங்கலவிளக்கேற்றுகிறார். (ம)



திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற தீபாவளிக் கலை நிகழ்வுகளில் சில காட்சிகள். (ம)



தும்பளை யோக சாந்தி நிலைய யோகப் பயிற்சியாளர் ரி.தேவராஜேந்திரனிடம் யோகப் பயிற்சி பெற்ற பிரான்ஸ் வைத்தியக் குழுவைச் சேர்ந்த மருத்துவர் சோனகா அனுப்பி வைத்த 10 ஆயிரம் ரூபா நிதியை வதிரி பரமானந்தா ஆச்சிரமச் சிறார்களின் கல்விச் செலவுக்காக பயிற்சியாளர் தேவராஜேந்திரன் சார்பாக நிலையப் போஷகர் பொன். மகாதேவா, ஆச்சிரம நிர்வாக அலுவலரிடம் கையளிக்கிறார். (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

(20772) (15-14)

## சல்லிகள் விற்பனைக்கு

தரமான கருஞ் சல்லிகள் (½", ¾", 1", 1½", 4", 9x6) போன்றவை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம். கொங்கிறீற் கற்களும் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்பு- 0775890730.

(6/4794)(3-14)

## STUDY IN UK

உங்கள் **LONDON** செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

**GCE(O/L)** தகமை போதுமானது

Jan/Feb Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

நடைமுறைகள் மாறினும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்

**நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்**

- ஆகக் கூடுதலான விசாக்களைப் பெற்றுக்கொடுத்து சாதனைபடைத்துக் கொண்டிருப்பதால்
- பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன
- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

**HOTLINE : 021 7538395 / 021 2227230 011 7 555511/14**

EXPONET Overseas Consultants
379 - ½, Galle Road, Colombo 06.
197,Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk

## காணி விற்பனைக்கு

வைத்தியசாலை அருகாமை, கோப்பாய் மத்தி, கோப்பாயில் 6½ பரப்புக் காணி வீடு வளவுடன் உடன் விற்பனைக்குண்டு. குழாய்க் கிணறு, தண்ணீர்த் தாங்கி, மூன்று பக்கமும் மதில் உள்ள அமைதியான சூழல் முழுமையாகவோ, பகுதியளவிலோ விற்கப்படும்.

தொடர்புகளுக்கு 0776051245
E-mail : vprabap@gmail.com

(25669)

## WE BUY OLD COMPUTERS

உபயோகிக்க முடியாத பழைய கணினிப் பொருள்கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு 0778071390
112, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

(25702)

## செங்கல் விற்பனைக்கு

தரமான செங்கல் வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு
பிரணவன் என்டர்பிறைசஸ்,
பருத்தித்துறை வீதி,
(சங்கிலியன் வீதிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P. : 0773818799

## German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் German இல் இருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது. அடுத்த வகுப்பு 26.11.2012 அன்று ஆரம்பம். தொடர்புகளுக்கு 10, Palaly Road, Jaffna. T.P: 0771604823

## Dialog

நடத்தும் O/L மாணவர்களுக்கான கணித பாட இலவச

**கருத்தரங்கு**

காலம் இன்று காலை 9.30 மணி முதல்

(விவரம் உள்ளே)

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I 26.11.2012 10.30 am (Mon, Wed)
பிரிவு II 06.12.2012 3.00 pm (Tue, Thu)
★ அடிப்படையிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
★ சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**By: Britto**

T.P. : 021-222-1417
SKY Computers (Pvt) Ltd.
162, Main Street, Jaffna.

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, புலோலி வடக்கு, அரசடி ஒழுங்கையில் (வல்லிபுர பரியாரியார் ஒழுங்கையூடாக) 5 ½ பரப்பு நிலத்தில் அமைந்துள்ள, 3 அறைகள் கொண்ட விசாலமான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777737474

## பணியாள்கள் தேவை

இலங்கையில் இயங்கி வரும் முன்னணி தனியார் நிறுவனத்துக்கு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசங்களிலிருந்து வெளிக்கள உத்தியோகத்தர்களும், வெளிக்கள முகாமையாளர்களும் தேவை.

தகுதி: க.பொ.த. சா/த கணிதம் உட்பட 6 பாடம் க.பொ.த. உ/த சித்தி பெற்றிருத்தல்

தொடர்புகளுக்கு: 0773466976 0771539134

## German Language Academy

ஜேர்மன், டொச் மொழிகள் இலகுவழியில் ஜேர்மனியில் கற்று வந்த ஆசிரியரால் மிகச்சிறந்த முறையில் பல வருடங்களாக யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் பல மாணவர்களை சித்தியடையச் செய்த ஆசிரியர் ஆவார்.

★ ஜேர்மன் A1 பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

French மொழிகளும் இங்கு கற்பிக்கப்படுகிறது.

German Language Academy, No.7, Palaly Road, Jaffna. 0779707322
Sun British College, Station Road, Vavuniya.

(25711)

## BANKING வகுப்புக்கள்

ibsl
CBF, DBF MEDIUM ENGLISH & TAMIL

வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் O/L பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியுடன் கணிதபாடம் உள்ளடங்கலாக 5 பாடங்களில் "C" தரச் சித்தியுடைய அனைவரும் இக் கற்கை நெறியைத் தொடரமுடியும்.

* CBF பயிலும் மாணவர்களுக்கு CV WRITING, INTERVIEW TECHNIQUES இலவச பயிற்சி வழங்கப்படும்.
* DBF பயிலும் மாணவர்களுக்கு BUSINESS ENGLISH இலவச வகுப்பு நடைபெறுகிறது.

அனுமதிக்கான இறுதி திகதி 30th November 2012

தொடர்புகளுக்கு:-
Spectra Skills, #19, Stanley Road, (Peoples Bank 2nd Floor) Jaffna.
Tel:- 021 222 1422, 021 222 1423

## பண்டிகைக்கால சிறப்புச்சலுகை



- புதிய ஆலோசனைகள் கனடா, ஆஸ்திரேலியா,
- அமெரிக்கா, ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
- பட்டதாரிகள் நியூசிலாந்து குடும்ப விசா
- மலேசியாவில் சம்பளத்துடன்
- ஹோட்டல் கல்வி சட்ட ஆலோசனைகளிற்த

விசா ஆலோசனையுடன் சிங்கப்பூர் சென்று வர விமான ரிக்கெட் இலவசம் (நிபந்தனைகளுக்கமைவாக)

**திசைகாட்டி பிறைவேற் லிமிட்.**
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (021 2219016)

## நான்கு இயந்திரங்களில் நாளாந்த வருமானம்

**வின்ஸ்டார்**



ஐஸ்கிறீம் இயந்திரம் ரூ. 99,000 இலிருந்து

விபரம் அறிய உடனே அழையுங்கள்
யோகேஸ் 077 3918870
077 1066902

வின்ஸ்டாரின் வியப்பான மாத லாபம்
**ரூ 100,000/= க்கு மேல்**

விற்பனையின் பின் சேவை
WITH PRE - COOLING & AIR PUMP



ஜூஸ் இயந்திரம் ரூ. 55,000 இலிருந்து



டீ & கொ(f)பீ இயந்திரம் ரூ. 45,000 இலிருந்து



பொப்கார்ன் இயந்திரம் ரூ. 29,000 இலிருந்து

வின்ரிச்சின் உத்தரவாதத்துடன்

Credit card acceptable VISA

ATA 0112722990

**WINRICH INTERNATIONAL (PVT) LTD**
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

## 175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.



தற்போது பஸ் போக்குவரத்துள்ள, இலகுவில் எம்மை வந்தடையக் கூடிய, மேற்படி முகவரியில் ஆலோசனை வழங்கி வருகின்றோம்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட், முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்.
021 221 9016
077 8418344

(25697)

# பழைய பட்டுப்புடைவை பணமாகிறது!

# ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டு சென்ரர்

# யாழ்ப்பாணம்

வாகன தரிப்பிட வசதியும் உண்டு

தியாகி அறக்கொடை நிறுவன வளாகம், T.C.T. வணிக வளாகம்.
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**Tel : 075 2145355**

**25.11.2012 முதல் 01.12.2012 வரை**

07 தினங்கள் மட்டுமே!



**பழைய (கிழிந்த) பட்டுப்புடைவைகள் பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்,**

பழைய கிழிந்த கூறைப்புடைவைகளும், எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக் கொண்டு உடனே பணம் தரப்படும்.

பழைய டிஸ்யூ புடவைகள் ரூபா 5000/= க்கு மேல் ரூபா 20,000/= வரை வழங்கப்படும்.

பழைய காலத்து கல்வைத்த நகைகள் லாக்குடி, ஜடபில்லை, பவளம், பவள மாலைகள் நல்ல விலைக்கு வாங்கப்படும்

குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது.

வேலை நேரம் காலை 9.30 மணி முதல் [illegible] வரை - ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
















# சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
01

உதயன் 25 நவம்பர் 2012 ஞாயிற்றுக்கிழமை பக்கங்கள்: இருபத்துநான்கு

# ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே...

ஔண்யன்

யாழ்.குடாநாடு முற்றுமுழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக, சந்திரிகா பண்டாரநாயக்க உத்தியோகபூர்வமாக ஊடகங்களில் முழங்கித் தள்ளிக்கொண்டிருந்தார். ஆனால் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பொன்னாலைக் கிருஷ்ணன் ஆலயம் வரையான மிகப்பரந்த பிரதேசத்தில் மட்டும் மருந்துக்குக் கூட இராணுவத்தினர் இல்லை. காவலரண் இல்லை. சோதனைச்சாவடி இல்லை. ஆனால் புலிகள் இருந்தார்கள். மற்ற இடங்களில் முழுத்துக்கு முழும் சனங்கள் இறங்கி ஏறிக்கொண்டிருக்க, இங்குள்ளவர்கள் மட்டும் முன்னரைப்போலவே சுதந்திரமாக இருந்தார்கள். மக்களோடு மக்களாக இங்கிருந்த புலிகள்தான், யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த படைகளுக்கு அவ்வப்போது தலையிடி கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நல்லவேளையாக அப்போதும் துயிலுமில்லங்களை படையினர் சிதைத்திருந்தாலும் கட்டடங்களையும், முகப்புகளையும் விட்டு வைத்திருந்தனர். இப்போது போல தங்கள் படைத்தளங்களை கல்லறைகளுக்குள் அமைத்து அதியுன்னத வன்மத்தை வெளிப்படுத்தவில்லை.

அன்றைக்கு மாவீரர் தினம். 'கோப்பாய் துயிலுமில்லத்தில எப்படியும் விளக்கேத்த வேணும்' என போராளிகள் எல்லோரும் ஓர்மத்துடன் சொல்லிக்கொண்டார்கள். நான்கு பேர் கொண்ட அணி புறப்பட்டது. சிக்கல் என்னவென்றால், எப்படியும் மாவீரர் தினத்துக்கு தீபமேற்ற புலிகள் வருவார்கள் என்று படையினரும், கண்ணில் எண்ணெய் விட்டுக் காத்திருந்தனர்.


தீபமேற்றாமல் திரும்புவதில்லை என வந்த போராளிகள் தமக்குள் தீர்மானித்தனர். ஒரு தளத்தின் மீதான தாக்குதலைப் போன்று தீபமேற்றவும் திட்டமிடப்பட்டது. ஏ.கே -47 சன்னங்களைச் சடசடவென்று கக்க, நான்கு பேரும் நான்கு திக்குகளிலிருந்து பாய்ந்தார்கள்.

படையினர் ஒரேகணத்தில் கலங்கிப் போயினர். மாவீரர் மயானத்தின் மீது தீபமேற்ற நூற்றுக்கணக்கான புலிகள் வந்துவிட்டதாக எண்ணினர். காவலுக்கு இருந்தவர்கள் துணைக்கு ஆள்களை அழைத்துவர ஓடினர். இந்த இடைவெளிக்குள் உள்நுழைந்தவர்கள், ஓரளவுக்கு சிதைவில் இருந்து தப்பித்த கல்லறையொன்றில் தீபமேற்றிவிட்டு, திரும்புவதற்கிடையில் சுற்றி வளைக்கப்பட்டிருந்தனர்.

இருளைக்கிழித்தபடி இருதரப்பும் பரிமாறிக்கொண்ட துப்பாக்கி வேட்டுக்கள் ஆயிரமாயிரம் தீபங்களாகின அந்த துயிலுமில்லத்தில். தம் உயிரால் தீபமேற்றிய நான்கு போராளிகளின் உடல்கள், இதழோரப்புன்னகையோடு மாவீரர் மயானத்தில் நிரந்தரத்துயில் கொண்டிருந்தன.

### நினைவைப் பரப்பும் கார்த்திகைப் பூ

கார்த்திகை தீபங்களின் மாதமென்பதாலோ என்னவோ தமிழர் பகுதிகளில் கார்த்திகையில் மட்டுமே பூக்கும் காந்தள் எனப்படும் கார்த்திகைப் பூவும் தீப வடிவெடுத்துள்ளது. சுடரின் நடனம் போல, நெளிநெளியான உடல்வாகுடன் மஞ்சள், சிவப்பு வர்ணக்கலவையுடன் கரங்குவித்து வணங்கி அஞ்சலிப்பது போன்ற உணர்வை கார்த்திகைப் பூ தோற்றவைக்கின்றது. கொல்கிசின் எனும் நச்சு இரசாயனத்தைக் கொண்டுள்ளதால், கழுத்தில் நஞ்சேந்திய போராளிகளை ஞாபகமூட்டுகின்றது. இதனால் அது மலர் என்ற நிலையில் இருந்து, வித்தாகிப்போன வீர மறவர்களின் குறியீட்டுப்பொருளாகவும் மாறிப்போனது.



மலரை மாவீரர்களின் அடையாளப்பொருளாகக் [illegible] இங்கு மாத்திரம் நிகழும் ஒன்றல்ல. பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் முதலாம் உலகப்போரில் தம்நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு 'பொப்ப' எனப்படும் மலர் கொண்டே அஞ்சலிக்கின்றனர். அந்த நிகழ்வும் கார்த்திகை மாதத்திலேயே -கார்த்திகை 11- வருவது இன்னொரு ஒற்றுமை.

விஷத்தன்மை கொண்டிருப்பதால் மனிதர்க்கு வேண்டாப் பொருளல்ல கார்த்திகைப் பூ. அது ஏராளமான மருத்துவக் குணங்களை தன்னகத்தே கொண்டது. அண்மைய அறிவிப்பொன்று உயிர்கொல்லி எய்ட்ஸுக்குக்கு கார்த்திகைப்பூவிலிருந்து மருந்து கண்டுபிடிக்கும் முயற்சி வெற்றியளித்துள்ளதைச் சொல்கிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் பெண்களின் கைவிரலுக்கு உவமிக்க புலவர்களுக்கு காந்தள் மலரைத் தவிர வேறு பொருள்கள் கிடைத்ததில்லை.

[illegible] முள்வேலியிடப்பட்ட காலத்திலும், தமிழர் நிலமெங்கும் பூத்திருக்கும் கார்த்திகைப்பூக்கள், மண்ணுக்குள் உறங்கும் மறவர் நினைவுகளை பரப்பியபடியே இருக்கும்.

### காத்திருக்கும் கல்லறைகள்


துட்டகைமுனுவுக்கு எல்லாளன் பெரியதலையிடி. எப்படி முயன்றாலும் தோற்கடிக்கவே முடியவில்லை. தலையையும், காலையும் நீட்டிப்படுக்க வேண்டுமானால் எல்லாளனைக் கொன்றேயாகவேண்டும். வேறுவழியில்லை. வட இந்தியாவுக்கு ஓடினான். அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி திரட்டினான் பெரும் படை. எல்லாத்தேசத்து படைகளும் ஒரே அணியில். எல்லாளன் தனித் தமிழ்ப் படையுடன். மூண்டது உக்கிரப்போர். வயதானாலும் வீரம் குறையவில்லை எல்லாளனிடம். இந்தமுறையும் மூக்குடைபடவேண்டியது தான் என துட்டகைமுனு எண்ணிக் கொண்ட தருணத்தில், எதிர்பாராத விதமாக எல்லாளன் வீழ்த்தப்பட்டான். தன்னை நிம்மதியாக உறங்கவிடாமல் செய்த பரம எதிரி தொலைந்த சந்தோஷத்தில் துட்டகைமுனு ஆடினான், பாடினான், ஆனந்தத்தின் உச்சிக்கே போனான். அந்தவேளையிலும் ஒருகாரியம் செய்தான். எல்லாளனின் உடலுக்கு சகல மரியாதைகளோடும் இறுதிச் சடங்கு செய்யப்பட்டது. அந்த இடத்தால் செல்லும் எல்லோரும் இறங்கி எல்லாளனுக்கு மரியாதை செய்யவேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

ஆனால் துட்டகைமுனுவின் தோன்றல்கள் தாமேயென்று கொட்டமடிப்பவர்கள் போரில் வென்றவுடன் செய்த முதல் வேலை, மாவீரர் துயிலுமில்லங்களின் கல்லறைகளைத் தோண்டியெடுத்ததுதான். டாங்கிகள் கொண்டு துயிலுமில்லங்களை உழுதபின்னும், வெறி அடங்கவில்லை. தோண்டப்பட்ட கல்லறைகள் வீதிப்புனரமைப்புக்கென்று சொல்லி, அங்கிருந்து அகற்றப்பட்டன.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் காந்தள் பூ



விகேளம்

மண்ணில் விழும் வித்துக்கள் அனைத்தும் முளைத்து மரமாக வேண்டும் என்ற காரணத்துடனேயே விழுகின்றன. அவற்றில் சில முளைத்து விருட்சமாகி விட பல ஏனோ முளைத்து வளராமல் வளர்ந்தும் பயன்தராமல் போய்விடுகின்றன. இயற்கையின் இந்தக் கொடை எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவானது. விழுந்த வித்துக்கள் எல்லாம் முளைத்து விடுவதில்லை. முளைத்தவையெல்லாம் விருட்சமாகி விடுவதில்லை என்றாலும் ஒரு நோக்கத்துக்காக விதைக்கப்பட்ட வித்துக்கள் சரியாகப் பராமரிக்கப்பட்டு பயன் பெறுதலை நோக்காகக் கொண்டு வளர்க்கப்படுகின்றன.

இயற்கையின் தத்துவத்தை மீறி அபாரிமிதமாக மனிதனால் எதையும் சாதித்து விட முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருக்கின்றது.

சமய பண்பாட்டு பழக்கங்களுக்கு கட்டுப்பட்டவர்கள் விதி பற்றியும் முற்பிறப்பு, பலாபலன்கள் பற்றியும் பாவ வினை பற்றியும் பேசுவார்கள். இந்த சாஸ்திர சம்பிரதாயங்களை மீறி விஞ்ஞானமும் அறிவியலும் வளர்ந்திருந்தாலும் ஏதோ ஒரு கட்டத்தில் தோற்றுப் போனவர்களாக மீளவும் விதி பற்றியும் வினை பற்றியும் பேசிக் கொள்ள வேண்டியவர்கள் ஆகின்றனர்.

**எண்ணிக்கைகளற்ற வித்துக்கள்**

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதி தமிழ் மக்களுக்குரிய பண்பாட்டு கலாசார விழுமியங்களுடன் கூடிய பாரம்பரிய தேசமாகக் கொள்ளப்படுகின்றது. வரலாற்றுச் சான்றுகளுடன் இந்த உண்மை நிறுவப்பட்டாலும் அதற்கான முழு அங்கீகாரமும் இதுவரை எவராலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வடக்குக் கிழக்கு தமிழர்களது தேசம் என்பதையும் அதை தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமைகளுடனும் ஆள வேண்டும் என்பதற்காக போராட ஆரம்பித்தனர்.

இந்தத் தூண்டுதலை தமிழ் மக்களுக்கு வழங்கியவர்கள் சிங்கள மக்களே. அதிகாரத்தின் இருப்பு யாருடைய கையில் என்பது இந்தப் போராட்டத்துக்கு உந்துதல் ஆகியது. ஒரு காலத்தில் அரசியல் சாணக்கியம் பெற்றவர்களாக தமிழ்த் தலைவர்கள் இருந்த போது சிங்களத் தலைவர்களுக்கு அவர்கள் வழிகாட்டியாக இருந்தனர். அந்த வளர்ப்பு பின்னர் விஷமாய்த் திரும்பி விடப்பட்டது. இந்த நாள் கொண்டு தமிழ் மக்கள் சிங்கள தேசத்தை எதிர்க்க வேண்டியவர்களாக மாற்றப்பட்டனர். அஹிம்சை வழியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் வலுவடைந்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டியது.

இதுவரையில் இருந்த அடக்கு முறைகளை ஆயுதம் கொண்டு மாற்றியமைக்க முற்பட்ட இளைஞர் அணி வலுவடைந்து ஓர் இனத்தின் விடுதலை இயக்கமாக மாற்றமடைந்திருந்தது. அந்த நாளில் இருந்து தேச விடுதலையை நோக்காகக் கொண்டு போராளிகள் களமாடி வீரச் சாவைத் தழுவிக் கொள்ள, விடுதலைப் போராட்டத்தின் இறுதிக் கணங்கள் என்று சொல்லப்படும் நாள்கள் வரை எண்ணிக்கையற்ற வித்துக்கள் விதைக்கப்பட்டன. தேசம் விடிய வேண்டும். ஈழம் மலர வேண்டும் என்ற நோக்கத்துக்காய் இந்த வித்துக்கள் விதையாக்கப்பட்டன.

**எண்ணிக் கொண்ட நாள்கள்.**

தமிழீழ விடுதலைப் போராட்டம் கெரில்லா முறையில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்த்தெடுக்கப்பட்டு சகல கட்டமைப்புக்களையும் கொண்ட மரபு வழி இராணுவமாக மாற்றிக் கொள்ளப்பட்டது. இருந்தாலும் சர்வதேச ரீதியில் இருந்த நெருக்கடிகளும் தடைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளை மரபு வழி இராணுவமாக ஏற்றுக் கொள்ளாது உலகத்தில் இருக்கக் கூடிய பயங்கரவாத அமைப்புப் பட்டியலிலேயே சேர்த்து வைத்திருந்தது.

அரசு என்ற அடிப்படையில் சிங்கள ஆட்சியாளர்கள் சர்வதேச ரீதியில் இதற்கான தூண்டுதல்களை வழங்கியிருந்ததுடன் காலத்துக்குக் காலம் அந்தத் தடையை நீடிப்பதற்கான வியூகங்களை சர்வதேச சமூகத்துக்கு வழங்கிக் கொண்டிருந்தனர்.

ஆயுத விற்பனைக்காக இராஜ தந்திரத் தொடர்புகளை வைத்திருந்த நாடுகள் தவிர ஏனைய நாடுகள் எல்லாம் பிராந்திய ஆதிக்க போட்டிகளின் அடிப்படையில் செயற்பட்டதால் இலங்கைத் தீவில் இரண்டு அரசுகள் இருக்கவிரும்பவில்லை. இதன் காரணமாக இலங்கையில் இடம்பெற்ற போர் குறித்து அவை உன்னிப்பான அவதானத்தைச் செலுத்தவில்லை.

சில வல்லரசுகள் தமது பலவீனத்தை மறைத்துக் கொள்ளும் வகையில் அயல் நாடுகள் இடையே உள்முரண்பாடுகளைத் தூண்டி விட்டு அவதானிப்புக்களை அவற்றின் மீது செலுத்திவிட்டன. இதனால் விடுதலைப் புலிகள் எதற்காகப் போராடுகிறார்கள் என்ற நிலைப்பாட்டை வேறுபட்டு புரியவைக்க முற்பட்டுள்ளனர். தமிழ் போராட்டம் குறித்து, சில சர்வதேச நாடுகள் புரிந்து வைத்திருந்தாலும் நேரடித் தலையீடுகளுக்கு அவை பின்னடித்தன அல்லது பாராமுகமாக இருந்தன. இதனால் விடுதலைப் புலிகளை ஒழித்து விட வேண்டும் என்றதை மேலோங்கியது.

தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் வளர்ச்சி கொண்ட விடுதலைப் புலிகள் மீது வலிந்த போர் நிறுத்த உடன்படிக்கையோடு அழித்தொழிப்பதற்கான திட்டத்தை சில வல்லரசு நாடுகள் இலங்கை அரசுடன் இணைந்து தீட்டிவிட்டன. இறுதிக் கணம் வரை விடுதலைப் புலிகளின் அழிவு சர்வதேச நாடுகளால் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன. அதில் தமிழ் மக்களின் பல நூறு உயிர்கள் தினமும் மாண்டு போவதையும் அந்தச் சமூகம் பார்த்துக் கொண்டேயிருந்தது.

**பயிரின்மை போக்களைகள்**

விடுதலைப்போராட்டம் மரபு வழிக் கட்டமைப்பை அடைந்திருந்த போது திறமைமிக்க போராளிகள் உருவாக்கப்பட்டிருந்தனர். அவர்களது தியாகம், அர்ப்பணிப்பு, கடமையுணர்வு போராட்டத்தை நின்று நிலைக்கச் செய்தது. 2001 ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டத்துக்கான விலைப்பேச்சு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் கேள்விகள் திட்டமிட்டு மலிய வைக்கப்பட்டன. (விலைப்பேச்சு என்பது நோர்வே நாட்டின் அனுசரணையுடன் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையை குறிக்கிறது.)

உண்மையில் நோர்வே விடுதலைப் புலிகளை அழிக்கத் தூண்டியதா அல்லது தார்மீகப் பொறுப்புடன் நடந்து கொண்டதா என்பதில் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் வெளிவருகின்றன. ஆனால் விடுதலைப்புலிகளின் இறுக்கமான கட்டமைப்புக்குள்ளேயே நம்பிக்கை மிக்க போராளிகள் எதிராளிகளாக மாற்றப்பட இந்த இடைவெளி போதுமானதாக இருந்தது.

கிழக்கில் பெயர் குறிப்பிடக் கூடிய போராளியாக இருந்த கருணா விடுதலைப் புலிகளுக்கு எதிராக மாறிக் கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழனை தமிழனே கொல்லும் கொடுமை நிகழ்ந்தேறியது. கருணாவின் சூழ்ச்சியை விடுதலைப் புலிகள் வெளியளவில் பெரிதாக ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் இராணுவ ரீதியில் கருணாவுக்கு இருந்த போரிடும் ஆற்றல் மற்றும் விடுதலைப் புலிகளின் இரகசியத் திட்டங்கள், நகர்வுகள் குறித்த விபரங்கள் சிங்கள இராணுவத்துக்கு கொடுக்கப்பட்டது என்பதை மறுக்க முடியாது.

இதுபோன்ற எதிரான போராளிகள் பலர் இறுதிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அந்த அமைப்பில் இருந்தே செயற்பட்டிருந்தனர் என வாய் வழி வியாக்கியானங்கள் பேசப்படுகின்றன.

இது உண்மையென்று அறியப்படாவிடினும் சூழ்ச்சி ஊடுருவல் மூலம் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களை முற்று முழுதாக அறிந்து கொண்டது என்பதை மறுக்க முடியாது.

**புலம்பெயர்ந்து போராட்டம்**

நிலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பலவீனப்பட்டுக் கொண்டிருந்த வேளை புலத்தில் அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. புலம் பெயர்ந்திருக்கக் கூடிய தமிழ் மக்கள் வன்னியில் இடம்பெறும் படுகொலைகளை நிறுத்துமாறு சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தனர். ஆனாலும் அந்தப் போராட்டம் வெற்றி பெறவில்லை. அவர்களது கோரிக்கைகள் கொலை செய்யப்பட்டதுடன் இறுதிவரை தமிழ் மக்கள் மீதான கொலைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. இது ஒருபுறம் இருக்க தமிழகத்தில் தமிழின உணர்வாளர்களின் எதிர்ப்புப் போராட்டம் ஏட்டுச் சுரக்காய் ஆனது.

உண்மையில் விடுதலைப் போராட்டம் பற்றி அடிப்படைகள் எதனையும் புரிந்து கொள்ளாத தமிழகத் தலைவர்கள் ஈழப் படுகொலையை நிறுத்துமாறு கோரிக் கொண்டனர். இன்றும் அவர்களது கோஷம் நிறைவுறவில்லை. ஆனாலும் இவர்களின் கருத்து ஒரு பொருட்டாகவே கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

**மீட்பர்களாக இராணுவம்**

இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களை திட்டமிட்டு படுகொலை செய்த இராணுவம் எஞ்சியோரை மீட்டு அகதி முகாம்களுக்கு கொண்டு சென்றனர். இதன் போது பயங்கரவாத போரை தாம் வெற்றி கொண்டு விட்டதாகவும் பயங்கரவாதிகள் அழிக்கப்பட்டு விட்டனர் எனவும் மகிழ்ச்சி கொண்டாடிய இராணுவம் தமிழ் மக்களின் மீட்பர்களாக தம்மை காட்டிக் கொள்ள முற்பட்டது. இன்றளவும் வடக்குக் கிழக்கில் சமூக சேவைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையில் நிலையான புரிந்துணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அரசு கூறிக்கொள்கிறது.

**மாவீரர்கள்**


ஈழக்கனவோடு உயிர் நீத்த தமிழ்ப் போராளிகள் "தங்களின் சாவால் இன்னொரு தமிழன் வாழ்வான்" என்ற நம்பிக்கையோடு இரையாகிப் போக, இன்று தமிழ் இனம் தனது இருப்புக்காக அலைய விடப்பட்டுள்ளது. கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கைகளும், விடுதலைப் போர் பற்றிய அபிப்பிராயங்களும் நசுங்கிப் போக இறந்து போன வீரர்களை எள்ளி நகையாடும் கூட்டம் எம்மிடத்திலே தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இவர்களின் இறப்பை நியாயப்படுத்திய பலர் அநியாயம் அந்தப் பிள்ளைகள் என்று கவலைப்படுகின்றனர். இது இவர்களின் இருப்புக்கான பரிதவிப்பு. போராளி தனது உயிரை எதற்காக அர்ப்பணித்தானோ அந்த நோக்கம் இன்று சிதைந்து போயிருக்கின்றது. திட்டமிட்டு சிதைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையான தமிழ் உணர்வுள்ள எந்த மனிதர்கள் மத்தியிலும் வீரத்தின் உருவம் சிதைந்து போகவில்லை. எம்மில் இருக்கும் களைகளை களைவதே மாவீரர்களுக்கு நாம் செய்யும் தியாகம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர் துயிலுமில்லங்கள் மிகவும் தூய்மையான எண்ணத்தோடு பார்க்கப்படும் மரபுதான் விடுதலைப்புலிகள் காலத்தில் காணப்பட்டது. இன்று அது சிங்கள மக்களின் விடுப்புப் பார்க்கும் இடமாக மாற்றம் பெற்றுள்ளது.



■ ஜெரா

# இப்படியாயிற்று இருபத்தேழு

ஈழம் என்றுமில்லா அழிவை நோக்கிப் பயணிக்கின்றது. மூன்று வருடங்களுக்கு முன்பிருந்த எதுவுமே அங்கில்லை. அனைத்தும் அகழ்ந்தெடுக்கப்பட்டாயிற்று. புலிகள் பயணித்த தெருக்கள் கூட தடயமே தெரியாமல் மாற்றியமைக் கப்படுகின்றன. பெரும்பாலான பகுதிகள் மாற்றியமைக்கப்பட்டுவிட்டன. புலிகளை விடுதலை வீரர்களாகக் காட்டக்கூடிய, நினைவுபடுத்தக் கூடிய எந்தத் தடயங்களும் இப்போது அங்கில்லை. திட்டமிடப்பட்ட வகையில் சிதைக்கப்பட்டது. கலாசார, சமூக பிரதிநிதிகளை ஒரு பக்கமாகக் கட்டவிழ்த்து விடும் அதே வேளை, புலிகள் பற்றிய நினைவழித்தல் பணிகளையும் இராணுவம் முன்னின்று செய்து வருகின்றது.

**கட்டுப்படுத்த முடியாத உணர்வு**

கடந்த வருடமும், அதற்கு முந்தைய வருடமும் மாவீரர் தினத்தன்று ஈழத்தில்- வன்னி, யாழ்ப்பாணம், பகுதிகளில் இருக்கின்ற எந்த ஆலயங்களிலும் மாலை வேளையில் ஒலியெழுப்பக் கூடாது. சிறப்பு வழிபாடுகள் நடத்தக் கூடாது. பொது இடங்களில் மக்கள் அணிதிரளக் கூடாது. வீட்டு முற்றங்களில் வெளிச்சம் தெரியும்படி தீபங்கள் ஏற்றக் கூடாது. அன்றைய நாளில் பெரிய நிகழ்வுகள் எதுவும் நடத்தக் கூடாது என ஆயிரத் தெட்டுக் கட்டளைகளை இராணுவம் போட்டிருந்தது. அதனையும் மீறி யாழ்ப்பாணத்து அச்சுவேலியில் போரில் மரணித்த மகனுக்காகச் சிறப்பு வழிபாடு செய்த பூசகரை போட்டுத் தள்ளி அச்சுறுத்தியது இராணுவம். ஆனால் மக்களை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒவ்வொரு தெருவிலும் இராணுவம் குவிக்கப்பட்டிருக்கையில் ஒவ்வொரு வீட்டினதும் சுவாமி அறைகளில், அன்றைய நாளில் 6.05 மணிக்கு படத்தட்டுகளுக்கு முன்னால் தீபம் ஏற்றப்பட்டது. சிறப்புப் பிரார்த்தனை நடத்தப்பட்டது. ஆயுதம் தாங்கி கொலைவெறியோடு இராணுவம் வாசலில் நின்றபோதும் சாதாரணமாக மாவீரர் நினைவேந்தலை மக்கள் அனுஷ்டித்தனர். துப்பாக்கிகளாலும், அதிகாரங்களாலும் அவர்களின் உள்ளத்து உணர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

**எருக்கலைத் தோட்டமான இல்லங்கள்**

இவ்வாறு மாவீரர் நினைவுகள் இப்போது வீடுகளுக்குள்ளும், மனங்களுக்குள்ளும் தான் இருக்கின்றன. வெளியில் எதுவும் இல்லை. மணலாற்றுக்காட்டுப் பக்கமிருந்த கலிக்காடு துயிலுமில்லத்தைத் தவிர ஏனைய அனைத்துத் துயிலுமில்லங்களும் அழிக்கப்பட்டு விட்டன. முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம் கிரிக்கெற் விளையாடும் மைதானமாக ஆக்கப்பட்டுள்ளது. மூன்று வருடங்களுக்கு முன்னர் தன் சகோதரனை, நண்பனை அங்கே விதைத்துக் கண்ணீர் சிந்தியவன் இன்று அதே இடத்தில் கிரிக்கெற் ஆடும் அளவுக்கு மாவீரர் நினைவு சுத்திகரிக்கப்பட்டுள்ளது. விசுவமடு துயிலுமில்லம் எருக்கலைத் தோட்டமாக மாறியிருக்கின்றது. மாவீரர்கள் விதைக்கப்பட்டமைக்கான எந்தத் தடயங்களும் அங்கில்லை. இதே போலத் தான் அதிக துயிலுமில்லங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்த பெரிய துயிலுமில்லமான கோப்பாய் துயிலுமில்லம் இராணுவத்தின் கட்டளைத் தளமாக மாற்றப்பட்டிருக்கின்றது.

**அழிவு மட்டுமே மிச்சம்**

மாவீரர் துயிலுமில்லங்கள் மிகவும் தூய்மையான எண்ணத்தோடு பார்க்கப்படும் மரபு தான் விடுதலைப்புலிகள் காலத்தில் காணப்பட்டது. இன்று அது சிங்கள மக்களின் விடுப்புப் பார்க்கும் இடமாக மாற்றம் பெற்றுள்ளது. மாவீரர் துயிலும் இல்லங்களைக் கடக்கும் வாகனங்கள் ஒலியெழுப்பாது. வாகனங்களில் பாடும் இசை அந்த இடத்தில் இடை நிறுத்தப்படும். இதெல்லாம் யாரும் கட்டளையிட்டு செய்த காரியங்களல்ல. கவனமாக மாவீரரை மதித்த ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றம். ஆனால் இன்று அந்த ஒழுக்கத்தை எங்குமே காண முடியாது. மாவீரர் துயிலுமில்லங்களுக்கு முன்னால் கேவலமான சினிமாப் பாடலை ஓங்கி ஒலிக்க விட்டபடி பயணிக்கிறது ஒவ்வொரு வாகனமும். பலருக்கு அதைப் பார்க்க முடியவில்லை என்பதை வாகனத்தில் பயணிப்போரின் முகங்கள் காட்டினாலும், வெளிக் காட்ட முடிவதில்லை. ஏனெனில் இராணுவம் ஏறாத வாகனங்கள் தான் வன்னியில் ஓடுவதே இல்லையே.

**இராணுவ நினைவில்லங்களாக உருமாற்றம்**

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் மாவீரர் நினைவாக பல்வேறு நினைவுத் தூபிகள் எழுப்பப்பட்டிருந்தன. தனிப்பட்ட மாவீரர் பெயரிலும், பொது மாவீரர் நினைவுத் தூபியாகவும் அமைக்கப்பட்டன. உதாரணமாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம், புதுக்குடியிருப்பு, மல்லாவி, மாங்குளம், முழங்காவில், ஒட்டுசுட்டான், அளம்பில் முதலான இடங்களில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபிகளைக் குறிப்பிடலாம். ஆனால் இன்று அவை எதுவுமே இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. அல்லது இராணுவ நினைவுத் தூபிகளாக மாற்றம் பெற்றிருக்கின்றன. போர் ஓய்வுக்கு பின்னர் பொது மக்களை மீள் குடியேற்றம் செய்யப்பட்ட போதே இவையெல்லாம் அழிக்கப்பட்டிருந்தன. சூறையாடப்பட்டிருந்தன. புலிகள் பற்றிய எந்த எண்ணமும் இனிமேல் வரவே கூடாது என்பதற்காக இராணுவம் மக்களற்ற காலப்பகுதியில் மிகவும் திட்டமிட்டு நினைவழிப்பு வேலைகளைச் செய்திருந்தது. கிளிநொச்சியில் பலகோடி ரூபா செலவில் அந்தி ரன் நினைவாக அமைத்த தூபியும், பூங்காவும் இராணுவ வண்ணத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. அது மிகப் பிரமாண்டமான இராணுவத்தூபியாகக் காட்சியளிக்கின்றது.

**இப்படியாயிற்று நான்காவது மாவீரர் நாள்**

விடுதலைப் புலிகளற்ற 4ஆவது மாவீரர்நாள் வேளையில் ஈழ நிலைவரம் இப்படித்தான் இருக்கின்றது. இங்கு வாழும் ஒவ்வொருவர் நினைவிலும் அந்த நாள் மட்டும் மிச்சமிருக்கின்றது. மறைக்கப்பட்ட இடங்களில் தீபங்கள் ஏற்றுகின்றனர். நினைவுகளையும் மறைத்தே வைத்திருக்கின்றனர். அதனால் அடுத்த தலைமுறைக்கும் அந்த நினைவு கடத்தப்படுமா என்பது கேள்விக்குறியே. இன்றைய நிலையில் போராளிகளே இராணுவமாக மாறி வருகின்றனர். கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் கூட முன்னாள் பெண் போராளிகள் படையில் இணையவுள்ளதாக செய்தி வந்திருக்கின்றது. வேகமாகப் பயணிக்கும் காலம், எதையுமே நினைவில் வைத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் ஒவ்வொருவரும் தமது இருப்பை மட்டுமே சிந்திக்கின்ற தனி மனிதத் தீவுகளாக மாறியிருக்கின்றனர். அவர்கள் நினைவுகளை வைத்துக்கொள்வார்கள். தமது அடுத்த சந்ததிக்குக் கொண்டுசெல்வார்கள் என்று சொல்வதெல்லாம் எவ்வளவு தூரம் சாத்தியப்படக் கூடியதோ தெரியவில்லை. மாவீரர்களின் அப்பா, அம்மா, சகோதரர்கள் காலம் வரைக்கும் திரைமறைவு தீபமேற்றல்கள் தொடரப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூர சங்காரமும் மாபெரும் இடப்பெயர்வும்

ஞாயிறு காரம்

■ சந்திரசேகர ஆஷாத்

வருடாவருடம் எமது முருகன் கோயில்களில் சூரசங்கார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஆறுநாள்கள் கந்த ஷஷ்டி விரதம் அனுஷ்டித்து ஆறாம் நாள் மாலையில் முருகன் ஆலயங்களில் இடம்பெறும் சூரன்போரைத் தரிசித்து ஏழாம் நாள் பாரணை செய்து விரதத்தை முடித்துக் கொள்வதுண்டு. அசுரர்கள் தேவர்களை அடிமைப்படுத்திக் கொடுமை செய்ததாகவும் தேவர்கள் சிவனிடம் போய் முறையிட்டதாகவும் சிவன் நெற்றிக் கண்ணைத் திறக்க அதிலிருந்து ஆறு பொறிகள் வெளியேறி சரவணப் பொய்கையில் மலர்ந்திருந்த தாமரை மலர்கள் மீது விழ அவை ஆறு குழந்தைகளாக மாறியதாகவும் அவற்றைக் கார்த்திகைப் பெண்கள் அள்ளியெடுத்து உமாதேவியார் கையில் கொடுக்க அவை ஆறுமுகம் கொண்ட ஒரு குழந்தையாக மாறியதாகவும் எமது இந்துசமய புராணங்கள் கூறுகின்றன. அந்தக் குழந்தையையே நாம் ஆறுமுகன், சரவணன், கார்த்திகேயன் போன்ற பெயர்களில் வணங்கி வருகின்றோம். பின்பு உமாதேவியார் முருகனிடம் வேலைக் கொடுத்து அசுரரை அழித்து வரும்படி கட்டளையிட அவன் அசுரருடன் போரிட்டு அவர்களை அழித்ததையே நாம் சூரன் போராகக் கொண்டாடுகிறோம். பானுகோபன், தாரகாசூரன் என இரு அசுர தலைவர்களும் அழிக்கப்பட முருகன் பத்மாசுரனை வெற்றி கொண்டு அடிமையாக்கி மயில் வடிவத்தைத் தனது வாகனமாகவும் சேவல் வடிவத்தில் தனது கொடியாகவும் ஏற்றுக் கொண்டதாகப் புராண வரலாறு.

எப்படியிருந்த போதிலும் தேவ அசுர யுத்தத்தில் தேவர்கள் பெற்ற வெற்றியை நினைவுகூரும் ஒரு சடங்காகவே இது கருதப்படுகிறது. ஆனால் வட இந்தியாவில் வாழும் இந்துக்கள் முருகனைக் கடவுளாக ஏற்பதோ, ஆலயம் அமைத்து வழிபடுவதோ கிடையாது. அதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதும் எம் மத்தியில் முருகவழிபாடு மிகவும் மேன்மையுடன் பேணப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி வேல் வணக்கம் ஒரு வீர வழிபாட்டு முறையிலிருந்து தோன்றியதாகவும் பல தொல்லியல் ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. ஆதி திராவிட நாகரிகம் மேலோங்கியிருந்த காலத்தில் போரில் மடிந்த வீரர்களின் புதைகுழிகள் மேல் வேல் நட்டுப் படையல் செய்து பூசை மேற்கொண்டு வந்ததாகவும் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இன்றும் முருகன் குறிஞ்சி நில மக்களின் தெய்வமாக வழிபடப்பட்டு வருவதை நாம் அவதானிக்கலாம். அதேவேளையில் முல்லை நில மக்களும் (வேடர் கதிர்காமம்) நெய்தல் நில மக்களும் (மீனவர்கள் செல்வச்சந்நிதி) வாய்கட்டிப் பூசை செய்து வேல் வணக்கம் செய்து வருகின்றனர்.

எனவே தான் எமது மக்கள் கந்தஷஷ்டி விரதத்தை மிகவும் புனிதமாகவும் பக்தி சிரத்தையுடனும் அனுஷ்டித்து வருகின்றனர். குறிப்பாக ஒருவர் விரதம் அனுஷ்டித்து அவர் அதைக் கைவிடும்போது அவரின் பிள்ளைகளில் ஒருவர் அதைத் தொடர்வது ஒரு முக்கிய மரபாகப் பேணப்பட்டு வருகிறது.

தலைமுறை தலைமுறையாக கந்தஷஷ்டியும் சூரன்போரும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தபோதிலும் 1995 ஆம் ஆண்டு சூரன் போர் நாள்களில் துயரக் கதை படிந்த வரலாற்றை நாம் மறந்து விட முடியாது.

நாம் இறைவழிபாடு செய்து விரதம் மேற்கொண்ட அந்த நாள்களில் தான் இலங்கை இராணுவம் வடபகுதி மீது ஒரு பெரும் ஆக்கிரமிப்புப் போரைக் கட்டவிழ்த்துவிட்டது. விமானத் தாக்குதல்கள், டாங்கிகள், எறிகணைகள் என்பன மழையாகப் பொழிய இராணுவம் முன்னேறப் பெரும் முயற்சியை மேற்கொண்டது. எங்கள் ஆலயங்களில் விரத பூசைகள் நடந்து கொண்டிருக்க விடுதலைப் புலிகள் நெருப்பு மழைக்குள் நின்று படையினரைத் தடுத்து நிறுத்தப் போராடிக் கொண்டிருந்தனர். நல்லூரில் ஆறாம் நாள் சூரன்போர் நடக்க நீர்வேலியில் பெரும் போர் நடந்தது.

அடுத்தநாள் பாரணை. விமானக் குண்டுகள் விழுந்து கொண்டிருக்க எமது மக்கள் பாரணையை அதிகாலையில் முடிக்கிறார்கள். அந்தப் பாரணைப் பூசையின் பின் எமது ஆலயங்களில் பல மாதங்கள் பூசைகள் நடக்கவுமில்லை, மணிகள் ஒலிக்கவுமில்லை.

இராணுவம் விமானக் குண்டு வீச்சுக்களையும் எறிகணைப் பொழிவையும் மேற்கொண்டவாறே கோப்பாயை நோக்கி முன்னேறிய நிலையில் வேறு வழியின்றி 5 லட்சம் மக்கள் இரவோடிரவாக அந்தக் குறுகிய செம்மணி வீதியால் வலிகாமத்தை விட்டு வெளியேறினர்.

5 லட்சம் மக்கள், குழந்தைகள், முதியோர், பெண்கள், நோயாளர்கள் ஒரு குறுகிய பாதையில் குறுகிய பாலத்தினூடாக வெளியேற வேண்டிய அவலம். தலைக்கு மேல் சுற்றும் விமானங்களும் நெருங்கி வரும் வெடியோசைகளும் மக்களை ஓட ஓட விரட்டுகின்றன. கால் வைத்து நடக்க இடமின்றி மக்கள் அங்குலமங்குலமாக நகர்ந்து கொண்டிருந்த வேளையில் விமானம் ஒன்று தாழப் பறந்து இரண்டு குண்டுகளைத் தள்ளி விடுகின்றது. சில உயிர்கள் பறிக்கப்பட மனிதக் குருதி செம்மணி நீரில் கலக்கிறது. எங்கும் ஒரே அவல ஓலம். எமது மக்களின் நிலை கண்டு வானம் விம்மி வெடித்து மழையாகப் பொழிகிறது. ஆனாலும் உப்பு நீர் வாவியில் குடிக்க நீரின்றி குழந்தைகள் தாகத்தில் தத்த ஒரு தாய் குடையில் வழிந்த நீரை ஏந்திக் குழந்தைக்குக் கொடுக்கிறாள். மழையில் நடுங்கிய முதியவர்கள் மரங்களின் கீழ் ஒதுங்குகின்றனர்.



நாவற்குழி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி பகுதிகளின் பாடசாலைகளும் பொது மண்டபங்களும் எமது மக்களுக்கு அடைக்கலம் கொடுக்கின்றன.

1995 ஆம் ஆண்டின் சூரன் போர் சாவுகளாலும், காயங்களாலும் பசி, பட்டினியாலும் இடப்பெயர்வாலும் எழுதிய சோக வரலாறு இது. கந்தஷஷ்டிப் பாரணையன்று தொடங்கிய அந்த வரலாறு இன்று வரை தொடர்கிறது.

எமது மக்கள் தென்மராட்சியின் பல பகுதிகளிலும் வீட்டு விறாந்தைகள், தாவாரங்கள், ஒத்தாப்புக்கள், ஓலைக்குடில்கள் என எவ்வித வசதியுமின்றி வாடிக் கொண்டிருக்க முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்த யாழ்ப்பாணம் கச்சேரியில் சிங்கக் கொடியேற்றித் தன் வெற்றியைப் பிரகடனம் செய்துவிட்டு அந்தச் செய்தியை அன்றைய ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்கவுக்கு அனுப்பி வைத்தார்.

சில மாதங்களின் பின்பு மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். எங்கும் இராணுவ முகாம்களும், காவலரண்களும் பரவிக் காணப்படுகின்றன. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று தெரியாத பயங்கர நிலை. பல வீடுகளில் தொலைக்காட்சி, வீட்டுத் தளபாடங்கள் உட்பட பல பொருள்கள் களவாடப்பட்டுக் கப்பலில் ஏற்றப்பட்டு விட்டன. ஆடு, மாடுகள் வெட்டப்பட்டு இறைச்சியாகிச் சமிபாடு அடைந்துவிட்டன. எனினும் மீண்டும் வாழ்வைத் தொடங்கும் நோக்குடன் ஒரு பகுதியினர் சொந்த இடங்களுக்குத் திரும்பினர். மறுபகுதியினர் வன்னியை நோக்கி நகர்ந்தனர்.

ஆனால் வலிகாமத்தில் குடியேறிய மக்கள் முற்றாகவே தங்கள் நிம்மதியை இழந்தனர். வெள்ளை வான்களின் சாம்ராஜ்யம் உருவாக்கப்பட்டது. இரவிரவாக வாலிபர்கள், இளம் பெண்கள் கடத்தப்பட்டனர். இளம் குடும்பஸ்தர்கள் காணாமற் போயினர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்டவர்கள் வீதிகளிலும் வீட்டு முற்றங்களிலும் சுடப்பட்டும் வெட்டப்பட்டும் வீசப்பட்டனர்.

ஆயிரக் கணக்கானோர் காணாமல் போயினர். 1995 ஆம் ஆண்டு சூரன் போர் நிறைவு பெற்ற பின்பு தொடரப்படும் தமிழ் மக்கள் மீதான அழிவுப் போர் யாழ்.குடாநாட்டை இன வெறியர்களினதும் ஆயுதக்குழுக்களதும் வேட்டைக் காடாக்கியது.

ஆனால் பாடசாலை மாணவி படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பல விடயங்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்தது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதி ராஜபக்ஷ செம்மணிப் படுகொலைகள் பற்றியும் புதைகுழிகள் பற்றியும் வெளிக் கொண்டு வந்தான். பல சடலங்களின் எச்சங்கள் தோண்டியெடுக்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை இவை தொடர்பாக எவரும் தண்டிக்கப்படவில்லை. ஆனால் கொலைகள் மட்டும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அன்று இந்த நரபலி வேட்டையைத் தலைமையேற்று நடத்திய ஜெனரல் அனுரத்த ரத்வத்த பதவியிலிருந்து தூக்கி வீசப்பட்டார். ஊழல் மோசடி, முறையற்ற விதத்தில் சொத்துச் சேர்த்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் சிறைவாசம் அனுபவித்தார். இறுதியில் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார். அன்று சிங்கள மக்களின் ஒப்பற்ற வீர புருஷனாகத் தன்னைக் காட்டிக் கொண்ட இவரின் இறப்பு சிங்கள மக்களாலோ, ஆட்சியாளர்களாலோ கௌரவிக்கப்படவுமில்லை பெரிதாகப் பொருட்படுத்தப்படவுமில்லை.

ஆனால் அவரால் தலைமையேற்று நடத்தப்பட்ட ஆக்கிரமிப்புப் போரும் இன அழிப்புக் கொடூரங்களும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு மேலும் விரிவுபடுத்தப்பட்டு விஸ்வரூபமெடுத்து நிற்கிறது. அதேவகையான கொடூர வீரபுருஷர்களாகப் பலர் முன்வந்து செயற்பட்டு வருகின்றனர்.

பத்மாசுரன் தன் வீரத்தளபதிகளான தம்பியர் பானுகோபன், தாரகாசுரன் ஆகியோர் போரில் இறந்த பின்பு, படையினர் அனைவரையும் இழந்த பின்பு ஓடித் தலைமறைவாக முயன்றும் முடியாத நிலையிலேயே அவன் சேவலும் மயிலுமாக்கப்பட்டு அடிமையானான்.

ஆனால் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதம் தூக்கிய சில குழுக்கள் எதிரிகளின் கொடிகளில் சேவல்களாகவும் அவர்களை சுமக்கும் மயில்களாகவும் முற்கூட்டியே மாறி தமிழ் மக்களை அழிப்பதில் ஆட்சியாளர்களுக்குத் துணை நிற்கின்றனர். வெள்ளை வான்களில் திரிந்து வேட்டை நடத்தினர். இன்று இன அழிப்பாளர்களைச் சுமப்பது மட்டுமன்றி அவர்களின் கொடிகளில் பறந்து கொக்கரித்து வருகின்றனர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

1990 இல் விடுதலைப் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியது தொடர்பாக அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒரு நிகழ்வு இடம்பெற்றது. அதில் பல தமிழ், முஸ்லிம், சிங்கள அரசியல்வாதிகள் கலந்துகொண்டனர். இதில் கலந்துகொண்டு சில தமிழ் அரசியல்வாதிகளும் கண்ணீர்விட்டனர். அதைத் தவறு என்று எவரும் சொல்லிவிட முடியாது.

ஆனால் அவர்களுக்கு 1995 இல் 5 லட்சம் தமிழ் மக்கள் வலிகாமத்தை விட்டு வெளியேற்றப்பட்டமை ஏன் நினைவுக்கு வரவில்லை. ஏன் அன்றைய அவலத்துக்காவும் இன்றுவரை அது தொடர்வதற்காகவும் அவர்கள் கண்ணீர் விடவில்லை.

எப்படியிருந்த போதிலும் ஒவ்வொரு சூரன்போரின் போதும் பாரணை விரதம் சோற்றை அள்ளி வாயில் வைக்கும்போதும் எமது 1995 ஆம் ஆண்டின் அவலமும் அதைத் தொடர்ந்த படுகொலைகள், காணாமற் போதலும் நினைவில் வந்து பெரும் நெருப்பாய் எரியும். இன்று எம்மீது தொடரும் அடக்குமுறைகள் அந்த நெருப்புக்கு எண்ணெய் ஊற்றி மேலும் கொழுந்துவிட்டு எரிய வைக்கும்.

போரில் வெற்றிபெற்ற முருகன் தேவனாகவும் தோல்வியடைந்த சூரன் அசுரனாகவும் சித்திரிக்கப்பட்டிருக்கலாம். பத்மாசுரன் வெற்றிபெற்றிருந்தால் அவனே தெய்வமாக்கவும் பட்டிருக்கலாம். இன்றும் அதே நிலை தான்.


போரில் வெற்றி பெற்ற ஆட்சியாளர்கள் மீட்பர்களாகவும் தோல்வியடைந்த விடுதலைப் போராளிகள் பயங்கரவாதிகளாகவும் சித்திரிக்கப்படுகின்றனர். ஆனால் நியாயத்தின் முன் எல்லாத் தீமைகளும் எரிந்து சாம்பலாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

நெடுந் தொடர்



27 ■ பா.உண்மை

அதற்குப் பின் லிங்கன் தன்னுடன் வழக்கறிஞர் தொழிலில் கூட்டாளியாக சேர்த்துக்கொண்டவர் தான் ஸ்டீபன் லோகன். லிங்கனை விட அனுபவசாலி. பத்துவயது மூத்தவர். அவரோடு கூட்டாக இருந்தபோதுதான் சட்டப் புத்தகங்களை ஆழ்ந்து படித்து, வாதாடத் தொடங்கினார் லிங்கன். ஆனால் இந்தக் கூட்டணியும் நீடிக்கவில்லை. எந்த வழக்காக இருந்தாலும் லோகன் கிடைக்கிற கூலித் தொகையில் சரிபாதியை லிங்கனுக்குக் கொடுக்கமாட்டார். மூன்றில் ஒரு பகுதியைத்தான் லிங்கனுக்குத் தருவார். லிங்கன் பணத்தைப் பெரிதாக மதிக்காதவர். எனவே இதுவரை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. ஆனால், லோகன், தம்முடைய தொழில் கூட்டணியில் தன்னுடைய மகனையும் சேர்த்துக் கொள்ள விரும்பினார். எனவே, லிங்கன் லோகன் கூட்டணியும் விரைவில் முறிந்தது. எந்தவிதமான மனக்கசப்பும் இல்லாமல் இருவரும் பிரிந்தார்கள்.

லோகனிடமிருந்து பிரிந்து வந்த பிறகு, லிங்கனின் சட்டத்துறைக் கூட்டாளியாக வந்து சேர்ந்தவர் வில்லியம் ஹெர்ன்டன். இந்தக் கூட்டணி தான் இறுதிவரை நீடித்தது. ஹெர்ன்டன், லிங்கனை விட ஒன்பது வயது இளையவர். தொழில் ரீதியாக மட்டுமில்லாமல் மற்ற எல்லா விடயங்களிலும் லிங்கனுக்குத் துணையாக இருந்தார் ஹெர்ன்டன்.

லிங்கனைப் போன்ற ஒரு வழக்கறிஞரை எங்கும் பார்க்க முடியாது. கூலி இவ்வளவு வேண்டும் அவ்வளவு வேண்டும் என்று அடித்துப் பேசமாட்டார். அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொள்வார். குறைந்த கட்டணம், நிறைந்த சேவை. இதனால் சக சட்டத்தரணி நண்பர்கள் கடுப்பாகிப் போனார்கள். "சட்டத்தரணி தொழிலையே லிங்கன் மிகவும் மலினப்படுத்தி விட்டார்" என்று சொன்னார்கள். எதற்கும் அசைந்து கொடுக்கமாட்டார் லிங்கன். ஆனால் மனைவி மேரி டாட்டுக்கும் லிங்கனின் இந்தக் குணம் பிடிக்காது.

"ஏன் இவ்வளவு குறைவாகக் கூலி வாங்குகிறீர்கள்?" என்று அவர் கேட்கும் போதெல்லாம் லிங்கன் சொல்லும் பதில் ஒன்றே ஒன்றுதான்.

"மேரி! என்னோட கட்சிக்காரர்கள் எல்லோருமே என்னைமாதிரி ஏழைகள் தான். அவர்களிடம் போய் எப்படி அதிகமான கூலி கேட்க முடியும்? அதற்கு நிச்சயமாக என் மனம் இடம்கொடுக்காது"

லிங்கன் நடத்திய சில வழக்குகளின் விபரங்களைப் பார்த்தாலே போதும். அவர் எப்படிப்பட்ட வழக்கறிஞர் என்பது தெரிந்துவிடும். லிங்கனின் கட்சிக்காரர்களில் ஒருவர், கூலியாக இருபத்தைந்து டொலர்களை அனுப்பியிருந்தார். இந்த வழக்குக்கு இந்தத் தொகை அதிகம் என்றுபட்டது லிங்கனுக்கு. பதினைந்து டொலர்களை மட்டும் எடுத்துக்கொண்டு, பத்து டொலர்களை அந்தக் கட்சிக்காரருக்கே திருப்பி அனுப்பி விட்டார்.

ஒரு வயதான மூதாட்டியை ஓய்வூதியம் கொடுக்காமல் ஒரு தரகர் ஏமாற்றிவிட, அந்த வழக்கை எடுத்து நடத்தி, அந்த மூதாட்டிக்கு நீதி வாங்கிக் கொடுத்தார் லிங்கன். அந்த வழக்குக்காக கூலியாக அந்த மூதாட்டியிடம் ஒரு சதம் கூட அவர் வாங்கவில்லை. அதுமட்டுமல்ல, வழக்கு நடக்கும் காலங்களில் அந்த மூதாட்டி வந்து தங்கிய ஹோட்டல் செலவு, உணவுச் செலவு எல்லாவற்றையும் லிங்கனே பார்த்துக் கொண்டார். அவர் ஊருக்குத் திரும்பிப் போக, பயணச் சீட்டும் லிங்கன் தான் எடுத்துக் கொடுத்தார்.

இன்னொரு வழக்கில் மனநோய்க்கு ஆளான ஒரு பெண்ணை ஏமாற்றி, பத்தாயிரம் டொலர் மதிப்புள்ள சொத்தைச் சுருட்டப் பார்த்தான் ஒருவன். லிங்கன் அந்த வழக்கில் முன்னிலையானார். அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைக்கச் செய்தார். வழக்கு முடிந்ததும், அந்த வழக்குக்கு உதவிய லிங்கனுக்கு நண்பர் வார்ட் லேமன், அந்தப் பெண்ணிடம் கூலியாக இருநூற்றைம்பது டொலர்களை வாங்கிக் கொண்டு வந்தார். துடித்துப் போனார் லிங்கன். "இப்படிப்பட்ட ஒரு பெண்ணிடம் போய் இவ்வளவு பணத்தை வாங்கலாமா? ஏழைகளையும் பரிதாபத்துக்கு உரியவர்களையும் சுரண்டி வாழ்வதைவிட, பட்டினி கிடந்து சாகலாம். முதலில் இதில் பாதிப் பணத்தை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு வா. இல்லாவிட்டால் இதில் ஒரு சதம் கூட எனக்கு வேண்டாம்" என்றார் லிங்கன்.

முடிந்தவரை இரு கட்சிக்காரர்களையும் கூப்பிட்டு, நீதிமன்றத்துக்கு வெளியிலேயே சுமுகமாகப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் பார்ப்பார் லிங்கன். முடியாத பட்சத்தில் தான், வழக்கு நீதிமன்றத்துக்கு வரும்.

லிங்கன், உழைப்புக்கேற்ற ஊதியத்தைத்தான் வாங்குவார். கட்சிக்காரர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைக் கணக்கில் வைத்துக் கொண்டு, கூலித் தொகையை ஏற்றமாட்டார்.

ஒரு வழக்கில் வாதாடி, தம் கட்சிக்காரருக்கு வெற்றி தேடித் தந்தார். அந்த வழக்கில் அந்தக் கட்சிக்காரருக்குக் கிடைத்த வருமானம் 600 டொலர்கள். அந்த வழக்கில் லிங்கன் பெற்ற கூலித் தொகை, வெறும் மூன்றரை டொலர் மட்டுமே.

அவரே நடத்தும் வழக்காக இருந்தால்கூட, லிங்கன் எப்போதும் நீதிக்கும் நேர்மைக்கும்தான் முக்கியத்துவம் கொடுப்பார். ஒரு வழக்கு, வாதாடத் தொடங்கும்போதுதான் அது பொய்யாகப் புனையப்பட்ட வழக்கு என்பது லிங்கனுக்குத் தெரியவந்தது. உடனே நீதிமன்றத்தைவிட்டு வெளியேறி, தமது அலுவலகத்துக்கு வந்துவிட்டார். பேசாமல் ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்துவிட்டார். கொஞ்சநேரம் சென்றது. நீதிமன்ற ஊழியர் லிங்கனைத் தேடிக் கொண்டு வந்துவிட்டார். "நீதிபதி உங்களைக் கூட்டிட்டு வரச் சொன்னார்" என்றார் ஊழியர்.

"என்னால் வர முடியாது என்று சொல்லுங்கள். என்னுடைய கைகளில் கறை படிந்துவிட்டது. நான் அதைக் கழுவிச் சுத்தம் பண்ண வேண்டும்" என்று சொல்லிவிட்டார் லிங்கன். லிங்கன் போய் வாதாடாததால், அந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. அதைப் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படவில்லை லிங்கன்.

அன்றைய அமெரிக்கச் சூழலில், வழக்கறிஞர்கள் கறுப்பின மக்களின் வழக்குகளை எடுத்து நடத்தத் தயங்கினார்கள். அந்த வழக்குகளை எடுத்து நடத்தினால் தங்களது செல்வாக்கும் மரியாதையும் போய்விடும் என்று பயந்தார்கள். லிங்கன், எந்தப் பயமும் இல்லாமல் கறுப்பின மக்களின் வழக்குகளைக் கையில் எடுத்தார்.

லிங்கன் நியூ சேலத்தில் இருந்தபோது நண்பரானவர் ஜேக் ஆர்ம்ஸ்ட்ரோங். (அதே கிளோரி குரோவ் பாய்ஸைச் சேர்ந்த ஆர்ம்ஸ்ட்ரோங்தான்). குடும்ப நண்பர்களில் ஒருவராக ஆனவர். ஆர்ம்ஸ்ட்ரோங் இறந்த பிறகு, அவரது மனைவி ஹென்னா தன் மகன் வில்லியம் ஆர்ம்ஸ்ட்ரோங்குடன் வசித்துவந்தார். 1857ஆம் ஆண்டில் ஒரு நாள் செய்தித் தாளைப் புரட்டிக்கொண்டிருந்தார் லிங்கன். வில்லியம் ஆர்ம்ஸ்ட்ரோங் ஒரு கொலை வழக்கில் கைதாகி, எட்டாண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாகச் செய்தி வெளியாகியிருந்தது. அதைப் படித்துப் பதறிப் போனார் லிங்கன். அவருக்கு வில்லியம்ஸை நன்றாகத் தெரியும். வில்லியம்ஸ் நிச்சயம் கொலை செய்திருக்கமாட்டான் என நம்பினார். உடனே, ஹென்னாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். "கவலைப்படாதீர்கள் ஹென்னா! இந்த வழக்கை நான் எடுத்து நடத்துகிறேன்"

வழக்கு மேன் முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கில் முன்னிலையானார் லிங்கன். வில்லியம்ஸ் கொலை செய்ததை நிலா வெளிச்சத்தில் தான் பார்த்ததாகச் சாட்சியளித்திருந்தான் ஒருவன். லிங்கன் வேறு ஒன்றும் செய்யவில்லை. ஒரு கலண்டரை எடுத்து விரித்தார். கொலை நடந்ததாகச் சொல்லப்பட்ட தினத்தில், கலண்டரில் அமாவாசை தினம் என்று இருந்ததை ஆதாரத்துடன் விளக்கினார். அவ்வளவுதான். வழக்கு, பிசுபிசுத்துப் போனது. வில்லியம்ஸ் விடுதலை செய்யப்பட்டான். ஹென்னா, "இந்த உதவிக்கு நான் எவ்வளவு கட்டணம் கொடுக்க வேண்டும்?" என்று கேட்டார். லிங்கன் சொன்னார். "கட்டணத்துக்காக நான் வாதாடவில்லை. இது என் கடமை??". (மீட்பர் வருவார்)

■ கே.தவராஜ்

# கார்த்திகை தீபம் கேலிக் கூத்தல்ல

சிவனின் சோதி வடிவத்தை நினைந்து போற்றி தீபங்கள் ஏற்றி வழிபடும் நாளே கார்த்திகைத் தீபத் திருநாள்.

இந்த நன்னாளில் நாம் அலங்காரமாக -எங்கும் சுட்டி விளக்குகள் ஏற்றியும், தடிகளில் பந்தம் ஏற்றியும் மகிழ்கின்றோம். ஆனால் எத்தனை பேர் அன்று மனக்கண் முன் சிவனைச் சோதிவடிவாக எண்ணி வழிபடுகிறார்கள் என்பது கேள்விக்குறி. நாம் சோதிவடிவைக் குறிப்பிடும் திருமுறைப் பாடல்களை எமது வீடுகளில் ஓதி வழிபாடு செய்வது மிகச் சிறந்ததாகும். திருவண்ணாமலைத் தலத்திலேயே சோதி வடிவம் தேன்றியது என்பதால் "பூவார் மலர் கொண்டு... எனத் தொடங்கும் தேவாரப் பதிகம் முழுவதையும்ஓதலாம். "செங்கணானும்பிரமனும்தம்முளே...", பண்ணின் இசையாகி நின்றாய்.... சங்கரனே நின்பாதம் போற்றி... எனத் தொடங்கும் தேவாரங்களை ஓதியும், "சோதியே சுடரே...., "அலரவனும் மாலவனும் அறியாமே" எனும் திருவாசகங்களை ஓதியும், "அன்னமாய் விசும்பு பறந்து... எனத் தொடங்கும் திருவிசைப்பாவை ஓதியும், "புரந்தரன் மாலயன்... எனத் தொடங்கும் திருப்பல்லாண்டை ஓதியும், "ஆதியாய் நடுவுமாகி... எனத் தொடங்கும் பெரிய புராணத்தை ஓதியும் அருமைத் தமிழ் அர்ச்சனை செய்து வழிபட்டு இன்புறலாம்.

### கேலிக் கூத்தாக்குதல்

தற்காலத்தில் இந்தத் தினத்தில் சந்திக்குச் சந்தி பெரிய ரயர்களை எரிப்பதும், சைக்கிள் ரயர்களைக் கொழுத்தி கைகளில் ஏந்திச் சென்று கூத்தாடுவதும், சில ஆலயங்களின் வீதிகளிலேயே ரயர்கள் எரிப்பதுமாக தீபத் திருநாளைக் கொச்சைப்படுத்துகின்றனர். இதனால் பிற மதத்தவர்கள் எம்மைப் பார்த்து சிரிக்கின்றனர். இந்த ஆகாத செயலில் மாணவர்களும் ஈடுபடுகின்றனர். இதனால் வீண்பழி பாவங்களை இவர்கள் தேடிக்கொள்கின்றனர்.

### தடுக்கும் வழி

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உண்மை நிலையை எடுத்துக்கூறித் தடுக்க முடியும். பாடசாலைகளில் தீபத்திருநாளன்று காலை பிரார்த்தனை நேரத்தில் அதிபர் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி-ரயர் எரிப்பதிலிருந்து மாணவர்களைத் தடுத்துவிடலாம். ஆலய அறங்காவலர்கள் - ஆலய வீதியில் ரயர் எரிப்போரை அன்புடன் அணுகித் தடுக்க முடியும். ஆனால் பொறுப்பானவர்கள் தமது பொறுப்பிலிருந்து - தார்மிகக் கடமையிலிருந்து விலகிக் கொண்டு மௌனம் சாதிப்பதாலேயே இவ்வாறான பல கலாசார சீரழிவுகள் ஏற்படுகின்றன. "இப்போதைய பிள்ளைகளுடன் கதைக்க முடியாது" என்ற அர்த்தமற்ற சாக்குப் போக்கு கூறி பொறுப்புகளிலிருந்து விலகுவதைக் கைவிட்டு சமய விழுமியங்களைக் காப்பாற்ற வேண்டும்.

கடந்த வருடம் ரயர் கொழுத்தப்பட்டுக் கொண்டிருந்த பல இடங்களுக்குச் சென்று, கொழுத்திய இளைஞர்களை அணுகி-இது ஆகாத செயல் என்பதையும்-விளக்கேற்றி அந்த ஒளியிலேயே இறைவனை நினைத்து வழிபட வேண்டும் என அன்பாக-பண்பாக எடுத்துக்கூறி அவர்களைக் கொண்டே அணைத்தமையால், திடமாகத் தெரிவிக்கின்றேன். பெற்றோர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள், குருமார்கள் அனைவரும் அக்கறையுடன் செயற்பட்டால் சில ஆண்டுகளில் 'ரயர் எரிக்கும்' கலாசாரத்தை அறவே நீக்கிவிடலாம் என்பதில் ஐயுறவு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தம்பி எப்ப வருவான்?"

சரியாக மூன்று வருசத்துக்கு பின்னர் ஒரு ஆடி மாதம் , வரி உடுப்போடு சுகந்தன் வீட்டுக்கு வந்தான். ஆளே அடியோடு மாறிப் போயிருந்தான். பெயர்கூட இப்போது சுகந்தன் இல்லை. நிலவன் என்று எல்லோரும் அழைத்தார்கள். விளையாட்டுத்தனம் மறைந்து, முகத்தில் ஒரு விறைப்பு குடியேறியிருந்தது. அளந்துதான் கதைத்தான். எப்போதாவது இருந்துவிட்டு மெலிதாக சிரித்தான்.

சிறுகதை

"சனியன் பிடிச்ச மழை. ஒரு இடத்திலையும் பனங்காயை உருப்படியாய் இருக்கவிடுகுதில்லை. மழைத் தண்ணிக்கை ஊறாத பனங்காயை எடுக்கிறதுக்கிடையிலை சீவன் போகுது" தனக்குள்ளேயே புறுபுறுத்துக் கொண்டு பனம்பழத்தின் தோலை உரித்து பிசையத் தொடங்கியிருந்தாள் அம்மா.

ஊரில் எந்தப் பனையில் 'காறல்' இல்லாத பனம்பழம் கிடைக்கும் என்பது அம்மாவுக்கு அத்துப்படி. அதனால் அவள் சுட்ட பனங்காய்ப்பணியாரம் ஒரு போதும் சுவையில் குன்றியதில்லை. சில வேளைகளில் அம்மா நம்பிக்கை வைத்திருக்கும் பனை மரங்களின் பழங்களை விடிகாலையிலேயே ஊடுருவிய மாடுகள் 'சூப்பிவிட்டு' போயிருக்கும். ஆனாலும் அம்மா அசரமாட்டாள். காறல் உள்ளது என்று அவள் கழித்து வைத்திருந்த பனம் பழங்களை எடுத்து பிசைவாள்.

நான்கு வீட்டுக்கு வாசனை எழும்படி பனங்களியை காய்ச்சும்போது, அளவாக நாலைந்து கொய்யா இலைகளைப் போடுவாள். வெந்து, சுருளும் கொய்யா இலைகள் பனங்காறலை உறுஞ்சிக்கொள்ளும். பிறகென்ன? அவளுடைய சொற்படி எல்லோருக்கும் பிடித்த சுவையில், பனங்காய்ப்பணியாரம் பெட்டிகளை நிறைக்கும்.

அம்மாவின் பனங்காய்ப்பணியாரம் எல்லோருக்குமே பிடித்தமான ஒன்றுதான் என்றாலும், சுகந்தன் அதற்கு அடிமை என்று சொல்லலாம். அம்மா பனங்காய்ப்பணியாரத்தை சுட்டு, பெட்டிக்குள் போடுவதற்கிடையில், சூட்டைக் கூட பொருட்படுத்தாமல் அப்படியே வாய்க்குள் தள்ளிவிடுவான். போதாக்குறைக்கு எங்களுடைய காற்சட்டை பொக்கற்றைவிட அவனுடையது பெரிது.

"அண்ணை! பொக்கற்றை நல்ல பெரிசா தையுங்கோ" என்று ரெயிலரிடம் 'ஸ்பெசலாக' சொல்லி தைப்பிப்பான். அவன் ஏன் அப்படி தைக்கிறான் என்பது பனங்காய்ப்பணியாரம் சுடும் காலங்களில் தான் எங்களுக்குத் தெரியும். இரண்டு பொக்கற்றுக்களும் கர்ப்பிணிகள் போல திமிறென உப்பிக் கொள்ளும் அளவுக்கு பனங்காய்ப்பணியாரத்தை அடைந்து கொண்டு, கிறவுண்டுக்கு ஓடிவிடுவான்.

சுகந்தன் அப்படியொன்றும் பெரிய 'பிளேயர்' இல்லை. கிறவுண்டின் மூலையில் இருக்கும் நாவல் மரக்கொப்பில் ஏறிவிடுவான். பிறகு ஒவ்வொரு ஓவருக்கும் ஒரு பனங்காய்ப்பணியாரத்தை வாய்க்குள் திணித்து விட்டு, விளையாடுபவர்களைப் பற்றி ஏதாவது ஒரு நக்கல் அடித்துவிட்டு தான் மட்டுமே சிரிப்பான். கிறவுண்டுக்குள் நிற்பவர்கள் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, "மட்ச் முடியட்டும். எப்பிடி நீ வீட்டை போறாய் எண்டு பாக்கிறன்" என்று சபதம் செய்வார்கள். ஆனாலும் சபதத்தில் அவர்கள் ஒவ்வொரு முறையும் தோற்க வேண்டியிருந்தது. மட்ச் முடிவதற்கு இடையில் சுகந்தன் கொப்பில் இருந்து குதித்தோடிப் போயிருப்பான்.

இந்தச் சபதத்தில் வென்றவன் தமிழினியன் மட்டும் தான். சுகந்தனின் நக்கல் தாங்கமுடியாமல், வேண்டுமென்றே 'அவுட் பண்ணிவிட்டு' சுகந்தனை கலைத்துக் கொண்டு போனான். ஆனால் என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை. சுகந்தனுக்கு அடிவிழவில்லை. கோபத்தோடு ஓடிப் போன தமிழினியனின் பொக்கற்றுக்கள் வீங்கியிருந்தன. அன்றைக்கு சுகந்தன் கொண்டுவந்திருந்த பனங்காய்ப் பணியாரம் தான் தமிழினியனிடம் அடி வாங்காமல் செய்திருந்தது.

சுகந்தனின் பனங்காய்ப்பணியாரம் பதுக்கும் படலம் இத்தோடு முடிந்துவிடவில்லை. அம்மா யாருக்கேனும் கொடுப்பதற்காக குசினிக்குள் வைத்திருக்கும் பணியாரங்களும் 'இனந்தெரியாதோரால்' காணாமல் போயிருக்கும்.

அடுத்த நாள் பள்ளிக்கூடத்தில் சுகந்தனின் புத்தகப்பை முழுதும் எண்ணெய்ப் பிசுக்காக இருக்கும். முகர்ந்து பார்த்தால் பணியார வாசனை பட்டென்று முகத்தில் அடிக்கும். அம்மாவுக்கு அவன் மீது ஒரு போதும் கோபம் வருவதில்லை. கடைக்குட்டியாய் எங்கள் வீட்டில் பிறந்த யோகத்தை அவன் அனுபவித்தான். எங்களுக்கு அவன் அடித்தால் கூட, அம்மாவின் ஆத்திரம் அவன் மீது பாயாது.

"சின்னவனோட உங்களுக்கென்னடா சொறிச்சேட்டை? அவனும் நீங்களும் ஒரு பாரியோ? அவன் அடிச்சு நோகப் போகுதோ?" என்று எங்கள் மீதுதான் அவள் பொரிந்து தள்ளுவாள்.

ஒரு முறை பள்ளிக்கூடத்தில் வீட்டுவேலை செய்யாமல் போனதற்காக, சயன்ஸ் ரீச்சர் சுகந்தனுக்கு 'முறையான பூசை' கொடுத்து விட்டார். வீட்டுக்கு வந்த சுகந்



■ அருவன்

# கல்லுக்குள் ஈரம்...

'தியாகம்', 'அர்ப்பணிப்பு', 'தற்கொலை', 'ஈகம்' என்றெல்லாம் அடிக்கடி சொல்லிக் கொள்ளும் வார்த்தைகளுக்கப்பால் அவர்களுக்குள் இருந்த ஈரத்தைச் சொல்வதற்கு வெறும் வார்த்தைகள் போதாது என்பது எனக்கு நன்றாகவே தெரியும். என்றாலும் முயற்சித்துக் கொள்கின்றேன்.

1995 ஆம் ஆண்டின் நடுப்பகுதி மனதுக்கு இதமளிக்கும் மாலைநேரக் கடற்கரைக் காற்றை உணரவோ... ரசிக்கவோ அவளால் முடியவில்லை.

'அவனது பயணம் வெற்றியைத் தரவேண்டும்'

அவள் உள்மனம் மானசீகமாக வேண்டிக் கொண்டிருந்தாலும் இனம்புரியாத எதுவோ ஒன்று அவளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

அவளையே அறியாமல் அவளுக்குள் புகுந்திருந்த அந்த உணர்வு ..... நிச்சயம் 'அது' அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பதை அவள் புரிந்து வைத்திருந்தாள். ஆனால் அவனது கேள்விக்குப் பதில் சொல்ல மட்டும் அவளால் முடியாது.

'ஓம்' என்று ஒரு வார்த்தை சொல்லப்போய் அது அவனது இலட்சியத்துக்கு பங்கம் ஏற்பட்டுவிட்டால்....

முடியாது ஒருபோதுமே எனக்கு பதில் சொல்ல முடியாது ..... அவள் தீர்க்கமாக முடிவெடுத்து விட்டாள்.

அவள் அமைதியாக தனது தங்கத்துக்குள் நுழைந்து கொண்டாள். கூடியிருக்கும் தோழிகளின் முகத்தில் தெரிந்த இரக்கப் பார்வைகளுக்குள் இருந்து தனித்து ஒதுங்கிக் கொண்டாள்.

சற்று நேரத்துக்குள் சீறிவந்த 'ரு கன்றட்' மோட்டார் சைக்கிளின் உறுமல் அடங்கியது. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அது அவன்தான்; சந்தேகமே இல்லை; இறுதிவிடை பகருவதற்காக வருகின்றான். தோழிகள் எல்லோரும் விழுந்தடித்து அவனை வரவேற்பதற்காகச் செல்கிறார்கள்.


கூடத்தில் எரிந்த மின்விளக்கு ஒளியில் அவனது முகம் ஒளிர்வதை திரைச்சீலை இடுக்கின் வழியே பார்க்க முடிந்தது. அவனது பார்வை சுற்றுமுற்றும் அலை பாய்ந்தது. அவன் என்னைத்தானே தேடுகின்றான் என்பதை என்னால் புரிய முடிந்தது.

அவன் பொறுமையை இழந்துவிட்டான். எனது பொறுப்பாளரிடம்;

'ஒரேயொரு தடவை அவளின்' முகத்தையாவது பார்த்திட்டு போறன். வரச்சொல்லுங்கோ .....

அவன் கெஞ்சுவது தெளிவாகவே கேட்டது.

'அக்கா ... இன்னும் ஒரு கொஞ்ச



■ வர்த்தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன், சொட்டைக் சுழற்றிவிட்டு, சாப்பாட்டுக் கோப்பையுடன் இருக்கும் போதுதான் அம்மா அவன் முதுகில் இருந்த தழும்புகளை கவனித்தாள்.

அடுத்த நாள் பள்ளிக்கூடம் அதகளப்பட்டது. உருவந்தவள் போல சுத்திய அம்மாவால், பிறின்சிப்பலுக்கு 'ஹார்ட் அற்றாக்' வராத குறை.

"உங்களுக்கு படிப்பிக்கத் தெரியாட்டி என்ரை பிள்ளையை ஏன் அடிக்கிறியள்? ரீச்சமார் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்காமல் எங்கையாவது பல்லிளைக் காட்டிப்போட்டு, பிறகு பிள்ளைகளுக்கு வீட்டு வேலை குடுத்துவிடுறது சரியோ? நான் இயக்கத்திட்டை போய் 'கொம்பிளைன்ட்' குடுத்தனெண்டா அவ்வளவுதான்" அம்மாவின் வெருட்டுக்கு உடனேயே பலன் கிடைத்தது. அதற்குப் பிறகு பள்ளிக்கூடத்திலும் 'அடி வாங்கா மேதையாக' உலா வந்தான் சுகந்தன்.

இரவில் அம்மாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு படுக்காவிட்டால் சுகந்தனுக்கு நித்திரையே வராது. அம்மாவுக்கும் அப்படித்தான். ஒருமுறை அம்மாவுக்கு நெருப்புக் காய்ச்சல். மூன்று நாள் ஆஸ்பத்திரியில். அந்த மூன்று நாளும் சுகந்தன் நித்திரையே கொள்ளவில்லை. அங்கேயும் இங்கேயும் உருண்டபடி 'புசத்திக் கொண்டு' இருந்தானே தவிர கண்ணை மூடவில்லை.

இப்படி அம்மாவின் சீலைத் தலைப்பைப் பிடித்தபடி திரிந்த சுகந்தன் அப்படிச் செய்வான் என்று யாருமே நினைக்கவில்லை. ஓ.எல். எக்ஸ்ஸாம் நெருங்கிக்கொண்டிருந்தது. சுகந்தன் பாஸ் பண்ணினால் கிடாய் வெட்டுவதாக பக்கத்து வைரவருக்கு அம்மா நேர்த்தி வைத்திருந்தாள். வைரவருக்கு கிடாய் இறைச்சி தின்ன விருப்பம் இல்லை போலும்.

ஒருநாள் ரியூசனுக்குப் போன சுகந்தன் வரவேயில்லை. அம்மா அவன் வரவேண்டும் என்று ஊரில் உள்ள எல்லா வைரவர்களுக்கும் பொங்குவதாக இன்னொரு நேர்த்திக்கடன் வைத்தும் அவன் வரவில்லை.

கடைசியில் நாலைந்து நாள்களுக்குப் பின்னர் அவன் இயக்கத்துக்குப் போன தகவல் கிட்டியது. அம்மா ஒவ்வொரு பயிற்சி முகாமாக ஏறி, இறங்கி ஒரு மாதிரி சுகந்தனைக் கண்டுபிடித்தாள்.

அம்மாவைக் கண்டவுடன் அவனுக்கும் அழுகை வந்திருக்க வேண்டும். உள்ளே ஓடிச்சென்றவன் "நான் வரமாட்டன் எண்டு சொல்லிவிடுங்கோ" என்று யாரிடமோ சொல்லிவிட்டு, வெளியே வராமல் இருந்துவிட்டான். அம்மா நீண்ட நேரம் அழுது புலம்பி விட்டு வந்துவிட்டாள். ஒவ்வொரு இரவும்

"என்ரை பிள்ளை என்னை விட்டிட்டு எப்பிடி நித்திரை கொள்ளப்போறான்?" என்று ஒரு பாட்டம் புலம்பித் தீர்த்து விட்டுத்தான் அம்மா படுப்பாள்.

சரியாக மூன்று வருசத்துக்கு பின்னர் ஒரு ஆடி மாதம், வரி உடுப்போடு சுகந்தன் வீட்டுக்கு வந்தான். ஆளே அடியோடு மாறிப் போயிருந்தான். பெயர்கூட இப்போது சுகந்தன் இல்லை. நிலவன் என்று எல்லோரும் அழைத்தார்கள். விளையாட்டுத்தனம் மறைந்து, முகத்தில் ஒரு விறைப்பு குடியேறியிருந்தது. அளந்துதான் கதைத்தான். எப்போதாவது இருந்துவிட்டு மெலிதாக சிரித்தான்.

"எங்கட சுகந்தனா இவன்?" என்று நானே அதிசயித்துப்போனேன். தங்கச்சியோடும், என்னோடும், பெரியண்ணனோடும் எட்ட நின்று யாரோ அந்நியர் போல சுகதுக்கம் விசாரித்தான்.

இரவானது. நாங்கள் எல்லோரும் உள்ளே படுக்க

"நான் வெளித்திண்ணையில படுக்கிறன். அங்கதான் காத்து வரும்" என்று கூறிக்கொண்டு தலையணையோடு வெளியே போனான். அம்மா அவனை வாஞ்சையோடு பார்த்துவிட்டு படுத்துக்கொண்டாள். விடிந்ததும் தங்கச்சி தேத்தண்ணியோடு வெளியே வந்தபோது, சுகந்தனைக் காணவில்லை. உள்ளே எட்டிப் பார்த்தாள். அம்மாவைக் கட்டியணைத்தபடி சுகந்தன் குழந்தை போல உறங்கிக்கொண்டிருந்தான். அவனை எழுப்ப எங்களுக்கு விருப்பமில்லை. 'எத்தனை நாள் இந்தத் தூக்கத்துக்காக அவன் ஏங்கியிருப்பான்?'.

அடுத்து வந்த மூன்று நாள்களும் நிலவன் பழைய சுகந்தனாக மாறியிருந்தான். எங்களோடும் 'சொறிந்தான்'. கிறவுண்டுக்குப் போய் நக்கலடிப்பதில் இறங்கினான். சயன்ஸ் ரீச்சர் வீட்டுக்குப்போய் "சொறி ரீச்சர்" என்று அம்மா எப்போதோ கத்திய கத்தலுக்கு மன்னிப்புக் கேட்டான். நாலாம் நாள் மீண்டும் அவன் போக வேண்டும். யாருக்கும் அவனைப் பிரிய மனமில்லை. ஆனாலும் வேறு வழியில்லை. போகும் போது, "அம்மா! நீ ஒண்டை மறந்து போனாய். என்னை ஏமாத்திப் போட்டாய்" என்று சொல்லியவாறு கண்களைச் சிமிட்டினான்.

"என்னப்பு மறந்தனான்?" பதைபதைப்புடன் கேட்டாள் அம்மா.

"நீ எனக்கு இந்த முறை பனங்காய்ப் பணியாரம் செய்துதரேலை தானே" செல்லமாகக் கோபித்தான்.

"இப்ப பனங்காய்ச் சீசன் இல்லையப்பு. நீ ஐப்பசிக்கு பிறகு வா. நான் செய்து வைக்கிறன்."

"எனக்கு கார்த்திகையிலை தான் வீட்டை வர அனுமதி கிடைக்கும். இன்னும் அஞ்சு மாசம் தானே. பக்கெண்டு போடும். நீ நிறையச் செய்து வை. நான் வந்து பெட்டி பெட்டியாய் பனங்காய்ப்பணியாரம் சாப்பிட வேணும்." சொல்லிவிட்டு வாகனத்தில் ஏறிப் போய்விட்டான்.

கார்த்திகை வந்தது. அம்மா காறல் இல்லாத பனம்பழங்களாகப் பார்த்துப் பார்த்துப் பொறுக்கி, பனங்காய்ப்பணியாரம் சுடத்தொடங்கியிருந்தாள்.

திடீரென வாசலில் வாகன உறுமல். அம்மாவுக்கு புளுகம் பிடிபடவில்லை. "தம்பி வந்திட்டான் போல கிடக்கு. ஒருக்காப் போய் பார்." என்று சொல்லிவிட்டு பணியாரம் சுடும் பணியை துரிதப்படுத்தினாள்.

ஓடிப்போன என் கால்கள் திடீரென விறைத்துக்கொண்டன. நாலைந்து பொடியள் கொடி போர்த்தப்பட்ட ஒரு சவப்பெட்டியைக் காவியபடி வந்துகொண்டிருந்தார்கள். எனக்கு எல்லாமே நன்றாக புரிந்துவிட்டது.

வீட்டின்மையத்தில் சவப்பெட்டி வைக்கப்பட்டது. வந்தவர்களில் ஒருவன் என்தோளை ஆதரவாகப் பற்றினான். "ஆனையிறவை பிடிச்சிட்டம். ஆனால் அதிலை நிலவனை இழந்திட்டம். அண்ணை! பெட்டியை திறக்காதேங்கோ. அந்தளவுக்கு உடம்பு சிதறிப் போச்சு" அவன் சொல்லச் சொல்ல தரை பிளந்து விழுங்குவதைப் போன்ற உணர்வு. அம்மா எதையுமே உள்வாங்கிக் கொள்பவளாக இல்லை. அவள் சவப்பெட்டி வந்ததையோ, சனங்கள் சுகந்தனின் பெயரைச் சொல்லி கதறியதையோ காதில் வாங்கிக்கொண்டவளாகத் தெரியவில்லை. தொடர்ந்தும் பனங்களியை எண்ணெய்ச் சட்டிக்குள் போட்டபடி இருந்தாள் எல்லாம் பொரித்து முடிந்ததும் பெட்டி நிறைய பணியாரங்களோடும் குசினிக்குள் வைத்துவிட்டு வாசலுக்கு வந்தாள்.

"தம்பி இன்னும் வரேலை போலை?" என்று எங்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள். சுகந்தனின் உடல் கல்லறைக்குள் புதைக்கப்பட்ட பின்னும் அம்மா வாசலில் நின்று சுகந்தனைத் தேடுவதும், பனங்காய்ப்பணியாரம் சுடுவதும் நிற்கவில்லை.

அம்மாவுக்கு எல்லா நினைவுகளுமே ஒரே புள்ளியில் சுற்றின. அவளது உலகம் புதிதாக இன்னொரு அச்சில் சுழலத் தொடங்கியது. என்னதான் நினைவில்லாவிட்டாலும் கார்த்திகை மாதம் மட்டும் அவளுக்கு எப்படியோ தெரிந்துவிடுகிறது. கார்த்திகை பிறந்து விட்டால் போதும். பனை பனையாகத் தடவி பனம்பழங்களைப் பொறுக்கி வந்துவிடுவாள்.

"பிள்ளை ஆசைப்பட்டுக் கேட்டவன். அவன் ஆசைப்பட்டதை எப்பிடி செய்துகுடுக்காமல் விடுகிறது?" சொல்லியபடியே பழையபடியும் திட்டிக்கொண்டு இந்த முறையும் பனங்காய்ப்பணியாரத்தை சுட்டுக்கொண்டிருக்கிறாள். சுட்டு முடிந்ததும் என்னிடம் வந்தாள்.

"தம்பி வந்திட்டான் போல கிடக்கு. ஒருக்கா வாசலில் போய்ப் பார்." சொல்லிவிட்டு பெட்டியோடு பனங்காய்ப்பணியாரத்தின் முன்னால் போய் அமர்ந்துவிட்டாள். அடுத்த வருடமும் அம்மா கார்த்திகையில் பனங்காய்ப்பணியாரம் சுடுவாள். ★

நேரத்துக்குப் பிறகு இந்த உலகத்திலேயே நானிருக்க மாட்டன்.....

என்னுடைய இலட்சியத்தில் இருந்து ஒருதுளிகூட நான் தளரமாட்டன். ஏனோ தெரியல்ல அவளை மனசுக்கை வைச்சிட்டன். 'என்னைக் காதலிக்கிறன் எண்டு ஒரு வார்த்தை சொன்னாக் காணும். அந்த சந்தோசத்திலேயே நான் என்ரை இலக்கை வெற்றிகரமாக அழிச்சிடுவன்.....

ஒரேயொருக்கா வரச் சொல்லுங்கோ .....

அவள் இதயம் நொருங்கியது. கல்லுக்குள் இருந்து ஈரம் கசிந்தது. 'ஓம்' என்று சொல்ல வேண்டும் என்று அவள் உள்மனம் சொன்னது.

அதற்குள் பொறுப்பாளர் உள்ளே வந்தார்.

'என்னம்மா சொல்லப் போற .....'

அவளது கைகளை பற்றிக் கொண்டார்.

பீறிட்டு வந்த கண்ணீருக்குள்ளும் அவள் 'வைராக்கியம்', 'ஓர்மம்' மேலோங்கி நின்றது.– 'வேண்டாமக்கா ..... நான் 'ஓம்' என்று சொல்லப்போய்; அந்த சந்தோசத்திலேயே இலக்கை நோக்கிப் பயணிக்கும்போது சின்னதா ஒரு தடுமாற்றம் வந்து, அது அவரது இலட்சியத்தை நிறைவேற்ற முடியாது போயிற்றா.....

அவற்ற இலட்சியத்துக்குத் தடையா நான் ஒருபோதும் இருக்க மாட்டன் ..... என்ன புரிஞ்சு கொள்ளுங்கோ .....

நானோ ... அவரோ சேர்ந்து வாழவேணும் எண்டு ஒருபோதும் கனவு காணேல்ல .....

இலட்சியத்தில இருந்து ஒரு இம்மியும் வழுவப் போறதுமில்லை...

ஆனாலும் அந்த மெள்மையான உணர்வு இப்ப என்ர மனசிலும் மெல்ல அரும்பி இருக்கு ..... ஆனா ..... நான் சொல்ல மாட்டன். கடைசிவரை சொல்ல மாட்டனக்கா....

அவரிட்ட சொல்லுங்கோ...... எனக்குள்ள அப்பிடியொரு உணர்வுமில்ல.... அவர நான் பார்க்கவும் விரும்ப இல்லை எண்டு.....

அவளது உணர்வுகளின் ஆழத்தைப் புரிந்துகொண்டதால் மெல்ல அவள் முதுகை வருடிவிட்டுச் சென்றார் பொறுப்பாளர்.

நிலைப்பாட்டை அவனிடம் சொன்னார்... அவனது முகத்தில் ஏமாற்றம்.

'பரவாயில்லையக்கா.... நான் போறன்...' அவன் விடைபெற்றான். சக தோழிகளது விழிகளும் நனைந்துகொண்டன.

நேரங்கள் நகர்ந்தன... நடுநிசிப் பொழுது. வெற்றிச் செய்தியை காவி வந்தது...

பின்னாளில் அவனது இலட்சியங்களைச் சுமந்தபடி அவளும் வெடியொன்றைப் பார்த்துவிட்டு விழிமூடிப் போனாள்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மொழிதான் இனத்தின் அடையாளம்

■ ரம்யன்

"கலாசாரத்தின் ஒரு பகுதிதான் மொழி. அது அழிந்துபோகும் போது அதனைப் பேசியவர்கள் தமது பாரம்பரியம் மற்றும் வரலாற்றை மட்டும் இழப்பவர்களாகமாட்டார்கள்; அவர்கள் தம் அடையாளத்தையும் சேர்த்தே இழந்து விடுவார்கள்"



இலங்கையில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன? இந்த நாட்டுக்கே உரிய மொழிகள் இரண்டு. பெரும்பான்மையினரான சிங்களவர்களால் சிங்கள மொழியும் சிறுபான்மையினரான தமிழ்-முஸ்லிம் மக்களால் தமிழும் பேசப்படுகின்றன.

**அசை போட ஒரு 54 விடயம்**

இந்த நாட்டிலுள்ள ஒரு கலப்பு இனவமைப்பாளர்களால் அநேகமாக ஆங்கிலம் வீட்டு மொழியாக பயன்படுத்தப்படுகின்றது. அவர்கள் பெரும்பாலும் சிங்கள மக்கள் மத்தியிலேயே வாழ்ந்து வருவதால் ஆங்கிலத்தையும் விட சிங்களத்தையே அதிகமாகப் பேசவும் பழகவும் விழைகிறார்கள். இலங்கையின் பூர்வீகக் குடிகளாகக் கருதப்படும் 'வெத்தாஸ்' என்றழைக்கப்படும் வேடுவ மக்கள் சிங்களம், தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளின் ஒரு கலப்பு மொழியைப் பேசுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த வேடுவ இனத்தவர்கள் மத்தியில் இப்போது நாகரிக பழக்கவழக்கங்கள் அதிகரித்து வருவதால் அவர்களின் மொழியும் அதற்கேற்ப வளர்ச்சியும் நவீனத்துவமடைந்து வருகிறதா என்று தெரியவில்லை. பொதுவில் இலங்கையில் அரசியலாளருக்கு சிங்கள மொழியின் வளர்ச்சியைத் தவிர ஏனைய மொழிகளின் வளர்ச்சியில் அக்கறை இருப்பதில்லை. இந்த நாட்டில் இனப்பிரச்சினை மிகமோசமாக வலுவடைந்தமைக்கு மொழிப் பிரச்சினையே அடித்தளமாக இருந்துள்ளது என்பதை யாரால் மறுக்க முடியும்?

நாட்டில் பயன்பாட்டில் உள்ள மொழிகள் அனைத்தும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப வளர்க்கப்பட வேண்டும். அதற்கான பொறி அமைப்புக்களை உருவாக்கி செயல்படுத்துவது அரசின் கடமை, கலை கலாசார அபிவிருத்தியுடன் மொழிகளின் அபிவிருத்திக்கும் அரசு கணிசமான அளவு செலவிடுவது அவசியம். அதுமட்டுமல்ல அழிந்துபோகக் கூடிய நிலையிலுள்ள வேடுவ மக்களின் வழக்கில் உள்ள மொழியை வளர்க்கவும் அதற்கான புதிய வடிவங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் நிபுணர் குழுக்களை நியமித்து உதவ வேண்டியது அரசின் கடமையல்லவா?

இந்தியாவில் ஏறத்தாழ 20 மொழிகள் தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இவைதவிர வட்டார ரீதியாகவும், மலைப்பிரதேசங்களிலும், பழங்குடியினர் மத்தியிலும் எண்ணிறந்த மொழிகள் பேச்சுவழக்கில் இருக்கின்றன. தமிழ்நாட்டிலும் கூட அங்கீகரிக்கப்படாத பூர்வீகமொழிகள் பழங்குடிமக்கள் மத்தியில் புழக்கத்தில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்த மொழிகள் பற்றிஆராயவும் அவைகளின் அபிவிருத்திக்கு உதவவும் பல்கலைக்கழகங்களில் அவைக்கென துறைகள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுவதாக தெரிகின்றது.

நேபாளத்தில் புழக்கத்திலுள்ள 61 மொழிகள் அழிந்துபோகக் கூடிய ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக ஐ.நா.வின் விஞ்ஞான, கல்வி மற்றும் கலாசார ஸ்தாபனம் பட்டியலிட்டிருக்கின்றது. இவைகளில் ஆறு மொழிகள் மிக மோசமான அழிவு நிலையில் இருப்பதாக அந்த ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இவைகளில் குசுண்டா என்ற மொழியும் அடங்கும். மொழியானது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். அது அழிந்துபோகுமானால், அதனைப்பயன்படுத்தி வரும் உள்ளூர் மக்கள் தமது பாரம்பரியத்தையும் வரலாற்றையும் மட்டும் இழப்பவர்களாக மாட்டார்கள், தமது அடையாளத்தையும் அவர்கள் இழந்து விடுவார்கள் என்கின்றார் நேபாள திருபுவன் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறை பேராசிரியர் மாதவ் பிரசாத்போக்காரல்.

நேபாளத்தின் மேற்கு எல்லையில் வாழ்ந்தவர்களான குசுண்டா இனமக்களில் இப்போது ஏறத்தாழ 100பேர் வரையிலேயே உயிர் வாழ்கிறார்கள் இன்னும் சில காலத்தில் அந்த இனமே மறைந்து விடும் என்று அஞ்சப்படுகின்றது. இந்த மக்கள் இனத்தைச் சேர்ந்த கியானி மையியா சென் என்ற பெண்மணி தற்போது 76 வயதை எட்டியுள்ளார். தான் பேசுகின்ற கடைசி வார்த்தைகள்தான் உயிருள்ள ஒருவரால் அந்த மொழி பேசப்படுவதாக இருக்கப்போகிறது என்று கவலைப்படுகிறார். குசுண்டா மொழியின் மூலம் எதுவென்று எவருக்கும் தெரியாது; அந்தமொழியின் வசன அமைப்பும் தனித்துவமானதாக இருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

எனதுமொழியில் வேறுயாருடனும் பேசக் கூடியதாக எவரும் எங்கள் பகுதியில் இல்லை. எனது தாயாருடன் எங்கள் மொழியில் நான் பேசியதுண்டு 1985 இல் அவர் இறந்த பிறகு எனது மொழியில் உரையாடுவதற்கு எவருமே இல்லை. நான் தனிமையாகி விட்டேன் என்கிறார் அவர். என்றாலும் அவர் மறைந்த பிறகும் அவருடைய மொழி உயிர்வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் அவருக்கு உறுதி கூறியுள்ளார்கள்.

குசுண்டா மொழி தொடர்பாக மொழியியலாளர் பேராசிரியர் மாதவ் பிரசாத் கூறும்போது, இந்த மொழி தனித்துவமானது. இது உலகில் வேறு எந்த மொழியுடனும் தொடர்புடையதல்ல அதேபோல் வேறு எந்த மொழியும் அதில் கலந்து விடவில்லை என்றார். ஆஸ்திரேலியா ஆராய்ச்சி சபையொன்றின் நிதி வழங்கலின் மூலம் இந்தப்பேராசிரியர் குசுண்டா மொழி பற்றி ஆராய்ந்திருப்பதுடன் அந்தமொழியின் முழுவடிவத்தையும் எழுத்தில் வடித்துள்ளார். இதன் மூலம் குசுண்டா மொழி அகராதியொன்றையும் இலக்கண அமைப்பு தொடர்பான நூல் ஒன்றையும் உருவாக்கவிருப்பதாகக் கூறுகிறார். இந்த மொழியில் மூன்று உயிர் எழுத்துக்களும் 15 மெய்யெழுத்துக்களும் இருப்பதாகக் கூறுகிறார். இவை அம்மக்களின் வரலாற்றையும் கலாசாரத்தையும் விளக்குகின்றன என்கிறார். இந்தமக்கள் பாரம்பரியமாக வேட்டையாடி வாழ்ந்திருக்கிறார்கள். இந்த இனப்பெண்கள் வேறு இனத்தவர்களை மணம்முடித்ததனாலும், அநேகர் நேபாளமொழியை பேசத் தொடங்கியதாலும் பல ஆண்டுகளுக்கு முன்பே குசுண்டா மொழி வேகமாக அழியத்தொடங்கியது. நவீனத்துவம் மற்றும் வேற்றுமொழி மோகம் இந்தமொழியின் அழிவுக்கு காரணமாயிற்று என்பது அவர் கருத்து.

# வாய்ப் புண்ணுக்கு வரமாகும் பனிச்சை

**பனிச்சை**

வேறுபெயர்-தும்பி, தும்பிலிக்காய்

தாவரவியற் பெயர்- *Diospyros malabarica* (டையோஸ்பைரஸ் மலபாரிக்கா)

குடும்பம்-*Ebenaceae* (எபினேசியே)

சிங்களப் பெயர்-திம்பிரி

சமஸ்கிருதப் பெயர்-திந்துக

ஆங்கிலப் பெயர்-*Wild Mangosteen*



இது உலர்வலயத்துக்குரிய ஒரு மரமாகும். நன்கு உயர்ந்து வளரும். அடியில் உதைப்பு வேர்கள் காணப்படும். தனி இலைகள் தடித்தவை, பெரியவை. ஒடுங்கிய நீள்வட்ட வடிவானவை. இலை விளிம்பு அழுத்தமற்றது. பூக்கள் வெண்மை நிறம். காய்கள் மங்குஸ்தான் காய்களைப் போன்றவை. விட்டு விதைகள் மாப்போன்ற சதையால் சூழப்பட்டிருக்கும். பிசுபிசுப்பும் சாற்றுத்தன்மையுமாக இருக்கும்.

**ஆசனக்கடுப்புக்கு**

இதன் பழத்தைச் சாப்பிடலாம். ஆசனக்கடுப்பு, மூலத்தால் இரத்தம் போதல் என்பனவும் நீங்கும்.

**சீதக்கழிச்சலுக்கு**

பனிச்சம்பழத்தை உடைத்து நீரில் ஊறவைத்து அந்த நீரைப் பருகிவர சீதக்கழிச்சல், செரியாக்கழிச்சல், மூலக்கடுப்பு என்பன நீங்கும்.

**வாய்ப்புண்ணுக்கு**

பனிச்சம்பழக்கோதைக் குடிநீர் செய்து வாய்கொப்பளித்துவர வாய்ப்புண் பல்லீறுகளிலிருந்து இரத்தம் வடிதல் என்பன குணமாகும்.

**வீக்கத்துக்கு**

பனிச்சை இலையை வெதுப்பிக் கட்டலாம்.

**குருதிக் கழிச்சலுக்கு**

பனிச்சங்காயை நசுக்கிப் பிழிந்த சாறு 1-2 மேசைக் கரண்டியளவில் பருகிவர குருதிக்கழிச்சல் நீங்கும்.

**கொட்டிக்கிழங்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பெயர்-கெகட்டிய

சமஸ்கிருதப் பெயர்- மக்கவுணா

கொட்டியில் கருங்கொட்டி, காறற்கொட்டி, கொட்டி என்ற பேதங்களுண்டு. இதில் கருங் கொட்டியைப் பேய்க் கொட்டி என்றும் அழைப்பர். கொட்டியானது நன்னீரில் வளரும் ஒரு பூண்டாகும். குளங்கள், குட்டைகள், நெல்வயல்களில் சாதுவாகக் காணப்படும். இதன் தண்டு தண்டுக் கிழங்காகத் திரிபடைந்துள்ளது. தனி இலைகள் நீள்வட்ட வடிவானவை. நீண்ட காம்பினால் நீர் மேற்பரப்பில் மிதக்கும். பூக்கள் நீலம் அல்லது வெள்ளை நிறம்.


இதன் தண்டை உணவாக உட்கொள்ளலாம். அதனால் உட்சூடு, உட்கடுப்பு என்பன நீங்கும். (கருங் கொட்டிக் கிழங்கு உணவிற்குப் பாவிக்கக் கூடாது.)

**அழல் நோய்க்கு**

கொட்டிக் கிழங்கை உலர்த்திப் பொடி செய்து காலை, மாலை சாப்பிட்டுவர அழல்நோய், வெள்ளை சாய்தல், தேமல் என்பன மாறும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D.(S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# நல்ல தீர்ப்பு

(சென்றவாரத் தொடர்ச்சி)

"உன்னிடம் எப்படித் தர முடியும்? நீங்கள் நால்வரும் வந்து கேட்டால் தானே கொடுக்கச் சொன்னீர்கள். இப்போது நீ மட்டும் தனியாக வந்து கேட்கிறாயே!" என்றாள் பாட்டி.

"என் பேச்சில் நம்பிக்கையில்லையா பாட்டி, அதோ அந்த மரத்தடியில் தான் எங்கள் நண்பர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நீ வேண்டுமானால் கொஞ்சம் வெளியே வா. அவர்களையே சொல்லச் சொல்கிறேன்." என்றான் அந்தத் திருடன். பாட்டி குடிசைக்கு வெளியே வந்தாள்.

திருடன் மரத்தடியில் உட்கார்ந்திருக்கும் மூன்று திருடர்களைப் பார்த்து, "பாட்டி தரமாட்டே னென்கிறாள்" என்று உரக்கக் கத்தினான்.

மரத்தடியில் உட்கார்ந்திருந்த மூவரும்" அவனிடம் கொடுத்தனுப்பு பாட்டி" என்றார்கள். பாட்டி "தோண்டியா?" என்று கேட்டாள்.

"ஆமாம் பாட்டி தோண்டிதான். சீக்கிரம் கொடுத்தனுப்பு!" என்று மூவரும் பாட்டிக்குக் கேட்கும்படியாகக் கத்தினார்கள். பாட்டி உள்ளே சென்று பொன்னும் பொருளும் அடங்கிய தோண்டியைக் கொண்டு வந்து ஏமாற்றுக்காரத் திருடனிடம் கொடுத்தாள். தோண்டியை வாங்கிக்கொண்ட ஏமாற்றுக்காரத் திருடன் வேறு வழியாக ஓடியே போய் விட்டான். வெகுநேரமாகியும் அனுப்பிய ஆள் வராததால் சந்தேகமடைந்த மற்ற மூவரும் பாட்டியின் வீட்டுக்கு வந்தார்கள். "எங்கே அவன்"? என்று பாட்டியிடம் கேட்டார்கள்.

"அவன் அப்போதே தோண்டியை வாங்கிக் கொண்டு போய் விட்டானே!" என்றாள் பாட்டி. "எந்தத் தோண்டி?" என்றான் மூவரில் ஒருவன்.

"ஏன்? நீங்கள் என்னிடம் கொடுத்து வைத்த தோண்டியைத்தான் வாங்கிக் கொண்டு போனான்" என்றாள் பாட்டி. இதைக் கேட்டதும் திருடர்கள் மூவரும் பாட்டியை கோபத்துடன் "அதெப்படி நீ அவனிடம் தோண்டியைக் கொடுக்கலாம்? நால்வரும் ஒன்றாக வந்து கேட்டால் தானே நீ கொடுக்க வேண்டும். இப்படி எங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டாயே! அதனால் இந்த நஷ்டத்தை நீதான் ஈடு செய்ய வேண்டும்" என்று கூச்சல் போட்டனர்.

பாட்டி அதற்கு மறுக்கவே அவளை நீதிபதியிடம் அழைத்துச் சென்று முறையிட்டனர். வழக்கைக் கேட்ட நீதிபதி, "பாட்டி செய்தது தான் தவறு. ஒப்புக்கொண்டதற்கு மாறாக ஒருவனிடம் தோண்டியைக் கொடுத்ததால், அவள் தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்" என்று தீர்ப்பளித்தார். வழிநெடுக புலம்பியபடியே நடக்க வழியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனான மரியாதை ராமன் அழுது கொண்டு வரும் பாட்டியிடம் நடந்ததைக் கேட்டறிந்தான். நடந்ததை முழுவதையும் கேட்டறிந்த மரியாதை ராமன் "இது என்ன அநியாயமான தீர்ப்பு, இது சரியல்ல" என்று தனது கருத்தை தெரிவித்தான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த அரசாங்க சேவகர்கள் மன்னரிடம் அப்படியே இந்தச் செய்தியைத் தெரிவித்து விட்டனர்.

அரசன் மரியாதை ராமனை அழைத்து "தமது அரசவையில் கொடுக்கப்பட்ட தீர்ப்பையே நீ விமர்சனம் செய்தாயாமே! சரி நீ தீர்ப்பு சொல்லியிருந்தால் இந்த வழக்கில் என்ன தீர்ப்பு சொல்லியிருப்பாய்?" என்று கேட்டார்.

"அரசே, நான்கு பேரும் ஒன்றாக வந்து கேட்டால் தானே பாட்டி அந்தத் தோண்டியைக் கொடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது மூன்று பேர் தானே வந்து தோண்டியைக் கேட்கிறார்கள். இவர்கள் மூவரும் போய் நாலாவது ஆசாமியையும் தம்முடன் கூட்டிக் கொண்டு வரட்டும். அப்பொழுது பாட்டி நிச்சயம் அவர்கள் கொடுத்த தோண்டியைத் திரும்பக் கொடுத்து விடுவாள்" என்றான். சிறுவன் மரியாதைராமன் அளித்த தீர்ப்பைக் கேட்டு மன்னர் மிகவும் வியந்து போனார்.

ராமனை அப்பொழுதே அரசவை நீதிபதியாக நியமித்தார். (முற்றும்)

## பிறர்க்குதவு

சூரியன் ஒளியைத் தருகிறது
சந்திரன் நிலவைத் தருகிறது
உலகத்து உயிர்களின் மூச்சாய்
காற்றும் எங்கும் நிறைகிறது
வானம் மழையைப் பொழிகிறது
வாசனை மலர்கள் பரப்புகிறது
தென்னை இளநீர் தந்து
எம் தாகம் தணிக்கிறது
தேனீ தேன் தருகிறது.
தெரிந்தே பிறர்க்கு உதவிடுவாய்

பசு பால் தருகிறது
மரம் நிழல் தருகிறது
நெல்லோ அரிசி தருகிறது
நீ என்ன தரப் போகிறாய்?
கனி சுவை தருகிறது
காலம் வாழ்க்கை வழங்குகிறது
மூங்கில் இசையை உருவாக்குகிறது
முதுமை அனுபவம் உரைக்கிறது
இளமை, அறிவு, செயல்வேகம்
படைத்தவன் நீ
இன்முகத்தோடு நிதமும்
பிறர்க்கு உதவிடுவாய்!

'குறிஞ்சிக்கவி'-குப்பிளான்

## விடுகதைகள்

பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது அது என்ன?
தேங்காய்

கையில் தவளும் பையில் உறங்கும் அது என்ன?
பணம்

கண்ணுண்டு பார்வையில்லை அவன் யார்?
ஊசி


அடிப்பார் பிடிக்க மாட்டார் அது என்ன?
பாம்பு

குட்டைத் தண்ணீரில் எட்டுக் கப்பல் அது என்ன?
தவளை


தேர் அசைய பூ உதிர அது என்ன?
திரிகை

வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறு இல்லை அது என்ன?
அகப்பை

இ.சுரேப்பினி
தரம்-11
பொத்தானியா சிறுவர் இல்லம்



பா.அபிசாந், தரம்-4,
யா/ கைதடி குருசாமி வித்தி.



சீ.பிரவின், தரம்-1,
யா/ மகளிர் கல்லூரி



அஜைசா,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி




வ.யதுர்ஷன், தரம்-7,
யா/ வேலணை மேற்கு, நடராஜ வித்தி.




செ.ஸ்ரீலைக்ஷனி, தரம்-6ஜீ,
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி



ஜெ.சச்சித், தரம்-3பி,
யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தி.



பு. அக்ஷஜன், தரம்-2பி,
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை



## விடை தெரியுமா? 187

### உங்களுக்கும் பரிசில்கள்

1. இலங்கையில் மிருகக் காட்சி சாலை அமைந்துள்ள இடம்?
2. சர்வதேச சிறுவர் உரிமை நாள் எப்போது கடைப் பிடிக்கப்படுகின்றது?
3. உலகப் பொலிஸ்காரன் என்றழைக்கப்படும் நாடு எது?
4. சீறாப்புராணம் என்னும் நூலை எழுதியவர் யார்?
5. பல இராகங்களில் பாடப்படுவது எது?

### விடைகள் 184

1. 1972
2. பூமிக்கும் புதனுக்கும் இடையில்
3. கன்னியாய் (திருகோணமலை)
4. காரியர்
5. ஜோன் ஜேலர்

### வெற்றி பெற்றோர் விவரம் (185)

* செ.விஜித்தா, தரம் 8, கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 01 .12.2012 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## ஓநாய்



காடுகளில் வாழும் விலங்குகளில் ஒன்று ஓநாய். நாய் இனத்தைச் சேர்ந்த இந்த விலங்கு குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.

இயற்கையாகவே அஞ்சும் தன்மை உடைய இந்த விலங்கு மரப்பொந்துகளில், பாறை இடுக்குகளில் பெரிய குழிகளிலும் வாழ்கின்றது. பிற விலங்குகளைக் கொன்று தின்னுவதற்கு ஏற்ப இதற்கு பற்கள் கூர்மையாகவும், பலமாகவும் இருக்கும். ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆசியா கண்டங்களில் வாழும்.


சா.ஜிந்துஜா
கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்குதலற்ற சாட்சிய வெளி

## தமிழ் இலக்கியத்தின் பயணிப்புத் தடங்கள் பற்றிய பின்தொடர்தல்

த.அஜந்தகுமார்



ஒரு சோம்பேறியின் பக்கம்

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்கிறார்கள். அது எவ்வளவு தூரம் உண்மையானது?

காலக்கண்ணாடியில் தெரியும் குறிப்பிட்ட உருவங்களும் வெளிகளுமே இலக்கியப் பதிவாகின்றன.

அக்கண்ணாடியில் தெரியும் தேவையற்றவை அச்சுறுத்தலானவை சொல்லக் கூசுவன விலக்கப்படுவதும் சிலவேளை அவையே பெரிதாக்கிப் பதியப்படுவதும் நடக்கின்றது.

இலக்கியம் ஒரு சாட்சியம் எனின் யாரது சாட்சியம்? உண்மையின் சாட்சியமா, உண்மையின் கண்கள் கட்டப்பட்டு சொல்ல, கேட்கப் பணிக்கப்பட்டவற்றின் சாட்சியமா? அதிகாரத்துக்கு அஞ்சிய சாட்சியமா? அதிகாரத்துக்கு எதிரான சாட்சியமா? அதன் சாட்சியம் இருக்கின்றது என்பதே அதன் பெறுமதியைத் தீர்மானிக்கிறது.

*காலத்திற்கேற்ற நூல்கள் அவ்வக்*
*காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்*
*ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த*
*நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை*

என்று பாரதி பாடியிருப்பதன் அர்த்தம் தான் என்ன?

ஒரு காலத்தின் கண்ணாடியாய் தன்னைத் தீர்மானத்துடன் வெளிப்படுத்தும் இலக்கியம் அக்கால முடிவில் அதன் உக்கிரம் குன்றி அதன் சாட்சியாய் இருக்கும் போது அதனை வெளிப்படுத்தும் மொழியால் உத்தியால் மட்டுமே நிலைக்க முற்படலாம். அதன் சமூகத் தேவை ஒரு காலத்துடன் முடிந்துவிடும். அதையும் தாண்டி நிற்கவும் நிலைக்கவும் வைக்கும் வல்லமை ஒரு சில மகத்தான படைப்பாளிகளுக்கே உண்டு.

*நாங்கள் எதற்கு சாட்சிகளாயிருக்கிறோம்*
*அல்லது எதற்காக சாட்சிகளாயிருக்கிறோம்*
*எனக்கெதுவும் புரியவில்லை*
*பகலையும் இரவையும் கண்டு*
*அஞ்சும் என் கண்களை என்ன செய்வேன்*

என்று இன்னொரு கவிஞர் எழுதுகிறார்.

இது சாட்சியின் 'அஞ்சும்' வாழ்வைக் காட்டிவிடுகின்றது. ஒரு காலத்தில் கருத்தியல் எக்கால முடிவில் நீர்த்து விடும் போது அவ்விலக்கியம் நிமிர்ந்து நிற்குமா? விடுதலைப் போராட்ட கால புரட்சி இலக்கியங்கள் இன்று பேசப்படுகின்றனவா? அப்படிப் பேசப்படும் போது அவற்றின் பொருத்தப்பாடு எவ்வாறு இருக்கும்?

எது அதிகாரத்தில் இருக்கிறதோ? அந்த அதிகாரத்துக்கு எதிரான இலக்கியங்கள் பேசப்படுமா? பக்தி இயக்க காலத்தில் சமணர்களின் நூல்களை சம்பந்தர் அனல் வாதம் புனல் வாதம் என்ற பேரில் அழித்து ஒழித்ததை எதைக் காட்டுகின்றது? அதிகாரம் தனக்கு எதிரானவற்றை கொன்று தீர்த்துக் கொழுக்கும் மமதையைத் தானே காட்டுகின்றது?

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க இலக்கியங்களின் எழுகையை தடை செய்ய புரொட்டஸ்தாந்தினர் பெரிதும் முயன்றனர். ஆனால் நேரடியாக இல்லாமல் கத்தோலிகர்கள் தமது துன்பங்களை யேசுபிரானின் துன்பத்தோடு ஒப்பிட்டு புலப்படுத்தினார்கள்.

அதிகாரத்துக்கு அஞ்சி இலக்கியவாதியின் பேனா கண்மூடி விடுவதில்லை. அது மூன்றாவது கண்ணைத் திறந்து புதுவழியில் தன்னை வெளிப்படுத்துகிறது. அப்போதுதான் காலத்தால் அழியாத இலக்கியம் உருப்பெறுகின்றது. கம்பன்,

*மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதுவோ*
*உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன் - என்னை*
*விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ சோழா*
*குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.*

என்று சோழவேந்தனுக்கு எதிராகக் குரல் கொடுத்தான். இன்று ஊடக சுதந்திரமும் இலக்கிய சுதந்திரமும் இல்லாத காலத்தில் இது சாத்தியமா?

சில எழுத்தாளர்களும் 'பச்சோந்திகளாய்' ஒரு கருத்துக்குள் நம்மை அடக்காது தாவித்தாவி இயங்கி தம்மை நிலைக்க வைக்கவும் விருதுக்கு ஆட்படவுமே விரும்பி நிற்கின்றார்கள்.

அதியமான் நெடுமானஞ்சி, தான் பாடுவதைக் கூடக் கேட்காமல் பரிசிலை மட்டும் சேவகனூடாக அனுப்பியதற்கு சினந்த பெருஞ்சித்திரனார் என்ற புலவர்,

*காணாது ஈந்த இப்பொருட்கு யானோர்*
*வாணிகப் பரிசிலேன் அல்லேன் பேணித்*
*தினை அனைத்து ஆயினும் இனி அவர்*
*துணை அளவு அறிந்து நல்கினர் விடினே.*

என்று அரசன் பரிசிலையே நிராகரித்தார். இத்துணிவும் இம்மனமும் எத்தனை பேருக்கு இருக்கிறது? கலாகீர்த்தி விருது கிடைத்த போதிலும் அச்செய்தியை தமிழில் அறியப்படுத்தாதற்காய் அவ்விருதையே நிராகரித்த யேசுராஜா போன்ற சிலருக்கே அது இருக்கிறது.

தமது கருத்துக்களை வெளிப்படுத்த அதிகாரம் தடை செய்து நிற்கும் வேளையில் தான் பிரசாரம் இல்லாத கட்டுரைத் தன்மையில்லாத அலாதியான புனைவு வெளியை புதிய படிமங்கள் குறியீடுகளுடன் படைப்பாளி வெளிப்படுத்த முடியும்.

பாரதியார் 'பாஞ்சாலி சபதத்தை' பாடியது பாஞ்சாலியின் கதை என்று முடித்துவிடக்கூடியதா? இல்லையே.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் போரின் பின்னான வாழ்வையும் கடந்த காலத்தின் அறியாத பக்கங்களையும் துணிவோடும் புதிய உத்தியோடும் வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான போர் முடிவோடு ஈழத்து இலக்கியம் தேங்கிவிடும் என்று நினைப்பவர்களுக்குப் பதில்சொல்ல முடியும்.


---

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி

உங்கள்
வாழ்க்கையை
மாற்றப்போகும்
தொடர்....

25



**ஆரோக்கியத்தைச் சரிபார்த்துக் கொள்ளுதல்**

உடல்நிலை பற்றி துளியும் கண்டுகொள்ளாமல் இருப்பதும், எப்போதும் உடல்நிலை பற்றி அச்சம் கொள்வதும் என இந்த இரண்டும் கூடாது. மனித உடம்பானது நெகிழ்வானது. எத்தனை கடுமையான சூழ்நிலையிலும் தாக்குப்பிடிக்கக் கூடியது. அவ்வாறுதான் உடல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இடிபாடுகளுக்கு இடையே மாட்டிக் கொண்டு கடுமையான காயம் ஏற்படும்போதும் மக்கள் பல நாள்கள் எவ்வாறு உயிருடன் இருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெரியும். பல எளிய விடயங்களில் நாம் கவனத்துடன் இருக்க வேண்டும், அது மாறும் போது நீங்கள் மருத்துவரிடம் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

**எடை பாருங்கள்**- மாதம் ஒரு முறை எடை பார்ப்பது எடையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய உதவும். உங்கள் உணவுகள் அதிக இறக்கமான பின் அல்லது ஓய்வான பின் தான் எடை மாற்றத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை.

**கண்ணாடியில் பாருங்கள்**

உங்கள் கண்கள் சிவந்து சிறிது உப்பிக் காணப்பட்டால் உங்களுக்கு இன்னும் நிறையத் தூக்கம் தேவைப்படுகிறது என்று அர்த்தம். காஸ்மெடிக் அறுவைச்சிகிச்சையை விடத்தூக்கம்மலிவானது, மேலும் அது உங்களுக்கு நல்லதும் கூட.

**வீக்கம் இருக்கிறதா என்று பாருங்கள்**-

எங்கே வீக்கங்கள் வரும் என்று உங்களுக்கு தெரியும். அப்படி ஏதாவது வந்தால் அதை மருத்துவரிடம் காண்பிக்கக் கூச்சப்படாதீர்கள்.

**சிறுநீரின் நிறம் பாருங்கள்**- சிறுநீர் கழிக்கும் போது உங்களது சிறுநீர் வழக்கமான நிறத்தை விட அதிக மஞ்சளாக இருந்தால் நீங்கள் போதுமான தண்ணீர் குடித்திருக்க மாட்டீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள்.

**சிறிய எழுத்துக்களை வாசித்துப் பாருங்கள்** - சிறிய எழுத்துக்களை உங்களால் வாசிக்க முடிகிறதா? அவ்வாறு வாசிக்க முடியாவிட்டால் உங்களுக்கு கண்ணாடி தேவைப்படலாம். வருடத்துக்கு ஒரு முறை கண் பரிசோதனை செய்வதை வழக்கமாக்கிக் கொள்வது நல்லது.

**நாடித்துடிப்பைப் பாருங்கள்**- சோபாவில் தளர்வாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு அரை நிமிடம் நாடித்துடிப்பைப் பாருங்கள். பின் நாடித்துடிப்பின் அளவை இரண்டு மடங்காக்கிக் கொள்ளுங்கள். நாடித்துடிப்பின் அளவு 70 என்றால் உங்கள் உடல்நிலை சிறப்பாக இருக்கிறதென்று அர்த்தம்.

**பல்லுணை ஊதுங்கள்**-

பலூனை ஊதுவதற்காக பார்ட்டி வரும் வரை காத்திருக்க வேண்டாம். நண்பர்களிடையே யாருக்கு அதிகம் 'தம்' இருக்கிறது என்று சவால் விடுங்கள். ஆனால் அது நீங்கள் நினைப்பதை விடவும் கடினமானதாக இருக்கும்.

அது ஏனென்று உங்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

**உங்கள் சுவாசம் எப்படியிருக்கிறது?** - உங்கள் சுவாசத்தில் கெட்ட நாற்றம் வருகிறதென்றால் உங்கள் பற்கள் அல்லது ஈறுகளில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டிருக்கும். அப்போது பல் மருத்துவரைப் போய்ப் பார்ப்பது நல்லது.

**பால்வினை நோய்**- பால்வினை நோய் வெகு வேகமாக அதிகரித்து வருகிறது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துவதற்காக நீங்கள் மன்னிக்கவேண்டும். நீங்கள் இளைஞராக அல்லது முதியவராக , ஜாக்கிரதை உணர்வுள்ளவராக அல்லது தைரியமானவராக இருப்பவராயினும் அதன் அபாயங்களைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது. அது சம்பந்தமாக ஏதாவது கவலை என்றால் மருத்துவரைச் சந்திக்க வேண்டும்.

**மறுபடியும் சொல்லுங்கள்**- மற்றவர்கள் மிக மெதுவாக பேசுகிறார்கள் என்று உங்களுக்குத் தோன்றினால், உங்கள் காதைப் பரிசோதித்துப் பார்த்துக் கொள்வது நல்லது.

**மனநலம்**

மனநலக்குறைவுப் பிரச்சினை என்பது ஒரு பொதுவான பிரச்சினை. மனநோய் வெளியில் தெரிவதற்கு அதிக நாள் ஆகும் என்பதால் அதை உடனடியாகக் கண்டு பிடிக்க முடியாது. சமயத்தில் வெறும் வெளித்தோற்றத்தை வைத்து இது மிகைப்படுத்தப்பட்டு விடும். மருத்துவர்கள் தான் இதைச் சோதித்து காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

மனநலக் குறைபாடு பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது. அதெலல்லாம் இணைந்து தான் அறிகுறிகளை உண்டாக்கும் என்பது மருத்துவர்களுக்கு தெரியும். உங்கள் மருத்துவர் உங்களைச் சீரியஸாக எடுத்துக் கொள்ள மறுக்கிறார் என்று கவலைப்பட்டால் ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். தங்கள் மனநலம் பற்றிக் கவலைப்படும் பெரும்பாலான நோயாளிகள் மருத்துவரிடம் ஆலோசனை கேட்கிறார்கள்.

இன்னொரு வகையில் சொல்வதானால் நீங்கள் அவரிடம் மனநல ஆலோசனை கேட்டால் அதை அவர் இயல்புக்கு மாறான ஒன்றாக நினைத்துக்கொள்ள மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறிவேல் பாய்ந்த புண்ணில் நுழைந்த கனல்



பண்டைய கால அரசர்கள், ஓய்வு நேரங்களில் வேட்டைக்குச் செல்வது வழக்கம். அந்த வகையில் அயோத்தியை ஆண்ட தசரத மன்னன் ஒருநாள் சரயூநதிக்கரையில் வேட்டையாடினான். அப்பொழுது, சிறிது நேரம் ஓரிடத்தில் இருந்து இளைப்பாறினான். தசரதன் சத்தம் வரும் இடத்தைக் குறிபார்த்து அம்பு எய்வதில் வல்லவனாக இருந்தான். அவ்வாறிருக்கையில், யானை நீர் குடிப்பது போன்ற 'பொளு பொளு' சத்தம் மரங்களினூடாக அவன் செவிக்குக் கேட்டது.

சத்தம் வந்த இடத்தைக் குறிவைத்து அம்பை எய்தான். என்ன கொடுமை. 'ஐயோ செத்தேன்' என மனிதக்குரல் அங்கிருந்து கேட்டது. குறிதவறவில்லை. அரசன் திடுக்குற்றான். என்ன விபரீதம் நடந்தது? எனக் கவலையுடன் அந்த இடம் நோக்கி நகர்ந்தான்.

என் மேல் யாருக்கும் கோபம் இல்லை; நான் யாருக்காவது தீங்கு செய்தவனும் அல்லன்; ஏன் என்னை யாரும் கொல்ல வேண்டும்? கண்ணில்லாத என் தாயும் தந்தையும் இனி என்ன செய்யப் போகின்றார்கள்? யான் இதுவரை அவர்களுக்குக் கண்ணாகவல்லவா இருந்தேன். இனி? என அழுகைக்குரல் தசரதன் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்க, மெல்ல மெல்ல நகர்ந்த மன்னன், மார்பில் அம்பு தைத்து, சேற்றில் விழுந்து கிடந்த தவரிஷிகளின் குமாரனைக் கண்டான். அவனது கைகளிலிருந்து அம்பும் வில்லும் நழுவி விழுந்தன. "பாவி! நீயா என் மேல் அம்பு எய்தது தண்ணீர் கொண்டு போக வந்த என் மேல் அம்பு எய்யக் காரணம் என்ன? தண்ணீர் கொண்டு வருவான் எம் குமாரன் என, என் பெற்றோர் காத்துக்கொண்டு இருப்பார்களே. நீ யார்? கோசல நாட்டு அரசனா? சரி, நீ போய் எனது பெற்றோரிடம் நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட்பாய். இல்லையேல் அவர்கள் உன்னைச் சபித்து விடுவார்கள் என்று சொன்ன குமாரன், அவர்கள் இருப்பிடம் செல்வதற்கான ஒற்றையடிப் பாதையையும் கூறிவிட்டு தனது மார்பில் ஊடுருவியிருந்த அம்பை அகற்றி விடும்படி கேட்டான்.

அம்பைப் பிடுங்கி விட்டால் உயிர் பிரிந்து விடும் என்பது தெரிந்த அரசன், சிறிது யோசித்தான். சிறுவன் விட்டபாடில்லை. மறுக்கமுடியாமல் அம்பைப் பிடுங்கியதும் உயிர் பிரிந்தது. தண்ணீரை எடுத்துக் கொண்டு சிறுவனது பெற்றோர் வாசம் செய்யும் இடம் நோக்கிப் போகிறான் தசரதன்.

பார்வை தெரியாத பெற்றோர் தம் மகனைக் காணவில்லையே என ஏங்கிக் கொண்டிருந்தார்கள். காலடி ஓசை கேட்டதும் மகனே இவ்வளவு நேரம் ஏன் தாமதித்தாய்? எனக் கேட்கிறார்கள். பதில் இல்லை. ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதோ என எண்ணித் திரும்பவும் கேட்டார்கள். அரசன் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும். "சுவாமி, நான் உங்கள் மகன் அல்லன். ஒரு சத்திரியன். யானை நீர் குடிப்பதாக எண்ணி உங்கள் மகனை அல்லவா கொன்றுவிட்டேன்; என்னை மன்னிப்பீர்களாக" என்கிறான்.

"நீ செய்தது பெரிய பாவம்; ஆனால் தெரியாமல் செய்த பாவம். அத்துடன் செய்த பிழையை நீயே வந்து சொன்னதனால் நீ பிழைத்தாய். இப்போது எங்கள் இருவரையும் மகன் கிடக்கும் இடத்துக்குக் கொண்டு போவாய்" என்றார்கள்.

இயமனும் அஞ்சக்கூடிய வேல் கைக் கொண்ட தசரதன் சத்தியத்துக்கு அஞ்சினான். வயோதிபப் பெற்றோரைத் தூக்கிக்கொண்டு போய்ச் சேர்த்தான். உயிரற்ற தம் குமாரனின் உடலைத் தழுவிக் கொண்டு அழுதார்கள்; ஆசீர்வதித்துத் தகனஞ் செய்தார்கள். அரசன் பக்கம் திரும்பி, "அரசனே! உன்னால் நாம் இப்போது அனுபவிக்கும் துக்கம் போல் நீயும் அனுபவித்து, புத்திரசோகத்தால் உயிர் நீப்பாய்" என்று சொல்லிவிட்டு எரியும் சிதையில் ஏறித் தீக்கிரையானார்கள்.

தசரத மன்னன் தனது இளமைக் காலத்தில் அடைந்த இந்தச் சாபம், அவனது அடிமனதில் ஆழமாய்ப் பதிந்து விட்டது

"தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாது
நாவினாற் சுட்ட வடு" (குறள் 129)

பின்னர், தசரதன் மூன்று பெண்களை மணம் செய்திருந்தான். ஆயினும் பிள்ளைப் பேறு கிடைக்கவில்லை. அந்த நாள்களில், தவமுனிவரான பெற்றோர் சொன்ன சாபம் பலிக்க வேண்டுமாயின் பிள்ளைகள் கிடைக்கவேண்டுமே என மகிழ்ச்சியும் சாபத்தை எண்ணிய சோகமும் கொண்டவனாய் வாழ்ந்து வருகிறான்.

பிள்ளைப்பேறு கிட்டவில்லை என்ற கவலையை ஒருநாள் வசிட்ட முனிவரோடு சொல்லித் துக்கப்பட்டான். காலநேரமும் கனிந்து வந்தது. கலைக்கோட்டு முனிவர் எனப்படும் ருசிய சிருங்கரை நம் நாட்டுக்கு அழைத்து வந்தால், நாடும் செழிக்கும்; யாகம் செய்வித்தால் பிள்ளைப்பேற்றுக்கு வழியும் பிறக்கும் என்கிறார் வசிட்டர்.

யாகம் செய்யப்பட்டது. முனிவர் கொடுத்த அவிபாகத்தின் ஒரு பகுதியை கௌசல்யாவுக்கும் மற்றதைக் கைகேயியும் கொடுத்தான் தசரதன். பெண்கள் இருவரும் தம் பாகத்தில் ஒவ்வொரு பகுதியைச் சுமித்திரைக்குக் கொடுத்தார்கள்.

நாள்கள் நகர்ந்தன. கௌசல்யாதேவி இராமனையும், கைகேயி பரதனையும், சுமித்திரை இலக்குமணன் சத்துருக்கன் ஆகிய இருவரையும் பெற்றெடுத்தனர்.




புத்திர பாக்கியம் இல்லையே என்ற கவலை நீங்கியவனாய் மன்னன் மகிழ்ந்திருந்தான். அவர்களுடைய கல்வி கேள்விகளிலும் கலைப் பயிற்சி வழங்குவதிலும் வசிட்டர் கவனம் செலுத்தினார்.

இவ்வாறாக இராம அவதாரம் நிகழ்ந்தது. இராமனுக்கு உற்ற துணைவராகத் தம்பிமார் மூவரும் அவதரித்தார்கள் என்பதை அறிந்துகொள்வோமாக.

இஃது இவ்வாறிருக்கையில், ஒருநாள் விசுவாமித்திர முனிவர் அயோத்திக்கு வந்தார். முனிவரை முறைப்படி வரவேற்று உபசரித்த மன்னன், முனிவர் தன் மனைக்கு வந்த தன் நோக்கம் என்னவென்று பணிவுடன் கேட்டான். அதற்கு முனிவர், யான் செய்யப் போகும் தவ வேள்விக்கு அரக்கரிடமிருந்து இடையூறு வராமல் காப்பதற்கு,

*"…..நின் சிறுவர்*
*நால்வரினும் கரிய செம்மல்*
*ஒருவனைத் தந்திடுதியென உயிர் இரக்கும்*
*கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்"*

தசரதனுக்கு இராமன் மேல் மிகுந்த பற்றுதல் உண்டு. முனிவரும் இராமனைத் தானே தரும்படி கேட்கிறார். அதுவுமன்றி, "முனிக்குமாரனின் பெற்றோர் இட்ட சாபம் மனதில் இருக்கும்போது, தசரதனுடைய உயிரைத் தரும்படி கேட்டு நிற்கும் இயமனைப் போல முனிவன் சொன்னான்" எனக் கம்பர், தசரதனுக்காகப் பரிந்து பேசுவதைக் காணலாம். சாபம் பலித்துவிட்டதாகத் தசரதன் கவலைக் கடலில் மூழ்கிவிட்டான் என்கிறார் கம்பர்.

*"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்*
*மருமத்தின் எறிவேல் பாய்ந்த*
*புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தால்*
*எனச் செவியில் புகுதலோடும்*
*உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த*
*ஆருயிர் நின்று ஊசலாடக்*
*கண்ணிலான் பெற்று இழந்தால் என உழந்தான்*
*கடுந்துயரம் காலவேலான்"*

இளைஞனாக இருந்த காலத்தில் தவ முனிவரது சாபத்தைக் கேட்ட செவியில் உண்டான புண், இன்னும் ஆறாத நிலையில், இராமனைத் தரும்படி விசுவாமித்திரர் கேட்ட சொல்லானது நெருப்புக் கொள்ளி (கனல்) அந்தப் புண்ணுக்குள்ளே புகுந்தது போல இருந்தது. அதனால் தசரதனுடைய மனதில் ஆழமாகப் பதிந்துகிடந்த துயரம் வெளிப்பட உயிர் அகத்ததோ புறத்ததோ எனத் தெரியாமல் ஊசலாடியது.

இதனையே கம்பர்,

*"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல்*
*மருமத்தின் எறிவேல் பாய்ந்த*
*புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தால்*
*எனச் செவியில் புகுதலோடும்*
*உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த*
*ஆருயிர் நின்று ஊசலாட..."*

என்று பாடியுள்ளார்.

அடுத்ததாக அரசன், "புத்திர பாக்கியம் இல்லாதிருந்த நான் அதனைப் பெற்றேன்; இப்போது இழக்கப் போகிறேனே" எனக் கவலைப்படுகிறான் எனக் காட்டுமுகத்தால்

*"கண்ணிலான் பெற்றிழந்தால் என உழந்தான்*
*கடும்துயரம் கால வேலான்"*


என்கிறார் கம்பர்.

இந்த இடத்தில், கண்ணில்லாத் தவ முனிவர், தம்மைப் பராமரிப்பதற்குக் கிடைத்த கண்ணைப் போன்ற குமாரனை - தசரதன் கொன்றுவிட்டதால் அடைந்த துயரம் போல தசரதனும் மகனைப் பிரியப் போகிறானே என்பதால் துன்பப்பட்டான் எனவும் கொள்ளக்கிடக்கின்றது.

அப்போது வசிட்ட முனிவர் தேற்றி ஆறுதல் கூறுகின்றார். அந்தநேரத்தில் தசரதன், இராமன் சிறுவன்; படைப் பயிற்சி இல்லாதவன். அதனால் வேள்வி காக்க யான் வருகிறேன் என்கிறான். முனிவருக்குக் கோபம் உண்டானது.

வசிட்டர் ஒருவாறு விசுவாமித்திரரைச் சமாதானப்படுத்திவிட்டு, இராமனைக் கொடுங்கள்; அவனுக்கு ஒன்றும் ஆகாது; நன்மைதான் வரும் எனக் கூறுதலும், தசரதன், இராமனை முனிவரோடு அனுப்ப இசைக்கின்றான். இராமன் புறப்பட்டு வந்து நிற்க இலக்குமணனும் அவனுடன் சேர்ந்துகொள்கிறான். இராமனோடு நிழலாகத் தொடர வேண்டும் என்பது சுமித்திரை இலக்குமணனுக்கு கற்றுத்தந்த பாடம்.

எனவே இராமனையும் இலக்குமணனையும் பெற்றோர் வழியனுப்பி வைக்க, அவர்கள் முனிவர் பின் செல்கிறார்கள்.



மட்டுவில் நா.நல்லதம்பி

# கம்பனின் படைப்புக் கலை

புலவர் புகழேந்தி

**கம்பன் தரும் காட்சி**

இனி கம்பனைத் தொடருவோம். முன்னர் நாம் கண்டவாறு மாலை வேளையில்தான் இராம-இலக்குவர் மதங்க ஆசிரமத்துக்கு வந்தனர். இராமனும் இலக்குவணனும் அன்றைய இரவை அங்கேயே கழித்தனர். அப்படி இரவு கழிந்த பிறகு சுக்கிரீவன் இருக்கும் ருசியமுக பருவதத்துக்குப் போகும் வழியை சவரி அவர்களுக்கு விளக்கிச் சொன்னாள். இதனைக் கம்பன்,

..........மெய்ம்மையின் நோக்கி, வெய்ய

துனை பரித் தேரோன் மைந்தன் இருந்த அத்துளக்கு இல்குன்றும்

நினைவு அரிது ஆயற்கு ஒத்த நெறி யெலாம் நினைந்து சொன்னாள்

என்று கூறுவான். சுக்கிரீவன் சூரியனுடைய புத்திரன் ஆகையால், "வெய்ய துனை பரித் தேரோன் மைந்தன்" என்று குறிப்பிடப்படுகிறான்.

**கம்பனில் காணும் நயம்**

கம்பனுடைய இந்தக் கூற்றில் இரண்டு நயங்கள் காணக் கிடக்கின்றன. "மெய்ம்மையின் நோக்கி..... சொன்னாள்" என்ற சொற்றொடரில் இருக்கும் அருமை ஒன்று. இதற்கு மெய்யன்போடு பார்த்துச் சொன்னாள் என்று பொருள் கூறுபவர்களும் இருக்கிறார்கள், ஆனால், 'நோக்குதல்' வேறு 'பார்த்தல்' வேறு நோக்குதல் என்ற சொல் கருத்தினையும் காணுதல் என்று பொருள்படும். கம்பன் [illegible] சொல்லவே 'நோக்கி' என்பது.

ருசியமுக பருவதத்துக்குப் போகும் வழியைச் சவரி எடுத்துச் சொல்வாள் என்று கவந்தன் இராம- இலக்குவணிடம் முன்னமே சொல்லியிருக்கிறான். கவந்தன் சொற்படிதான் இராம-இலக்குவணன் வந்திருக்கின்றனர். ஆக, [illegible] தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவளிடம் அதைப் பற்றி அவர்கள் எதுவும் கேட்கவில்லை. இந்த நிலையில்தான் சவரி அவர்களிடத்து அதைச் சொல்கிறாள். ஆகவே தான் இந்த உண்மை நிலையையும் நோக்கத்தையும் கருத்தில்கொண்டு சவரி சொன்னாள் என்பதை வெளிப்படுத்த, "மெய்ம்மையின் நோக்கி..... சொன்னாள்" என்று கம்பன் கூறுவான். அடுத்துக் காண வேண்டியது,

"நினைவு அரிது ஆயற்கு ஒத்த நெறி எலாம் நினைத்து சொன்னாள்" என்ற ஆட்சியின் அருமை. அந்த மலைக்குப் போகும் வழி நினைவினால் ஆராய்ந்து சொல்வதற்கு அரிதாய் உள்ள வழி. அந்த வழி முழுவதும் சவரிக்கு அனுபவத்தினால் தெரிந்திருக்கிறது. மேலும் இராமன் அங்கே வரப்போகிறான் என்பது அவளுக்கு முன்னதாகவே தெரிந்தது ஒன்று. அப்படியானால் அவன் வரும் நோக்கமும் அவளுக்குத் தெரிந்திருக்கத்தான் வேண்டும். ஆகையினால் இராமனுக்குச் சொல்வதற்காகவே அந்த வழியையெல்லாம் அவள் தெரிந்து வைத்திருந்தாள் என்று கொள்வது பொருத்தமே ஆகும்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரூபிக்கப்பட்ட வெற்றி முறை



மலர்ச்சி உற்றதாகச் செயற்படுங்கள். நீங்கள் மலர்ச்சியை உணர்வீர்கள். நம்பிக்கை கொண்டதாகச் செயற்படுங்கள்- நீங்கள் நம்பிக்கை உணர்வு அடைவீர்கள்.

உற்சாகமாகச் செயற்படுங்கள்- உங்கள் உணர்ச்சியும் உற்சாகமாகும் நேசமாகச் செயற்படுங்கள்- நேசமாக உணரத் தொடங்குவீர்கள்

யாரேனும் உங்களைத் திட்டினால் உங்களுக்கு அதனால் எரிச்சலும் கோபமும் ஏற்பட்டால் தன்னை அழிக்கும் அந்த உணர்வுகளை மாற்றி, நீங்கள் முரட்டு மனிதர்களால் பாதிக்கப்படாதவராக, பொறுமை கொண்டவராகச் செயற்படுங்கள். உடனேயே உங்கள் உணர்ச்சிகள், எரிச்சல், சினம் இவற்றிலிருந்து மீண்டு பாதிக்கப்படாத பொறுமையாக மாற்றம் கொள்ளும். விரும்பத்தகாத உங்களையே பாதிக்கக் கூடிய உணர்வுகளை நீங்கள் இவ்வாறு மாற்றி அமைக்கலாம்.

நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளில் ஒன்றான செயற்படுத்தலை மேற்கொள்ளுங்கள். இது உங்கள் உணர்ச்சிகளை, நெகிழ்ச்சிகளை, மனத்தின் கோணங்களை மாற்ற, கட்டுப்படுத்த உதவுகிறது.

-சோபா விமலதாஸ்

## புரட்சிப் பெண்

ஏய்! பெண்ணே,
அழுகையை நிறுத்து
பாரதி கண்ட புதுமைப்
பெண்ணாய் மாறு
அடைக்கப்பட்டிருக்கும்
கதவை திறந்து
பொங்கி வெடிக்கும்
புயலாய் மாறு
வெற்றிக் கனியைப்
பறித்தே புதிய
உலகை காணு

த.டிலானி,
மீசாலை.



## உங்கள் கணவருக்கு பிடித்த மனைவியாக வேண்டுமா?



1. அலுவலக நேரம் தெரிந்து அதற்குமுன் எழுந்து உணவு தயாரித்து அன்போடு பரிமாறி கணவர் புறப்படுவதற்குத் தேவையானவற்றை ஒழுங்குபடுத்தி ஆசையாய் வழியனுப்பி வையுங்கள்.
2. எப்போதும் சிரித்தமுகத்துடன் இருங்கள் .
3. வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று நேரகாலம் பாராது உபசரியுங்கள்.
4. உங்கள் மாமியாரைத் தாயாக மதித்து நடவுங்கள்.
5. கணவர் வீட்டாரை, உறவினர்களை அனுசரித்து நடவுங்கள்.
6. குடும்ப ஒற்றுமைக்காக உழையுங்கள்.
7. கணவரிடத்தில் குறைகளைக் கண்டு பிடித்தால் வெளியே சொல்லக்கூடாது.அவரை அன்பால் திருத்த முயலுங்கள்.
8. எந்தக் காரணம் கொண்டும் கணவரைச் சந்தேகப்படாதீர்கள்.
9. பக்கத்து வீடுகளில் அரட்டை அடிப்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
10. பணி முடித்துவீட்டுக்கு வரும் கணவருடன் வீட்டுப் பிரச்சினைகள், சிக்கல்கள் குறித்துப் பேசாதீர்கள்.
11. அளவுக்கு மீறி ஆசைப்படாதீர்கள்.
12. குழந்தைகளின் கல்வியில் அதிக கவனம் செலுத்துங்கள்.
13. வருமானத்தைக் கொண்டு சீராகத் திட்டமிட்டு குடும்பம் நடத்துங்கள்.
14. கணவரிடம் சொல்லாமல் கணவரின் பணத்தைக் கையாளாதீர்கள்.
15. என்ன தேவையிருந்தாலும் அதை முன் கூட்டியே கணவரிடம் சொல்லி வையுங்கள்
16. வீட்டில் எதிர்காலத் திட்டங்களைச் சிந்திக்கும் போது ஒத்துழையுங்கள்.
17. தினமும் வீட்டில் நடப்பதை இரவில் கணவரிடம் சொல்லிவிடுங்கள்.
18. அடக்கம், பணிவு தேவை. கணவர் விருப்பத்துக்கு ஏற்றாற் போல் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்.
19. கணவர் வீட்டுக்கு வரும் போது நல்ல தோற்றம் இருக்கும்படி வீட்டை அழகாக வைத்துக் கொள்ளுங்கள்.
20. பொது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்.நாட்டு நடப்பை அறிந்து வைத்திருங்கள்.

தேவையற்றதை வாங்கிப் பணத்தைச் செலவு செய்யாமல் சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
அதிகம் சினிமா பார்ப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
இப்போது பாருங்கள் உங்கள் கணவர் உங்களிடத்தில் எவ்வளவு அன்பை வெளிப்படுத்துகிறார் என்று.



## நிஜம்

வழமைக்கு மாறான
அதிகரித்த அலுவலக
வேலைச்சுமையை
முடித்து நேரம்
கடந்து வீடு வந்த
பெண்ணவளை
எதிர்கொள்கின்றன
எல்லோர் கண்களிலும்
சந்தேகப் பார்வைகள்
வில்லம்புகளாய் அவள்
இதயத்தைத்
துளைத்தெடுக்கும்
சொல்லம்புகள் எப்போதும்
எப்போதும் இந்த நிலை?

[illegible] செ.ரவிசாந்

## நாட்குறிப்பேடு...

பத்திரிகையில் 'வெளிநாட்டு விவகாரப்' பகுதியில் உள்ள பத்தியை வாசித்தபோது எனது மனது நொந்து போயிற்று.

வானதி தனது அப்பா, அம்மா அண்ணாக்களோடு வசித்து வந்தாள். பார்ப்பதற்கு அழகும் மினுமினுப்பும் கொண்டவள். சின்ன வயது மழலை அவள். பதினொரு வயதே நிரம்பியிருந்தாள். தனது பிரதேசத்தின் எழிலையும் வளர்ச்சியையும் அதிகம் நேசித்தவள். பெண்ணின் விடுதலையையும் பெண்களின் சுதந்திர வாழ்வியலையும் சுவாசித்தாள்.

ஒருநாள் அவளுடைய வீட்டுக்குப் போனபோது "கவிப்பிரியா எங்கட அண்ணாக்கள் எல்லாம் பள்ளிக்கு போய் படிக்கினம். ஆனால் பெண்கள் மட்டும் இந்தத் தேசத்தில் படிக்கக் கூடாதாம்"

"பள்ளிக்கூட யூனிபோம் போட ஆசையாய் இருக்கு எங்கட ஊரில இருக்கிற எல்லா பெண் பிள்ளைகளும் படிக்கோணும் என கூறிக் கொள்வாள்"

வானதி தனது பள்ளத்தாக்கில் பூக்கின்ற மலர்களை நேசித்தாள்.. சின்ன சின்ன மலைகளில் ஏறி நின்று வான வில்லையும் நிலாவையும் இரசிப்பாள்.

இந்தத் தேசத்தில் பெண்கள் கற்கக் கூடாது என்ற அடக்குமுறையாளர்களின் கருத்தை துணிச்சலோடு எதிர்த்தாள். என்னைப் போன்ற என் தேசத்து தோழிகள் படிக்க வேண்டும். இங்கே இருக்கின்ற பள்ளிக் கூடங்களில் பெண்களும் கற்க வேண்டும் என்ற உயர்ந்த கருத்துக்களை மக்கள் மயப்படுத்தினாள்; துணிந்து செயற்படுத்தினாள். போன கிழமை வானதி பேருந்தில் போனபோது அடக்குமுறையாளரால் தாக்கப்பட்டாள். இன்று வைத்தியசாலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறாள்.

ஆனால் அவளோடு பழகிய நட்பின் உச்சத்தில் ஒரு யதார்த்தவாதியாக நின்று வானதியின் உயர்ந்த இலட்சிய கருத்துகளுக்கு என்றும் தலை வணங்குகின்றேன்.

முன்பு ஒருநாள் வானதியின் நாள்குறிப்பேட்டை படித்தபோது

கல்வி எனது சுதந்திரம்
விளையாட்டு எனது உரிமை
பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு
பாடுவதற்கு எனக்கு உரிமை உண்டு
கடைகளுக்கு சென்றுவர எனக்கு உரிமை உண்டு

என எழுதி வைத்திருந்ததை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். தோழியாய் நின்று அவள் உயிருக்காக பிரார்த்திக்கின்றேன். வானதியின் நாட்குறிப்பேட்டில் இருக்கின்ற அவளுடைய மூச்சுக்காற்று பூவாசமாக மாறி உலகப் பெண்களின் நல்நெஞ்சங்களின் சுவாசத்தோடு...

ஆ.முல்லைதிவ்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிகோலேஜ் மனம்:-

# இராஜேஸ்கண்ணனின்




■ ந. மயூரரூபன்

மனதுக்குள் எந்தவித தடைகளுமற்று இயல்பாக இறங்கி, தான் நிற்கும் அல்லது தானுணரும் அனுபவங்களை அனைவரிலும் தொற்றவைப்பன. பொதுவாக படைப்பு ஒன்று வாசகர்களின் மனதில் வெவ்வேறான அனுபவத் தொற்றல்களை, அவர்களது நினைவுப் பரப்பில் மிதக்க விடுவனவாக இருந்தாலும், இராஜேஸ்கண்ணனின் எழுத்துகள் ஒரு பொதுவான உணர்வுத்தளத்தை அனைவருக்குள்ளும் மேற்கிளம்பச் செய்கின்றன.

இராஜேஸ்கண்ணனின் ''தொலையும் பொக்கிஷங்கள்'' அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். இவரது சிறுகதைகள் அகமனம் சார்ந்தவை. நுண்ணுணர்வுகளின் விரிவில் சமூகத்தின் அனைத்துக் கூறுகளையும் குறிப்பாக அரசியல், உளவியல் சார் மனவெளிப்பாடுகளையும் பேசுகின்றன.

மனதுக்குள் எந்தவித தடைகளுமற்று இயல்பாக இறங்கி, தான் நிற்கும் அல்லது தானுணரும் அனுபவங்களை அனைவரிலும் தொற்றவைப்பன. பொதுவாக படைப்பு ஒன்று வாசகர்களின் மனதில் வெவ்வேறான அனுபவத் தொற்றல்களை, அவர்களது நினைவுப் பரப்பில் மிதக்க விடுவனவாக இருந்தாலும், இராஜேஸ்கண்ணனின் எழுத்துகள் ஒரு பொதுவான உணர்வுத்தளத்தை அனைவருக்குள்ளும் மேற்கிளம்பச் செய்கின்றன. சிறுகதைகளுக்கான நேர்த்தியும், நேரடியாக உதைத்து இறங்கும் மொழியும் இவரது எழுத்துக்குப் பலம் சேர்ப்பன.

இலக்கியம் என்பது தெரியாத அல்லது மறைந்திருக்கும் பாதைகளைத் திறந்துவிடும் கணங்களை எங்களுக்குத் தருகின்றன. குறித்த படைப்புச் சூழல் என்பது உள்ளத்தில் நெகிழ்ச்சியை, வியப்பை, உத்வேகத்தை ஏற்படுத்துகின்றன. இராஜேஸ்கண்ணனின் சிறுகதைகள் மனங்களில் மறைந்திருக்கும் பாதைகளைத் திறந்துவிடுவன. உணர்வுகளில் நெகிழ்வினைக் கொண்டுவருவன. இவரின் கதைகளில் அந்த நெகிழ்வு எனக்குத்தரும் நெருக்கத்தை இங்கு பேசுகிறேன். மென்மையான மன உணர்வுகளின் தளம்பல்களை, உணர்வுகளின் நேர்கோடற்ற அதிர்வுகளை, அதன் கணங்களைத் தனது எழுத்துகளில் இராஜேஸ்கண்ணன் கவர்ந்து கொண்டிருப்பதுதான் சிறப்பு.

உண்மையில் இராஜேஸ்கண்ணன் ஒரு 'பிரிகோலர்' (Bricolour) 'பிரிகோலர்' என்பது தட்டுமுட்டுச் சாமானை பழுதுபார்ப்பவனை அழைக்கும் பிரெஞ்சு வார்த்தை. ஆதிவாசிகளிடமுள்ளது 'பிரிகோலேஜ்' (Bricolage) மனம் என்பார்கள். இராஜேஸ்கண்ணனிடம் உள்ளதும் இந்த 'பிரிகோலேஜ்' மனம்தான். இங்கு ஆதிவாசிகளுடன் அந்த மனதை தொடர்புறுத்தாமல் அவரது படைப்புச் சூழமைவு பற்றிப் பேசுகிறேன் என்பதை கவனம்கொள்ளவும்.

ஒரு கதைக்காக எடுத்துக்கொள்ளும் சில கருக்களை எழுதுவதில் இருந்து தவிர்ப்பதில் எங்களது நனவிலி மனம் குறியாக இயங்கிக் கொண்டிருக்கும். இது உள்மன இயல்பு. ஆனால் இராஜேஸ்கண்ணனின் மனமோ அந்த விடயத்தை தட்டுமுட்டுச்சாமான் திருத்துபவன் போல; உடைந்து நெளிந்த, ஒதுக்கப்படும் மனவுணர்வுகளை தவிர்க்காமல் தன்னிடமுள்ள (வேறெங்கிலும் அதற்கான கருவிகளை பெறாமல்) மொழி, சமூகவியல் பார்வை, செய்நேர்த்தி என்பவற்றினூடாக அழகான சிறுகதையை உருவாக்கி விடுகிறார். இந்த 'பிரிகோலேஜ்' மனதை இவரது 'இறுக்கம்' சிறுகதையில் இருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான உள்மன கோபம், பரஸ்பரம் வெளிப்படுகின்ற கரிசனை என்பன இங்கு எங்கள் மனம் புறமொதுக்கும் கரு. ஆனால் இராஜேஸ்கண்ணன் அந்த மன உடைவுகளை ஒதுக்குபவரல்ல.

கோபமும் கரிசனையும் உள்ளடங்கி மிக நேர்த்தியாக மாறிமாறி வெளிப்படுகின்றன.

''எவ்வளவு நடப்பு அவைக்கு....
......கொழுப்பு கூடிப்போச்சு''
என்று கோபமும்

''பாவம் எவ்வளவு களைத்துப் போயிருப்பாள். காலையில் தேத்தண்ணி கூட குடிக்காமல் போனவள்'' என கரிசனையும் மனதுள் கணங்களாய் மாறுகின்றன.

இப்படியான உள்மன, கணநேர கோபங்கள், கரிசனைகளை எழுதுவதிலிருந்து பலரின் மனம் தப்பித்துக் கொள்கிறது. 'சொந்த அனுபவம்' எனும் வாசிப்பைத் தந்துவிடும் என்ற பயமோ அல்லது அந்த நுண்ணுணர்வுகளைச் சொல்வதில் உள்ள பதட்டமோ அல்லது முக்கியப்படுத்தும் தன்மையோ காரணமாக இருக்கலாம்.

கவிதை என்பது 'மன நிகழ்வு', அதுபோல மொழியின் நிகழ்வும் என்பர். மனதின் மொழியின் ஆதிக்கம் இங்கு அதிகம். அதேபோல் சிறுகதைகளில் மனம், மொழி, உருவம், களம் என்பன கவனப்படுத்தப்படுகின்றன. இராஜேஸ்கண்ணனின் கதைகளில் மனமும் களமும் அதிக முக்கியப்படுத்தப்படுவது கவனத்துக்குரியது.

இராஜேஸ்கண்ணன் தனக்குள்ளிருக்கும் கருத்தாக்கங்கள், படிமங்கள், தனக்கேயான மொழி என்பவற்றுடன் சிறுகதைகளை எழுதுகிறார். அவரது மனம் 'பிரிகோலேஜ்' மனமாகவே இயங்குகிறது. புது ஒழுங்கில் இம்மனம் நேர்த்தியான அழகான சிருஷ்டிகளை உருவாக்கிச் செல்லும். ★

## கல்நெஞ்சுக்காரர் இல்லை நாங்கள்



''சோ''வெனப் பெய்யும் மழை
சொந்தம் கொண்டாடுகிறது
மண்ணோடு
வெள்ளப் படை கொண்டு
வீதியுலா வந்து
குளத்திலும் கடலிலுமாக
கலக்கிறது
காய்ந்து கிடந்த தாவரத்தின்
தலைகளிலெல்லாம்

''மசாஜ்''செய்கிறது
அட்டைகளும்,நத்தைகளும்
புற்றிலுறங்கிக்
கிடந்த பாம்புகளும்
மட்டைத்தேள்களும்,
மயிர்க்கொட்டிகளும்
ஊர்வலம் போகின்றன
கார்த்திகை மாதமெனில்
இவையெல்லாம் நிகழலாம்
நிகழாதும் போகலாம்
கார்த்திகையில்
மட்டுமா மழை?
சித்திரையில் கூட
சிலவேளை பெய்யலாம்?
நெஞ்சைப் பிழிந்து
கல்லையும்
கசிந்துருக வைக்கும்
நாளே கார்த்திகையின்
மகிமை
அன்று மண் காத்த
தெய்வங்கள்


முகம் காட்ட வரும்
அந்த உற்சவம்
ஊரைவிட்டகன்று
போயிற்று
மண்ணோடு மண்ணாகின
மாணிக்கங்களின்
பொன்மேனிகள்
கருவறைகளென நாம்
வணங்கிய
கல்லறைகள் யாவும்
காணாமல் போயின
தீபமேற்றி,பூத்தூவி
மெய்யுருகி நின்று
மொழியாகி எங்கள்
மூச்சாகிப் போனவரை
நினைத்து வணங்கும்
பேறிழந்து
முப்பத்தியாறு மாதங்கள்
முற்றிற்று
மழையே!
இந்த நாளை மறந்தவர்

யாருளர்?
அவரோடு சேர்ந்து
நீயும் தொலைந்து போ!
மண்ணுக்குள் உறங்கும்
கண்மணிகளே
உங்களை வணங்க
நாங்கள் கட்டிய
ஆலயங்கள்
இன்றில்லை
கோபுர வாசல்களும்
இல்லை
கல் இல்லை
கலந்து கட்டிய
மண்ணில்லை
இருந்தும்
உங்களை மறந்து
வாழ நாங்கள்
கல்நெஞ்சுக்காரருமில்லை.

மு.யாழவன்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 242



அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. சூதாடித் தோற்ற பாண்டவர்கள் ஒரு வருடம் இதையும் மேற்கொண்டனர்
6. அஃறிணைப் பன்மை (பால்) இது
8. கோள்
10. திங்கள்
11. சோற்றுடன் சேர்த்துச் சாப்பிடுவர்
12. கடுமையான
13. வீடு
14. கூறல்
16. சொந்தம்
17. சுந்தரம்
18. கட்டையைப் பிளக்க இறுக்குவது
20. வேறாதல்
21. சந்திரன்

### மேலிருந்து கீழ்

1. அட்டூழியமான செயல்
2. நினைவு
3. புனித இடம்
4. நீர்த்தேக்கம்
5. வெகுமதி
7. தாமரை
9. இரசிக்கும் தன்மை
12. திருட்டு
14. எரிக்கப்படுவது
15. கல்வி
16. விவசாயத்துக்கு நிலத்தை இவ்விதமும் பண்படுத்தல்
17. சிங்கம்
18. சம்மதச் சொல்
19. ஒரு காட்டு மிருகம்

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 240 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) துச்சம்பாவிதம் (6) வதி (7) தரும் (9) தாம்பீகம் (11) ஆறு (12) தம்புரா (14) ஓம் (15) தம்பதி (17) ஆவி (18) நல் (19) குபவன் (20)பசுமை (22) தின் (23) மையல்

**மேலிருந்து கீழ்**

(1) அவதானி (2) சதிர் (3) பாதகம் (4) விரும்புதல் (5) தம் (8) பெறுமதி (10) மீதம் (13) ராம் (14) ஓவியன் (16) பஞ்சு (17) ஆகுதி (18) நன்மை (20) பல் (21) மைனா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே ரூபா 300/-, ரூபா 250/-, ரூபா 200/-, ரூபா150/- ரூபா 100/- பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 242**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (05.12.2012) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 240 இக்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ச.மதி,
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை,கைதடி.

**2 ஆம் பரிசு**
ற.றாசில்டவி,
மண்குழி வீதி, ஊர்காவற்றுறை.

**3 ஆம் பரிசு**
ஜா.சாமுத்திரியா,
மே/பா .வை.ஜெயந்தி, பொன்மணி நிலையம், அல்வாய் வடக்கு, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
லோ.நிரோகா,
முருகமூர்த்தி கோயிலடி கமுவாடி, ஆனைக்கோட்டை.

**5 ஆம் பரிசு**
வே.மார்க்கண்டு,
இல.07/30 வீட்டுத்திட்டம். உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.

**பாராட்டுப் பெறுவோர்**

சிவகடாட்சம் நவநீதமணி,
பிருந்தாவனம், மானிப்பாய் வீதி, மாக்கம்பரை, கோப்பாய்.

ந.கோமேஸ்வரன்,
6 ஆம் வட்டாரம், அனலைதீவு தெற்கு, அனலைதீவு.

பி.சிறிப்பிரியா,
மன்/பாப்பாமோட்டை ஆர்.சி.ரி.எம்.பாடசாலை திருக்கேதீஸ்வரம், மன்னார்.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

# ஒளிர்கின்றாய்




■ பிறைவானன்

விடைபெறும் நாளில்
எத்தனை களங்களை
நீங்கள் சந்தித்திருக்கிறீர்கள்?
ஒவ்வொரு களமுனையும்
உங்களை விழுங்கிவிடக்கூடாது என்று
எத்தனை பிரார்த்தனைகள்

பங்கிட்டாலும் காணாமல் போகும்
ஒவ்வொரு நாள் உணவில்
அதற்குள் உங்களுக்கொரு பங்கு
வைத்திருந்தபோதுதான்
தாய் மண்
உங்களைப் பிள்ளைகளையாக்கியது.

இன்றைய நாள்களிலும்
உங்களை எதிர்பார்த்த வண்ணமே
இருக்கின்றார்கள்.
நடுசாமம் 12 மணிக்கும் கதவுதட்டும்
சத்தம் கேட்கும் என்று.

இருளின் உருவில்
நீங்கள் இருந்துகொண்டு
எங்களை அடையாளப்படுத்தினீர்கள்
சுற்றி வளைப்புக்குள்
பல நூறு குடும்பங்கள்.
சனத்துக்கு பாதிப்பு வராமல்
சயனைட்டை கடித்தவர்
நீங்கள் .

சண்டையில் எதிரியின் குண்டில்
மடிவது மக்களே
உங்களது இலக்கு
தவறாமல் எதிரிகளை மட்டும்
சாகடிக்கும்
போர்க்களத்தில்
துப்பாக்கியுடன் வந்தாலும்
பேனாவுடன் வந்தாலும்
கம்பீரத்துக்கு குறைவில்லை
வரிசையாக நீ நிற்கிறாய்
ஒரே மாதிரியாக ஒளிர்கின்ற உங்களை
வேறுபடுத்தமுடியாத போது தான்
எல்லோரும் தீபம் ஏற்றுகின்றோம்.
மாவீரர் கல்லறை வாசல்படி
வந்து தீபமாய் ஒளிர்கின்றபோது தான்
வீரர்கள் உருவம் ஒளியின் நிழலில்
ஈழமாய்ப் பரவி நிற்கிறது.

உங்களுக்கான கார்த்திகை மாதம்
எமக்கானதாக மாறியதால்
கூடுதலாகப் பிரகாசிக்கின்றாய்.
ஆயிரம் ஆயிரம்
கண்ணீர்த் துளிகளில்
நனைந்ததால்தான்
மழையிலும் கூட நீங்கள்
எரிகின்றீர்கள்.

இருண்டு போன நாலுபுறமும்
பூட்டியடைக்கப்பட்ட சூழலில்
பற்றியெரிந்தபோதுதான்
ஒளியில் உனது முகம் தெரிந்தது.
அன்றில் இருந்து உனது பெறுமதி அறிந்த
நாளிலிருந்து
தீபமாக ஒளிர்கின்றாய்.
பாதை காட்டிச் சென்றவர்களுக்காக
மட்டும் ஒளிரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கியற் கலையில் ஆழக் கால்பதித்தவர்

■வயாவிளான் தவமைந்தன்

## ஈழக்கூத்தன் அ.தாசீசியஸ்



எமது மனம் எப்போதும் தூய்மையை நோக்கி நடைபோட வேண்டும். மனதுக்குள் சத்திய உணர்வு இருக்க வேண்டும். ஏனெனில் நெஞ்சுக்குள் இருக்கும் ஒளி பிரிவினை அற்றது.

குழந்தை ம.சண்முகலிங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியானது ஈழத்தின் தமிழ் நாடகத்துறை வரலாற்றில் பெரும் சாதனைகளைப் படைத்துத் தற்போது எம்முன்னே ஆலமரம் போல் தலை நிமிர்ந்து நிற்கின்றது. 1978இல் இந்தக் கல்லூரியானது தொடங்கப்பட்ட போது அதன் செயற்பாடுகளின் முதுகெலும்பாக இருந்து அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் பணியாற்றியதுடன் தமிழர் வாழும் பகுதிகளான சிற்றூர்கள் அனைத்துக்கும் சென்று எமது நாட்டார் கலைகளைக் கற்றுணர்ந்து தமிழர் பண்பாட்டின் வேர்களாக விளங்குகின்ற கிராமியக் கலைகளை நவீன அரங்குக்குள் புகுத்திய சாதனையாளராகவும் ஈழத்து நாடகக் கலைத்துறையில் வரலாறு படைத்த பேராசானாகவும் உலகப் புகழ் பெற்ற இயல் விருதினைப் பெற்ற சிறந்த கலைஞராகவும் திகழ்பவர் அ.தாசீசியஸ்.

மறைந்த அல்போன்ஸ் - பட்ரீசியா தம்பதியின் மகனாக 07.12.1940இல் தாளையடியில் இவர் பிறந்தார். கூத்துப் பாரம்பரியத்தில் தோன்றிய இவர் தாளையடி ஆரம்பப் பள்ளியில் கற்றபோது தனது ஏழாவது வயதில் பாதியாராக நடித்து, முதல் பரிசைப் பெற்றதுடன் இளவாலை புனித ஹென்றியரசர் பாடசாலையில் கற்ற காலத்திலும் பத்தாவது வயதிலேயே பெரும் நடிகனாகப் பெயர் பெற்று அந்தக் காலத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மேடையேற்றிப் புகழ் பெற்றிருந்த கோப்பாய் ஆம்ஸ்ரோங் என்பவரால் பாராட்டப்பட்டதுடன் ஐந்துரூபா பணப்பரிசையும் தனதாக்கிக் கொண்டார்.

க.பொ.த. உயர்தரத்தை புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்று அதன்பின் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் பேராசிரியர் அஸ்லிகல்பே என்பவரது தலைமையில் இயங்கி வந்த நாடகக் குழுவில் இணைந்து நாடக நெறிப்படுத்தல் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார். இந்தக் குழுவால் பெற்றிஸ்வா என்னும் ஆங்கில நாடகமானது தயாரிக்கப்பட்ட காலத்தில் அதன் உதவி இயக்குனராகப் பணியாற்றியதுடன் இந்நாடகமானது கொழும்பில் மேடையேற்றப்பட்ட போது அதன் கதாநாயகனால் நடிக்கமுடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டதால் அஸ்லிகல்பேயின் தீவிர வேண்டுகோளுக்கு இணங்கிக் கதாநாயகனாக வெகு சிறப்புடன் நடித்து அனைவராலும் வியந்து பாராட்டப்பட்டவர்.

1967இல் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து, கைத்தொழில் அமைச்சில் மொழிபெயர்ப்பாளராகச் சில காலம் பணியாற்றிய பின் கல்வி அமைச்சில் கல்வி அதிகாரியாகப் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார். இவ்வாறு கொழும்பில் வாழ்ந்த காலத்தில் ஆங்கில நாடக அரங்கில் இணைந்து கோப்பாய் வனஸ்ற் மக்கின்ரயர் என்பவரிடம் நாடகத்துறையின் முழுமையான பயிற்சிகளையும் நிறைவாகப் பெற்றுக் கொண்டார்.

## 70
## சாதனைக் கலைஞரைச்
### சந்திப்போம் சிந்திப்போம்

நாடகக் கலையை உயிர் மூச்சாக நேசித்து வந்த இவர் அமெரிக்க மாக்சி பல்கலைக்கழகமும் இங்கிலாந்து சதாம்ரன் பல்கலைக் கழகமும் இணைந்து கொழும்பில் நடத்தி வந்த மூன்று ஆண்டுகள் கொண்ட நாடக டிப்ளோமாப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். இந்தக் காலத்தில் அமெரிக்க, இங்கிலாந்து நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த உலகப் புகழ்பெற்ற நாடக வல்லுநர்களிடமும் பேராசிரியர்களிடமும் நவீன அரங்கு பற்றிய அனைத்து விதமான நுட்பங்களையும் தெளிவுறக் கற்று ஈழத் தமிழ் நாடக அரங்கில் தனது வரலாற்றுப் பணிகளை ஆற்றத் தொடங்கினார்.

திரைப்படத்துறைப் பயிற்சிகளைப் பெற்றுச் சிங்களத் திரைப்படத் தயாரிப்புக்களிலும் பணியாற்றி வந்த இவர் ஆங்கில நாடகங்களில் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வந்தாலும் இளைய பத்மநாதன், சிவாநந்தன், நா.சுந்தரலிங்கம் போன்ற பல நாடகக் கலைஞர்களை இணைத்து நடிகர் ஒன்றியம் என்னும் அமைப்பை 1969இல் உருவாக்கினார்.

இவரால் நாடகத் துறையில் ஈடுபடுத்தப்பட்ட மகாகவி உருத்திரமூர்த்தியால் எழுதப்பட்ட கோடை, புதியதொரு வீடு போன்ற நாடகங்களை 1969இல் வெற்றிப் படைப்பாக நடிகர் ஒன்றியத்தின் தயாரிப்பாகக் கொழும்பில் மேடையேற்றினார். இதன்பின் 1976இல் கொழும்புப் பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட நாடக டிப்ளோமாப் பயிற்சியைப் பெற்ற காலத்தில் ஏற்பட்ட குழந்தை ம.சண்முகலிங்கத்தின் இனிய நட்பு இவரை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தது.

எண்ணற்ற நாடக மேதைகளை ஈழத்தில் உருவாக்கிய நாடக அரங்கக் கல்லூரியின் தொடக்க கால நாடகத் தயாரிப்புக்களைப் பொறுப்பேற்றிருந்த இவர் கோடை, புதியதொரு வீடு, கந்தன் கருணை, பொறுத்தது போதும் போன்ற நாடகங்களை மிக அற்புதமாக நெறிப்படுத்திக் காவியப் படைப்பாக மேடையேற்றி ஈழத்தமிழ் நாடக அரங்கை உயிர் பெறச் செய்தார்.

எமது நாடக வரலாற்றில் முதலாவது சிறுவர் நாடகமாகக் கருதப்படும் கூடி விளையாடு பப்பா என்னும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகத்தை முதன் முதலில் நெறிப்படுத்தி மேடையேற்றிய பெருமைக்குரிய இந்தக் கலைஞர் 1980இல் நைஜீரியாவுக்குச் சென்று நான்கு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியதுடன் 1984இல் இருந்து இங்கிலாந்தில் வசித்து வருவதுடன் இலண்டன் பி.பி.சியின் அறிவிப்பாளராகவும் பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர்.

புலம்பெயர் தமிழர்களின் கலைத்துறைக் காவலனாக விளங்கும் இவர் தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு போன்ற விழுமியங்களைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் இன்று வரை செயலாற்றி வருகின்றமை போற்றுதற்குரியதாகும்.

எமது மனம் எப்போதும் தூய்மையை நோக்கி நடைபோட வேண்டும். மனதுக்குள் சத்திய உணர்வு இருக்க வேண்டும். ஏனெனில் நெஞ்சுக்குள் இருக்கும் ஒளி பிரிவினை அற்றது. எனவே ஐம்புலனை அடக்கி ஆறாவது அறிவை விருத்தி செய்ய எம்மைப் பழக்கிக் கொண்டால் நிச்சயமாக நாம் நினைப்பதைச் சாதித்து விடலாம்.

நாடகம் என்பது நல்ல மனிதரை உருவாக்க வேண்டிய கலை. ஆகவே சுயதேடலில் ஈடுபட்டு எமது பலம், பலவீனங்களை நாமே கண்டுணர்ந்து ஏனையோரை அரவணைத்து சிறந்த நாடக மரபை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும் எனத் தனது கருத்துக்களை இவர் அன்புடன் கூறுகின்றார். ★

# நிரப்ப முடியாத கோபப் பள்ளங்கள்



ஒரு ஊரில் ஒரு இளைஞன் இருந்தான். அவன் எப்போதும் கோபப்படும் சுபாவத்தைக் கொண்டவன். ஒருமுறை அவனது நண்பன் அவனிடம் ஆணிகள் நிரம்பிய பையைக் கொடுத்தான். நீ எப்போதெல்லாம் கோபப்படுகிறாயோ அப்போதெல்லாம் ஒரு ஆணியை இந்த சுவற்றில் அடிக்கவும் என்றான்,

இளைஞனும் அப்படியே செய்து வந்தான். முதல் நாள் அவன் 35 ஆணிகளை அடித்தான், மறு நாள் 30 என்று இப்படியாக குறைந்து கொண்டு வந்தது. சில நாள்கள் கழித்து அவன் கோபப்படுவதை நிறுத்தி விட்டான். அதனால் அவன் ஆணிகளை அடிக்கவில்லை. அதை அவனது நண்பன் பார்த்துப் பெருமைப்பட்டான். அவனை முழுவதுமாக திருத்த ஆசைப்பட்ட அவன் அவனிடம் அடித்த ஆணிகளை பிடுங்கச் சொன்னான்.

இளைஞனும் அப்படியே செய்தான். அதைப் பார்த்த அவன் நண்பன் அவனிடம் சொன்னான்.

என் நண்பனே. நீ நான் சொன்னபடியே எல்லா வேலைகளையும் செய்தாய். இப்போது நீ அடித்த ஆணிகள் பிடுங்கப்பட்டு விட்டன. ஆனால் ஆணி அடித்த இடங்களில் உள்ள ஓட்டைகளைப் பார். இந்த சுவர் முன்னால் இருந்த மாதிரி இல்லை. எல்லா இடங்களிலும் ஓட்டைகள் உள்ளன. அது போலத்தான் நீ கோபத்தில் சொல்லும் வார்த்தைகளும், செயல்களும் ஒரு வடுவை உண்டாக்கி விடும். நீ என்னதான் உன் செயல்களுக்கு மன்னிப்பு கேட்டாலும் அந்த வடு மாறாது, மறையாது. நீ வார்த்தைகளால் உண்டாக்கும் வடுவுக்கும், செயல்களால் உண்டாக்கும் வடுவுக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.

என் நண்பனே, உண்மையை சொல்லப் போனால் நண்பர்கள் ஒரு அரிய பொக்கிஷங்கள். அவர்கள் உன்னை சிரிக்க வைப்பார்கள். உன் வாழ்க்கையில் நீ உயர தட்டிக் கொடுப்பார்கள். நீ சொல்வதைக் காது கொடுத்து கேட்பார்கள். நீ நல்ல நிலைமைக்கு வரும் போது உன்னைப் புகழ்வார்கள். அதையும் இதய பூர்வமாகச் செய்வார்கள். அதைத் தான் நான் இப்போது செய்தேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

25.11.2012 முதல் 01.12.2012 வரை

தருபவர் - வித்தியா

**மேஷம்** - பேச்சில் இனிமையும், ஆன்மிக கருத்துக்களும் நிறைந்திருக்கும். இளைய சகோதரர் வாழ்வில், எதிர்கொள்கிற சிரமங்களைச் சரிசெய்ய தகுந்த ஆலோசனை, உதவி வழங்குவீர்கள். எதிர் மனப்பாங்குடன் பேசுபவரிடம் இருந்து விலகுவதால் தேவையற்ற விவாதம், மனக்கஷ்டம் ஆகியவற்றைத் தவிர்க்கலாம். இல்லறத்துணையின் கருத்துக்களை மதித்து செயற்படுவதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கூடுதல் உத்தியோகத்தர், பணியாளர்களை அன்புடன் வழிநடத்துவதால், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். மாணவர்கள், ஒருமுகத்தன்மையுடன் படிப்பதால் எதிர்பார்த்த தேர்வும் வெற்றிபெறலாம்.

**இடபம்** - எல்லோரிடமும் அன்பு, பாசத்துடன் பேசி நன்மதிப்பும், சிறந்த நட்பும் பெறுவீர்கள். நிலுவை பணவரவை தகுந்த முயற்சியால் பெறுவீர்கள். குடும்பத்தின் முக்கிய தேவைகளை மனமுவந்து நிறைவேற்றுவீர்கள். இளைய சகோதரர் வாழ்வில் முன்னேற்றம் பெற, சில வாய்ப்புக்களை உருவாக்கித் தருவீர்கள். அறிமுகம் இல்லாதவர்களுக்கு உதவுவதில் முன்யோசனை, நிதானம் என்பவற்றைப் பின்பற்றுவதால், தேவையற்ற சிரமம் வராமல் தவிர்க்கலாம். இல்லறத்துணை உங்கள் செயல்களில் அதிருப்தி கொள்ளாத வகையில் நடப்பது நல்லது.

**மிதுனம்** - வாழ்வில் நீதி, நியாயம் ஆகியவற்றை அதிகளவில் பின்பற்றி சமூகத்தில் நல்ல பெயர் பெறுவீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைத்து, மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நோய் தொந்தரவு விலகி, உடல்நல ஆரோக்கியம் பெறுவீர்கள். நிர்ப்பந்த பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் அன்பு, ஆலோசனை உங்களை உற்சாகமுடன் செயற்பட வைக்கும். திட்டமிட்ட பணிகளைக் குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். மாணவர்கள் பெற்றோரின் எண்ணங்களை மதித்து செயற்படுவதால் எதிர்கால நன்மை உண்டாகும்.

**கடகம்** - இடம், பொருள் அறிந்து பேசி, தேவையற்ற சிரமம் அணுகாமல் தவிர்த்துக் கொள்வீர்கள். நண்பர், உறவினர்களுக்கு இயன்றளவில் உதவி செய்து நன்மதிப்பு பெறுவீர்கள். எதிரியால் இருந்த தொல்லை பெருமளவில் குறையும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் வளர்ச்சிப்பணி செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை உயர்ந்து உபரி பணவரவைத் தரும். பெண்களுக்கு, நீண்ட நாள் எதிர்பார்த்த ஆபரணச் சேர்க்கை பெற நல்யோகம் உண்டு. மாணவர்கள் ஒருமுகத்தன்மையுடன் படித்து திட்டமிட்ட தேர்ச்சி இலக்கை அடைவர்.

**சிங்கம்** - சொந்தப்பணியில் மட்டும் ஆர்வம் கொண்டு, வாழ்வில் வளம்பெற தேவையான பணவரவைப் பெறுவீர்கள். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவதால் குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். புத்திரரின் விளையாட்டுத்தனமான குணங்களைக் கண்டிப்பதில், நிதானமான அணுகுமுறையைப் பின்பற்றவேண்டும். இதனால் தேவையற்ற சிரமம் எதிர்கொள்வதைத் தவிர்க்கலாம். உற்பத்தி, விற்பனை உயர்ந்து கூடுதல் பணவரவு கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் பணி இலக்கை நிறைவேற்றி சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் படிப்பில் கவனம் எடுக்கவும்.

**கன்னி** - கடந்த தினங்களில், உங்களை வளமாகப் பேசிய சிலரை எதிரும் புதிருமாக சந்திக்க நேரிடலாம். பெருந்தன்மையுடன் நடந்து அவர்கள் மனதில் புதிய மாற்றம் உருவாக்குவீர்கள். இளைய சகோதரர் வாழ்வியல் நடைமுறையில் வளர்ச்சி பெற்று, உங்களுக்குத் தேவையான உதவி புரிவார். நண்பருக்கு கடந்த தினங்களில் கொடுத்து உதவிய பணம் திரும்பக் கிடைக்கும். இல்லறத்துணை அன்பு பாசத்துடன் நடந்து குடும்பத்துக்கு அதிக பெருமை தேடித்தருவர். அரச தொடர்பாக, எதிர்பார்த்த அனுகூல பலன் பெறுவீர்கள். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

**துலாம்** - இனம்புரியாத வகையில் மனதில் உருவாகும் குழப்பங்களை உங்கள் நலன் விரும்புபவரின் உதவியால் சரி செய்வீர்கள். சமூக நிகழ்வுகளை அறிந்து கொள்வதில் இருந்த ஆர்வம் சிறிதளவு குறையும். இல்லறத்துணை சேமிப்புப் பணத்தை பயன்படுத்தி, குடும்ப செலவு நிறைவேற்ற உங்களுக்கு உதவுவர். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம்பெற புதிய யுக்திகளைப் பயன்படுத்தி, எதிர்பார்த்த பணவரவைப் பெறுவீர்கள். பணியாளர்கள் நிலுவைப்பணி நிறைவேற்றி நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். மாணவர்கள் தகுந்த அக்கறையுடன் படிப்பதால் மட்டுமே தகுந்த தேர்ச்சி பெறமுடியும்.

**விருச்சிகம்** - மனதில் தாழ்வு மனப்பான்மை அகற்றி உத்வேகத்துடன் செயற்படுவீர்கள். பணிகளில் நேர்த்தியும் புதுப்பொலிவும் உண்டாகும். சமூக நிகழ்வுகளின் தன்மையை உணர்ந்து செயல்களை அமைத்துக் கொள்வீர்கள். இதனால் புகழும் பெருமையும் பாதுகாக்கப்படும். விலை மதிப்புள்ள பொருள்களை உரிய கவனத்துடன் பயன்படுத்துவது நல்லது. உடல்நல ஆரோக்கியம் சீர்பெற சிறியளவிலான மருத்துவ சிகிச்சை தேவைப்படும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து நிர்வாகத்திடம் நன்மதிப்புப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் கவனம் எடுக்கவும்.


**தனுசு** - மனதில் புதிய உற்சாகமும் செயல்களில் திருத்தமும் மேற்கொள்வீர்கள். இதனால் நற்பெயரும் பணிகளில் நல்ல முன்னேற்றமும் கிடைக்கும். இளைய சகோதரர், வாழ்வில் கூடுதல் பணவசதி பெற்று உங்களுக்கும் உதவுவர். பிறர் பொறாமைப்படுகின்ற அளவில் உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். கேளிக்கை விருந்துகளில் உடல்நல ஆரோக்கியம் உணர்ந்து, அதற்கேற்ப கலந்து கொள்வது நல்லது. இல்லறத்துணை, உங்கள் கருத்துக்களை நன்கு உணர்ந்து கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர்.

**மகரம்** - எந்தச் செயலையும் தகுந்த திட்டமுடன் நிறைவேற்றுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். அயலில் உள்ளவர்களுடன் இருந்த மனக்கிலேசம் விலகி அன்பு, நட்பு வளரும். இல்லறத் துணை மனதில், உங்களைப் பற்றிய மதிப்பீடு குறையாத அளவுக்கு நடந்து கொள்வது அவசியமாகும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள். பணியாளர் சிறப்பாகச் செயற்பட்டு சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் கல்வியிலும் உடல் நலத்திலும் தகுந்த அக்கறை கொள்வது நல்லது.

**கும்பம்** - புதிய முயற்சிகளை செயற்படுத்தி வியத்தகு அளவில் நன்மை பெறுவீர்கள். உறவினர்களிடம் பேசுவதில் நிதானமான அணுகுமுறையைப் பின்பற்றுவீர்கள். சமூகப் பணியிலும் ஓரளவு ஈடுபாடு கொள்வீர்கள். எதிர்மனப்பாங்குடன் உங்களிடம் பேசுபவரையும் மதிப்புடன் நடத்துவீர்கள். இதனால் அவர்கள் மனதில் நல்ல எண்ணம் வளரும். இல்லறத்துணை, குடும்பத்தின் பணவரவில் சேமிப்பை அதிகரிக்க தேவையான வழிமுறை சொல்வர். மாணவர்கள் இலட்சிய மனதுடன் படித்து திட்டமிட்ட தேர்ச்சி இலக்கை அடைவர்.

**மீனம்** - உங்கள் செயல்களில் உத்வேகமும், நியாயதர்ம நடைமுறையும் நிறைந்திருக்கும். இடம், சூழ்நிலை உணர்ந்து பேசி சமூகத்தில் நன்மதிப்பு பெறுவீர்கள். காலமுறை உணவுப் பழக்கமும் தகுந்த உடற்பயிற்சியும், உடல்நல ஆரோக்கியத்தை சீராக்க உதவும். இல்லறத்துணை கூடுதல் புரிதல்திறன் வளர்ந்து குடும்பத்துக்கு நன்மை உருவாக்குவதில் தகுந்த கவனம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த அனுகூலங்களைப் பாதுகாக்க, கூடுதல் உழைப்பு, கண்காணிப்பு அவசியமாகும். பணியாளர்களுக்கு [illegible] இருக்கும். மாணவர்கள், நினைவுத் திறன் வளர்ந்து படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

# வேரோடு நினைதல்



அந்த மழையின் ஒவ்வொரு துளியிலும்,
நீ நனைந்தது தெரியுமெனக்கு.
நேற்றைய வெயிலின் ஒவ்வொரு கதிருக்கும் – உன்
உச்சி வகிட்டின், ''நேர்மை'' தெரியுமென்பதும்
நானறிவேன்.

கடந்த போன காற்றின் ஒவ்வொரு அணுவும்,
உன் வியர்வை அயன்களால், நேரேற்றப்பட்டன.
மிதித்து மடித்ததற்காய் ஒவ்வொரு புற்களிடமும்,
மனதார மண்டியிட்டு மன்னிப்பு வேண்டியவன் – நீ!

சிவப்புப் பூக்களை கண்டால் சிலிர்த்தும்,
மஞ்சள் மலர்களோடு சேர்ந்தே மலர்ந்தும்,
'வெள்ளைப் பூ'க்களை கொஞ்சம் வெறுத்தும் வைத்தவன் – நீ
''கறையற்றவர்கள் காலப் போலிகள்'' என்றவுன்
நம்பிக்கை,
இன்றைக்கு என்னிடம் எச்சமாய்!!

சூரியன் வரும் வரை, பனித்துளிகளோடு பேசிக்கொண்டு
நாளொன்றை தொடக்குபவன் – நீ.
'சப்தரிஷிகளும்', 'அருந்ததியும்,
'வேட்டைக் காரனும்', 'சிறு கரடியும்' சற்றே அயர்ந்த
பின்னால்'
அரைக் கண்ணில் உறங்கியவன் – நீ!
பதி விரதை யல்ல – நீ,
அத்தானின் அதே வரிசையில், அன்னை மண்ணையும்
காதலித்ததால்!
'பதின்ம' வயதுக்குள் படி தாண்டியவன், ஆயினும்
பக்கத்து வீடுகளல்ல, மொத்தவூருமே
உன் பேர் சொன்னால்,

ஒரு கணமேனும் கனக்கின்றன!!
'அவனுக்கு' பின் நின்றும், அனைவருக்கும் முன்
சென்றவளே!
''பச்சையமில்லாதது எப்படித் தாவரமாகும்?''
விரதநாளொன்றில் நீ வீசிப்போன வெடியொன்றால்,
இற்றை வரைக்கும்,
''காளான் – மச்சமா? மரக்கறியா?''
தெளிவில்லை அம்மாவுக்கு!

'வெண் கருவில் கொழுப்பென்று',
உடலை ஒடுக்கவும்,
'ஐன்ஸ்ரீன்', 'அப்துல் கலாம்' வரை'
அறிவை அகட்டவும்,
புதிர் – எதிர்களும் புதிதில்லை உனக்கு!
விடுமுறை முடிவதை, முதல் நாளிரவும்
சொல்லாதவளே!
''மீன் அழுத கண்ணீர்'' – உன் வார்த்தைகளே – என்
முதல் கவிதைத் தலைப்புமாகியது.'

வானுக்கும், பூமிக்கும் இடையில்
முழுமையால் வாழ்ந்தவன், நீ மட்டுந்தானேடி
அக்காச்சி!
சீருடையில் வைத்துன்னை, 'சுற்றிப் போட்ட'
'உப்பு, மிளகாய்' வாசம் இன்னமும் எம் கிணற்றுள்!
'பரிபூரணி' நீ மட்டுமே, அப்பம்மாவின் பேரப்பிள்ளைகளுள்
என்பது பிரபஞ்சவுண்மை!
மூன்றாம் வருஷம் 'முள்ளியவளை'யில் – உன்
காலடி வைத்துத் தூக்கிய 'தென்னம்பிள்ளை'யின்
முதல்குலை, நேற்றிறக்கினோம்.

'தண்ணீரூற்றில்' தற்செயலாய்ப் பார்த்த வீதியொடுக்கில்,
நெற்றியில் பதிந்தவுன் ஆழ முத்தம் போல'
அத்தனை 'மென் – இனிமை' இளநியிலும்!
அப்பாவோ, ''உப்படி பிள்ளை'' – என்றார்.
கண்ணீரும் கலந்து குடித்திருப்பாரோ?

பிரேமாக்காவின் பொடிச்சிக்கு காய்ச்சலென்று,
மீதமிருந்த மூன்றையுமே குடுக்கட்டாம் – அம்மா,
தனக்கு வேண்டாமாம்!!
''ஏனக்கா, இளநீயும் மச்சமோ??''

- அபிதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கச்சேரிக்கு முப்பது ரூபா

■ எஸ்.எம்.கோபாலரத்தினம்

'லயஞான குபேர பூபதி' தெட்சணாமூர்த்தி தவில் கச்சேரிக்கு சென்றால் நிகழ்ச்சி ஒழுங்கு செய்தவர்கள் அவருக்கு சன்மானமாக எவ்வளவு தொகை கொடுத்திருப்பார்கள்?

ஒரு கச்சேரிக்கு முப்பதாயிரம் ரூபா கூட கொடுத்திருக்கலாம். இந்தத் தொகைக்கு அதிகமாகவும் அவர் பெற்றிருக்கக்கூடும்.


பெரியபெரிய வித்துவான்களிலெல்லாம் குறை கண்டுபிடித்துக் 'குட்டுக் கொடுக்கும்' தமிழ் நாட்டின் பிரபல கலை விமர்சகர் 'சுப்புடு' சிறப்புக்குரிய தவில் மேதை தெட்சணாமூர்த்தி பற்றி ஒரு தடவை எழுதுகையில்,

தெட்சணாமூர்த்தி யாழ்ப்பாணத்திலிருந்து வந்து பிரமாதமாகப் பண்ணுவதாகப் பேசிக்கொண்டதால் அவர் அப்படி என்னதான் வாசிக்கிறார் என்பதை பார்க்கப் போயிருந்தேன். 'அது தவில்தான், அது விஷேசம்தான்' என்று குறிப்பிட்டு பாராட்டி எழுதியிருந்தார். உலகமே தெட்சணாமூர்த்தியின் தவில் இசைக்குத் தலை வணங்கியது. ஆனால் அந்தத் தவில் மேதையின் வாத்திய இசை ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலித்தட்டோ, அவர் வாசித்து பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாக்களோ சுலபமாக எங்கும் கிடைக்கக் காணோம். இங்கும் இல்லை, தமிழ் நாட்டிலும் இல்லை. தமிழர்களுக்கே உரிய அசட்டையாலும் அலட்சியத்தாலும் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற அக்கறையின்மையும் பல பெரும் கலைஞர்களின் பொக்கிஷங்களைப் பாதுகாத்து வைக்கத் தவறிவிட்டோம். இனியாவது நமது புதிய பரம்பரை இந்தத் தவறுகளைச் செய்யாதிருக்க வேண்டும்.

உலகப் புகழ்பெற்ற 'லயஞான குபேர பூபதி' தெட்சணாமூர்த்தி ஒரு கச்சேரிக்கு ஆயிரக் கணக்கில் சன்மானம் வழங்கப்பட்ட காலத்தில் நான் அவருக்கு ஒரு கச்சேரிக்கு 30 ரூபாய் வழங்கினேன் என்றேல் யாரும் நம்பமாட்டார்கள். அதுமட்டுமல்ல அவருடன் சேர்ந்து தனித்தவில் கச்சேரியில் வாசித்த சுரஞானகேசரிகள் இணுவில் என்.ஆர்.சின்னராசாவுக்கும் நாச்சிமார்கோயிலடி கே.கணேசனுக்கும் இருபதும், பதினைந்து ரூபாக்களும் கொடுத்திருக்கின்றேன் சன்மானமாக.

மூன்று பெரும் தவில் கலைஞர்களும் இந்தப் பணத்தையும் வாங்குவதற்கு மறுத்த போதிலும் அவர்களின் கார்களின் பெற்றோல் செலவுக்கென்று வலிந்து கொடுத்தேன். இது 1970 களில் நிகழ்ந்தது என்று ஞாபகம்.

காரைக்குடி கம்பன் கழகம் ஆண்டு தோறும் காரைக்குடியில் நடத்திவந்த கம்பன் விழா நிகழ்ச்சிகளை திருச்சி வானொலி நிலையம் காலையில் ஆங்கிலச் செய்தியறிக்கை முடிந்ததும் தொகுத்து வழங்கும்! 'கம்பனடிப்பொடி' எனப்பெயர் பெற்ற சா.கணேசன் கம்பன்விழாவைச் சிறப்பாக நடத்திவந்தார். கம்பன் விழா நிகழ்ச்சிகளை வானொலியில் கேட்டுமகிழ்ந்த எனக்கு பெருமாள் கோயிலிலும் இப்படியொரு நிகழ்ச்சியை நடத்த வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. சைவப்பள்ளியில் நான்காம் வகுப்புவரை தமிழில் நாங்கள் படித்தபோது, என்னுடன் ஒன்றாகப் படித்தவரும், தமிழுணர்வாளரும், அயலவரும், நல்ல வாசகரும், பின்னர் சிறந்த ஓவியராகவும் விளங்கியவரும், என்னுடன் நட்பாக இருந்தவருமான செ.இரத்தினகோபாலும், நானும் கோயிலடியில் சந்திக்கும்போது பல விடயங்களைப் பற்றியும் பேசிக்கொள்வோம். காரைக்குடிக் கம்பன் விழா பற்றியும் எங்கள் உரையாடல்களில் இடம்பெற்ற போது, காரைக்குடி கம்பன்விழா போன்று பெருமாள் கோயிலிலும் ஒரு விழா நடத்த வேண்டுமென்ற எனது ஆசையைத் தெரிவித்தேன். அவர் யாரையும் நல்ல வார்த்தையில் சொல்வது பொதுவாக அரிது! ஆனால் அவரும் இதை விரும்பினார்!




29

சிறுவர்களாக இருந்த காலத்தில் இப்பொழுது தேர்முட்டி இருக்கும் இடத்தில் பரந்துவிரிந்து உயர்ந்து கிளைகள் பாம்புகள் பிணைந்து நிற்பதுபோல அடர்ந்து நின்ற (காய்ந்த புங்கைக் காயுடன் இரும்பு வளையமும் சேர்த்து வலிப்பு வரும் பையன் கழுத்தில் கட்டிவிடுவார்கள். இது பரிகாரமோ இல்லையோ அடையாளங் காட்டும்.) புங்கை மரத்தில் நாங்கள் ஓடி ஒளிந்து விளையாடிய காலத்திலும் சரி; பின்வீதியில் பந்து அடித்த போதும் சரி சித்திரைவருடப் பிறப்புக் காலத்தில் போர்த்தேங்காய் அடிக்கவென சிறுவர்களான ஸ்ரீரெங்கநாதன், பாலகிருஷ்ணன், செ.கோபாலசாமி, வை.மகாதேவன், நான் ஆகியோர் குழுக்களாக நான்கு திசைகளிலும் வீடுவீடாகச் சென்று தேங்காய் சேகரித்தபோதும் சரி, இரத்தினகோபால் எங்களுடன் சேர்ந்ததில்லை. பூந்தோட்டத்தில் குழுக்களாகப் பிரிந்து பூங்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சி பூச்செடிகள் வளர்ப்பதில் நாங்கள் ஈடுபட்ட காலத்திலும் இரத்தினகோபால் ஈடுபட்டதில்லை. இவற்றில் ஸ்ரீரெங்கநாதன், சின்ன ஸ்ரீரெங்கநாதன், பாலகிருஷ்ணன், கோபாலசாமி, மகாதேவன், நான் ஆகியோரே கூடுதலாக ஈடுபட்டோம். ஸ்ரீரெங்கநாதனும் நானும் பூந்தோட்டக் கிணற்று நீர் முழுவதையும் பட்டை கட்டி ஆளுக்குப் பாதி நேரம் துலா மிதித்து இறைத்து இருக்கின்றோம்.

அந்தக் காலத்தில் இன்று போல் கோயிலுக்கு வருமானமும் இல்லை. இறைப்புக்கு இயந்திரமும் இல்லை. இவை எல்லாம் நாங்கள் கல்லூரியிலிருந்து வெளியேறுவதற்கு முன் மாணவர்களாக இருந்த காலத்தில் நடந்த நிகழ்வுகளில் சில! என்னைப் போலவே ஸ்ரீரெங்கநாதனும் ஐந்தாம் வகுப்பிலிருந்தே வெளியேறி சில மாதங்களோ ஓராண்டோ கழிந்து யாழ். இந்துக்கல்லூரியில் சேர்ந்து படித்தார். நான் இராசையா வாத்தியாரின் கொடுமையால் ஐந்தாம் வகுப்பிலிருந்து வெளியேறி வெள்ளையப்பா பத்தர் பட்டறையில் சேர்ந்து குலத்தொழில் கற்கப் போனேன். நிலைக்கவில்லை. இரத்தினகோபால் எங்களுக்கு முன்னரே யாழ். மத்திய கல்லூரியில் சேர்ந்துவிட்டார். ஆனாலும் கோயிலடியில் திருவிழாக்காலத்திலும் நாங்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்வோம். ம.பொ.சிவஞானகிராமணியார் எழுதிய 'வீரபாண்டிய கட்டப் பொம்மன்' என்ற புத்தகத்தைப் படிப்பதற்கு முதலில் எனக்குத் தந்தவர் இரத்தினகோபால்தான். பிற்காலத்தில் தமிழரசுக் கட்சியின் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் சில வாரங்கள் இரத்தினகோபால் சிறை சென்று மீண்டு வந்தார். நான் கொழும்பில் இருந்தேன்.

பெருமாள் கோயிலில் ஸ்ரீராம பட்டாபிஷேக விழாவில் இரண்டு, மூன்று நாள்கள் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று ஓவியர் இரத்தினகோபாலும் நானும் தீர்மானித்தோம். எங்களிடம் பணம் இல்லை. குறிப்பிட்ட சில அன்பர்களிடம் விழாவுக்குப் பணம் சேர்த்தோம், பணம் வாங்குவது, செலவு செய்வது ஆகிய பொறுப்பை இரத்தினகோபாலிடமே விட்டோம். ஏற்றுக்கொண்டார். நிகழ்ச்சி ஏற்பாடுகள் என்பொறுப்பில்! எல்லாவற்றுக்கும் இருவருமே சேர்ந்து செல்வோம்!

ஸ்ரீராம பட்டாபிஷேக விழாவுக்கான நாள் நிச்சயிக்கப்பட்டதும் முதலிரண்டு நாள்களுக்குமான நிகழ்ச்சிகளைத் தயாரித்தோம். எல்லா நிகழ்ச்சிகளும் கலந்து கொண்டவர்களும் நினைவிலில்லை.

முதல் நாள் நிகழ்ச்சிகள் கோயில் ஆதீன வித்துவான்களான வைரவநாதன் சின்னராசா சகோதரர்களின் மங்கள இசையுடன் ஆரம்பித்தாலும் ஏறுபடி (விஷேச) நாதஸ்வர இசையளிப்பதற்கு புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் என்.கே.பத்மநாதனை ஏற்பாடு செய்தோம். அவரிடம் சென்று விழாபற்றிச் சொல்லி கலந்துகொள்ளும்படி கேட்டபோது சன்மானம் பற்றி நான் சொல்லி இழுத்த போது அன்று புங்குடுதீவில் ஒரு நிகழ்ச்சிக்கும் போவதால் போகும் வழியில் பெருமாள் கோயிலுக்கும் வருகிறேன். எனது செலவுக்கும் கூட எதுவும் தரத் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்!

(நினைவுகள் நீளும்...)

# துப்பாக்கி பகிரப்படவேண்டிய எண்ணங்கள்

மருத்துவர் யமுனானந்தா



தமிழ் மக்களின் மனம் விரும்பிய நடிகர் விஜயின் "துப்பாக்கி" திரைப்படம் அண்மையில் வெளிவந்துள்ளது. இதனை யாழ்-கொழும்பு பஸ் சேவையில் பார்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. துப்பாக்கி படம் சொல்ல வரும் கருத்தை மனிதநேய அடிப்படையிலும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விழிப்பின் அடிப்படையிலும் முதலில் நோக்க வேண்டும்.

இன்றைய காலத்தில் திரைப்படங்கள் சமூகத்தில் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். இதனால் புகைப்பிடித்தல் காட்சி, மது அருந்துதல் காட்சி, ஆபாசக் காட்சிகள் என்பன தவிர்க்கப்படல் வேண்டும். மாறாக அவ்வாறான காட்சிகளுக்கு நியாயம் கற்பித்தல் தவறானது ஆகும். துப்பாக்கி திரைப்படத்தில் காட்டப்படும் மனிதச் சித்திரவதைகள், கொலைகள் நாகரிகமான சமூகத்தினை உருவாக்க உதவமாட்டாது.

இஸ்லாம் மதத்தினைப் புண்படுத்தும் விதமாக காட்சி அமைக்கப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது. இது அடுத்த சந்ததிக்கும் பரவ ஏதுவாக அமைந்துவிடும். குறிப்பாக அமெரிக்கா உட்பட மேற்கத்தையரால் மேற்கொள்ளப்படும் இஸ்லாத்தை புண்படுத்தும் செயற்பாடுகள் இந்தியாவிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இத்திரைப்படம் எடுத்துக்காட்டுகின்றது. உண்மையில் இஸ்லாமியர்களை புண்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகளாலேயே இந்தியா, பாகிஸ்தான் எல்லையில் துப்பாக்கிகள் இன்னும் உள்ளன. துர்ப்பாக்கியமானதே துப்பாக்கி திரைப்படம்.


தீவிரவாதம் தொடர்பாக இந்திய நீதித்துறை அணுகியமுறை சரியானது. ஆனால் திரைப்படத் [illegible] பொது [illegible] துப்பாக்கிகள் இனி மேல் எமக்கு வேண்டாம்" என்ற நிலையிலேயே 2009 ஆம் ஆண்டு பெரும் அழிவுக்குப்பின்னான தமிழ் மக்களின் சமூக இருப்பு உள்ளது. துப்பாக்கி படத்தில் வருகின்ற சீருடை தரித்த இந்தியச் சிப்பாய்கள் 1987 ஆம் ஆண்டு இங்கு நிகழ்ந்த கோரங்களை மீள நினைவூட்டுகின்றன. இந்திய இராணுவத்தால் அன்றைய காலத்தில் அரங்கேற்றப்பட்ட படுகொலைகள், வன்புணர்வுகள் என்பவற்றை நாம் எமது இளம் சந்ததிக்கு கூறத்தயங்குகின்றோம். தற்போது இராணுவ மயப் பட்ட சூழலில் சிக்கியிருக்கும் எமக்கு இராணுவச் சீருடை மீதான ஈர்ப்பை ஏற்படுத்த முனையும் இந்தத் திரைப்படம் சமூகச் சீரழிவினையே ஊக்குவிக்கும்.

மேலும் சித்திரவதைகள், துப்பாக்கியால் சுடும் காட்சிகள் எமது சூழலில் முன்னர் நிகழ்ந்த சம்பவங்களை புதிய நியாயத்தினூடாக இளம் சமூகத்தை பார்க்க வைக்க முனைவதாகவும் கருதலாம். போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மன உளைச்சலை கூட்டுவதாகவும், உளத்தாக்கத்திற்கு பின்பான மனவடுவின் மீள் எழுச்சியினை உறுத்துவதாகவும் (பி.ரி.எஸ்.டி) இந்தக் காட்சிகள் அமைகின்றன. இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களை கொல்வதையும் கொலைசெய்பவன் அதற்கு நியாயம் கூறுவதையும் ஏற்க முடியாது. அவ்வாறு கொல்பவனை நாம் வீரனாகக் கருத முடியாது. மாறாக "அலுக்கோசு" ஆகவே கருத வேண்டும்.

துப்பாக்கிகள் எமக்கு வேண்டாம். துப்பாக்கி ஏந்தியவர்களும் எமக்கு வேண்டாம். துப்பாக்கியினை மடியில் வைத்துள்ளது போல் அதிகாரம் செய்பவர்களும் எமக்கு வேண்டாம் என்ற மனநிலையிலேயே உள்ளனர் எமது மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவாகும் எதிர்காலம்?



டிலீப்

தேசிய கிரிக்கெட் அணியில் இடம்பிடிப்பதற்கு வீரர்களிடையே ஏற்படும் போட்டி, அந்த வீரர்களை ஆட்டங்களில் அதி உச்ச திறமையை வெளிப்படுத்த வைக்கும். இதனால் ஒவ்வொரு கிரிக்கெட் வீரர்களும் தங்களுக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி அணியில் நிரந்த இடம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்குப் போராடுகின்றனர்.

மஹேல, சங்ககார, டில்ஷான் ஓய்வு பெற்ற பின்னர் இலங்கை அணி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பதை நினைக்கவே பயமாக இருக்கின்றது. இவ்வாறு, இலங்கை அணிக்கு 1996ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்று கொடுத்த அர்ஜுன ரணதுங்க தெரிவித்திருந்தார். இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் இலங்கை அணி டெஸ்ட் தொடரில் வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு சிரமங்களை எதிர்கொண்டிருந்தது. அந்த நிலையிலேயே ரணதுங்க இவ்வாறான கருத்தை முன்வைத்திருந்தார்.

இலங்கை அணி தனது அடுத்த தலைமுறை கிரிக்கெட் அணியை தேர்வு செய்யவில்லை என்பதே ரணதுங்கவின் பிரதான குற்றச்சாட்டு. ஆசிய நாடுகளில் இலங்கை அணியைத் தவிர்த்து ஏனைய மூன்று அணிகளும் தமக்கான அடுத்த தலைமுறை அணியைப் பலமாக தெரிந்து வைத்துள்ளன.

இலங்கை கிரிக்கெட் அணியைப் பொறுத்த வரையில் அணித் தேர்வு விடயங்களில் அரசியல் ரீதியான தலையீடுகள் இருக்கின்றன என்பது ஜீரணிக்க முடியாத உண்மை. ரணதுங்க ஓர் எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக மேற்படி குற்றச்சாட்டை வைத்திருந்தாலும் அவரது கூற்றில் உண்மை இருக்கவே செய்கின்றது. இதனாலேயே இலங்கை அணி ஒரு நாள் உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்தது. இறுதி ஆட்டத்துக்கான அணித் தெரிவில் அரசியல் தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அணித் தலைவர் பதவியிலிருந்து சங்ககார விலகியிருந்தார்.

இவ்வாறு அரசியல் தலையீடுகள் அணித் தேர்வில் இருப்பதால், அடுத்த தலைமுறை அணியை இலங்கை கிரிக்கெட்டால் தேர்வு செய்ய முடியாமல் இருக்கின்றது. இதனால் பல வீரர்களுக்கு அணியில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. கிடைக்கின்ற வாய்ப்புக்களை வீணடிக்கின்ற வீரர்களுக்கு அரசியல் செல்வாக்குகளினால் தொடர்ந்து வாய்ப்புக்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன.

இலங்கை கிரிக்கெட்டிலிருந்து சத்தமின்றி ஒரு சகலதுறை வீரர் ஓய்வு பெற்றிருக்கின்றார். இலங்கை அணியின் சகலதுறை வீரராக விளையாடிய சிந்திக்க ஜெயசிங்க, கிரிக்கெட்டிலிருந்தான தனது ஓய்வை அறிவித்திருக்கின்றார்.

இலங்கை அணிக்காக 5 'ரி-20' சர்வதேச ஆட்டங்களில் மாத்திரமே விளையாடியுள்ள அவர் அதிகபட்சமாக 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். 3 இன்னிங்ஸில் மாத்திரமே அவருக்கு துடுப்பெடுத்தாடுகின்ற வாய்ப்பு கிடைத்திருந்தது. அதில் இரண்டு தடவைகள் ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடியிருந்தார்.

அத்துடன் 142 முதற்தர ஆட்டங்களில் பங்குபற்றி 11 சதங்கள், 34 அரைச் சதங்கள் உட்பட 31.61 என்ற சராசரியில் ஓட்டங்களைப் பெற்றதோடு, 104 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார். அவரது அதிகபட்ச ஓட்டங்களாக ஆட்டமிழக்காத 173 ஓட்டங்கள் காணப்படுவதோடு, சிறந்த பந்துவீச்சாக 44 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளைக் கைப்பற்றியமை காணப்படுகிறது.

14 வருடங்கள் உள்ளூர் தொடரில் பங்குபற்றிய போதிலும் இலங்கையின் தேர்வாளர்கள் தனக்கான வாய்ப்புக்களை வழங்கவில்லை. கடந்த ஒரு தசாப்தமாக தேர்வாளர்கள் சில வீரர்களுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கி வருகின்றனர். அவர்கள் சிறப்பாகப் பிரகாசிக்காத போதும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன என்று தனது ஓய்வின் போது சிந்திக்க தெரிவித்திருந்தார்.

சிந்திக்கவைப் போல பல வீரர்கள் இன்னமும் தமக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அரசியல்ரீதியான பழிவாங்கல் காரணமாக தகுதியான வீரர்களுக்கு வாய்ப்புக்களை கிரிக்கெட் சபை தேர்வாளர்கள் வழங்கவில்லை.

சிந்திக்க பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவராக இருப்பதால் 5 'ரி-20' ஆட்டங்களிலாவது அவருக்குரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதே போன்றதொரு திறமை வெளிப்பாட்டை தமிழர் அல்லது முஸ்லிம் வெளிப்படுத்தியிருந்தாலும் அவருக்கு ஓர் ஆட்டத்தில் கூட இடம் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே. இலங்கை கிரிக்கெட் அணியில் தமிழர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லையென்றதும், முத்தையா முரளிதரன் என்ன சிங்களவரா என்று பதில் கேள்வி எழலாம். முத்தையா முரளிதரன் தமிழனாக இருந்த காரணத்தால் அவருக்கு அணித் தலைமைப் பதவி இறுதி வரையில் கிடைக்கவில்லை. டெஸ்ட் அரங்கில் சாதனை மேல் சாதனை படைத்த முரளிக்கு டெஸ்ட் அணித் தலைமைப் பதவியையாவது வழங்கியிருக்கலாம்.

முரளி பிறந்த கண்டி மாவட்டத்தில் அஸ்கிரிய விளையாட்டரங்கு உள்ளது. முரளி டெஸ்ட் ஆட்டத்திலிருந்து ஓய்வு பெறும் பொழுது, இந்த அஸ்கிரிய விளையாட்டரங்கு 'முரளி விளையாட்டரங்கு' என்று பெயர் மாற்றப்படும் என்று சொல்லப்பட்ட போதும் இதுவரையில் அப்படி எதுவும் செய்யப்படவில்லை.

முரளியின் அதீத திறமையால் அணியில் இடம் வழங்கப்பட்டாலும் அவருக்கு ஏனைய வாய்ப்புக்களை இலங்கை கிரிக்கெட் சபை தேர்வாளர்கள் வழங்கவில்லை.

பர்வேஸ் மஹ்ரூப், ஜெஹான் முபாரக் போன்ற முஸ்லிம்களுக்கும் இலங்கை அணியில் உரிய வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. மஹ்ரூப் கடந்த ஜனவரியில் அணியில் நீண்ட காலத்துக்குப் பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டார். உரிய திறமை வெளிப்பாடுகளை வெளிக்காட்டியிருந்தபோதும் அதன் பின்னர் அணியிலிருந்து தூக்கி வீசப்பட்டுள்ளார். இவ்வாறு ஏராளமான தமிழ், முஸ்லிம் வீரர்கள் இலங்கை கிரிக்கெட் அணியில் இடம் கிடைப்பதற்காக - தமக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படாதா என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மறுபுறத்தில் கப்புக்கெதர போன்ற சில வீரர்கள் அரசியல் செல்வாக்கினால் இலங்கை அணியில் தமக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை தொடர்ந்து வீணடிக்கின்றனர். அண்மையில் இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளர், கப்புக்கெதரவுக்கு சந்தர்ப்பங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இதன் மூலம் இலங்கை கிரிக்கெட் அணி எந்தளவு தூரம் இதயசுத்தியுடன் அணித் தெரிவில் ஈடுபடுகின்றது என்பது தெரிகின்றது.

இலங்கை கிரிக்கெட் சபை அண்மையில், எஸ்.எல்.பி.எல். தொடரை நடத்தியிருந்தது. இந்தத் தொடர் மூலம் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளித்து இலங்கை கிரிக்கெட் அணியின் அடுத்த தலைமுறை வீரர்களை உருவாக்கப் போவதாக தெரிவித்தது.

உண்மையில் எஸ்.எல்.பி.எல்லில் திறமைகளை வெளிப்படுத்திய அகில தனஞ்சய, திமுத் கருணாரத்தன, டில்ஷான் முனவீர ஆகியோருக்கு இலங்கை அணியில் இடம் கிடைத்துள்ளது. அவர்களும் தங்களது வாய்ப்புக்களை உரிய வகையில் பயன்படுத்தியுள்ளனர்.

ஆனால் எஸ்.எல்.பி.எல்லில் வடக்கு மாகாண அணி சார்பில் ஒரு தமிழர்கூட விளையாடவில்லை. வடமாகாணம் தமிழர்களது மாகாணம். ஆனால் அந்த மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு தமிழர் கூட விளையாடவில்லை. இவ்வாறு செய்வதன் மூலம் இலங்கை கிரிக்கெட் அணி தனது அணித் தெரிவில் மீண்டும் ஓரங்கட்டலையே மேற்கொள்கின்றது.

விளையாட்டுக்கள் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த நல்லதொரு சந்தர்ப்பம். ஆனால் இலங்கையில் அது நடக்குமா என்பது தொடர்ந்தும் கேள்விக்குறியே.

## எட்டுவேன் இன்னும் உயர...

(...ஆம் பார்க்கத் தொடர்ச்சி)

தால் வாந்தியெடுத்து களைத்துப் போயிருந்தேன். இன்னொரு பக்கம் குளிர் வாட்டியெடுத்தது. போட்டி நடைபெற்ற தினத்தில் 15 பாகை செல்சியஸ் வெப்பநிலையே காணப்பட்டது. இதனால் ஒன்றுக்கு இரண்டு மேலாடைகளை அணிந்துகொண்டே போட்டியில் பங்கேற்க முடிந்தது. என்னை உற்சாகப்படுத்த யாழ். இந்துவின் பழைய மாணவர்களும் வந்திருந்தார்கள். கரகோஷம் ஒலிக்க முதலாவது பாய்ச்சலுக்காக ஓடினேன். கண்முன்னே சவால் விட்டுச் சிரித்தது சட்டகம். ஒரே எம்பல். வழமையை விடவும் அதிக திறனோடு பாய முடிந்தது. கடைசியில் நானும், ஆஸ்திரேலிய மாணவனும் மட்டுமே களத்தில்.

சட்டகத்தின் உயரம் 1.95 மீற்றருக்கு உயர்ந்திருந்தது. எனக்குமுன் பாயச்சென்ற ஆஸி. மாணவன் சட்டகத்தை தட்டிவிட்டான். இப்போது எனது முறை. இலக்கை தீர்மானித்துக்கொண்டு பாய்ந்தேன். சட்டகம் தோற்றுப்போக வெற்றியோடு கடந்து குதித்தேன். இருமுறை சட்டகத்தைத் தட்டிய ஆஸி. மாணவன் மூன்றாவது முறையாகப் பாய்ந்தபோது கடந்து விட்டான்.

இப்போது சட்டகத்தின் உயரம் 1.98 மீற்றர். இதையும் ஆஸி. மாணவன் தட்டிவிட, நான் இலக்கு நோக்கி ஓடத் தொடங்கினேன். ஆனால் இந்தமுறை சட்டகத்துக்கு வெற்றி. தொடர்ந்து மூன்று முறை பாய்ந்தபோதும், ஒரே பாணியில் பாய்ந்ததால் என்னால் கடக்க முடியவில்லை. பயிற்றுநரும் மாணவனோ, ஆசிரியர் கவனித்ததனால் அவரது ... தால் அவர்களிடம் ஆலோசனை பெற்று என்னுடைய தவறைத் திருத்தி வென்றிருப்பேன்.

ஆஸி. மாணவனும் இருதரம் தட்டிவிட்டு கடைசியில் தனது பயிற்றுநரிடம் அறிவுரை பெற்று பாய்ந்தான். கண்முன்னாலேயே நான் தங்கத்தை அவனிடம் பறிகொடுக்க வேண்டியிருந்தது.

அதன் பின்னர் வெள்ளிப் பதக்கத்தை சூடிக்கொண்டு, எங்களுடன் வந்திருந்த பயிற்றுநர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்ற போது தான் என்னுடைய தோல்விக்கான பிரதான காரணம் தெரியவந்தது. என்னுடைய முட்காலணியில் ஒரு முள்ளு காணாமல் போயிருந்தது. "நீ கடைசியாக சமநிலை குழம்பிய நிலையிலேயே இலக்கை நோக்கி ஓடினாய். அதனால் தான் உன்னால் பாய முடியாமல் போய்விட்டது" என்று அங்கு வந்த சிங்களப் பயிற்றுநர் ஒருவர் என்னிடம் கூறினார். சரி, என்விதி இவ்வளவு தான் என்று எண்ணிக்கொண்டு திரும்பினேன்.

ஆனாலும் நான் சோர்ந்து விடவில்லை. எப்படியும் 2016இல் நடக்கும் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் குறிக்கோளோடு முயன்று கொண்டே இருக்கின்றேன். லண்டனில் நடைபெறும் ஒலிம்பிக் பயிற்சி முகாம் ஒன்றில் என்னை இணைப்பதாக இந்துவின் பழைய மாணவர் ஒருவர் உறுதியளித்திருக்கிறார். இந்தப் பயிற்சி முகாமில் இணைவதன் மூலம் ஒலிம்பிக்கில் பங்கேற்கும் தகுதியை அடைந்து விடலாம்.

நிச்சயம் 2016இல் உயரம் பாய்தலில் இலங்கைக்கு ஒரு தமிழன் பதக்கத்தைப் பெற்றுத் தருவான்" என்ற இலட்சியக் கனவை இறக்கி வைத்தான் செந்துரன்.

அவனது உடல் உயரத்தைப் போலவே இலட்சியமும் உயரமானதுதான். ஆனாலும் அந்த இலட்சியத்தை செந்துரனால் எட்ட முடியும். 2016இல் "ஒலிம்பிக்கில் தங்கம் வென்றான் தமிழன்" என்ற செய்தி கேட்டு தலைநிமிர காத்திருப்போம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டுவேன் இன்னும் உயரத்தை



நேர்காணல் ஒளரிஸ்

உலகப் பந்தின் முன் மீண்டுமொருமுறை ஈழத் தமிழர்கள் தலைநிமிர்ந்து கொண்டார்கள். தலைநிமிர வைத்தவன் யாழ். இந்துவின் மைந்தன் பு. ஜெயசிங்கம் செந்தூரன். கங்காருக்களின் தேசத்தில் எட்டு முடியாத தூரத்தைக் கடந்து, சர்வதேச ரீதியான பாடசாலை களுக்கிடையேயான மெய்வன்மையில் 16 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் வெள்ளிப் பதக்கத்தை இலங் கைக்குப் பெற்றுக்கொடுத்திருக்கிறான் செந்தூரன். நூலிழையில் தங்கத்தைத் தவறவிட்ட இந்தச் சிங்கக் குட்டியை உதயன் வாசகர்களுக்காக நேர்கண்டோம்.

கண்களில் சாதிக்க வேண்டும் என்ற கனவு மின்ன, உற்சாகத்தோடு தன் சாதனைப் பயணத்தில் எதிர் கொண்ட தடங்களைப் பற்றி விவரிக்கத் தொடங்கி னான்.

''எனக்கு சின்ன வயதில் இருந்தே உயரம் பாய்த லில தான் விருப்பம். மற்ற விளையாட்டுகளில் என்னைமாதிரியான சக வீரர்களோடுதான் போட்டி போட வேண்டி இருக்கும். ஆனால் உயரம் பாய்தலில் அப்படியில்லை. எனக்கும், உயர்ந்துகொண்டே செல் லும் சட்டத்துக்கும் இடையேதான் போட்டி. என்னை பாயவிடக்கூடாது என்று ஒவ்வொரு முறையும் நான் பாய்ந்து கடந்ததும் சட்டம் உயர்ந்துவிடும். ஆனாலும் எவ்வளவுதான் சட்டம் உயர்ந்தாலும் அதை கடந்துவிட வேண்டும் என்ற வெறியோடு பாய வேண்டியிருக்கும். இதனால் எனக்கும் ஏனைய வீரர் களுக்குமிடையே விளையாட்டுக்குக்கூட போட்டியோ பொறாமையோ ஏற்படச் சந்தர்ப்பம் இல்லை.

நான் பத்து வயதில் (யாழ். இந்து ஆரம்பப் பாட சாலையில் தரம் ஐந்தில் கற்கும் போது) முதன்முத லாக உயரம் பாய்தலில் பங்குபற்றி மாவட்டம் வரை சென்று சாதித்தேன். அதன் பின்னர் இடைவிடாது பயிற்சிசெய்து ஒவ்வொரு முறையும் உயரம் பாய்தலில் என்னுடைய திறமையை நிரூபித்து வருகிறேன். ஆனாலும் யாழ். இந்துக் கல்லூரிக்கு வந்த பின்னர் தான் என்னுடைய தவறுகளைத் திருத்தி, சாதிக்கும் உத்வேகத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதற்கு ஆசிரியர் க.சுவாமிநாத னும், பயிற்றுநர் ரமணனுமே முழுக் காரணம்.

அத்தோடு எனது வீட்டிலும் எனது திறமையை வளர்க்க எல்லோரும் ஆதரவு கொடுத்தது. 'தனியே படிப்பு மட்டும் என்றில்லாது உனக்கு என்ன திறமை இருக்கிறதோ அதை வெளிப்படுத்து. அதற்கு எவ்வ ளவு செலவானாலும் தர நான் தயார்' என்று என் தந்தை அடிக்கடி சொல்வார். அவரது வார்த்தைகள் சாதிக்க வேண்டும் என்ற என்னுடைய உந்துதலை இன்னமும் அதிகமாக்கியது. இவர்கள் இல்லாவிட்டால் நான் இப்படி சர்வதேசம் வரை சென்றிருப்பேனா என்று சந்தேகம்தான்'' என்று சற்று இடைநிறுத்திய செந் தூரன், மேலும் தொடர்ந்தான்.

''எப்பவும் எங்களுக்கு சுவாமிநாதன் ஆசிரியர் ஒரு ஊக்கியாகச் செயற்படுவார். பாடசாலை நேரத்தில் மட்டுமென்றல்லாது அதற்குப் பின்னரும் என்னு டைய பயிற்சியில் முழுத் திருப்தி ஏற்படும் வரை துரையப்பா விளையாட்டரங்கில் இருண்ட பின்னரும் ஆசிரியர் சுவாமிநாதன் நிற்பார். சில வேளைகளில் இரவுச் சாப்பாடு கூட அவரது காசில் வாங்கித் தந்த துண்டு. என்னோடு அவருடைய நேரம் செலவானத னால் பல இழப்புகளையும் சந்தித்திருக்கிறார். குறிப் பாக தனியார் வகுப்புகளில் அவர் மேற்கொண்டு வந்த கற்பித்தலை எனக்காக நிறுத்திவிட்டார்.

ஆரம்பத்தில் நான் நேர்முறையில் அமைந்த பாய்ச்சல் மூலமே உயரம் பாய்தலில் ஈடுபட்டு வந்தேன். இதன்போது இடுப்புப் பகுதியைப் பிரதானப்படுத்தியே மேலெழும்புவதால், பாயவேண்டிய தூரத்தின் அளவு மட்டுப்படுத் தப்பட்டதாகவே இருக்கும். இந்த நிலையில் தான் பயிற்றுநர் ரமணனிடம் என்னை ஆசிரியர் சுவாமிநாதன் அறிமுகப்படுத்தினார். எண்ணி முள்ள பலம், பலவீனம் என்பவற்றை கண்ட றிந்துகொண்ட பயிற்றுநர் ரமணன், பொஸ்பரி புளப் முறையில் பாய்வதற்கான நுணுக்கங்களை கற்றுக்கொடுத்தார்.

இந்தப் பாய்ச்சல்முறை தலையைப் பிரதானப் படுத்தியது. வழமையை விடவும் பலமடங்கு உயரத்தை இந்த முறை இலகுவாகப் பாய்ந்து கடக்க முடியும். மூலம் இதற்கேற்ற வகையில் எனக்குரிய பயிற்சிகளை பயிற்றுநர் ரமணன் வழங்கினார்.

இடைவிடாத பயிற்சி தினமும் தொடர்ந்தது. பயிற்சியின் தீவிரம் அதிகரிக்க அதிகரிக்க என்னுடைய திறனும் அதிகரிப்பதை உணரமுடிந்தது. எப்படியும் தேசியம் வரை சென்று பதக்கம் வெல்ல வேண்டும் என்ற ஓர்மத்தோடு தொடர்ந்தும் பயிற்சியில் ஈடுபட்டேன்.

நான் பயிற்சியின் போது சோர்ந்துபோகும் தருணங் களில், ஆசிரியர் சுவாமிநாதன் நம்பிக்கையூட்டுவார். தொடர்ந்து பாயச் சொல்வார். என்னால் இயலும் மட் டும் பாய்வேன். அப்போதெல்லாம் உயரச் சட்டகம் முதுகில் உரசி, பல தழும்புகளும் உண்டாகின. அவற்றை தடவிக் கொண்டே அடிக்கடி சுவாமிநாதன் ஆசிரியருக்கு ''இந்தத் தழும் புகளுக்கெல்லாம் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வது தான் ஒரே மருந்து'' என்று சொல்வேன்.

2010ஆம் ஆண்டு கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் வரை வென்று தேசிய மட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளச் சென்றேன். ஆனால் என் கனவு நிறைவேறாமல் ஏன் இடையூறு ஏற்பட்டது'' பழைய நினைவுகளில் இருந்து சற்று மீண்ட செந்தூரன் சில நிமிட ஓய்வுக்குப் பின்னர் மீண்டும் உரையாடத் தொடங்கி னான்.

'' 2010இல் தேசியத்தில் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற ஓர்மம் மனம் முழுதும் வியாபித்து நின்றது. ஆனால் கொழும்புக்குச் செல்லும் போது வழி யெங்கும் வாந்தியெடுத்தேன். தலைச் சுற்றல் நிற்கவில்லை. கொழும்பில் இறங் கிய கையோடு காய்ச்சல் விடாமல் பிடித் துக்கொண்டது. அதனால் கொழும்பு சென்றும் தேசியமட்டப் போட்டியில்களில் கலந்து கொள்ளாமலேயே நான் திரும்பவேண்டியிருந்தது. சரி, போனது போகட் டும் அடுத்த வருடம் பார்த்துக்கொள்ளலாம் என்று எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொண்டேன். ஆனால் அடுத்த வருடமும் என்னை துரதிர்ஷ்டம் தொடரப்போவதை அப்போது நான் அறிந்திருக்க வில்லை.

2011ஆம் ஆண்டு கோட்டம், வலயமட்டங்களில் வென்று மாவட்ட மட்டப் போட்டியில் கலந்துகொள்ள ஆவலாக இருந்தேன். இதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது திடீரென நிலத்தில் வீழ்ந்தேன். ஒரு கை எலும்பில் முறிவு. ஆனால் இன்னும் நான்கைந்து தினங்களில் மாவட்ட மட்டப் போட்டி. ''இன்னும் ஒரிரண்டு வாரங்களுக்கு கையை அசைக் கவே கூடாது'' என்று வைத்தியர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். எனக்கோ ஒரே அந்தரமாக இருந்தது. கடைசியில் வைத்தியரின் வார்த்தைகளை என்னுடைய அடிமன ஆசை வென்றது.

எலும்பு முறிவுக்காக போடப்பட்டிருந்த கட்டை அறுத் தெறிந்துவிட்டு, போட்டிக்குச் சென்றேன். ஆனால் சமநிலை இல்லாததால் ஆரம்பத்திலேயே சட்டகத்தை தட்டிவிட்டேன். எனினும் 2010இல் நான் மாகாணம் வரை வெற்றிக்கொடி நாட்டி யதால், மாவட்ட மட்டப் போட்டியில் தோற்றிருந்தாலும் மாகாணத்தில் சாதிப்பேன் என்று ஆசிரியர்கள் எழுத்து மூலமான உறுதியை வழங்கியதால், அந்த வருடம் மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைத் திணைக் களம் அளித்தது.

ஆசிரியர்களின் உறுதிமொழியை மாகாண மட்டத்தில் நான் காப்பாற்றினேன். 1.75 மீற்றர் பாய்ந்து முதலிடம் பெற்றேன். மீண்டும் தேசியம் செல்லும் வாய்ப்பு.

பதக்கம் வெல்லும் கனவுடன் பயிற்சி தொடர்ந்தது. தேசிய மட்டப் போட்டி நெருங்கிய போது இடுப்புப் பகுதியில் பயங் கர வலி. நடக்கவே முடியவில்லை. பின்னர் தான் தெரிந்தது, தசை உட்பக்கமாக கிழிந்துபோனவிடயம். ஆனாலும் ''எதுக் கும் ஒருக்கா போய் பாய்ந்திட்டு வா'' என்று அப்பா அனுப்பி வைத்தார். தேசியத்தில் மூன்றுமுறை பாய்ந்தும் சட்டகத்தைக் கடக்க என்னால் முடியவில்லை. மீண்டும் தோல்வியோடு என்னுடைய துரதிர்ஷ்டத்தை நொந்தபடி திரும்பினேன்.

ஆனால் மீண்டும் ஒருமுறை தோற்க நான் தயாராக இல்லை. இந்த வருடம் மிகச் சிறப்பான முறையில் என்னைத் தயார்ப் படுத்தினேன். அதன் விளைவாக தேசிய மட்டத்தில் மூன்றா மிடத்தையும், கனிஷ்ட பிரிவுக்கான மெய்வன்மைப் போட்டி யில் சாதனையுடன் (1.92 மீற்றர்) தங்கமும் வென்றேன்''.

நனோ ... [illegible] ... த்தின் பின்னர் தன்னுடைய லட்சியத்தை அடை[illegible] செந்தூரனின் முகத்திலும் சொல்லிலும் தெரிந்தது. தேசியத்தில் சாதித்த செந்தூரன், சர்வதேசத்தில் தமிழர்களைத் தலைநிமிரச் செய்த கணங்களை விவரிக்கத் தொடங்கினான்.



ஆசிரியர் க.சுவாமிநாதனுடன் செந்தூரன்

''ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பாடசாலை மாணவர் களுக்கான சர்வதேச மெய்வன்மைப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிட்டிய இலங்கை மாணவர்கள் எட்டுப் பேரில் நானும் ஒருவன். ஆனால் ஆஸ்திரேலியாவுக்குச் செல் வதற்கான பயணச்சீட்டு எங்களுடைய செலவு. அதன் பெறுமதி ஒரு லட்சத்து பத்தாயிரத்து எழுநூறு ரூபா. ஆனாலும் அப்பா தளரவில்லை. ''எவ்வளவு செலவானாலும் உன்னை ஆஸ்தி ரேலியாவுக்கு அனுப்புவேன்'' என்று கூறிவிட்டு, கடன் (லோன்) பெற்று என்னை அனுப்பி வைத்தார். ஆனால் வழமையாக என்னுடன் வரும் ஆசிரியர் சுவாமிநாதனும், பயிற்றுநர் ரமணனும் இந்த முறை என்னுடன் இல்லை.

அவர்கள் வருவதாயின் அதற்கான பணத்தை நானோ அல்லது அவர்களோதான் தேட வேண்டும். கடைசி நேரத்தில் எப்படியோ பணத்தைப் புரட்டி என்னுடன் வர ஆசிரியர் சுவாமிநாதன் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. இதனால் ஸ்ரீயானி என்ற சிங்களப் பெண் பயிற்சியாளர் தலைமையி லேயே நாங்கள் ஆஸிக்குப் புறப்பட்டோம். பயிற்றுநர் ஸ்ரீயானி இனமத பேதம் பார்க்காமல் எங்களுக்கான எல்லா உதவிகளையும் அக்கறையோடு ஏற்படுத்தித் தந்தார்.

என்னுடன் கூட வந்திருந்த சிங்கள மாணவர்களுக்கான பயணச் செலவுகளை, அவர்களுடைய பிரதேசம் சார்ந்த அமைச்சர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள். அந்தளவுக்கு தங்கள் இனத்து மாணவர்கள் மீது அவர்கள் அக்கறை கொண்டிருந்தார் கள். ஆனால் நான் மட்டும் அப்பா கடனெடுத்த பணத்தில் பயணிக்க வேண்டியிருந்தது.

> சிங்கள மாணவர்களுக்கான பயணச் செலவுகளை, அவர்களுடைய பிரதேசம் சார்ந்த அமைச்சர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள். அந்தளவுக்கு தங்கள் இனத்து மாணவர்கள் மீது அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். ஆனால் நான் மட்டும் அப்பா கடனெடுத்த பணத்தில் பயணிக்க வேண்டியிருந்தது.

வழமையாக தொடர்ச்சியான பயிற்சியின் பின்னரே நான் போட்டிகளில் பங்கேற்பேன். ஆனால் ஆஸியில் பயிற்சி பெற முடியவில்லை. இதனால் பயிற்சியின்றியே மைதானத்துக்குச் சென்றேன்.

அங்கே என்னுடன் போட்டியிட வந்தவர்களை நான் அண்ணாந்துதான் பார்க்க வேண்டியிருந்தது. அந்தளவுக்கு அவர்கள் மிக உயரமாக இருந்தார்கள். அத்தோடு பஸ் பயணத்தால் வாந்தியெடுத்து களைத்துப் போயிருந்தேன். இன் னொரு பக்கம் குளிர் வாட்டியெடுத்தது. போட்டி நடைபெற்ற தினத்தில் 15 பாகை செல்சியஸ் வெப்பநிலையே காணப்பட் டது. இதனால் ஒன்றுக்கு இரண்டு மேலாடைகளை அணிந்து கொண்டே போட்டியில் பங்கேற்க முடிந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr. இ.சிவசங்கர்

வன்னித் தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் சேர்ந்தார்களா? சேர்த்துக்கொள்ளப்பட்டார்களா? என்ற கேள்வி உள்ளது. இராணுவத்தில் சேர்ந்துகொள்ளும் நிர்ப்பந்தம் உள்ளதா? சமூக நிலையில் தமது வாழ்வாதாரத்துக்கான செழுமையான தொழிலாக 'சிறிலங்கா இராணுவத் தொழில்' என்பது இலங்கைத் தமிழரின் சமூக பிரதிபலிப்பாக இல்லை. அத்தகைய நிலையில் இச்சேர்வு எப்படிச் சாத்தியமானது? வெறுமனே பண ஆசையினால் எடுக்கப்பட்ட நிலை என்று முடிக்க முடியாது. இன்றைய இலங்கைத் தீவில் பலவீனப்பட்ட அடித்தட்டுக்குரிய பிரிவாக இருப்பது வன்னிப் பிரதேச இளம் பெண்கள். இவர்களின் சேர்வுக்கான முடிவில் உயிர் அச்சுறுத்தல், பாலியல் வன்முறை அச்சுறுத்தல் இருக்கவில்லை என்று கூறிவிட முடியாது. மேற்கூறிய நிர்ப்பந்தம் இல்லையேல் அன்றாட சீவியத்துக்கு மாற்றுவழி எதுவுமில்லாத நிர்ப்பந்த சூழல் இச்சேர்தல் முடிவுக்கு இட்டுச் சென்றதா? பதில் தேட வேண்டிய கேள்விகள்.

# நிர்ப்பந்த விளிம்புகள்

'வினை ஆற்ற கடமைப்பட்டுள்ளாய்' ''இயற்கையில் செயல் தவிர்க்கமுடியாது'' - பகவத்கீதை

மனிதன் பிறவி எடுத்த கணத்திலிருந்து செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றான். சுவாசித்தல், உணவு உண்ணல் போன்ற செயற்பாடுகளுடன் ஏனைய வேறு செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இது இயற்கையின் நியதியாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே தவிர்க்க முடியாதது.

சிருஷ்டியின் இருப்பு என்பது செயற்படுதல் என்பதனாலேயே சாத்தியமாகின்றது. செயற்பாடு அந்த நிலையில் சிருஷ்டி சிதைந்து விடும். அணுவும் செயற்பட்டுக் கொண்டேயுள்ளது. பிரபஞ்சமும் ஆக்கம், அழிவு, நகர்வு என்று செயற்பட்டுக்கொண்டேயுள்ளது. அதனாலேயே 'சக்தி இன்றேல் சிவம் இல்லை' என்ற மூலகருத்து உருவாக்கம் பெற்றது. 'சக்தி' செயலுக்கு அடிப்படையாகின்றது.

எனவே சிருஷ்டியுடன் சேர்ந்து பிணைக்கப்பட்டுள்ளவன் செயற்பட்டுக்கொண்டே இருப்பான். செயலின்மை சாத்தியமில்லை. அத்துடன் சிருஸ்டியுடன் ஒத்திசையும் கடமை ஒவ்வொருவருக்குமுண்டு. அதுவே அவரவர்களின் 'அறம்', 'தர்மம்' எனப்படுகின்றது. சிருஸ்டியுடன் ஒத்திசையாத செயற்பாடுகள் 'அதர்ம' செயற்பாடுகள் என்று கூறப்படுகின்றது. அதர்ம செயற்பாடுகளில் ஈடுபடவே 'அறமீறல்' எனப்படுகின்றது. அறமீறல் என்பது வாழ்வின் ஒத்திசைவை (லயம்) குழப்பி, சிதைத்து விடுகின்றது. அணுவுக்குள் இருக்கும் துகள்களின் செயற்பாடு தொடங்கி, பிரபஞ்சத்திலுள்ள பால்வெளிகளின் செயற்பாடுகள் வரைக்கும் ஒத்திசையும் அறம் பேணும் செயற்பாடாக உள்ளதைக் காணலாம். இதனாலேயே சிருஷ்டி சிதையாமல் இருப்பாகின்றது.

இந்த வகையில் மனிதர்கள் ஒவ்வொருவரும் தர்ம வினையாற்ற கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் இயற்கை தனது இருப்பை உறுதிப்படுத்துவதற்காக அதர்ம செயற்பாடுகளை நிறுத்தும், அழிக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. அதனாலேயே அதர்மம் அழியும், தர்மம் நிலைக்கும் எனும் கருப்பொருள் உருவாகியது. அதர்ம வினை ஆற்றுவோர் சிக்கல்களைச் சந்திப்பதையும், அழிவை எதிர்கொள்வதும் இந்த இலக்கணத்தை அடியொற்றியதே.

எமது இருப்புக்கு செயல் தேவைப்பட்டாலும், அச்செயல் அதர்மம் மீறிய செயலாக அமையும் பட்சத்தில் சிக்கல்களை, அழிவுகளைச் சந்திக்க வேண்டி வரும். தர்மத்துடனான செயற்பாடுகளே எம்மைப் போசித்து, பாதுகாக்கும். எமது செயல்கள் சக மனிதர்களின் வாழ்வுக்கு, நன்மைக்கு இசைந்ததாக அமையும் பட்சத்தில் அது அறச்செயல் ஆகின்றது. அறச்செயற்பாட்டில் உறுதியாக நிற்போர் இயற்கையினால் என்றும் காப்பாற்றப்படுவர். அவர்களின் அழிவு சாத்தியமில்லை, இது நிச்சயம்.

தனி மனித உயிர்வாழ்தலுக்காக தொழில், உழைப்பு தேவைப்படுவதாகக் காணப்பட்டாலும், அத்தொழில் உழைப்புக்கள் என்பவை தர்மச் செயலாக அமையும் பட்சத்தில் மட்டுமே அது அத்தனி மனிதனுக்கு நன்மையை, பயனை விளைவிக்கும். அதர்மச் செயற்பாடுகள் எனக் கருதக்கூடிய தொழில், உழைப்புக்களில் ஈடுபட்டால் அது அழிவையே முடிவில் தரும்.

எம்மைப் படைத்த இயற்கை எம்மைப் பாதுகாக்கும், போசிக்கும். ஆனால் அதர்மச் செயற்பாடுகளில் ஈடுபட்டாலே அழிவை உண்டு பண்ணும் எமது உயிர்வாழ்தலுக்கான தேவைகள் இயற்கையினால் பூர்த்தி செய்யப்படும்.

தமிழினம் கடந்து வந்த போர்க் காலத்திலும் ஒரு பட்டினிச் சாவும் நிகழவில்லை. அந்த நிலையில் பட்டினிச் சாவிலிருந்து தப்புவதற்காகத் தொழில் தேடுவதாக, தொழில் செய்வதாகக் கூறமுடியாது. தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டே வந்துள்ளன. எமது ஆசைகளே பூர்த்தியாகாமல் உள்ளன. தற்போது பூர்த்தியாகாது இருக்கும் ஆசைகள் பூர்த்தியாகும் போது, இதுவரை இல்லாத வேறு புது ஆசைகள் எம் மனதில் ஏற்படும். இந்நிகழ்வு தொடர்கதையாகத் தொடரும். எனவேதான் 'ஆசைகள் பூர்த்தியாதல்' என்பது சாத்தியமில்லை. இதையே மகாத்மா காந்தி அவர்கள் 'இவ்வுலகிலுள்ள அத்தனை மனிதர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வளம் பூமியில் உண்டு, ஆனால் ஒரு மனிதனின் ஆசையைப் பூர்த்தி செய்ய பூமியால் முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறியவற்றிலிருந்து நாம் பின்வரும் முடிவுகளுக்கு வரலாம்.

1. இயற்கை ஏதோ ஒரு விதத்தில் எமது தேவைகளைப் பூர்த்திசெய்யும் நியதியைக் கொண்டுள்ளது.
2. நாம் எவ்வளவு பொருள், பணம் ஈட்டினாலும் எமது ஆசைகள் நிறைவடைதல் என்பது சாத்தியமில்லை.
3. தர்மம் சார்ந்த அறச்செயல்களினூடாக மட்டும் வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கும்போது கெடுதல்கள் நிகழாது, அமைதியான நன்மைகள் நிகழும்.
4. ஆதீத பொருளீட்டல் என்பது எமது ஆசைகள் பூர்த்தியாகும் என்ற நம்பிக்கையில் நடக்கின்றது.
5. ஆதீத பொருளீட்டல் ஆசை என்பதற்குள் அமிழ்ந்தால் அறம் மீறிய செயற்பாடுகளில் ஈடுபடும் அவசியம், நிர்ப்பந்தம் ஏற்படும்.
6. அறம் மீறிய செயல்களினூடு சம்பாதித்த பொருள், பணம் நிலைக்கமாட்டாது, எமக்கு சுமையாகப்படும். அத்துடன் அறம் மீறிய செயலின் வினையினால் எமக்கு கெடுதல்களும், துன்ப துயரங்களும் ஏற்படும். இதுவும் இயற்கையின் நியதியாகும்.

மேற்கூறியவைகளினூடாக இயற்கையின் நியதி என்பதைப் புரிந்துகொள்ளலாம். இப்புரிதல் எமது வாழ்வுக்குத் தேவையான பணம், பொருள் ஈட்டலுக்காக தொழிலைத் தெரிந்தெடுக்கவும் அத்தொழில் நேர்மையாக வேலை செய்யவும் எம்மை வழிப்படுத்தும்.

இதனடிப்படையில் சிகரெட், மதுபானம் விற்றல், பொருட்களில் கலப்படம் செய்தல், கட்டுப்பாட்டு விலையை மீறி விற்றல், பொருட்களைப் பதுக்குவதால் கொள்ளை லாபம் ஈட்டல் என்பவற்றுடன் தொழில் சார் இடங்களில் ஊழல் செயற்பாடுகளினூடாக பணத்தைச் சுருட்டல் என்பவை அடங்கும். இதனுடன் சேர்த்து பணம் (சம்பளம்+மேலதிகக் கொடுப்பனவு) வழங்கப்படும் நேரத்தை அத்தொழிலுக்குப் பயன்படுத்தாமல் கள்ளம் பண்ணுவதும், அந்நேரத்தில் எமது தனிப்பட்ட வேறு தொழில் செய்வதும் அடங்கும் என்பது தெளிவு. தவறான வழிகளில் ஈட்டப்படும் பணம், பொருள் அழிந்து போவதுடன் அவ் அதர்மச் செயற்பாடுகளுக்கான பின்விளைவையும் நாம் அனுபவிக்க வேண்டி வரும்.

இலங்கை இராணுவத்தில் தமிழ் இளைஞர்கள் சேர்வது தேவையானதா, ஏற்புடையதா, பாதுகாப்பானதா இறுதியாகத் தர்மத்துக்கு அமைவானதா? போரின் பின்னரான மூன்று வருட நெருக்கடிக் காலத்தில் உயிர் பிழைப்பும் வாழ்வும் நிகழ்ந்துள்ளது. அதற்கான அடிப்படைத் தேவைகள் ஏதோ வகையில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இம்மூன்று வருடத்தில் வன்னிப் பிரதேசத்தில் எவரொருவரும் பட்டினியால் சாகவில்லை. மக்களின் போசாக்கு நிலையும் நாளாந்த வாழ்வு நிலையும் மேம்பட்டு வருகின்றன. இயல்பு, சுமுக சமூக நிலையில் கேள்வி இருந்தாலும் மக்களின் உளமீள்இசைவுக்குரிய காலம் முடிந்துவிட்டது. இத்தகைய பின்னணியில் இராணுவத்தில் சேர்வதைவிட வேறு வழியில்லை என்று கூறிவிட முடியாது. எமது வாழ்வு தேவை கருதிச் சேர்கின்றோமா அல்லது மேலதிக ஆசைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்புள்ளது என்பதற்காகச் சேர்கின்றோமா என்பதை சிந்தித்தல் நன்று.

எமது இனத்தின் கலாசார பண்பாடுகள் சிங்கள இனத்தின் கலாசார பண்பாடுகளுடன் பெரிய அளவில் வேறுபட்டுள்ளன. தமிழ், சிங்கள சமூக நியமங்கள் வேறுபாடுடையன. இத்தகைய நிலையில் பெரும் எண்ணிக்கையான சிங்கள இளைஞர்களுடன் சிறு எண்ணிக்கையான தமிழ் இளைஞர்கள் சேர்வது கலாசார பண்பாட்டு மாற்றங்களை நிரந்தரமாக ஏற்படுத்தும். அத்துடன் கலாசார மீறல்களும் ஏற்படக்கூடிய சமூக அழுத்தம் ஏற்படும். மேலும் சேருகின்ற தமிழ்ப் பெண்கள் அடிமட்ட தொழில் நிலையிலேயே சேர்வர். இதனால் மேலதிகாரிகளினால் இயல்பாகவே ஏற்படக்கூடிய பாலியல் அத்துமீறல்களுக்கு ஆட்படும் அபாயம் உண்டு. அண்மையில் அமெரிக்க இராணுவ மேலதிகாரியொருவர் தன்னிடம் பயிற்சிக்கு வந்த இராணுவப் பெண் சிப்பாய்களுடன் பாலியல் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்று கூறப்பட்டது கவனிக்கப்பட வேண்டும்.

சிறுபான்மை இனங்களுக்கான சமூக வாழ்வியலுக்குத் தேவையான உரிமைகள் வழங்கப்படாத, வழங்க மறுக்கும், இருக்கும் உரிமைகளையும் பறிக்கும் சூழ்நிலையே தற்போதைய காலகட்டமாகும். இக்காலத்தை மாற்றங்களுக்கான காலம், கொந்தளிப்பான காலம் என்று வரையறுக்கலாம். இக்காலத்தில் சூழ்நிலை மாற்றத்துக்கு அதிக சாத்தியம் உண்டு. அதனாலேயே போர் முடிவுற்றது என்று கூறப்பட்ட நிலையில் அதிக இராணுவத்தினர் வன்னி நிலப்பரப்பில் நிலைகொண்டுள்ளதுடன் பாதுகாப்பு இராணுவ செலவுக்கு அதிக பணம் ஒதுக்கப்படுகின்றது. இந்நிலையில் மீண்டும் போர்ச் சூழல் ஏற்படும் பட்சத்தில் இராணுவத்தில் இணைந்த தமிழ் இளைஞர்களுக்கு உயிர் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாம். அத்துடன் நம்பகத் தன்மையற்ற நிலையில் தமிழ் இராணுவத்தினர் ஓரங்கட்டப்படலாம், வேலைநீக்கம் செய்யப்படலாம். இத்தகைய நிலை கடந்த போர்க்காலங்களில் தமிழ் பொதுசன தொழில் உத்தியோகத்தர்களுக்கு நிகழ்ந்துள்ளது கவனிக்கப்பட வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் சிறிலங்கா இராணுவத்தில் தமிழர்கள் இணைந்து செயலாற்றுவது தர்மத்துக்கு உட்படுகின்றதா என்ற கேள்வி முக்கியமானது. இன்றைய காலகட்டத்தில் சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பின் தேவை, ஆட்சேர்ப்பு தேவை என்பவை தமிழ் இனத்திடமிருந்து எழக்கூடிய உரிமைப்போராட்ட அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் நோக்கானது. வேறு நாட்டின் அச்சுறுத்தலை நோக்கமாகக் கொண்டதல்ல. தனது இனத்தின் சமூக வாழ்வியல் உரிமை நிலைகளை முடக்கும் செயற்பாடுகளில் தாமே செயற்படுவதா? கோடரிக்காம்பாகச் செயற்படுவது அறமீறல் ஆகும். கண்ணகி காவியத்தில் அறம் பிழைத்த பாண்டியனின் கதி ஏற்படலாம். அறம் கூற்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ரெங்கன்

# எகிப்தின் முயற்சியில் காஸாவில் அமைதி

## எல்லை வாயிலை திறந்துவிட இஸ்ரேலுக்குப் பணிப்பு

இஸ்ரேலுக்கும் பலஸ்தீன போராளிகளுக்குமிடையில் ஒருவார காலம் நடைபெற்றுவந்த கடும் மோதல்கள் எகிப்திய சமரச முயற்சியின் விளைவாக முடிவுக்கு வந்துள்ளன. குறைந்தது 160 பேரைப் பலிகொண்ட இந்த மோதல் தீவிரமடைந்ததன் காரணமாகப் வான்மார்க்க தாக்குதல்களை நிறுத்தி தரை மார்க்கமாக காஸா பகுதியில் பலஸ்தீனியர்களுக்கு எதிராக போர் நடத்த இஸ்ரேலியர் முடிவு செய்திருந்த வேளையில் இந்த போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது.

எகிப்திய வெளியுறவு அமைச்சர் மொகம்மது காமெல் அமர் இந்த போர் நிறுத்தம் தொடர்பாக நீண்ட சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருந்ததன் பின்னர் போர் நிறுத்த அறிவித்தலைப் புதன்கிழமை கெய்ரோவில் அறிவித்தார். அதன்போது அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனும் உடனிருந்தார்.

இரு தரப்புக்குமிடையிலான வன்முறைகளை நிறுத்துவதற்கு முயற்சி எடுத்தமைக்காக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும், ஐ.நா.பாதுகாப்பு சபையும் எகிப்திய அதிபர் மொகம்மது மோர்சியைப் பாராட்டியுள்ளனர். போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு இரு தரப்பினரையும் பாதுகாப்புச்சபை வற்புறுத்தியுள்ளது. சமரச உடன்படிக்கையின்படி இஸ்ரேல் படைகள் சகலவிதமான தாக்குதல்களையும் தரை மார்க்கம் மற்றும் கடல்மார்க்க, வான்மார்க்க தாக்குதல்களை உடன் நிறுத்தவேண்டும். பலஸ்தீனியர்கள் ரொக்கட் தாக்குதல்களையும் எல்லைப் பகுதியில் நடத்தும் எல்லாவித தாக்குதல்களையும் நிறுத்த வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தம் ஆரம்பமாகி 24 மணி நேரத்தில் காஸா எல்லையை இஸ்ரேல் திறந்துவிடுவதுடன் மக்களும், பொருள்களும் சென்று வருவதற்கு அனுமதிக்க வேண்டும்.

கிளின்டன் அங்கு பேசுகையில் அப்பகுதியின் அபிவிருத்தியில் அங்குள்ள பங்காளித் தரப்புக்களுடன் இணைந்து அமெரிக்கா பணியாற்றும் என்று தெரிவித்தார்.

காஸா நிலப் பகுதிமீது இஸ்ரேல் தரைவழியாக நடத்த உத்தேசித்திருந்த தாக்குதல் திட்டத்தை அந்நாட்டு அமைச்சர்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளனர்.

### அமைதிக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க முடிவு

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் கட்டுப்பாட்டிலுள்ள தீவிரவாதிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதலில் எகிப்து தலையிட்டு அமைதியை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டிருப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கிப் பார்ப்பதற்கு இஸ்ரேலிய அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஹமாஸ் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலிருந்து இஸ்ரேலிய பகுதியை நோக்கி பலஸ்தீனிய போராளிகள் தொடர்ச்சியாக ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வந்ததால் அந்தப் பகுதியின் மீது கடந்தவாரம் புதன்கிழமை தொடக்கம் இஸ்ரேலியர் விமானத் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளனர். இந்த நிலையில் தரை மார்க்கமாகவும் படையெடுப்பொன்றை நடத்துவதற்கு அவர்கள் தீர்மானித்திருந்த வேளையில் இரு தரப்புக்குமிடையில் அமைதியை உருவாக்குவதற்கு எகிப்து தரப்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதால் அந்த ராஜதந்திர முயற்சிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்பதற்கு இஸ்ரேலிய சிரேஷ்ட அமைச்சர்கள் பிரதமர் நித்தன்யாகு தலைமையில் நடத்திய கூட்டத்தில் தீர்மானித்தனர்.

சிரேஷ்ட - இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்- ராஜதந்திர முயற்சி வெற்றியளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் தரை மூலமான தாக்குதல் நடத்தும் திட்டத்தை தற்போதைக்கு நிறுத்தி வைப்பதற்கு குழு முடிவு செய்திருக்கிறது என்றார்.

### அரபு லீக்கின் தலைவர்கள் ஆதரவு

இதற்கிடையில் பலஸ்தீனியர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அரபு லீக்கின் தலைவர் நபில் அல்- அராபி அரபுலீக்கை சேர்ந்த 10 வெளியுறவு அமைச்சர்களுடன் எகிப்திலிருந்து காஸாவுக்கு சென்றுள்ளார் என்று லீக் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலியர் நடத்தியுள்ள ஹமாஸ் மீதான தாக்குதலின் போது கடைசியாக கிடைத்த செய்திகளின்படி 160 பலஸ்தீனியர்களும் 5 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

### இஸ்ரேல் நடத்துவது இன அழிப்பு

துருக்கிய பிரதமர் ரெசெப் தய்யிப் எர்டொகொன் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இஸ்ரேல் காஸா பகுதியில் இன அழிப்பில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர். அமைதியை நிலைநாட்டாமலே சர்வதேச சட்டங்களை மீறியபடி இன அழிப்பில் இறங்கியுள்ளது இஸ்ரேல் என்று கூறியுள்ள துருக்கிய பிரதமர் பலஸ்தீனத்தை இஸ்ரேல் படிப்படியாக ஆக்கிரமித்து வருகிறது என்றும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்துள்ள நிலையிலும் காஸா பகுதியில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்று கூறி இஸ்ரேலியர் 55 பலஸ்தீனியர்களை கைது செய்துள்ளனர். இவர்களில் பலர் சிரேஷ்ட நிலைய செயற்பாட்டாளர்கள் என்று கூறப்பட்டது.

★ காஸாவில் அமைதி: சமரச உடன்பாடு அமுலுக்கு வந்தது.

★ ராஜதந்திர முயற்சிக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க இஸ்ரேல் முடிவு.

★ மகாராஷ்டிராவின் முடிசூடா மன்னன் பால்தக்கரேயின் மறைவு.

★ கம்போடியாவில்- அமெரிக்க-சீன தலைவர்கள் சந்திப்பு

உலக நடப்புகள் ஒரு பார்வை

## பால் தக்கரேயை பலர் நேசித்தது போலவே பலர் வெறுத்தார்கள்



அநேகர் அவரை வெறுத்தார்கள், அநேகர் அவரைக் கண்டு பயந்தார்கள். இன்னும் அநேகர் அவர் எதற்காக உழைத்தாரோ அதற்காக அவரை நேசித்தார்கள்.

மும்பேயில்நதிவேளையில் வெளியாகும் பத்திரிகை ஒன்று பால்தாக்கரேயின் மறைவு குறித்து இவ்வாறு தான் எழுதியிருந்தது. எல்லா பத்திரிகைகளும் தக்கரேயின் மறைவையொட்டி பக்கங்களை ஒதுக்கி கட்டுரைகளையும் செய்திகளையும் வெளியிட்டிருந்தன. மும்பே தன் எஜமானை இழந்துவிட்டது என்று தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தது மும்பே மிரர். கடந்த வாரம் மாரடைப்பால் காலமான பால்தக்கரே இறக்கும்போது அவருக்கு 86 வயது. அரசியல் கருத்து கேலிச்சித்திரம் வரைபவராக வாழ்க்கையை ஆரம்பித்த பால்தக்கரே 1966 ஆம் ஆண்டு தமது சிவசேனா கட்சியை ஆரம்பித்தார். மகாராஷ்டிரா மாநிலத்தில் செல்வாக்கும் அதிகாரமுமிக்க இயக்கமாக சிவசேனாவை அவர் வளர்த்தெடுத்தார்.

மகாராஷ்டிரத்தில் மராத்தி இன மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக மராத்தி பேசும் மக்களை மண்ணின் மைந்தர்கள் என்று வர்ணித்து உரத்த குரலில் அவர்களுக்காக பேசி வந்தார். மகாராஷ்டிரத்தில் தொழில் செய்வதற்காகக் குடியேறி இருந்தவர்கள் தென்னிந்தியர்களானால் என்ன குஜராத்தியர்களானால் என்ன வடக்கு இந்தியர்கள் வங்கதேசத்தவர்களுக்கு எதிராகவும் அவர் பேசி வந்தார். 1990 களில் மும்பேயில் இடம்பெற்ற இனக்கலவரங்களை முஸ்லிம்களுக்கு எதிராக இவரே தூண்டிவிட்டார் என்று அதிகாரபூர்வமான ஓர் ஆய்வில் தெரியவந்திருந்தபோதிலும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அந்தக் கலவரத்தில் சுமார் 1,000 பேர் மரணமாகியிருந்தார்கள். மும்பேயின் மராத்திய பாரம்பரியங்களை நிலைநாட்ட உழைத்தவரான தக்கரே பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் சின்னமாக இருந்த பம்பாய் என்ற பெயரை மும்பே என்று மாற்றி அமைத்தவர். மும்பேயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தக்கரேயின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள்.

அவரது உடல் தேசிய கொடியால் போர்த்தப்பட்டிருந்தது. வழமையான அவரது கறுப்பு குளிர் கண்ணாடியும் அணிவிக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் அவரது உடலைக் கடைசித் தடவையாகத் தரிசித்து விட முண்டியடித்தார்கள். ஊர்வலத்தில் குடும்ப உறுப்பினர்களும் கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.

சிவசேனா கட்சியானது கலவரங்களைத் தூண்டிவிடுவதில்பெயர்பெற்றிருந்தமையால் கலவரங்கள்ஏற்படாதவிதத்தில்நகரம்முழுவதும் பொலிஸ்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

அன்றையதினம் மாலையில் தக்கரேயின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன் மும்பேயில் சிவாஜி பூங்காவில் மக்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்தது.

மும்பே நகரில் பணிபுரியும் அரச அலுவலர் ஒருவர் பால் தக்கரேயின் மறைவு குறித்து தெரிவிக்கையில், எனது தெய்வத்துக்கு இறுதி மரியாதை செய்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது அவர் தந்தையும் கடவுளும் போல எங்களுக்கு இருந்தார் என்றார்

## அமெரிக்க அதிபர் சீனப் பிரதமர் சந்திப்பு

அமெரிக்க- சீன உறவுகள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த போதிலும், இரு பெரும் நாடுகளும் சில விடயங்களில் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டியதை எடுத்துக் காட்டும் விதத்தில் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவும் சீனப் பிரதமர் வென்ஷியாபோவும் கம்போடியாவில் சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

கம்போடியாவில் கிழக்காசிய உச்சி மாநாட்டின் போது இந்த இரு பெரும் நாடுகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசியுள்ளார்கள்.

தென்சீனக்கடல் பிராந்திய பிரச்சினைகள் தொடர்பாக பத்திரிகையாளர்கள் உரத்த குரலில் கேள்விகளை எழுப்பிய போதிலும், சீன- அமெரிக்கத் தலைவர்கள் அவர்களை புறக்கணித்துவிட்டு தமது பேச்சுக்களை தொடர்ந்து நடத்தினார்கள்.

அதிபர் ஒபாமா தமது உரையில் உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடுகள் என்ற முறையில் நீடித்த சமநிலை வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் வர்த்தகத் துறையில் தெளிவான மார்க்கத்தை நிலைநாட்டவும் அமெரிக்க- சீன நாடுகளுக்கு பொறுப்பு இருக்கின்றது என்று கூறினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் நாணய பிணக்குகள், புத்தி ஜீவிகளின் சொத்து மோசடிகள் மற்றும் வர்த்தக அறவீடுகள் தொடர்பாக இருந்து வரும் சிக்கல்கள் தொடர்பாகவே ஒபாமா மறைமுகமாக குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. ஒபாமா மீண்டும் அமெரிக்க அதிபராக தெரிவாகியிருப்பதற்கு பிரதமர் வென் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

சீனாவின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஸீஜின் பிங்கின் நல்வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்துக் கொண்டார். அமெரிக்க அதிபர் தேர்தல் நடந்து முடிந்துள்ளமையோடு சீன கம்யூனிஸ்ட் தலைமை மாற்றத்தையடுத்து இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இம்மாதம் முற்பகுதியில் பெய்ஜிங் நகரில் மிக இரகசியமாக நடைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக ஸி ஜிம்பிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சீனாவின் புதிய தேசிய அதிபர் ஹூ ஜின்டா ஓ வின் இடத்துக்கு ஸிம் வரும் மார்ச் மாதம் நியமனம் பெறுவார் என்று தெரிகின்றது.

இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் மற்றும் நிதிப் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களைத் தீர்த்துக் கொள்வதற்கு இரு நாடுகளும் இணைந்து செயற்பட முடியும் என்று சீன பிரதமர் ஒபாமாவிடம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவைச் சந்திக்குமா பிரபஞ்சம்?

– சுகந்தன் –




இப் பிரபஞ்சத்திலே பூமியை விட பல மடங்கு பெரிய திணிவொன்று தற்போது பூமியை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிகழ்வு சுமார் 360 மில்லியன் ஆண்டுகளுக்கு ஒரு தடவை நிகழும்.

இவ்வாறு அந்தத் திணிவு பூமியை நெருங்கினால் பூமியின் ஈர்ப்புக் கவர்ச்சி விசை மாறுபட்டு விடும். அவ்வாறு கவர்ச்சி விசை மாறினால் எரிமலை வெடிப்புக்கள், சுனாமி போன்ற கடற்கோள்கள் என்பன பூமியின் சகல பகுதிகளிலும் நிகழும்.

இதனால் பூமியில் உள்ள உயிரினங்கள் அழிந்துவிடும்.

இந்தப் பிரளயத் தாக்கம் பின்னர் இரு வருடங்களில் சீராகி மீண்டும் புதிய உயிர்கள் தோற்றம் பெறும்.

இது தான் இன்று உலகம் பூராகவும் வாழும் மக்கள் மத்தியில் பரவிவரும் செய்தியாகவுள்ளது.

இதைவிட வேடிக்கையான விடயமொன்று என்ன தெரியுமா?

பிரான்ஸ் நாட்டின் தென் மேற்கிலுள்ள கிராமமொன்றில் சோதிடர்கள் சிலர் இந்தக் கதையை அடுப்பில் போட்டுத் தாளித்து, காரசாரமாக, கம, கம என மணம் வீசும் வகையில் புதுவிதத்தில் அவிழ்த்து விட்டுள்ளார்களாம்.

'அந்தக் கிராமத்தில் ஒரு மலை இருக்கிறது.

அந்த மலை அடுத்த மாதம் 21 ஆம் திகதி பிளக்கப்பட்டு, அதற்குள் இருந்து வேற்றுக் கிரக விண்கலமொன்று விண்ணுக்குப் பாயுமாம்.

அந்த விண்கலத்தில் ஏறிக் கொள்பவர்கள் மட்டுமே உயிர் தப்பலாம் என்பதே அந்த ஆசாமிகளின் ஞான உபதேசம்.'

சும்மா சொல்லக்கூடாது. இந்தச் சோதிட விற்பன்னர்களின் பருப்பு அங்கே நன்றாக வெந்துவிட்டது.

பெருமளவான மக்கள் இப்போதே மலையைச் சுற்றி குடியேறத் தொடங்கி விட்டார்களாம்.

இதனால் சனநெருக்கடியைக் கட்டுப் படுத்த முடியாமல் பிரான்ஸ் அரசே தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கிறது.

இதுவரை காலம் உலகம் அழியுது பாருங்கோ என்று எத்தனையோ கட்டுக் கதைகள் அவிழ்த்துவிடப்பட்டன.

ஆனால் எதுவும் இதுபோல மெகா ஹிட் ஆகவில்லை. இக் கதை மட்டும் மெகா ஹிட் ஆகியதுடன் மட்டுமல்லாமல் 100 நாள்களுக்கு மேல் ஓடுவதற்குக் காரணமும் இல்லாமலில்லை.

ஆதிகாலத்திலே மாயர்கள் எனப்படும் வேடுவர் குலத்தவர் இந்தப் பூமியில் வாழ்ந்தார்கள்.

இவர்களது சிந்தனா சக்தி மற்றும் ஆற்றல்கள் வியக்கத்தக்கதாகவும் அபரிவிதமானதாகவும் காணப்பட்டன.

இவர்கள் அறிவியல், கணிதம், விவசாயம் எனப் பலதுறைகளில் சிறந்து விளங்கினர்.

உதாரணத்துக்கு சொல்லப் போனால், நாம் எமது கையில் 10 விரல்கள் இருப்பதால், பத்தை அடியாகக் (Base) கொண்டே கணக்குகளைச் செய்கிறோம்.

ஆனால் கணினி எம்மைப் போலல்ல, அதற்கு பூச்சியம், ஒன்று என்ற இரு குறியீடுகள் தான் தெரியும்.

மின்சாரம் கிடைத்தால் ஒன்று, கிடைக்காவிட்டால் பூச்சியம், அதாவது இரண்டை (Binary) அடியாகக் கொண்டே கணிப்பீடுகளைச் செய்கிறது கணினி.

இந்த அடி எண் முறைப் கணித்தல் திறன் கூடுமாம்; அதனால்தானாம்; கணினி மனிதனை விட வேகமாக கணிக்கின்றது என்கிறார்கள் சிலர்.

இந்த மாயன்கள் இருக்கிறார்களே, இவர்கள் மூன்று குறியீடுகளைப் பயன்படுத்தி மூன்றை அடியாகக் கொண்டு கணித்தல்களை செய்யும் திறன் வாய்ந்தவர்களாம்.

இதற்கு அவர்கள் விட்டுச் சென்ற சுவடுகள் ஆதாரமாக நிற்கின்றன.

எனவேதான் மிகப் பெரிய தூரங்களைக் கூட மாயன்களது கணிதத்தால் இலகுவில் கணித்துவிட முடிகிறது. அதாவது பிரபஞ்சத்திலுள்ள கோள்களின் தூரங்களைக்கூட கணிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இவர்கள் விளங்கினர்.

இவ்வாறு கணிப்புக்கள் மூலம், சூரிய கிரகணம் எப்போது வரும் சந்திரகிரகணம் எப்போது வரும் என்றெல்லாம் நொடிப்பொழுதில் கணித்து விடுவார்கள்.

இவர்களால் கணிக்கப்பட்ட நாள்காட்டி ஒன்றும் உள்ளது. அது தனது இறுதியை அடுத்த மாதம் அதாவது எதிர்வரும் டிசெம்பர் 21 ஆம் திகதி அடைகிறது.

அந்தத் திகதிக்குப் பின்னர் உலகம் அழிந்துவிடும் என்பதே அவர்களின் கணிப்பென சிலர் கூறுகின்றனர்.

இதை வைத்துக்கொண்டே இன்று பலரும் தமது இஷ்டத்துக்கு ஒவ்வொரு கதைகளைக் கூறுகிறார்கள்.

இப்போது இந்த மாயன்கள் உலகில் பெருமளவில் இல்லை, இவர்கள் தமக்குள் காணிச்சண்டை மற்றும் போட்டிகளால் அடிபட்டு அழிந்து விட்டார்கள் என்கிறது புராணக் கதைகள்.

சரி இந்தச் சோதிடர்களின் கதைகள் உண்மைதானென எடுத்துக் கொண்டால்,

தற்போது தானே விஞ்ஞானம் வளர்ந்து விட்டதே! அமெரிக்கா, ரஷ்யா என மட்டுமல்லாது இப்ப கடைக்குட்டி இலங்கை கூட விண்ணுக்கு செய்மதிகளை ஏவ தயாராகி விட்டதே.

இந்த அறிவியல் வளர்ச்சியால் பூமியை நெருங்கும் ஆபத்தை இனங்கண்டு சொல்லியிருப்பார்களே!

யாரைப் ஏமாற்ற இந்தக்கதைகளைப் பரப்புகிறீர்கள் என்று கேட்டால், அதற்கும் ஒரு கதை உலாவிவருகிறது!

அதாவது 'நிபுறு' எனப்படும் பிரளயமே உலகில் 21 டிசெம்பரில் நிகழப் போகிறதாம். இதை 1983 இலேயே நாஸா விஞ்ஞானிகள் கண்டறிந்து விட்டார்களாம்.

உலக அழிவைத் தடுக்க இயலாதென்பதை அறிந்து அவர்கள் தற்போது அதிலிருந்து தப்பும் உபாயத்தைக் கையாண்டுள்ளனராம்.

அதாவது பிரான்ஸில் சோதிடர் கூறிய கதையில் வருவது போல அமெரிக்காவில் ஓர் இடத்திலிருந்து தப்பிப்பதே இவர்களது யுக்தியாம்.

இதற்கு தற்போது உலகின் தலைசிறந்த பணக்காரர்களைச் சேர்க்கும் முயற்சியும் நடைபெறுகின்றதாம்.

ஆகமொத்தத்தில் இப்போது எங்களை நாசமாக்காப் பாற்ற வருது என்கிறது அந்த செய்தி.

இவை வெறும் கட்டுக்கதைகளும் மூடநம்பிக்கைகளும் தானெனினும், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசாவிடமே இதற்கு உரிய பதில் உள்ளது.

காரணம் கட்டுக்கதையின் கதாசிரியர் அதில் நாசாவுக்கும் பிரதான பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளாரே!

அதாவது நாசா விஞ்ஞானிகளின் கருத்தே இன்று எம் மத்தியில் உலாவும் பேதி மாத்திரைக்கு மாற்று மருந்து.

டிசெம்பர் 21 ஆம் திகதி உலகமே அழிவை சந்திக்கும் என்ற கருத்தை முற்றாக மறுத்துள்ள நாஸா விஞ்ஞானிகள், குறித்த தினத்திலிருந்து மூன்று நாள்களுக்கு பூமியின் வழமையான காலநிலையில் சில மாற்றங்கள் தென்படலாம்.

கைத்தொலைபேசிகள், தொலைக் காட்சிகள் போன்ற சில சாதனங்களும் விண்கலத் தொழில் நுட்ப சாதனங்களும் சில வேளைகளில் தொழிற்படாமல் போக வாய்ப்புக்கள் உள்ளன.

சிறியளவில் கடல் கொந்தளிப்புக்கள் காணப்படலாம். ஆனால் உலகம் முற்றாக அழிந்துவிடும் என்பது வெறும் கற்பனையே என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆக மொத்தத்தில் எதிர்வரும் டிசெம்பர் 21 ஆம் திகதி ஏதோ ஒரு சிறிய அளவிலான காலநிலை மாற்றங்கள் பூமிப்பந்தில் வாழும் உயிரினங்கள் அனுபவிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

எந்தவித மாற்றங்களும் பூமியில் ஏற்படாது, வழமையான காலநிலை நிலவும் என்பதை இதுவரை நாஸா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தவில்லை.

ஒட்டு மொத்தத்தில் இந்தப் பூமி நிலையானதல்ல, அதில் வாழும் அரும் பாக்கியம் எமக்குக் கிடைத்துள்ளது. நாமும் இப் பூமியில் நிலையாக வாழ்பவர்களல்லர், என்றோ ஒரு நாள் இங்கிருந்து விடைபெறப் போகிறவர்கள்.

ஆகவே வாழும் வரை நன்றாக வாழ வேண்டியது எமது கடமை.

போலிக் கதைகள் எங்களது முன்னேற்றத்தைத் தடுக்க இடம் கொடுக்கக் கூடாது.

மீண்டும் டிசெம்பர் 22 திங்கட்கிழமை சந்திப்போம். உதயனும் உங்கள் கைகளில் தவழ்வான்.

# ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனாற்றான் வீதி அகலிப்பின் போது கொண்டுவந்து கொட்டப்பட்ட கிரவல் மண்ணுக்குள், உக்கிப்போன வரிச்சீருடைகளும், எலும்புகளும் தட்டுப்பட்டன. ஒருவகையில் இதுவும் நல்லதுதான். ஒரு குறித்த இடத்தில் மாத்திரம் குறுகிக்கிடந்த துயிலுமில்லத்தை தமிழர் தேசமெங்கும் பேரினப்படைகள் விதைத்திருக்கின்றன. இதனால் கார்த்திகை -27 இல் இனிமேல் தீபமேற்ற மாவீரர் துயிலுமில்லங்கள் இல்லையே என்று கலங்கத்தேவையில்லை. வீதிகளெங்கும் நீண்டு, ஒளிந்து கிடக்கும் மாவீரர் கல்லறைகளும் தீபங்களுக்காகக் காத்திருக்கின்றன.

மாவீரர் நாளில் வருவதால் கார்த்திகை விளக்கீட்டுக்கு தீபமேற்ற கடவுளர்கள் கூட படைகளிடம் அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடவுளுக்கே இந்தக் கதியென்றால் கல்லறைகளில் [illegible] களில் தத்தளிக்கும் [illegible] செய்யமுடியும்? மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் மடிந்துபோன தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு தீபமேற்றக்கூட முடியாத கையறு நிலையை எண்ணி, இன்னமும் கண்ணீர் விட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனாலும் எல்லாவீடுகளுக்குள்ளும் ஒளித்து வைத்து ஏற்றப்படும் தீபங்களில் ஒளிரும் தம் பிள்ளைகளின் வதனங்களைக் காண்பதை எந்த இரும்புக் [illegible] தடுக்க முடிவதில்லை.

[illegible]கள் அழிந்து போனாலும், புதையுண்டு போனவர்கள் தீபங்களின் குழல்களில் தாகம் தீர்ப்பதற்காகக் காத்திருக்கிறார்கள். எல்லோரிடத்தும் உயிரைப் பிழிந்து வழியும் எண்ணெயில், மனங்களின் உணர்வுத் தீயில் மேலெழுகிறது சுடர். தீபங்கள் எங்களின் கைகளில் மட்டுமல்ல, மனங்களிலும்தான். கார்த்திகையின் இருளைத் தின்கின்றன தீபங்கள். எங்கும் ஒளிவெள்ளம்.

"ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி மூடுங்கள்" மறவர்களே. உங்கள் தாகம் அடங்கட்டும். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆழ்கடலில் இரும்புக் கம்பிகள் கொண்டு அமைக்கப்படும் பொறி வலைகளால்

## கடற்சூழலுக்கும் மீனவருக்கும் பேராபத்து

பேராசிரியர்-சூசை ஆனந்தன்
யாழ்.பல்கலைக்கழகம்

2003 ஆம் ஆண்டு ஆனி மாதம், 5 ஆம் திகதி அரசினால் அறிவிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளில் வெடிவைத்து மீன்பிடித்தல், ஈட்டிக் கடற்றொழில் போன்ற முறைகளும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளாக அறிவிக்கப் பட்டிருந்தன.

பூநகர் கடற்பரப்பில் கம்பிகள் நடப்பட்டு, களங்கட்டித் தொழில் செய்யப்பட்டு வரும் நிலையில், அதற்குள் சிக்குண்ட இரு படகுகள், அதாவது வெளியிணை இயந்திரம் பூட்டப்பட்ட கண்ணாடி நாரிழைப் படகுகள் கடும் சேதமடைந்து உள்ளதாக யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழிலாளர் சம்மேளன செயலாளர், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறையிடம் முறையிட்டுள்ளதாக பத்திரிகை (உதயன் 16.11.2012) செய்திக் குறிப்பு கூறுகிறது.

இதையொத்த சேதங்கள் மன்னார் விரிகுடாக்கடலிலும் சமீப காலமாக இடம் பெற்று வருவதாக அங்குள்ள மீனவர்கள் அந்த மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளரிடமும், கடற்றொழில் அமைச்சின் செயலாளரிடமும் முறையிட்டுள்ளனர். கடற்றொழில் அமைச்சினுடைய நடவடிக்கைகளின் காரணமாக மன்னார் குடாக்கடலில் இரும்புக் கம்பிகள் கொண்டு அமைக்கப்பட்ட அகலச் சிறகு வலைகள் என அழைக்கப்படுகின்ற பொறி வலைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளமை முன்னேற்றகரமான செயற்பாடாகக் கொள்ளப்படுகிறது. மன்னார் பொலிஸார் ஆபத்து விளைவிக்கக் கூடிய இத்தகைய பொறி வலைகளை அகற்றக் கோரி, மன்னார் பணங்கட்டிக்கொட்டு மீனவர்களுக்கு அறிவுறுத்தியுள்ள போதிலும், அந்தப் பகுதி மீனவர்கள் அதனை அசட்டை செய்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சிறகு வலைகள் பட்டி வலைகள் எனவும், சில இடங்களில் களங்கட்டி வலைகள் எனவும் அழைக்கப்படுகின்றன. பொதுவாகவே களப்புகளில், குறிப்பாக ஆழம் குறைந்த வாவிப் பகுதிகள் சார்ந்த இடங்களிலேயே இந்தச் சிறகு வலைகள் மரபு வழியாக பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கமாக காணப்படுகிறது. இத்தகைய சிறகு வலைகள் 5-6 அடி உயரம் கொண்ட 50 க்கும் மேற்பட்ட சிறிய தடிகள் கொண்டு, பொறிகள் போன்று கடலில் நிலை நிறுத்தப்படுகின்றன. அசைவற்ற (PASSIVE) இந்த வலைகள் நிரந்தரமாகவே கடலில் விடப்படுகின்றன இருவாரங்களுக்கு ஒருமுறை இவை அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டு மீண்டும் அவை கடலில் நிலைநிறுத்தப்படுகின்றன. வடபகுதியில், யாழ்ப்பாணக் குடாநாட்டு வாவிப் பகுதிகளிலும், பூநகரி தொடக்கம், மன்னார் பள்ளிமுனை பகுதிகள் சார்ந்த, மிகவும் ஆழங் குறைந்த கரையோர பிரதேசங்களிலும் இத்தகைய சிற்றளவிலான பொறி வலைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் மன்னார் குடாக்கடலில் (GULF OF MANNAR) இத்தகைய பொறி வலைகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் சமீப காலங்களில் மன்னார் குடாக்கடலில், பணங்கட்டிக்கொட்டு பகுதி மீனவர்களால் பெரியளவிலான சிறகுவலைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அகலச் சிறகு வலைகள் என அழைக்கப்படுகின்ற இவ் வலைகள் உலோகம் சார்ந்த கம்பிகளின் (அன்ரனா கல்வனைஸ்ட் பார்) உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருவதனால் மன்னார் குடாக்கடலிலுள்ள மீனவர்கள், குறிப்பாக சிற்றளவு படுப்பு வலைத் தொழிலாளர்களும் கரைவலைத் தொழிலாளர்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.


2003 ஆம் ஆண்டு ஆனி மாதம், 5 ஆம் திகதி அரசினால் அறிவிக்கப்பட்ட தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளில் வெடிவைத்து மீன்பிடித்தல், ஈட்டிக் கடற்றொழில் போன்ற முறைகளும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளாக அறிவிக்கப்பட்டிருந்தன. எனினும் அகலச் சிறகு வலை என்பது 9 மீற்றர் உயரம் கொண்ட கல்வனைஸ் குழாய்களின் அடியில், 3 அடி நீளமான கூரான இரும்புக் கம்பி பொருத்தப்பட்டு முருகைக்கற் பார் பகுதிகளிலும், கரைவலைப்பாட்டுப் பகுதிகளிலும் நிலைநிறுத்தப்படுகின்றன. சராசரியாக ஓர் அலகு வலைக்கு 30-40 வரையிலான இரும்புக் கம்பிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக நூறுக்கும் மேற்பட்ட அலகு வலைகள் வங்காலை கரை வலைப்பாட்டு பகுதியிலிருந்து ஆழ்கடலை நோக்கி ஏறக்குறைய 8 கி.மீற்றர் தூரம் வரை நெடுகிலும், இரும்புக் கம்பி வேலிகள் போன்று நிலை நிறுத்தப்பட்டுள்ளன. நிலையாக இவை நிறுத்தப்பட்டுள்ளதனால் வங்காலை, அச்சங்குளம், நறுவிலிக் குளம், அரிப்பு பகுதி சார்ந்த மீனவர்கள் பின்வரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

1.கரைவலைப்பாடு முற்றாக செயலிழந்து போயுள்ளது. அதனால் அதில் தங்கி வாழ்கின்ற நூற்றுக்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர்.

2.குறித்த பிரதேசத்தில் விடப்படுகின்ற வளிச்சல் கில் வலைகள் நீரோட்டத்துடன் வழிந்து செல்லுகின்ற போது, மேற்கூறிய இரும்புக் கம்பி பொறி வலைகளில் சிக்குண்டு, அவை அழிவடைந்து, பல இலட்சம் ரூபா பெறுமதியை இழக்க வேண்டிய சூழ் நிலை உண்டாகிறது.

3.இரவு நேரங்களில் கடலுக்குச் சென்று திரும்பும் கண்ணாடி இழைப் படகுகள் இத்தகைய இரும்புக்கம்பி பொறிகளில் மோதுண்டு கடும் சேதங்களுக்குள்ளாகும் சம்பவங்களும் பல



தடவைகள் நடைபெற்று வருகின்றன.

4.முருகைக் கற்பார் பகுதிகளில் இந்த இரும்புக் கம்பிகள் துளையிடப்பட்டு நிலை நிறுத்தப்படுவதனால் மன்னார் கடலிலுள்ள முருகைக்கற் பாறைத் தொடர்கள் கடும் அழிவுக்குள்ளாகி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவை கடுமையான கடலரிப்பைத் தூண்டுவதற்கு வழி வகுக்கிறது.


இத்தகைய பிரச்சினைகளை மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளரிடம் இந்தப் பகுதி மீனவர்கள் பல தடவைகள் முறையிட்ட போதிலும், அவரால் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படாத நிலையே காணப்படுகிறது. இந்தப் பொறிகளை பயன்படுத்துகின்ற மீனவரிடம், இவை முறையற்ற மீன்பிடி முறைகள் என்பதனைப் பல தடவைகள் அவர் எடுத்துக் கூறி யிருந்தும், இந்த வலைகளை பயன்படுத்தும் மீனவர்கள் தொடர்ந்தும் இவற்றை உதாசீனம் செய்து வரு கின்றனர்.

கடந்த மாத முற்பகுதியில் பொறி வலையால் பாதிக்கப்படுகின்ற மீனவர்கள், நானாட்டான் பிரதேச செயலாளரிடம் முறையீடு செய்து இந்த வலைகளை அகற்றக்கோரி மனு ஒன்றைக் கையளித்திருந்தனர்.

மேலும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் செயலாளரிடமும், கொழும்பு அலுவலகத்தில் சந்தித்து தமது நிலைமைகளை எடுத்துக் கூறியதுடன், அவரிடமும் மனு ஒன்றைக் கையளித்து இருந்தனர். அமைச்சின் செயலாளர் இத்தகைய நாசகார மீன்பிடி முறைகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் அரசியல்வாதி ஒருவருடைய ஆதரவுடன் பணங்கட்டிக்கொட்டு மீனவர்கள் தொடர்ந் தும் இத்தகைய நாசகார மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி வருவது ஏனைய மீனவர்களுக்கு எரிச்சலூட்டுவதாகவே அமைந்து வருகிறது.

எனவே இத்தகைய நாசகார மீன்பிடி முறையினை தடுத்து நிறுத்தி, அழிவடைந்து செல்லும் பவளப் பாறைகளைக் காப்பாற்றுவதுடன், இந்தக் கடற்பரப்பில் சிற்றளவு மீன்பிடி முறையில் ஈடுபடுகின்ற கரைவலை மற்றும், படுப்பு வலைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்குமாறு சம்பந்தப் பட்டவர்களிடம் வேண்டுகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த அவசர ஓட்டம்..?



அதிரன்

சத்தம் சந்தடி ஏதும் இல்லாமல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திடீரென அமெரிக்காவுக்கு ஓடியிருக்கிறார். அவரது இந்தப் பயணம் தொடர்பில் அரச தரப்பிலிருந்து யாரும் மூச்சுவிடவில்லை. அந்த அளவுக்கு மிக இரகசியமான முறையில் இந்தப் பயணத்தைத் திட்டமிட்டு அமெரிக்காவுக்கு ஓடியிருக்கிறார் ஜனாதிபதி.

கஜகஸ்தான் பயணத்தை முடித்துக் கொண்ட அவர் அந்தக் கையோடு அமெரிக்காவுக்குப் பறந்திருக்கிறார்.

கஜகஸ்தான் பயணம் முடிந்த பின்னர் ஜனாதிபதி மஹிந்த நாடு திரும்புவதென முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இறுதியில் அவரது பயண நிகழ்ச்சிநிரல் மாற்றியமைக்கப்பட்டது. கஜகஸ்தானிலிருந்தே அவர் நேரடியாக அமெரிக்காவுக்குப் பயணமானார்.

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி உதவி ராஜாங்கச் செயலர் இலங்கை வந்திருந்த வேளையில் ஜனாதிபதி மஹிந்த அமெரிக்காவுக்கு இரகசியமாக ஓடியமை இலங்கை அரசியல் வட்டாரங்களில் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது.

ஜனாதிபதி அமெரிக்காவில் ஒரு வார காலம் தங்கியிருந்து அமெரிக்கா ராஜாங்கத் திணைக்களத்தின் முக்கிய அதிகாரிகள் பலரைச் சந்தித்துப் பேசவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி அங்கு சிகிச்சை பெற்று வரும் பிரதமர் டி.எம். ஜயரட்ணவைச் சந்தித்துச் சுகம் விசாரித்திருக்கிறார். ஆயினும் அவரது பயணத்தின் முக்கிய நோக்கம் பிரதமரைச் சுகம் விசாரிப்பது அல்ல. அவரது பயணத்தில் ஏதோ ஒரு முக்கிய உள்நோக்கம் இருக்கவே செய்கிறது. அவ்வாறு இல்லையென்றால் ஏன் அவர் இப்படி இரகசியமாக அங்கு ஓட வேண்டும்? என்ற கேள்வி இயல்பாகவே எல்லோரிடமும் எழுகிறது.

இலங்கைத் தமிழர் விடயத்தில் அமெரிக்கா இப்போது மிகக் கடுமையானதொரு நிலைப்பாட்டை எடுத்துச் செயற்படத் தொடங்கியிருக்கிறது. இதுவரை காலமும் இலங்கைக்குப் பல்வேறு வகைகளில் ஆலோசனைகளையும் அரவணைப்புடன் கூடிய கருத்துக்களையும் வழங்கி வந்த அமெரிக்கா அவை எதுவும் இலங்கையினால் கணக்கெடுக்கப்படாத நிலையில் இப்போது சற்றுக் கடுமையான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. தான் கூறி வந்த எதனையும் இலங்கை அரசு கணக்கில் எடுக்காததால் இப்போது அமெரிக்கா கடும் தொனியில் இலங்கைக்கு எச்சரிக்கை விட்டிருக்கிறது. இதுவரை காலமும் பொறுமை போல் அல்லாமல் இப்போது சற்றுக் கடுமையாக இலங்கை விடயத்தை அமெரிக்கா கையாளத் தொடங்கியமை ஜனாதிபதி மஹிந்தவுக்குப் பெரும் தலையிடியை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால்தான் அமெரிக்காவின் கோபத்தைச் சற்றுக் குறைப்பதற்காக ஜனாதிபதியே நேரடியாக அங்கு விரைந்திருக்கிறார் போலும்.

ஜெனிவாத் தீர்மானம், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை, தீர்வுத் திட்டப் பேச்சு, வடக்கு மாகாண சபைத் தேர்தல், ஐ.நா. உள்ளக அறிக்கை ஆகிய விடயங்கள் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து அமெரிக்காவில் ஜனாதிபதி பங்குபற்றும் பேச்சுக்களில் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை புலம்பெயர் தமிழர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டே ஜனாதிபதியின் அமெரிக்கப் பயணம் மிகவும் இரகசியமான முறையில் வைக்கப்பட்டது எனவும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. ஆயினும் அரசு ஜனாதிபதியின் அமெரிக்கப் பயணம் தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமான தகவல்கள் எதையும் வெளியிடவில்லை. அதேவேளை வொஷிங்டனில் ஜனாதிபதி முக்கிய சந்திப்புக்களில் கலந்துகொள்ளவுள்ளார் என வெளியான செய்திகளையும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மறுக்கவில்லை. இதனை வைத்துப் பார்க்கும்போது, ஜனாதிபதியின் இந்த அவசர பயணத்தில் ஏதோ ஒரு உள்நோக்கம் உள்ளது என்பது நிச்சயமாகிறது.

இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வு விடயத்தின் அமெரிக்கா இலங்கை அரசை இப்போது தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டே இருக்கிறது. அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறும் அது அழுத்தம் கொடுக்கிறது. அத்தோடு நின்றுவிடாமல் அமெரிக்கப் பிரதிநிதிகள் அடிக்கடி இலங்கைக்கு வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்து அது தொடர்பாக அறிக்கைகளை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்திடம் தொடர்ச்சியாகக் கையளித்து வருகின்றனர்.

இவ்வாறு இலங்கை தொடர்பாக இதுவரை கையளிக்கப்பட்ட அறிக்கைகள் எதிலும் இலங்கை அரசு நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. மாறாக, அந்த அறிக்கைகளில் இலங்கை அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களே அதிகம். இராணுவ நெருக்குவாரம், முன்னாள் போராளிகள் [illegible] பயமுறுத்தல், [illegible] மீதான அச்சுறுத்தல், மாற்றுக் கருத்துடையோர் மீதான தாக்குதல்கள் என இலங்கை அரசுக்கு எதிராக அவர்களது அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏராளம். இதனால் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை மீது ஒரு சந்தேகப் பார்வையையே வைத்திருக்கிறது. அந்த வகையில் இப்போது அமெரிக்காவின் கடும் அதிருப்திக்கு இலங்கை உள்ளாகியிருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த அமெரிக்காவில் தங்கியிருக்கும் வேளையிலேயே இப்போது மற்றொரு தகவல் வெளியாகியிருக்கிறது. அடுத்த வருடம் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு முக்கிய தீர்மானத்தை கொண்டு வருவதற்கான முன்னேற்பாடுகளில் அமெரிக்கா இறங்கியுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

கடந்த கூட்டத் தொடரில் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றும் விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு தொடர்ந்தும் அசண்டை காட்டி வருவதால் இலங்கைக்கு எதிராக மீண்டும் களத்தில் குதிக்க முடிவெடுத்துள்ளது அமெரிக்கா. இதற்காக தனது ராஜதந்திரிகளை உஷார்ப்படுத்தி நடவடிக்கைகளையும் அது முடுக்கிவிட்டிருக்கிறது.

அமெரிக்காவின் புதிய பிரேரணை ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டால் அதனை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்வதற்குத் திட்டமிட்டிருக்கிறது அமெரிக்கா. ஜனாதிபதி மஹிந்த அமெரிக்காவில் தங்கியிருக்கும் அதே நேரத்தில் இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை குறித்து திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

> **அமெரிக்காவின் புதிய பிரேரணை ஜெனிவா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டால் அதனை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்வதற்கு திட்டமிட்டிருக்கிறது அமெரிக்கா. ஜனாதிபதி மஹிந்த அமெரிக்காவில் தங்கியிருக்கும் அதே நேரத்தில் இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை குறித்து திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.**

ஜெனிவாத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட சிபார்சுகளை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. அந்த அவகாசத்தில் இதுவரை எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. ஆயினும் ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவதற்கு இலங்கை அரசு கிஞ்சித்தும் அக்கறை காட்டவில்லை. இதனால் சீற்றமடைந்திருக்கும் அமெரிக்கா மற்றுமொரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குத் தயாராகிறது.

இவ்வாறான நிலையில், அமெரிக்காவுக்கு ஓடியிருக்கும் ஜனாதிபதி அங்கு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். அந்தக் கலந்துரையாடல்கள் இலங்கை மீது அமெரிக்கா கொண்டுள்ள கோபத்தை, [illegible] எந்தளவுக்கு தணிக்கும் [illegible] விரைவில் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org